# சேதுபதி மன்னர் கல்வெட்டுக்கள்

சேதுபதி மன்னர்கள் பொறித்துள்ள
முப்பத்தி ஏழு கல்வெட்டுக்களும்
அதற்கான விளக்கமும்.

ஆசிரியர்

டாக்டர் S.M. கமால்

பதிப்பு

**சர்மிளா பதிப்பகம்,**
21, ஈசாபள்ளி வாசல் தெரு,
இராமநாதபுரம் - 623 501.

முதற்பதிப்பு
டிசம்பர் 2002
@ உரிமை ஆசிரியர்க்கே

இராமநாதபுரம் சேது நாட்டு வரலாற்று மையத்தின் முதலாவது ஆராய்ச்சித் தொகுப்பு

பக்கங்கள் 236
விலை ரூ.75/-

**Bibliographical Data**

| | | |
|---|---|---|
| 1. Title | : | Sethupathi Mannar Kalvettukkal |
| 2. Author | : | Dr. S.M. Kamal Ramathapuram-623 501. |
| 3. Language | : | Tamil |
| 4. Edition | : | First edition - December 2002 |
| 5. Copy right | : | Author |
| 6. size of the Book | : | 21.5 X 14 cms |
| 7. Type used for Text | : | Sindhu/Thamarai/Vaigai |
| 8. Pages | : | 236 (12 + 224) |
| 9. No.of Copies | : | 1000 |
| 10. Printers | : | **Arun Offset Printers, Ramanathapuram. 623 501.** |
| 11. Publishers | : | Sharmila Publishers, 21, Esa Pallivasal Street, Ramanathapuram-623 501. |
| 12. Price | : | 75 /- |
| 13. Subject | : | Summary of the 37 inscriptions of Sethupathi Kings of Ramanathapuram from 1400 AD onwards with explanatory notes. |

## காணிக்கை

தமிழ்ச் சமுதாயத்திற்கு சமயப் பணியிலும் மொழி வளர்ச்சியிலும் முழுமையாகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட இராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள் நினைவிற்கு அஞ்சலி.

# பதிப்புரை

சேதுபதி மன்னர்களது அறக்கொடைகளைத் தெளிவாகக் கூறுகின்ற இந்த நூலினை வெளியிடுவதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம். தமிழக வரலாற்றிற்கு பெருமை சேர்க்கும் டாக்டர் திரு. எஸ்.எம். கமால் அவர்களது இந்த ஆக்கத்தினை வரலாற்று ஆய்வாளர்களும் ஆசிரியர்களும் பெரிதும் வரவேற்பார்கள் என நம்புகிறோம்.

சேது மன்னர்களது வரலாற்றின் ஒரு பகுதியான இந்த நூல், மிகுந்த இடர்ப்பாடுகளுக்கிடையில் (ஆசிரியரால் தொகுக்கப்பெற்று) முதன் முறையாக வெளியிடப்படுவதால் வாசகர்களது கவனத்தை மிகுதியாக ஈர்க்கும் என்று நம்புகிறோம்.

சேதுநாட்டு வரலாற்று மையம் மற்றும்
சர்மிளா பதிப்பகத்தினர்

# நெஞ்சம் நிறைந்த நன்றி

இந்தச் சிறிய நூலினைச் சிறப்பாக வரைந்து முடிப்பதற்கு எனக்கு ஆக்கமும் ஊக்கமும் உவந்து அளித்த அன்பு உள்ளங்களை மறக்காமல் இருக்க முடியாது. காலத்தால் செய்த நன்றியைத் திணையளவாக இருந்தாலும் பனையளவாகக் கொள்ள வேண்டும் என்ற வள்ளுவத்தின் வழி நின்று அந்த அன்பு உள்ளங்களை நெஞ்சார நினைந்து எனது பணிவான நன்றியினை இங்கு புலப்படுத்திக் கொள்கின்றேன்.

இவர்களில் எனது இந்தத் தொகுப்பிற்கு பல்லாற்றானும் துணை புரிந்த கரூர் ஸ்ரீ இராமகிருஷ்ண ஆசிரமத் தலைவர் மகராஜ் ஆத்மானந்த சுவாமிகள் அவர்களுக்கும்,

இந்த நூலில் காணப்பெறும் கல்வெட்டுக்களில் புதிதாக கண்டுபிடித்தவற்றை எனக்கு தந்து உதவியதுடன் அனைத்து கல்வெட்டுக்களின் படிகளைப் பரிசீலித்துத் திருத்தம் செய்து கொடுத்த பெருந்தகை தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகக் கல்வெட்டுத் துறை தலைவர் டாக்டர். செ. இராசு அவர்களுக்கும்,

இந்த நூலில் தொகுக்கப்பட்டுள்ள புதுக்கோட்டை கல்வெட்டுக்களின் திருத்தமான படிகளைத் தந்து உதவிய டாக்டர் ஜெ. இராஜா முகமது அவர்களுக்கும்

தேவகோட்டை வட்ட கல்வெட்டுக்களை நேரில் சென்று பார்வையிட்டுத் திருத்தமான படிகளைத் தந்து உதவிய காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரி தமிழ்த்துறை தலைவர் டாக்டர் வள்ளி சொக்கலிங்கம் மற்றும் மேலப்பனையூர் கல்வெட்டு ஆய்வாளர் திரு.கரு.இராஜேந்திரன் அவர்களுக்கும் என்னால் என்றும் நினைவில் கொள்ளத் தக்கவர்கள். அவர்களுக்கு எனது நன்றியை உரித்தாக்குகின்றேன்.

மேலும் இந்த நூலின் தட்டச்சுப் படிகளையும், அச்சுப் பிரதிகளையும், பார்வையிட்டு உதவிய இராமநாதபுரம் சேதுபதி அரசு கலைக்கல்லூரி தமிழ்த் துறை தலைவர் பேரா. மை. அப்துல் சலாம் அவர்களது பணியினுக்கும் எனது நன்றி.

**ஆசிரியர்**
**Dr. S.M. கமால்**

## தமிழ்ப்பல்கலைக்கழகம்,

## தஞ்சாவூர்

**முனைவர் செ. இராசு,** எம்.ஏ., பி.எச்.டி.,

**தலைவர் :** கல்வெட்டு - தொல்லியல் துறை தமிழ்ப் பல்கலைக்கழகம்,

**உறுப்பினர் :** தமிழக அரசு தொன்மைச் சின்னப் பாதுகாப்பு முதுநிலைக்குழு, சென்னை,

## அணிந்துரை

*பதினேழாம் நூற்றாண்டுத் தொடக்க காலம் முதல் செந்தமிழர்க்காகவும், செந்தமிழ்க்காகவும் தமிழ் வாழ்வாக வாழ்ந்தவர்கள் - வாழ்ந்து வருபவர்கள் சேதுகாவலரான சேதுபதிகள். அவர்கள் கலைபல வளர்த்த காவலர்களுமாவர்.*

*'சேதுமூல ரட்சா துரந்தரராக' விளங்கிய சேதுபதிகளைப் புலவர் 'இராமன்' அவதாரமாகவே பாடிப் பரவினர்.*

*திருவுடை மன்னர்களான அவர்களைத் திருமாலாகவே உருவகம் செய்தனர். அதுமட்டுமல்ல 'சேதுபதி தரிசனமே இராமலிங்க தரிசனம்' எனப் பணிந்தனர் பாவலர்கள்.*

*தமிழ்நாட்டில் புலவர்களால் பெரிதும் போற்றிப் புகழப்பட்ட மரபு சேதுபதி மரபு, மூவேந்தருக்கும் இந்த அளவு பாடல்கள் கிடையாது.*

*சைவத் திருமடங்களையும், சைவத் திருத்தலங்களையும், அவர்களைப் போலப் போற்றியவர்கள் எவருமிலர். சேதுநாட்டிற்கு அப்பாற்பட்ட திருவாவடுதுறை ஆதீனமும், பழனித் திருக்கோயிலும் கதை கதையாய்ச் சேதுபதிகள் புகழ் கூறும். வைணவமும் அவர்களால் போற்றப்பட்டது.*

சேது மன்னர்கள் இலக்கியங்கள் பல முன்பே வெளிப்பட்டுள்ளனர். அவர்கள் பெருமை கூறும் செப்பேடுகள் பலவற்றை அரிதின் முயன்று தேடித் தொகுத்து ஆய்வுக் குறிப்புக்களுடன் கலைக்களஞ்சியம் போல் வெளியிட்டு வரலாற்று உலகுக்கு அணி செய்தவர் நண்பர் ஆய்வுத் திலகம் திருமிகு முனைவர் எஸ்.எம். கமால் அவர்கள்.

சேதுநாட்டுக்கு நண்பர் கமால் அவர்கள் ஆற்றிய - ஆற்றிவரும் அறப்பரும் இலக்கிய - வரலாற்றுப் பணிகட்கு வரையறையில்லை. ஒப்பாரும் மிக்காரும் இல்லாத செயற்கரிய பணிகள் அவை.

சேதுநாட்டின் புகழைச் சிகரத்தில் ஏற்றியவர் நண்பர் கமால் அவர்கள் அரும்பெரும் பணியின் தொடர்ச்சியாக சேதுபதி மன்னர் தம் கல்வெட்டுக்களை எல்லாம் ஒன்றாகத் தொகுத்து வெளியிடுகிறார்கள்.

இக்கல்வெட்டுக்கள் சேதுபதி மன்னர்களுடைய - அவர்தம் குடும்பத்தாருடைய கொடைச் சிறப்புக்களையும், பக்தித் திறத்தையும், அவர்களின் திருப்பணிப் பெருமைகளையும் மிக நன்கு விளக்குகின்றன.

சமயப் பொறுமையும் - பெருமையும் மிக்க சேதுபதி மன்னர் வரலாற்றில் இஸ்லாமியர் புனிதத் தலங்கள் பல சிறப்புப் பெற்றன. வள்ளல் சீதக்காதியும், கவிச்சக்கரவர்த்தி ஜவ்வாதுப் புலவரும் பெற்ற சிறப்பிடத்தை வரலாற்று உலகமும், இலக்கிய உலகமும் மிக நன்கு அறியும். அவர்கள் தொடர்பு இல்லாமல் சேதுபதி மன்னர் வரலாற்றை எழுத முடியாது. சேதுபதி மன்னர் அவையில் இருவரும் பெற்ற சிறப்பு சீர்மிக்கது. சேதுபதி மன்னர்கள் இவர்களால் சிறப்புற்றனர். சேதுபதி மன்னர் அளித்த சிங்கமுகப் பல்லக்கையே நடமாடும் அரியாசனமாகக் கொண்டு பெருவாழ்வு வாழ்ந்தவர் ஜவ்வாதுப் புலவர்.

அவர்கள் இருவரையும் நான் நண்பர் டாக்டர்

எஸ்.எம்.கமால் அவர்கள் வடிவில காணுகிறேன். இது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

சேதுபதி மன்னர்தம் கல்வெட்டுக்களை ஒவ்வொன்றாக அவர்கள் அரிதின் முயன்று தொகுத்ததையும், பிழையின்றித் திருத்தமுற அவற்றை வெளிக்கொணர எடுத்த பெரும் முயற்சிகளையும் நான் நன்கு அறிவேன்.

நண்பரவர்கள் எழுதியுள்ள ஆய்வுக் குறிப்புக்கள் அவர்தம் பட்டறிவையும், சேதுநாட்டின் - சேதுபதி மன்னர்கள் வரலாற்றில் அவர்கள் பெற்றுள்ள பழுத்த அனுபவத்தையும் தெளிவாகக் காட்டுகிறது.

இஸ்லாமிய இலக்கியம் - வரலாற்றையும், சேதுநாட்டின் ஆவணங்களையும் வரலாற்றையும் இரு கண்களாகக் கொண்டு வாழும் நண்பர் டாக்டர் எஸ்.எம். கமால் அவர்கள் முயற்சிகளை மனமாரப் போற்றி மகிழ்கின்றேன்.

இடம் : கொங்கு ஆய்வு மையம்,
ஈரோடு - 11.
நாள் : 15.12.2002

அன்புள்ள

# இந்த நூலின் ஆக்கத்திற்கு துணையாக அமைந்த ஆங்கில, தமிழ் நூல்களின் பட்டியல்


1. Manual of Ramnad Samasthanam (1891)

   - by T. RajaRam

2. Sethupathi's of Ramnad (1952)

   - by Thiruvenkata Chatiar

3. Pudukkottai Inscriptions (1924)

   - by Pudukkottai Durbar

4. A.S.I. Volume No II (1880)

   - by Robert Sewell

5. A.S.I. Volume No. IV (1881)

   - by James Burgess & Natesa Shastri

6. A.S.I. Volume No.VIII (1902)

   - by Archaelogical Survey of India, New Delhi

7. Tobographical List of Inscriptions in Madras Presidency (1907) Volume I, II, III

   - by K.V. Rengachariar

8. South Indian Temple Inscriptions - Volume I, II, III (1958)

   - by T.N. Subra Manyam

9. தஞ்சை பெரு உடையார் கோயில் கல்வெட்டுக்கள் (1952) -

   - டாக்டர் திரு இரா. நாகசுவாமி அவர்கள்

10. தொல்லியல் ஆய்வுத்துறை கல்வெட்டுத் தொகுதிகள்

11. சேதுபதி மன்னர்கள் செப்பேடுகள் (1993)

    - Dr. S.M. கமால்

12. Fort Town of Thirumayyam (1972)

    - Prof. K. Viswanathan (Un Published M.Phil thesis)

13. Sethupathi's of Ramnad (1974)

    - by Dr. K. Seshadri (Un Published doctorate thesis)X

# 1. தொடக்க உரை

பிற்காலப் பாண்டியர் ஆட்சி, தென்பாண்டி நாட்டில் முடிவுற்ற பொழுது எழுந்த விஜயநகர, மதுரை, நாயக்கர்களின் ஆட்சியின் பொழுது கிழக்குக் கடற்கரையில் ஒட்டிய பாண்டிய நாட்டில் எழுந்தது சேதுபதிகள் என்ற புதிய தன்னரசு மன்னர் பரம்பரை.

கி.பி.1400 முதல் கி.பி.1795 வரை நீடித்த இந்தப் புதிய மன்னர்கள் ஆன்மீக சமுதாயத்துதுறைகளில் பல புதிய பரிணாமங்களை இனங்காட்டியதுடன் தமிழ்மொழிக்கு/ தாளாத தொண்டுகளைச் செய்துள்ளனர்.

இந்த ஆட்சியாளர்களின் சாதனைகளை அறுதியிட்டு விளக்கக்கூடிய ஆவணங்களான ஓலைமுறிகளும் செப்பேடுகளும், கல்வெட்டுக்களும் கால நீட்சியில் சிதைந்து மறைந்து அழிந்து விட்டன. இவைகளில் பத்தாண்டுகளுக்கு முன் வரை கண்டுபிடிக்கப்பட்ட தொன்னூறு செப்பேடுகளை இந்த நூலின் ஆசிரியர் கி.பி.1993-ல் வெளியிட்டுள்ளார். இந்த நூலினை சிறந்த வரலாறு நூலாகத் தேர்வு செய்து தமிழ்நாடு அரசு இந்த ஆசிரியருக்குப் பரிசும் பாராட்டும் வழங்கியது.

இப்பொழுது பல ஊர்களில் உள்ள கல்வெட்டுக்கள் முப்பத்து ஏழினைத் தேடிப்பிடித்து விளக்கத்துடன் இந்த நூலில் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழக வரலாற்றிற்குப் புதுமை சேர்த்துள்ள இந்த ஆவணங்கள் பயனுள்ளவையாக அமையும் என எண்ணுகிறோம்.

# இயல் 2

# சேதுபதி மன்னர் வரலாறு

சேதுபதி மன்னர் கல்வெட்டுக்கள் என்ற தொகுப்புரையைத் தொடங்குவதற்கு முன்னர் சேதுபதி மன்னர்கள் யார், அவர்களது ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பு எது, அந்த மன்னர்களது ஆட்சியின் மாட்சி என்ன என்பதைப்பற்றி அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது.

## சேது மன்னர்களது தொன்மையும் தோற்றமும்

சேது என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு அணை என்பது பொருள். இதிகாசமாகிய இராமாயணத்தில் சீதா தேவியைக் கவர்ந்து சென்ற இலங்கை அதிபதி இராவணன் மீது போர் தொடுப்தற்காகத் தெற்குக் கடலைக் கடந்து இலங்கை செல்வதற்கு கடல் மீது இராமபிரான் அமைத்த திரு அணையைத் தான்

1.ஆப்பநாடு, உப்புக்கோட்டை, ஓரிக்கோட்டை, கொண்டயங்கோட்டை, அகத்தா, குறிச்சிக்காடு
Raja Ram Rao - Manual of Ramnad Samasthanaarm 1891-Page No 33

மக்களும், இலக்கியங்களும், சிறப்பாகச் சேது எனக் குறிப்பிடுகின்றனர். இந்த அணை இராமேஸ்வரத்தை அடுத்துள்ள இன்றைய தனுஷ்கோடிக்கரையில் தொடங்கி, கிழக்கே இலங்கையின் மேற்கு கரையுடன் அமைக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. இன்றும் தனுஷ்கோடிக்கும், இலங்கை நாட்டுத் தலைமன்னாருக்கும் இடையில் கடலில் சிதைந்து காணப்படும் மணல் திட்டின் தொடர் அந்த அணையின் எச்சம் என இப்பொழுது கருதப்படுகிறது. அதனை இன்று மீனவர்கள் இராமன் திட்டை என வழங்கி வருகின்றனர்.

இந்த அணையை அடுத்துள்ள நாடு சேது நாடு எனவும் இந்த நாட்டின் அதிபதிகளான மறவர் சீமை மன்னர்கள் சேதுபதிகள் எனவும் வழங்கப்பட்டனர். சேனையின் அதிபதி சேனாதிபதி எனவும், பசுவின் தலைவன் பசுபதி என்றாற்போல சேதுவிற்கு அதிபதி ஆன மன்னர்கள் சேதுபதிகள் ஆவார்.

இந்த மன்னர்களது தொன்மை இராமாயணக் கதையுடன் தொடர்பு படுத்திச் சொல்லப்பட்டு வருகிறது. இராமபிரான் இராவணனை வதைத்து இலங்கையில் இருந்து திரும்பிய பொழுது இன்றைய இராமேஸ்வரத்தில் சிவலிங்கப் பிரதிட்டை செய்து சீதாப்பிராட்டியுடன் இறைவனை வழிபட்டதாகவும் அதன் பிறகு அங்கிருந்த மறவர் இனத் தலைவரை அழைத்து, அந்தப் புனித இடத்தைப் பாதுகாத்துப் பராமரித்து வருமாறு பணித்ததாகவும் கருதப்படுகிறது. மேலும், அந்த மறவர் இனத் தலைவரது வழித்தோன்றல்களே சேதுபதி மன்னர்கள் என்றும் சொல்லப்படுகிறது.

ஆனால் வரலாற்றுப் பார்வையில் சேதுபதி மன்னர்களது பழமையை ஆய்வு செய்யும்பொழுது மேலேகண்ட உண்மைகளைப் புலப்படுத்தக் கூடிய மூல ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

என்றாலும், இந்த மன்னர்களது மறவர்களது செம்பி நாட்டுப் பிரிவைச் சார்ந்தவர்கள் என்று அறியப்படுவதாலும் இவர்கள் சோழ

நாட்டிலிருந்து சேது நாட்டிற்குக் குடிபெயர்ந்தவர்கள் என்பது மட்டும் தெளிவாகிறது. மகாவித்வான் இரா. இராகவ அய்யங்கார் அவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்க இதழான செந்தமிழில் வரைந்துள்ள கட்டுரை[1] ஒன்றில் இராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள் சோழ நாட்டிலிருந்து சேது நாட்டிற்கு வந்தவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதுடன் இவர்களது குடியேற்றம் முதலாவது குலோத்துங்க சோழரது ஆட்சியில் ஏற்பட்டு இருக்க வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆனால் கி.பி.11ஆம் நூற்றாண்டில் இராஜராஜசோழன் தனது பேரரசுக்கனவைச் செயல்படுத்துவதற்காகப் பாண்டிய நாட்டின் மீது பெரும் படையை நடத்திப் பாண்டிய மண்டலம் முழுமையும், தனது புலிக் கொடியின் கீழ் கொண்டு வந்தான் என்பது வரலாறு, இந்தப் படையெடுப்பின் போது சோழ நாட்டுப்படை அணிகளுக்கு தலைமை தாங்கி வந்த வீரமறவர்கள் நாளடைவில் மூன்றாம் குலோத்துங்க சோழனது காலத்தில் சோழப் பேரரசு சிதைந்த பொழுது பாண்டிய நாட்டில் ஆங்காங்கு செருக்குடன் வாழ்ந்த சோழ நாட்டுத் தலைவர்களான மறவர்கள் சுயேட்சை பெற்றுத் தங்களைத் தன்னரசு மன்னர்களாக அறிவித்துக கொண்டனர் என்பது தான் பொருத்தமான வரலாற்று ஊகமாகும். முதலில் இந்தப் புதிய மன்னர்கள் கானாட்டில் திருமெய்யம் பகுதியில் நிலைகொண்டிருந்து பின்னர் தெற்கே இன்றைய இராமநாதபுரம் மாவட்டத்தின் வடக்குப் பகுதியில் விரையாத கண்டன் என்ற ஊரில் நிலைகொண்டிருந்தனர் என்பதைப் புலப்படுத்தக்கூடிய ஆதாரங்கள் அண்மையில் கிடைத்துள்ளன.

முதலாவதாக திருமெய்யம் கோட்டை நகரைப் பற்றிய ஆய்வுரையை தொகுத்த புதுக்கோட்டை மன்னர் கலைக் கல்லூரிப் பேராசிரியர் விஸ்வநாதன் என்பவர் தமது ஆய்வுரையில் திருமெய்யம் கோட்டையை நிர்மானித்தவர் இராமநாதபுரம் மன்னர் ரெகுநாத கிழவன் சேதுபதி (கி.பி.1680-1710) என்றும் இந்த மன்னருக்கு முன்னால் கி.பி.12ஆம் நூற்றாண்டில் முத்து வயிரிய முத்து இராமலிங்க சேதுபதி என்பவர் இந்த கோட்டையின் உள் மதிலை

1. சமஸ்தான மகாவித்வான் ரா. ராகவையங்கார் - செந்தமிழ் (1905)

அமைத்தார் என்றும், அந்த விவரம் திருமெய்யத்தை சார்ந்த குடிமகன் ஒருவரிடம் இருந்த செப்பேட்டில் இந்த விவரம் குறிக்கப்பட்டிருப்பதைப் புதுக்கோட்டை அரசு தர்பார் ஆவணங்களைச் சார்ந்ததாக மேற்கோள் காட்டி வரைந்து இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.[1]

மேலும் திருமெய்யத்தை தலைமை இடமாகக் கொண்டிருந்த இந்த மறவர் தலைவர்கள் ஏதோ ஒரு காரணத்தினால் மேலும் தெற்கே சென்று இன்றைய இளையான்குடி வட்ட சாலைக் கிராமத்திற்கு வடக்கே உள்ள விரையாத கண்டன் என்ற கிராமத்தில் கி.பி.1600 வரை இருந்தனர் என்பதை பிற்காலச் சேதுபதி மன்னர்கள் அளித்துள்ள பல செப்பேடுகளிலிருந்து அறிய முடிகிறது.[2]

மற்றும் இந்த மறவர் தலைவர்களில் வீரமும் புகழும் உடையவராக விளங்கிய ஜெயதுங்கன் என்ற மறவர் தலைவரை கி.பி.16ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் மதுரை மாநகரில் மதுரை நாயக்க அரச பரம்பரையைத் தோற்றுவித்த விசுவநாத நாயக்கர் சூழ்ச்சியால் ஜெயதுங்கனைக் கொன்று ஒழித்ததுடன் அந்தப் புதிய தன்னரசு தடுமாறி நிலைகுலைந்தது[3]. சிறிது காலத்திற்குப் பிறகு ஜெயதுங்க தேவர் வழியினரான உடையான் சடைக்கன் சேதுபதி மீண்டும் அந்த தன்னரசை இன்றைய பரமக்குடி வட்டத்தில் அமைந்துள்ள புகலூர் என்ற சிற்றூரில் கி.பி.1603-ல் ஏற்படுத்தினார். புகல் என்றால் புகுதல் என்றும் அடைக்கலம் பெறுதல் என்ற பொருளைத் தருவதாகும். உடையான் சடைக்கன் தேவர் சில பல இடர்ப்பாடுகளுக்குப் பின்னர் விரையாத கண்டனிலிருந்து இந்தப் புதிய கிராமத்தில் புகலிடம் பெற்றார் என்பதின் காரணமாக இந்த ஊருககுப் புகலூர் என பெயர் ஏற்பட்டு இருத்தல் வேண்டும் என்பது பொருத்தமான காரணமாகும்.

இந்த புதிய ஊரினைத் தலைமை இடமாகக் கொண்ட மன்னர்கள் தான் சேதுபதிகள் என்று தொடர்ந்து அழைக்கப்பட்டனர்.

1. Prof K. Viswanathan (M.Phil. Thesis) Thiru Maiyyam The Fort toron (1974)
2. கமால் S.M.Dr. - சேதுபதி மன்னர் செப்பேடுகள் (1993) - பக்கம்
3. Sathyanatha Iyer - History of Madura Nayaks - Introduction (1924) -

ஆனால் சேதுபதி மன்னர்களைப் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட சிலர் சேதுபதி மன்னர்கள் காலத்தால் மிகவும் பிற்பட்டவர்கள் என்றும், மதுரை நாயக்க மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்டவர்கள் என்றும் தங்களது கருத்துககளைக் குறிப்பிட்டுள்ளனர். அருட் தந்தை டெய்லர் அவர்கள் தொகுத்துள்ள தொகுப்பில் ஒரு பழைய ஆவணம்[1] ஒன்றை வெளியிட்டுள்ளார். இந்த ஆவணத்தின் சுருக்கம் ஆவது, மதுரையில் ஆட்சி செய்த முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர் என்ற மன்னரது ராஜகுரு இராமேஸ்வரம் தலத்திற்கு புனித யாத்திரை மேற்கொண்டார். அப்பொழுது இராமேஸ்வரம் செல்லும் நெடுஞ்சாலை ஆறலை கல்லர்களால் ராஜகுருவிற்கு எவ்வித சிரமும் இல்லாத வகையில் அவர் தமது யாத்திரையைச் சிறப்பாகச் செய்து முடிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் புகலூர் உடையான் சேதுபதி செய்தார் என்றும் இதனைக் கேள்விப்பட்ட மதுரை மன்னர் மிக்க மகிழ்ச்சியுற்று உடையான் சேதுபதியை மதுரைக்கு வரவழைத்துச் சிறப்பான மரியாதைகளைச் செய்வித்துப் பாராட்டி அனுப்பி வைத்தார் என்ற செய்தி அறியத்தக்கதாக உள்ளது. இந்த நிகழ்வினை எடுத்துக்காட்டாக குறிப்பிட்டுள்ள வரலாற்று ஆசிரியர் ஏ. நெல்சன் என்பவர் சேது மன்னர்கள் பிற்காலத்தில் தோன்றியவர்கள் என்ற கருத்தினை மறுத்து இந்த கடற்கரைப் பகுதியில் வலிமை மிக்க தன்னரசு ஒன்று இல்லாமல் இருந்தால் நூற்றாண்டுக் காலமாக தொடர்ந்து வரும் சேது யாத்திரை பயணிகளுக்குப் பாதுகாப்பும் அந்தப் பகுதியில் அமைதியும் நீடிக்க இருக்க முடியாது என வரைந்துள்ளார்.[2]

இந்தக் கருத்தினை வலுவூட்டும் வகையில் ஆசிரியர் ஜேம்ஸ் பெர்கூசன் எழுதியுள்ளது வரலாற்றுச் சான்றாக அமைந்துள்ளது.[3]

அந்த நூலில் இராமேஸ்வரம் கோயிலில் உடையான் சேதுபதி என்பவர் கி.பி.1414ல் திருக்கோயிலின் மேல கோபுரத்தையும், திருச்சுற்று மதிலையும் எழுப்பித்த செய்தியினைக் கொண்ட கல்வெட்டினையும், கி.பி.1444ல் சின்ன உடையான் சேதுபதி என்பவர்

1. Taylor - Old Historical Manuscript (1831) Part II
2.Nelson Manual of Madura Country (1861) Part III - Page 4
3. James Perquson - The History of India & the great eastern Architecture (1881)

இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு ஐந்து கிராமங்களை தானம் வழங்கிய செய்தியையும் கொண்ட கல்வெட்டுக்களைக் குறிப்பிடுவதில் இருந்து சேதுபதி மன்னர்களது ஆட்சி 15-ம் நூற்றாண்டில் இந்தப் பகுதியில் நீடித்து வந்த விபரத்தை அறிந்து கொள்ள முடிகிறது.

அடுத்து 15-ம் நூற்றாண்டில் இலங்கை யாழ்ப்பாணத்தில் நல்லூர் நகரில் புதிதாக அமைக்கப்பட்ட கந்தசாமி கோயிலுக்கு ஆகமமுறைப்படி பூஜைகள் நடத்துவதற்காக சிவபிராமணர்கள் தேவைப்பட்டனர். இதனை யாழ்ப்பாண மன்னரான ஆரியச் சக்கரவர்த்தி சேதுபதி மன்னருக்குத் தெரிவித்து, சேது நாட்டில் இருந்து நாளைந்து சிவபிராமணர்களை அனுப்பும்படி வேண்டிக் கொண்டார். இதனை ஒட்டி இராமேஸ்வரத்தில் இருந்து ஐந்து பிராமணர்களை நல்லூருக்கு அனுப்பி வைக்கப்பட்ட செய்தியினை 15-ம் நூற்றாண்டின் சிற்றிலக்கியமான முத்துராசக் கவிராயரது "கைலாய மாலை" குறிப்பிடுவது மற்றொரு சான்றாகும்.

தொடர்ந்து 16-ம் நூற்றாண்டில் போர்ச்சுக்கீசியர்கள் கிழக்குப் பகுதியில் வேதாளை என்ற கிராமத்தில் ஒரு கோட்டையை கட்டிக் கொண்டு இராமேஸ்வரம் செல்லும் பயணிகளுக்கு மிகுந்த தொல்லை கொடுத்து வந்தனர். அப்போது இருந்த சேது மன்னர் மதுரையின் மகாமண்டலேஸ்வரரது படை உதவி பெற்று போர்ச்சுக்கீசியர்களை கி.பி.1547ல் விரட்டியடித்த செய்தியினை ஆசிரியர் ஹீராஸ் பாதிரியார் தமது Aravidu Dynasty என்ற நூலில் குறிப்பிட்டிருப்பதும் மற்றொரு சான்றாகும்.

இந்த் மன்னர்களது காலத்தில் சேதுநாடு என்பது இராமேஸ்வரம் தீவையும், அதற்கு மேற்கே உள்ள சில பகுதிகளை மட்டுமே குறிப்பதாக அமைந்து இருநதது. அதாவது பிற்காலப் பாண்டியர்களது ஆட்சியில் அமைந்திருந்த இப்பகுதி - கோடிநாடு. கீர் செம்பிநாடு வடக்கே செவ்விருக்கைநாடு, பொலியூர் நாடு, கைகிநாடு, வடவிருக்கை நாடு, வடதலைச் செம்பி நாடு, புனல்பறளை நாடு,

கிடாத்திருக்கை நாடு, ஆப்பனூர் நாடு, கமுதை நாடு, அளற்றுத்து நாடு, வேம்பு நாடு, பருத்திக் குடி நாடு, கருநீலக்குடி நாடு ஆகிய பகுதிகளை மட்டுமே உள்ளடக்கி இருந்ததாகத் தெரிகிறது.

கி.பி.1645-ல் சேதுபதி மன்னராக அறிவிக்கப்பட்ட திருமலை ரெகுநாத சேதுபதி, தமது ஆட்சியில் சேது நாட்டின் எல்லைகளை வடக்கே அதளையூர் நாடு, கல்லக நாடு, புறம்மலை நாடு, சூரக்குடி நாடு, கள்ளர் நாடு, கழனி வாசல் நாடு, முத்தூர் நாடு, கல்வாசல் நாடு, உருவாட்டி நாடு, உஞ்சினை நாடு, பூங்குன்ற நாடு ஆகிய பகுதிகளை இணைத்ததுடன் இன்னும் சற்று வடக்கே சோழ மண்டலத்திற்குள் புகுந்த அறந்தாங்கிச் சீமை, பட்டுக்கோட்டைச் சீமை, திருவாவூர்ச் சீமை, கள்ளர் சீமை ஆகிய பரந்த பகுதிகளையும் தஞ்சை மன்னர்களிடமிருந்து கைப்பற்றிச் சேதுபதி சீமையின் பகுதிகளாக மாற்றினார். மேலும் மதுரை மண்டலத்தின் மீது கி.பி.1658ல் படையெடுப்பை மேற்கொண்ட கன்னடியர்களை புறமுதுகிட்டு ஓடுமபடி செய்தார். மதுரை திருமலை நாயக்க மன்னருக்காக பெற்ற இந்த வெற்றியினைப் பாராட்டி திருமலை நாயக்க மன்னர், மதுரை மண்டலத்தின் கிழக்குப் பகுதியான திருப்புவனம், திருப்பாச்சேத்தி, பள்ளிமடம் ஆகிய பகுதிகளையும், திருமலை ரெகுநாத சேதுபதி மன்னருக்கு அன்பளிப்பாக வழங்கினார். மேலும் தெற்கே திருநெல்வேலிச் சீமைப் பகுதியில் மன்னர் கோயில் வேறு சில பகுதிகளையும், வங்கக் கடலின் தென்பகுதியில் முத்துக்குளிக்கும் உரிமையும் வழங்கினார்.

இதனால் சேது நாடு பாண்டிய நாட்டினை ஒத்த பெரும் நிலப்பரப்பாக விளங்கியது. ஆனால் இந்த மன்னரை அடுத்து சேதுபதி பட்டம் தரித்துக் கொண்ட ரெகுநாத கிழவன் சேதுபதியின் ஆடசியின்போது சேது நாட்டின் வட பகுதியான புறமலை நாட்டையும், கொடுங்குன்றம் என்ற பிரான்மலைக்கும் அப்பால் உள்ள கள்ளர் சீமையை அந்த மன்னரது மைத்துனர் ரெகுநாதராயத் தொண்டைமான் தன்னரசராக தம்மை அறிவித்துக் கொண்டார்.

கி.பி.1710 வரை ஆட்சி செய்த கிழவன் ரெகுநாத சேதுபதி கள்ளர் நாட்டை ரெகுநாத ராய தொண்டைமானிடமிருந்து மீண்டும் கைப்பற்றுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த மன்னரை அடுத்து சேதுபதியான திருவுடையாத் தேவர் என்ற முத்து விஜய ரகுநாத சேதுபதியும் (கி.பி.1710-1725) கள்ளர் சீமையின் ஆடசியைப் பற்றி கவலை கொள்ளவில்லை. இந்த மன்னருக்குப் பிறகு சேது நாட்டில் கி.பி.1725-26 களில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களின் காரணமாக சேதுநாட்டின் வடக்கு, வடகிழக்குப் பகுதியான, பொலியூர் நாடு, புனல் பறளைய நாடு, கானப்பேர் நாடு, உருவாட்டி நாடு, ஊஞ்சனை நாடு, நாலுகோட்டை நாடு, கண்டதேவி நாடு, அதளையூர் நாடு, தென்னாலை நாடு, சூரக்குடி நாடு, கோமு நாடு, திருப்பத்தூர் நாடு, புறமலை நாடு, பூங்குன்ற நாடு ஆகிய நாடுகளைக் கொண்ட சிவகங்கை அரசு என்ற சின்ன மறவர் சீமை வரலாற்றில் இடம்பெற்றது. ஆனால் அறந்தாங்கி, பட்டுக்கோட்டை, திருவாரூர் சீமைகள், மீண்டும் கி.பி.1728ல் தஞ்சை மராட்டிய அரசுடன் இணைக்கப்பட்டுவிட்டன.

## சேதுபதிகளின் ஆட்சியின் வீழ்ச்சி

மேலேகண்ட அரசியல் மாற்றங்களினால் சேதுபதிச் சீமை வளர் பகுதியை அடுத்தடுத்த மூன்று பிரிவுகளாக பிரிவு பட்டுப், பிரிந்து சென்றதால், சேதுபதி மன்னர்களது பேராற்றலும், பெரும்புகழும் நாளடைவில் சிறிது சிறிதாக நலிந்து வந்தது. கி.பி.18ஆம் நூற்றாண்டில் தென்னக அரசியலில் வேற்று நாட்டாரது தலையீடும், ஆயுதப் பெருக்கமும், ஏற்பட்டதின் காரணமாக முதலாவது முத்து இராமலிங்க சேதுபதி என்ற பெயருடன் கி.பி.1762 முதல் செம்மையான ஆட்சி செய்த மன்னரை கி.பி.1795ல் ஆங்கிலேயர் சிறைப்பிடித்துத் திருச்சிக் கோட்டையில் அடைத்ததுடன் சுமார் 400 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தின் கடற்கரைப் பகுதியில் தன்னரசு ஆக விளங்கிய சேதுபதிகளின் ஆட்சியை வரலாற்றிலிருந்து தடுத்து மறைத்து விட்டனர்.[1]

1. எஸ்.எம். கமால் Dr. - விடுதலைப் போரில் சேதுபதி மன்னர் (1987) - பக்கம்

காலச் சூழலில் அரசுகள் எழுவதும மறைந்து போவதும் சாதாரண நிகழ்வுகள் ஆகும். சேதுபதிகளின் ஆட்சி மறைந்து இருநூறு ஆண்டுகளுக்கு மேலாகியும் அவர்களது பேராற்றலையும் புகழ் வாழ்கையையும் பறைசாற்றக்கூடிய வரலாற்றுச் சின்னங்களும் தடயங்களும், ஆவணங்களும், இன்றும் நிலைத்து வந்துள்ளன. அவைகளில் இருந்து இந்த மன்னர்கள் ஆட்சியில் கி.பி.15ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.18ஆம் நூற்றாண்டு வரையான கால எல்லையில் அரசியல் சமுதாய மொழிப் புலங்களில் மிகப்பெரிய மாற்றங்களும், விளக்கங்களும், தமிழ் இனத்திற்கு ஏற்பட்டு வந்துள்ளன.

இந்த இறுக்கமான நிலையில் தமிழர்களது மொழி, கலை, ஆன்மீகம், பண்பாடு ஆகியவைகளைப் புரந்து, காத்து, வளர்த்து வந்தவர்கள் இந்தச் சேதுபதி மன்னர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

கி.பி.16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வணிக நோக்குடன் தமிழகத்திற்கு வந்தவர்கள் போர்ச்சுக்கீசியர்கள். நாளடைவில் இங்கு கிடைத்த முத்துக்களையும், சங்குகளையும், மிளகு போன்றவைகளையும் கொள்முதல் செய்து மேலை நாடுகளுக்கு அனுப்பி வைத்து பெரும் ஆதாயம் பெற்றதுடன் அமையாமல் தமிழக மக்களின் ஒரு பிரிவினரான பரவர் என்ற கடல்படு பொருள்களில் தொழில் செய்து வந்த மக்களைத் தங்களது புதிய சமயமாகிய கிறுஸ்துவ சமயத்திற்கு மதமாற்றம் செய்தனர். மேலும் அவர்களது மன்னரான போர்ச்சுகல் நாட்டு பிலிப்ஸ் மன்னரது குடிகளாகவும் அவர்களை மாற்றி வந்தனர். புனித இயேசு மதத்தொண்டர்களான பிரான்ஸிஸ் சேவியர், அந்தோணி கிரிமிநாடிஸ், ஜான் டி பிரிட்டோ, ராபர்ட் டி நொபிலி ஆகிய சமயத் தொண்டர்களது வாழ்க்கை வரலாறுகளே இதற்குத் தக்க சான்றுகளாகும். அப்பொழுது மதுரையைத் தலைமை இடமாகக் கொண்டிருந்த மதுரை நாயக்க மன்னர்கள் இந்த வேற்று மதத்தாரது சமய பண்பாட்டு

ஆக்கிரமிப்புக்களைத் தடுத்து நிறுத்துவதற்கு ஏற்ற வலிமை அற்ற அரசர்களாக விளங்கி வந்தனர். இவர்களைப் போன்றே கி.பி.17ஆம் நூற்றாண்டில் டச்சுக்காரர்களும், கி.பி.18ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் புகுந்து தமிழகத்தைப் பல நிலைகளிலும் அலைக்களித்து வந்தனர்.

இத்தகையதொரு நெருக்கடியான சூழ்நிலையில் வேற்று நாட்டவர்களது ஆக்கிரமிப்பு ஆயுத வலிமைக்கும் எதிராக சேது நாட்டு மறவர்களது தொன்மையான வீரத்திற்கும், கொடைக்கும் ஏற்ற காலமாக விளங்கியவர்கள் இந்த மன்னர்கள். இந்த மன்னர்களின் இறுதியானவரான முத்து இராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி மன்னர் ஆங்கிலேயரது ஏகாதிபத்தியக் கொள்கைக்கும் ஆக்கிரமிப்பு மனோபாவத்திற்கும் முட்டுக்கட்டையாக விளங்கிய காரணத்தினால் இவரை கிபி.1795ல் சூழ்ச்சியால் சிறைப் பிடித்து திருச்சிக் கோட்டையிலும் பின்னர், சென்னைக் கோட்டையிலும் அவரது இறுதிக்காலம் வரை அடைத்து வைத்திருந்தனர். 24 ஆண்டுகளாக சிறைவாச முடிவில் இந்த மன்னரை அங்கேயே மரணமடையச் செய்தனர் என்பது வரலாறு. இந்தியத் திருநாட்டில் அந்தக் கால கட்டத்தில் எத்தனையோ மன்னர்கள் இருந்த போதிலும் குறிப்பாகத் தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருவிதாங்கூர், கொல்லம், மைசூர் போன்ற அரசுகளின் அதிபதிகள் இருந்து வந்த போதிலும், ஆங்கில ஆயுத வலிமையை எதிர்த்த ஒரே மன்னர் இந்தச் சேதுபதி தான் என்பது வரலாறு விளக்கும் தனிப்பெறும் எடுத்துக் காட்டாகும்.

மற்றும் சமயத் துறையில் இந்த மன்னர்கள் ஆற்றியுள்ள சிறந்த தொண்டுகள் மிகப் பலவாகும். இந்த மன்னர்களது ஆட்சிக் காலத்தில் சேது நாட்டிலும், மற்றும் தமிழகத்தின் பிற பகுதிகளிலும் வேற்றுச் சமயங்களான, இஸ்லாம், கிறிஸ்துவம் போன்ற சமயங்களில் செல்வாக்குப் பரவலாகத் தமிழகத்தில் தொடர்ந்து வந்த பொழுதும் தொன்மைக் குடியினரான சேதுபதி மன்னர்கள் தாம் பற்றி ஒழுகி வந்த சைவ சமயத்தின் செழுமைக்கும் வளர்ச்சிக்கும் மிகச் சிறப்பான

சாதனைகளைப் புரிந்து வந்துள்ளனர்.

இதற்குச் சான்றாக இன்றும் நிலைத்து நின்று அவர்களது பெரும் புகழைப் பறைசாற்றும் பெரும் சின்னங்களாக விளங்குபவை தான் இராமேஸ்வரம், திருப்புல்லாணி, திரு உத்தரகோசமங்கை, காளையார் கோவில், திருவாடானை, திருப்பெருந்துறை, திருப்புத்தூர், திருக்கோஷ்டியூர், நாட்டரசன் கோட்டை, திருக்கொடுங்குன்றம் ஆகிய தலங்களில் அமைந்துள்ள திருக்கோவில்களாகும்.

## கோயில் திருப்பணிகள் :

குறிப்பாக இராமேஸ்வரம் திருக்கோயில் நமது நாட்டின் மிகச் சிறந்த புனிதத் தலமாக ஏற்றிப் போற்றப்படுவதுடன் நாள்தோறும் நூற்றுக்கணக்கான மக்கள் வடமாநிலங்களில் இருந்து இந்தக் கோயிலுக்கு வருகை தந்து பக்திப் பூர்வமாகத் தங்களது நேர்த்திக் கடன்களைச் செலுத்தி நிம்மதியும் ஆறுதலும் கொள்வதை யாவரும் உணர முடியும். இந்தக் கோயில் கி.பி.7ஆம் நூற்றாண்டில் திருஞான சம்பந்தராலும், திருநாவுக்கரசு சுவாமிகளாலும் பாடிச் சிறப்பிக்கப்பட்ட பொழுது மிகச் சிறிய கற்றளியாக விளங்கியது.

கடந்த பல நூற்றாண்டுகளில் குறிப்பாக 17, 18, 19வது நூற்றாண்டுகளில், சேது நாட்டின் அதிபதிகளாக விளங்கிய சேது மன்னர்கள் காண்பவர் வியப்படையும் வண்ணம் இராமேஸ்வரம் திருக்கோயிலின் பிரம்மாண்டமான கட்டுமானமான உலகப்புகழ் பெற்ற மூன்றாவது பிரகாரத்துடன் அமைந்திருப்பது யாவரும் அறிந்த ஒன்று.

இந்தச் சிறந்த திருப்பணியை வழிவழியாக மேற்கொண்டு நிறைவு செய்திருப்பதுடன் இந்தக் கோயிலின் நாள்தோறும் வழிபாட்டிற்கும், ஆறுகால பூஜைக்கும் கட்டளைகளுக்கும், மாத ஆண்டு விழாக்களுக்கும், உதவும் வகையில், பல ஊர்களின் வருவாய்கள் இந்தக் கோயில்களுக்குக் கிடைக்குமாறு அந்த

ஊர்களைச் சர்வமான்யங்களாகச் சேதுபதி மன்னர்கள் வழங்கி உள்ளனர். சேது நாட்டிலும் பாண்டிய, சோழ நாட்டிலும் இந்த ஊர்கள் அமைந்திருந்தாலும் அவைகளின் வருவாய்கள் தமிழ்நாடு அரசு மூலமாக இந்தத் திருக்கோயிலுக்கு இன்றும் கிடைத்து வருகின்றன.

இதனைப் போன்றே "பக்தர்களெல்லாம் பார் மேல் சிவ புரமென" ஏத்தும் திரு உத்திர கோசமங்கை திருக்கோயிலின் கட்டுமானத்திற்கும், நாளார்ந்த கட்டளைகளுக்கும் ஏற்ற நிரந்தர ஏற்பாடுகளையும் இந்த மன்னர்களே செய்து வைத்துள்ளனர். இங்குதான் திருவாதவூர் எனப் போற்றப்படும் மணிவாசகப் பெருமான் தவமிருந்து திருப்பணி செய்து திருவாசகப் பாடல்களை இயற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் பாண்டிய நாட்டில் தேவார பாடல் பெற்ற 16 கோயில்களில் சேதுநாட்டைச் சேர்ந்த திருச்சுழியல், திருவாடானை, காளையார் கோவில், திருப்புத்தூர், திருக்கொடுங்குன்றம், இராமேஸ்வரம் ஆகிய திருக்கோயில்களும், சிறப்புடன் இயங்குவதற்கான ஏற்பாடுகளையும் இந்த மன்னர்களே செய்துள்ளனர். இந்தக் கோயில்கள் அனைத்தும் சைவ சமயத்தின் சிறப்பான தளங்களாக விளங்குவதாலும், சேதுபதி மன்னர்களும் சைவ சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்ததனாலும் மட்டும், இங்கெல்லாம் அவர்களது திருப்பணிகள் இடம் பெற்றிருக்கின்றன என்று நினைத்தால் அது தவறானதாகும். ஏனெனில் சேதுபதிகளின் ஆட்சி சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல சைவ சமயத்தாருக்கு மட்டும் அமைந்திருக்கவில்லை. மாறாக அவர்களது சமயப்பொறை அனைத்து சமய மக்களிடத்தும் நிலைபெற்று இயங்கி வந்தது.

சேது நாட்டில் மிகச் சிறப்பான வைணவத் தலங்களான திருப்புல்லணை, திருக்கோஷ்டியூர் ஆகிய திருத்தலங்கள் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டவை. இந்த இருபெரும் கோயில்களும் சேது மன்னர்களது கொடைகளுக்கு இலக்காகி

இருந்ததில் வியப்பில்லை. இன்று காணப்படும் திருப்புல்லாணித் திருக்கோயிலில் கட்டுமானம் அனைத்தும் திருமலை ரெகுநாத சேதுபதி மன்னரால் இயற்றப்பட்டதாகும். ஆண்டுதோறும் பங்குனித் திங்களில் இந்த கோயிலில் பெருமாளுக்கு வசந்தவிழா நடைபெறுவதற்கும், அப்பொழுது பெருமாள் தேவியுடன் பவனி வருவதற்கான திருத்தேரையும், செய்துவித்து வழங்கியவர் இந்த மன்னரே ஆவார்.

மேலும் திருப்புல்லாணியை அடுதது அகத்தியர் குட்டம் கிராமத்தில் சீனிவாசப் பெருமாள் கோயிலுக்கும் மற்றும் கொத்தங்குளம், ஆதன்கொத்தங்குடி, இராமநாதபுரம், அபிராமம், இராஜசிங்கமங்கலம் ஆகிய ஊர்களில் உள்ள பெருமாள் கோயில்களுக்குப் பல திருப்பணிகளைச் சேது மன்னர்கள் செய்துள்ளனர். இதனைப் போன்றே திருக்கோஷ்டியூர் சௌமிய நாராயணப் பெருமாள் திருக்கோயிலுக்கும் இதே மன்னர்கள் பல கட்டளைகளை ஏற்படுத்தி உள்ளனர்.

இந்த சேதுபதி மன்னர்கள் ஆட்சியில் கல்வி கற்பதற்கெனத் தனியாகப் பள்ளிகள் அமையவில்லை ஆயினும், திருக்கோயில்களே மக்களுக்கு கல்வி அறிவூட்டும் மையங்களாகவும், ஆடல், பாடல் கலைகளைப் பரப்பும், கலைக் கோயில்களாகவும் விளங்கி வந்தன. இந்தப் பணிகளை மேற்கொண்ட பெரிய மேளம் எனப்படும் நாதஸ்வரக்குழுக்களும் சின்ன மேளம் எனப்படும் நாட்டியக் குழுக்களும் மற்றும் கோயில் விழாக்களை அழகும், பொலிவும் மிக்கதாக அமைப்பதற்காக கைவித்தாலம், அலங்காரப்பட்டர் என்ற அழகுக் கலைஞர்களும், அவர்களது பணிகளுக்காக வருட, மாத, நிவேதனங்களாகப் பொன்னும், பொருளும், வழங்கப்பட்டு வந்தன. இந்தக் கலைகளில் மிகச் சிறப்புற்று விளங்கியவர்களுக்கு ஜீவித மான்யங்களாகக் காணிகளும், காணிகள் நிறைந்த ஊர்களும் தர்மாசனங்களாகச் சேது மன்னர்களால் வழங்கப்பட்டு வந்தன. சேது மன்னர்களது இத்தகைய அரிய கொடைகளைக் குறிப்பிடும் மூன்று

நிகழ்ச்சிகள் இராமநாதபுரம் சமஸ்தான நில மான்ய கணக்கு என்ற பேரேட்டில் பதிவாகி உள்ளன.

திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார் கோவில் என்ற திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனுக்கு உதய வேளையில் பள்ளி எழுச்சியின் பொழுது வீணை இசைத்து வந்த கலைஞர் ஒருவருக்கு அந்த ஊரிலேயே பல காணி நிலங்கள் தானமாக வழங்கப்பட்டன. அது சம்பந்தமான குறிப்பு ஒன்றும் உள்ளது. இரண்டாவதாக திருச்சுழியல் திருக்கோயிலில் இயல்பாக நாட்டியக் கச்சேரி செய்து வந்த தாசி கல்யாணி என்ற நர்த்தகி, வேடம் கட்டிச் சிறப்பாக நாட்டியம் ஆடியதற்காக அந்த ஊரை அடுத்த பாறைப்பட்டி என்ற ஊர் சர்வ மான்யமாக வழங்கப்பட்டதையும் அருப்புக்கோட்டை வாழ வந்த அம்மன் கோயிலில் நாதஸ்வர சேவை செய்த கருப்பணன் என்ற கலைஞருக்கு நில மான்யம், வழங்கியதையும் அந்தப் பேரேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அன்ன சத்திரங்கள் :

இவை தவிர நல்ல பெருவழிகளும், வாகனப்போக்குவரத்தும் இல்லாத முந்தைய காலத்தில் இராமேஸ்வரம் திருக்கோயிலுக்குத் தல யாத்திரை மேற்கொள்பவர்கள் வடக்கே சோழ மண்டலத்திலிருந்தும், தெற்கே நாஞ்சில் நாட்டிலிருந்தும், கால்நடையாகவே இராமேஸ்வரம் வருவது வழக்கமாக இருந்தது. இந்த வழிப்பாதைகள் சேதுமார்க்கம் என வழங்கப்பட்டன.

இந்த வழியில் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கு நீரும், நிழலும் இல்லாத அந்தப் பகுதிகளில் பத்து மைல்கள் இடைவெளியில் ஒரு அன்ன சத்திரம் என்ற முறையில் ஆங்காங்கு சத்திரங்களை அமைத்து அங்கே வருகின்ற பயணிகளுக்கு மூன்று நாட்களுக்கு ஒரு நாளைக்கு இரு வேளை உணவும், உறையுளும், இலவசமாக வழங்க இந்த மன்னர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். இந்த

அறப்பணிகளுக்கு எனச் சேது மன்னர்கள் பல ஊர்களின் வருவாய்களைத் தானமாக வழங்கினர். இந்த சத்திரங்களில் பயணிகளுக்கு மட்டுமல்லாமல் முதியோர்களுக்கும் உடல் ஊனமுற்றோர்களுக்கும் உணவு வழங்க ஏற்பாடு செய்திருந்தனர். இத்தகைய சத்திரங்களை ஆன்மீக உணர்வுடன் நடத்தி வந்த சில தனியார்களும் நாளடைவில் அவைகளைப் பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்ட பொழுது சேது மன்னர்கள் அந்த சத்திரங்களையும், மேற்கொண்டு அவைகளின் அன்னதானப் பணியைத் தொடர்ந்து செய்தனர்.

இந்த சத்திரங்களைத் தவிர ஆங்காங்கு திருமடங்களையும் நிறுவி, பயணிகளுக்கு நீரும், மோரும் வழங்கவும், விழாக் காலங்களில் சிறப்புப் பூஜைகள், நடத்தி இலவச உணவுகள் வழங்கவும் ஏற்பாடு செய்தனர். இந்த சத்திரங்களும், திருமடங்களும், நாளடைவில் சேது மன்னர்களது ஆட்சிக்குப் பிறகு பழுதடைந்து இன்றும், பல ஊர்களில் அலங்கோலமாகக் காட்சி அளிப்பது நமக்கு வேதனை தருவனவாக உள்ளது.

வடக்கே சோழ மண்டலத்திலிருந்து இராமேஸ்வரம் நோக்கி வரும் பயணிகள் இராமநாதபுரத்தை அடுத்த ஆற்றங்கரை என்ற ஊரின் சத்திரத்திற்கு வந்து சேர்ந்த உடன் அவர்கள் வைகை நதியைக் கடந்து தங்களது பயணத்தைத் தொடர வேண்டிய நிலை ஆதலால் ஆற்றங்கரைக்கும் எதிர்க்கரைக்கு எதிரில் வைகைக் கரையில் உள்ள நாகாட்சிக்கும் இடையில் ஆற்றைக்கடப்பதற்காகச் சேது மன்னர்கள் படகு வசதி செய்திருந்தனர். இதனைப் போன்றே மண்டபம் தோணித்துறைச் சத்திரத்திரத்திற்கும், எதிர்க்கரையில் உள்ள பாம்பன் கரைக்கும் இடையில் கடலைக் கடந்து செல்வதற்கும் இராமேஸ்வரத்திலிருந்து 15 கல் தொலைவில் உள்ள தனுக்கோடி தீர்த்தக் கட்டத்திற்கும், கடலில் சென்று வருவதற்குத் தக்க படகு வசதிகளையும் செய்திருந்தனர். இந்தப் படகுகள் தர்மப் படகு என சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதி வரை மக்களுக்குப் பயனளித்து

வந்தன.

கி.பி.16, 17ஆவது நூற்றாண்டுகளில் தமிழகத்தில் "அன்பேசிவம்" "சிவமே இறைவன்" எனச் சைவ சிந்தனைகளை மக்களிடையே பரப்பித் தமிழுக்கும், தமிழ் மொழிக்கும், சைவ சமயத்தினருக்கும் சிறப்பான தொண்டுகளைச் செய்து வந்த, திருவாவடுதுறை, திருமடத்தை ஆதரித்துச் சமயப் பணி சிறப்பாகத் தொடர்வதற்கு அந்த மடாதிபதிகளுக்குப் பல ஊர்களைச் சேது மன்னர்கள் இராமநாதபுரம், அறந்தாங்கி, பட்டுக்கோட்டை, சீமைகளில் சர்வமான்யமாக வழங்கி உள்ளதை ஆவுடையார் கோவில், திருவாவடுதுறை மடம் செப்பேடுகள் தெரிவிக்கின்றன.

மேலும்

"நதியாம் விரிசலை நன்னகர் பொற்கோட்டை
பதியாந் துறைசைப் பதிக்கு - விதியாகத்
தானமிட்டான் சேதுபதி தாரணிதா னுள்ளளவும்
ஊனமிலை பெந்த நாளும்"

என்ற தனிப்பாடலும் சேது மன்னர் திருவாவடுதுறை மடத்திற்கு வழங்கிய தானங்களைச் சிறப்பித்துச் சொல்கிறது.

மேலும் மணிமுத்தாறு ஆற்றுப் போக்கின் வடகரையில் அமைந்துள்ள அனுமந்தக்குடி கிராமம் சேது மன்னர்களது வலிமை மிக்க கோட்டைகளில் ஒன்று ஆகும். இந்தக் கோட்டையினைக் கைப்பற்றுவதற்காகத் தஞ்சை மராட்டிய மன்னர்கள் பலமுறை தாக்குதல்கள் நடத்தி தோல்வி கண்டனர் என்பது வரலாறு. இங்குள்ள குடிகளில் முக்கியமானவர்கள் சமண சமயத்தைச் சார்ந்தவர்கள். மிகச் சிறுபான்மையினரான இந்த மக்கள் வழிபட்டு வருகின்ற மழவநாத சுவாமிகள் திருக்கோயில் பராமரிப்புக்குத் திருமலை சேதுபதி மன்னர் அனுமந்தக்குடிக் கிராமத்தைத் தானமாக வழங்கியுள்ளார். இத்துடன் அமையாமல் இதே கிராமத்தில் உள்ள செய்யது முகம்மது புகாரி என்ற

இஸ்லாமிய துறவியின் அடக்கவிடத்தில் கந்தூரி முதலியன ஆண்டுதோறும் நடத்துவதற்கும், அழியாபதி, குணபதிமங்கலம் ஆகிய இரு ஊர்களை சர்வமான்யமாக வழங்கிச் சிறப்பித்துள்ளார்.[1]

இவரை அடுத்து சேதுபதி மன்னர் பட்டத்தைத் தாங்கிய கிழவன் ரெகுநாத சேதுபதி என்பவர் சேது நாட்டின் சிறுபான்மை குடிமக்களான இஸ்லாமிய மக்களது தொழுகைப் பள்ளிகளுக்காக திருச்சுழியினை அடுத்த காரேந்தல், கமுதியை அடுத்த பொந்தாம்புளி, இராமநாதபுரத்தை அடுத்த நாரணமங்கலம் ஆகிய ஊர்களில் நிலங்களை சர்வமான்யமாக வழங்கியதை இராமநாதபுரம் சமஸ்தான நிலமான்யக் கணக்கு தெரிவிக்கின்றது.

இந்த மன்னர் சேது நாட்டில் சிறுபான்மையினரும், வாணிபத்தில் சிறந்து விளங்கியவர்களுமான இஸ்லாமியப் பெருமக்களுக்குப் பல சலுகைகளை வழங்கி மகிழ்ந்ததுடன் அவர்களில் வலிமையும் வீரமும் நிறைந்தவர்களைத் தமது அரசுப் பணியில் நம்பிக்கைக்கு உரிய காவல்குடியினராக அமர்த்தி இருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். திரு உத்தர கோசமங்கை திருக்கோயிலுக்கு வழங்கிய தான சாசனம் ஒன்றில் இந்த முஸ்லிம் மக்களை "நமது காவல் குடியினரான" என்று உரிமையுடன் குறிப்பிட்டு இருப்பது ஆராயத்தக்கது. மேலும் கீழக்கரை பெரும் நகரில் வாழ்ந்த சீதக்காதி மரைக்காயரைக் கிழவன் ரெகுநாத சேதுபதி தமது உடன் பிறவாச் சகோதரராக மதித்துப் போற்றி வந்ததும், அரசியல் அலுவல்கள் அனைத்திலும் சீதக்காதி மரைக்காயரது நல்லுரையைக் கேட்டு அதன்படி நடந்து வந்தார் என்பதை டச்சு கிழக்கிந்திய கம்பெனி ஆவணங்கள் சான்று பகர்கின்றன.[2] சேது நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் அரசருக்காக வரி வசூலிக்கும் பொறுப்பைச் சீதக்காதி மரைக்காயர் பெற்றிருந்தார் என்பதுடன், பாம்பன் நீர் வழிப் போக்கில் வணிக கப்பல்களின் நடமாட்டத்தையும் அவரே கண்காணித்து வந்தார் என்பதும் தெரிய வருகிறது. பல காலமாகச் சேது மன்னர்களின் தலைநகரான புகலூர், நாட்டுப்புறப் பகுதியில் ஒரு குக்கிராமமாக அமைந்திருந்ததை விட்டு

1. Copper Plates of Regunatha Thirumalai Sethupathi
2. எஸ்.எம். கமால் Dr. -செந்தமிழ் வள்ளல் சீதக்காதி (2000) - பக்கம்

விட்டு இன்றைய இராமநாதபுரத்திற்கு மன்னரது தலைமை இடத்தை மாற்றி அமைத்ததும், இங்கே செவ்வக வடிவில் சுமார் 4 மைல் சுற்றளவில் கல்லாலான கோட்டையை அமைத்தும் சேது மன்னரது அவைக் களமாகப் பயன்படுவதற்கு இராமலிங்க விலாசம் என்ற கொலு மண்டபத்தையும் அமைத்து உதவியவரும் இந்த சேது மன்னரது நல்லமைச்சரான சீதக்காதி மரைக்காயரே ஆவார் என்பதை இராமநாதபுரம் சமஸ்தான ஆவணங்கள் குறிப்பிடுகின்றன.[1]

மேலும் வானத்தின் பொழிவை மட்டும் பருவகாலத்தில் பெற்று வளமை பெற்று வந்த சேது நாட்டில் பன்னாட்டுப் பண்டங்களும், கடல்வழி வியாபாரப் பெருக்கமும், சீதக்காதி மரைக்காயரது கடல் கடந்த பன்னாட்டு வணிகம் உதவியாக அமைந்தது. வங்கக் கடலின் சங்கும் வங்காள நாட்டுக் குடி மக்களுக்கும், மேலை நாடுகளுக்கும், நெல்லும், கைத்தறித் துணியும், சங்கும், இலங்கை, காரைக்கால், பாண்டிச்சேரி, பரங்கிப்பேட்டை, போன்ற நெடுந்தூரக்கடல் பட்டினங்களுக்கும் போய்ச் சேர்ந்தன. கேரள நாட்டு மிளகும், அரபு நாட்டுக் குதிரைகளும், கீழ்த் திசை நாட்டு பட்டு, சந்தனம், அம்பர், செம்பு ஆகிய பொருள்களும், சேதுநாட்டு சந்தைகளில் இடம் பெற்றன. இவ்விதம் சமயப் பொறையைப் பேணிவந்து சேது நாட்டு சமய ஒற்றுமையையும், அமைதியையும் நிலவச் செய்து வந்தனர் இந்த மன்னர்கள். இவர்களது வழியினரான முத்து விஜய ரெகுநாத சேதுபதியின் ஆட்சிக் காலத்தில் ஓரியூரில் கிறிஸ்தவ சமயத் தொண்டரான புனித அருளானந்தருக்கு நினைவு ஆலயம் எழுப்பிய பொழுது இந்த மன்னரது சகோதரர் முத்து வையிரவநாத சேதுபதி இந்த விழாவில் கலந்துகொண்டு செங்கல் சுமந்து சென்று கால்கோல் விழாவிற்குச் சிறப்பு செய்தார் என்பது வரலாறு.[2]

இந்த மன்னரைத் தொடர்ந்து சேதுபதி மன்னர்களாக குமார முத்து விஜய ரகுநாத சேதுபதியும், அவரது மகனான சிவக்குமார ரெகுநாத சேதுபதியும் முறையே கீழ்க்கண்ட இஸ்லாமிய துறவிகளது புனித அடக்க இடங்களுக்குப் பல கிராமங்களைத் தானம்

1. Raja Ram T. - Manual of Ramnad Samasthanam (1891)
2. Fr. Salilere - The Red Sand (1953) Page

அளித்துள்ளதை அவர்களது செப்பேடுகள் சான்றுகளாக அமைந்துள்ளன.[1]

1. இராமேஸ்வரம் ஆபில், காபில் தர்காவிற்குப் பக்கிரிபுதுக்குளம் என்ற கிராமம் தானம் வழங்கப்பட்டது.

2. ஏர்வாடியில் அமைந்துள்ள சுல்தான் செய்யது இபுராஹிம் (வலி) அவர்களது புனித அடக்கவிடம் பராமரிப்புக்காக மாயாகுளம் என்ற கிராமம் தானமாக வழங்கப்பட்டது.

3. இராமநாதபுரம் கோட்டையில் அமைந்துள்ள புனித ஈசா சாகிப் அடக்கவிடம் பராமரிப்புக்காக கிழவன் ஏரி தானமாக வழங்கப்பட்டது.

4. கீழக்கரையில் அமைந்துள்ள புனித சதக்கத்துல்லா அப்பா அவர்களது அடக்கவிடம் பராமரிப்புக்காக தில்லையேந்தல் என்ற கிராமம் தானமாக வழங்கப்பட்டது.

5. இராமநாதபுரத்தின் கிழக்கே அமைந்துள்ள புனித இலத்தீப் பாதுசா அடக்கவிடத்திற்கு கிடாத்திருக்கை கிராமம் தானமாக வழங்கப்பட்டது.

இந்த மன்னர்களது பட்டியலில் இறுதியாக இடம் பெற்றுள்ள முத்து ராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி மன்னர் வெளிப்பட்டினம் குத்பு சாஹிபு புனித அடக்க இட கந்தூரி விழாவிற்கு ஆண்டுதோறும் எட்டுக்கலம் அரிசியும், இரண்டு கிடாய்களும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தார். மேலும் இந்தப் புனிதரது அடக்க இடத்திற்கு தீபதூப தர்மத்திற்காக நாள் ஒன்றுக்கு அரைப்பணமும் நிவேதனமாக அளித்து வந்தார். மேலும் முத்துப்பேட்டையில் உள்ள சர்வேஷ்வரன் தேவாலயத்திற்காக முத்துப்பேட்டை கிராமத்தையும் தெஞ்சி ஏந்தல் என்ற கிராமத்தையும் சர்வமான்யமாக வழங்கினார். சேது நாட்டு சிறுபான்மையினரான சமணர், இஸ்லாமியர், கிறிஸ்துவர் ஆகிய

1. எஸ்.எம். கமால் Dr. - சேதுபதி மன்னர் செப்பேடுகள் (1993) - பக்கம்

அனைத்துச் சமய மக்களது ஆன்மீகத் தொண்டுகளுக்கு ஆதாரமாக சேது மன்னர்களது ஆட்சி விளங்கி வந்ததை வரலாற்றில் காண முடிகிறது. இந்த காரணத்தினால் "மன்னர் எவ்வழி குடிகள் அவ்வழி" என்ற மூதுரைக்கு ஏற்ப பிற்காலத்தில் சேது நாட்டுக் குடிமக்கள் அவர்கள் சார்ந்துள்ள சமயத்தைத் தவிர்த்து அதே சமுதாயத்தில் வாழ்ந்துவரும் வேற்று சமய மக்களுடன் அன்புடனும், அன்னியோனியத்துடனும் வாழ்ந்து சமுதாய ஒற்றுமையை வார்த்து வந்துள்ளனர். இதற்கு எடுத்துக்காட்டாகக் கமுதி நகரில் முஸ்லீம் மக்களது தொழுகைப் பள்ளியாக விளங்கும் பெரிய பள்ளிவாசல் நிர்மாணிப்பதற்கு அந்த ஊரைச் சார்ந்த நல்லமுத்துத் தேவர் சுமார் 10 ஏக்கர் வெண்ணி நிலத்தை 200 ஆண்டுகளுக்கு முன்னர் தானமாக வழங்கி உதவியதும், இளையான்குடி புதூரில் கிறிஸ்துவ தேவாலயம் ஒன்றை அமைப்பதற்கு அந்த ஊரினைச் சார்ந்த முஸ்லிம் பிரமுகர் 2 1/2 ஏக்கர் வெண்ணிலத்தை தானமாக 70 ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கி இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கவையாகும்.

<u>தமிழ்ப்பணியில் :</u>

மேலும் இந்த மன்னர்கள், தமிழர்பிரான் என போற்றப்படும் வகையில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தாளாத தொண்டுகள் செய்துள்ளனர். கி.பி.1311-க்கு பிறகு தமிழகம் வேற்று நாட்டாரது அரசியல் விளையாட்டுக் களமாக மாறியது. தில்லி சுல்தான்களது குறுகிய கால ஆட்சிக்குப் பிறகு தமிழகம் விஜய நகர பேரரசின் அங்கமாக இணைக்கப்பட்டது. அந்த பேரரசின் ஆளுநர்களாக செஞ்சி, வேலூர், தஞ்சாவூர், மதுரை ஆகிய பெரும் நகர்களில் விஜய நகரப் பிரதிநிதிகளாக ஆளுநர்கள் நியமனம் செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள். ஆதலால் இவர்களது ஆட்சியில் தெலுங்கும், வடமொழியும் போற்றி வளர்க்கப்பட்டன. மதுரை நாயக்கர்களிடையே மிகச் சிறப்பான இடத்தை பெற்றுள்ள திருமலை நாயக்க மன்னர் தமிழ் மரபுக்கேற்ற கோயில் கட்டுமானம் நூற்றுக்கால் மண்டபம்,

தெப்பக்குளம், சிற்பங்கள், சித்திரங்கள் ஆகிய துறைகளில் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கி வந்ததும் கூட தமிழ் மொழியின் இலக்கிய வளர்ச்சிக்கு எவ்விதப் பங்களிப்பும் செய்யவில்லை. ஆதலால் கி.பி.1378 முதல் தொடங்கி கி.பி.1736-ல் முடிவுற்ற நாயக்க மன்னர்கள் ஆட்சியின் போது தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு மிகப் பெரிய பின்னடைவு ஏற்பட்டது. ஏறத்தாழ 250 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தில் ஆங்காங்கு வாழ்ந்து வந்த தமிழ் புலவர்களின் பரம்பரையினா சந்தித்த வறுமைக்கும் இடர்ப்பாடுகளுக்கும் அளவே இல்லை.

இதனால் தான் ஒரு தமிழ்ப்புலவர், "கல்லைத்தான் மண்ணைத்தான், காய்ச்சித்தான், குடிக்கத்தான், கற்பித்தானா" என்றும் சரியான தமிழை விட்டுச் சதிராடக்கற்றோம் இல்லை, சந்து பொந்துக்கு நடக்கும் சாகசம் அறிந்தோம் இல்லை" என மனம் சலித்துப் பாடியிருப்பது நினைவு கூறத்தக்கதாகும். இவ்விதம் காற்றில் அலை பட்ட பஞ்சுபோல பரிதவித்த தமிழ்ப் புலவர்களுக்கு, வேண்டுவன விழைந்து, வழங்கும் கற்பகத் தருவைப் போல சேதுபதி மன்னர்கள் வாழ்ந்து வந்தது வியப்பு ஒன்றும் இல்லை.

"மூவேந்தருமற்றுச் சங்கமும் போய்ப்பதின் மூன்றொடெட்டுக் கோவெந்தருமற்று மற்றொரு வேந்தன் கொடையுமற்றுப் பாவேந்தர் காற்றில் இலவம்பஞ் சாய்ப் பறக்கையிலே தேவேந்த்ர தாருவொத்தான் ரகுநாத ஜெயதுங்கனே" என்று புலவர் ஒருவர் சேதுபதி மன்னர் ஒருவரைப் பற்றிச் சிறப்பித்துப் பாடியிருப்பது எவ்வளவு பொருத்தம். நமக்குக் கிடைத்துள்ள ஆவணங்களின் படி சேதுபதி மன்னர்கள் தங்களது ஆட்சியில் தமிழ் மொழியைக் கண்ணைப்போல் காத்து வளர்த்தனா என்பது தெரியவருகிறது.

கி.பி.1645 முதல் கி.பி.1675 வரை சேது மன்னராக விளங்கிய திருமலை ரெகுநாத சேதுபதி கடைச் சங்க கால வள்ளல்களுக்குப் பின்னா முதல் தமிழ் வள்ளலாகக் காட்சி அளிக்கின்றார். அமுதக்

கவிராயர் என்பவர் இந்த மன்னனின் மீது ஒருதுறைக் கோவை என்ற காப்பியத்தை நாணிக் கண் புதைத்தல் என்ற ஒரே துறையில் நானூறு பாடல்களில் சேது மன்னரது பெருமைகளைச் சிலேடையுடன் அமைத்துப் பாடினார்.

கோவை இலக்கியத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இந்த நூலில் கொடை நாயகரான திருமலை சேதுபதி மன்னர் அந்தப் புலவருக்கு பதினாயிரம் பொற்காசுகள் வழங்கிச் சிறப்பித்ததுடன் அந்தப் புலவர் வாழ்ந்து வந்த பொன்னாங்கால் என்ற ஊரினை அந்தப் புலவருக்குச் சர்வ மான்யமாக வழங்கினார்.[1] இதே மன்னர் இன்னொரு புலவரான அழகிய சிற்றம்பலக் கவிராயர் என்ற பெரும் புலவருக்கு அந்த மன்னர் மீது தள சிங்கமாலை என்ற இலக்கியத்தை இயற்றியதற்காக மிதிலைப்பட்டி என்ற கிராமத்தையும், இன்னும் ஏழு கிராமங்களையும் தானமாக வழங்கி மகிழ்ந்தார்.[2]

இந்த பெரும் புலவரைத் திருமலை சேதுபதி மன்னரை அடுத்து சேதுபதியான கிழவன் என்ற ரெகுநாத சேதுபதியும் மிகச் சிறப்பாக வரிசைகள் பல வழங்கிச் சிறப்பித்தார் என்பது வரலாறு. திருமதூர் என வழங்கப்படும் நயினார் கோவிலைச் சார்ந்த தலமலை கண்ட தேவர் என்ற அந்தகக் கவிராயர் மருதூர் அந்தாதி என்ற இலக்கியத்தைப் படைத்ததற்காகப் பலவாறு இந்த மன்னரால் சிறப்பிக்கப்பட்டார். பிற்காலத்தில் நயினார் கோவில் தலத்தைப் பற்றிய வடமொழி இலக்கியத்தை மருதூர் புராணம் என்ற தமிழ் இலக்கியமாக இயற்றிய எட்டையாபுரம் கருத்தமுத்துப் புலவர் என்பவரை மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்கள் தமது பட்டத்து யானையில் அமர வைத்து நகர்வலம் வருமாறு செய்ததுடன் பல அன்பளிப்புகளை வழங்கி ஆதரித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதே மன்னர் தங்களது அரச பரம்பரைக்கு தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கும் கடமை உண்டு என்பதை அறிஞர் உலகம் அறியும் வண்ணம் இராமநாதபுரம சமஸ்தானத்தின் பெரும் புலவரான

1. Inam Fair Register
2. Inam Fair Register

இரா.இராகவ ஐயங்கார் என்பவரை மதுரையில் பல்லக்கில் அமரச் செய்து பல்லக்கு போகிகளுடன் பாஸ்கர சேதுபதி மன்னரும் அந்த பல்லக்கினைச் சுமந்து மரியாதை செலுத்தினார் என்றும் இந்த நிகழ்ச்சியை 2.11.1901 அன்று ஆவணம் மூலம் பதிவு செய்துள்ளார். இவை மிகவும் அரிய தமிழ்ப்பணியாகும். இராமாவதாரம் பாடிய கவிச்சக்கரவர்த்தி கம்பருக்கு வாரங்கல் நாட்டு மன்னரான பிரதாபருத்திரன் என்பவர் அடைப்பம் பணி செய்தார் என்ற வரலாற்றுச் செய்திக்கு ஒப்பான நிகழ்ச்சி.

கிழவன் ரெகுநாத சேதுபதி மன்னரைத் தொடர்ந்து சேது நாட்டின் மன்னரான முத்து விஜய ரகுநாத சேதுபதி மிகச் சிறந்த சிவ பக்தராக ஓவியம், இலக்கியம் போன்ற துறைகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். இராமநாதபுரம் சேது மன்னர்களது அத்தாணி மண்டபமாக விளங்கி வந்த இராமலிங்க விலாசம் அரண்மனை சுவர்கள் முழுவதையும் பலவிதமான இலக்கிய சமூக வரலாற்று ஓவியங்களை வரையச் செய்து அழகுபடுத்திய அரும்பணியை மேற்கொண்டவர். இவரது ஆட்சியின் மாட்சியைப் புலப்படுத்தும் வண்ணம் மதுரை சொக்கநாதப் புலவர் பணவிடு தூது என்ற சிற்றிலக்கியத்தையும், இராமேஸ்வரம் இறைவர் இராமநாதசுவாமி மீது தேவை உலா என்ற இலக்கியத்தையும் பாடியதற்காக இந்த மன்னர் புலவருக்குப் பெரும் பொருள் வழங்கிச் சிறப்பித்தார். மேலும் தமிழகமெங்கும் அப்பொழுது பரவலாகப் பயிலப்பட்டு வந்த கம்பராமாயணத்தை மற்றவரும் எளிதாகப் படித்து அறிந்து கொள்ளும் பொருட்டு ஆங்காங்கே கம்ப இராமாயணச் சொற்பொழிவுகளையும் நிகழ்த்த ஏற்பாடு செய்தார். இராமயாணச் செய்திகளை உள்ளத்தைப் பிணிக்கும் வண்ணம் எடுத்துச் சொல்லி வந்த மேலச் செல்வனூர் சர்க்கரைப் புலவர் என்பவரது புலமையைப் பாராட்டி அந்தப் புலவருக்கு அரசவை மண்டபத்தில் பொன்நெட்டி மாலை ஒன்றினைப் பரிசளித்ததுடன் திருவாடானை வட்டத்தில் உள்ள இரு கிராமங்களையும் அந்தப் புலவருக்கு சர்வ மான்யமாக வழங்கிச் சிறப்பித்தார்[1] சேதபதி மன்னர்களின் தன்னரசு நிலையினை

கி.பி.1795-ல் சிதையுமாறு செய்த ஆங்கிலேயரது ஆட்சி பரவுவதற்கு முன்னர் இருந்த முத்து இராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி மன்னர் கமுதை நாட்டில் உள்ள மன்னார்ரெட்டி என்ற புலவரின் புலமைத்தனத்திற்கு இரு கிராமங்களை பரிசாக வழங்கினார் என்ற செய்தி இராமநாதபுரம் சமஸ்தான நில மான்யக் கணக்கில் பதிவு பெற்றுள்ளது. மேலும் இந்த மன்னர் எமனேஸ்வரம் மீர், ஜவ்வாதுப் புலவரைத் தமது அரசவைப் புலவராக நியமித்ததுடன் அவருக்கு முதுகுளத்தூர் வட்டத்தில் வண்ணவயல், சுவாத்தன் என்ற இரு ஊர்களையும், சர்வமான்யமாக வழங்கினார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்விதம் தமிழகத்தில் மிகவும் இறுக்கமான சமுதாயச் சூழ்நிலையில் தமிழ்ப் புலவர்களைத் தேடித் துறந்து போற்றி அவர்களது தமிழ்ப்பணி வறுமையினால் பாதிக்கப்படாமல் அவர்கள் வளமுடன் வாழ்ந்து தமிழ் இலக்கியங்களைப் படைத்தளிப்பதற்குப் பருவ மழையாக அமைந்தவர்கள் சேதுபதி மன்னர்களே என்றால் அது மிகையாகாது.

தொடர்ந்த அந்நியரான ஆங்கியலேயரது ஆட்சி தமிழகத்தை சூழ்ந்து நின்ற போதும் தமிழ்ப்புலவர்களது வாழ்வு சீர்குலைந்து சிதைந்து நின்ற பொழுது பாஸ்கர சேதுபதி மன்னரும் அவரது சகோதரரான வள்ளல். பாண்டித்துரைத் தேவரும் தமிழ்ப் புலவர்களுக்குப் பொன்னும், பொருளும் வழங்கி ஆதுரத்துடன் தமிழ்ப் புலவர்கள் அனைவரையும் தேடிப் பிடித்துத் தமிழ்மொழி வரலாற்றிலேயே முதன் முறையாக மதுரைத் தமிழ்ச் சங்கம் என்ற அமைப்பின் கீழ் ஒன்றுபடச் செய்தனர். அவர்கள் வசம் இருந்த தமிழ் இலக்கிய ஏட்டுச் சுவடிகள் அனைத்தையும், திரட்டி ஆய்வு செய்து தொகுத்து அவைகள் முதன் முதலாக அச்சில் பதித்துத் தமிழ் மக்களிடையே பவனி வரச் செய்தனர். இத்தகைய அரிய பெரும் பணிக்கு உறுதுணையாக இருந்தவர்கள் இராமநாதபுரம் முத்துராமலிங்க சேதுபதி, அவரது தமயனார் வள்ளல் பொன்னுச்சாமித் தேவர், மன்னர் பாஸ்கர சேதுபதி, அவரது தமயனார் வள்ளல் பாண்டித்துரைத் தேவர் என்ற நால்வரையும், தமிழ் இலக்கிய உலகம்

என்றுமே மறக்க முடியாது. யாழ்ப்பாணம் ஆறுமுகம் நாவலரைக் கொண்டு சைவ சாத்திர நூல்களை வள்ளல் பொன்னுச்சாமித் தேவர் அவர்கள் பதிப்பித்தார். தமது தந்தையின் பணியினைத் தொடர்ந்து வள்ளல் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் மதுரை புலவர் சபாபதி பிள்ளை என்பவரைக் கொண்டு எஞ்சிய சைவ சமய நூல்களைப் பதிப்பித்து உதவினார். மன்னர் முத்துராமலிங்க சேதுபதியும், அவரது மகன் மன்னர் பாஸ்கர சேதுபதியும், மூதறிஞர் உ.வே.சுவாமிநாத ஐயர் அவர்களது பதிப்புப் பணியைப் பாராட்டி பொருள் உதவி செய்ததின் காரணமாக புறநானூறு, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி என்ற பெரும் இலக்கியப் படைப்புக்கள், தமிழ் மக்களிடையே முதன் முதலாக அச்சுப் படிகளாக உலவி வருமாறு செய்தனர். மேலும் அபிதான சிந்தாமணி என்ற கலைக்களஞ்சியமும், மற்றும் கலிங்கத்துப்பரணி, முத்தொள்ளாயிரம், திருக்குறள் ஆகிய அரிய இலக்கிய படைப்புகளை வள்ளல் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் நிறுவிய மதுரை தமிழ்ச்சங்கம் வாயிலாக வெளியிடப்பட்டன. சிவகாசி கந்தசாமிப்புலவர், சேத்தூர் சுப்ரமணியக் கவிராயர், சோழவந்தான் அரசன் சண்முகனார், எதிர்க்கோட்டை திரு நாராயண ஐயங்கார், நாகூர் குலாம் காதிர் நாவலர், பழனி கவிச்சிங்க மாம்பழக் கவிராயர் போன்ற பெருந்தமிழ்ப் புலவர்களைத் தமிழ் உலகம் அறியுமாறு செய்தவர்கள் இந்த நன் மக்களே ஆவர்.

வறுமையில் ஏங்கித் தவித்த தமிழ்ப்புலவர்களுக்கு வங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பசுக்கள் போல அன்றைக்கு அன்ன தாதாக்களாக விளங்கி தமிழையும், தமிழ்ப்புலவர்களையும், தொடர்ந்து போற்றியவர்கள் சேதுபதி மன்னர்களும் அவர் தம் வழியினரும் ஆவர். தமிழ் இலக்கியப் படைப்புகள் வருவதற்கு ஊக்குவித்ததுடன் இவர்களது பணி நிறைவு பெறவில்லை ; மாறாக தமிழகத்தில் பட்டி தொட்டிகளில் வீட்டுப் பரன்களில் கரையானுக்கு இரையாகி எஞ்சி நின்ற தமிழ் இலக்கியச் சுவடிகள் அனைத்தையும் தேடித் திரட்டியவர்களும் அவைகளை மதுரைத் தமிழ்ச் சங்கம் என்ற அமைப்பினைத் தமிழக வரலாற்றில் முதன் முதலாக 14.9.1901ல்

நிறுவியவர்களும் அந்தச் சங்கத்தின் வழியாகத் தமிழ் இலக்கியங்களை அச்சில் வெளிக் கொணர்ந்த அரிய தொண்டினைச் செய்தவர்களும் சேதுபதி மன்னர் மரபினரே ஆவர். மேலும் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழில் இதழ்கள் வெளிவராத நிலையில் நாகை நீலலோசனி, மதுரை ஞானபானு, விவேக் பானு, போன்ற இதழ்கள் முறையாக வெளிவருவதற்கு பொருள் உதவி செய்தவர்களும் சேது மன்னர்களே ஆவர்.

மற்றும் தமிழ் மொழியின் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கிய சான்றோர்களையும், இசைக் கலைஞர்கள், நாட்டியம் ஆகிய துறையில் ஒப்பாரும் மிக்காரும் இன்றி உலவி வந்த கலைஞர் பெருமக்களை ஆண்டுதோறும் நடைபெறும் நவராத்திரிக் கலைவிழாவில் கலந்து கொள்ளச் செய்தனர். மேலும் அவர்களது தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற பரிசுகளையும் பொற் பதக்கம், (மஹ்தாபி என்ற வட சொல்லின் தமிழாக்கம் சிறந்த பொன்னாலான இழைகளினால் நெய்யப்பட்ட பட்டாடையின் பெயர்) மாதாவி பட்டாடைகளையும் அவர்களுக்கு அணிவித்தும் கனகாபிஷேகம் செய்தும், கண்ணும் கருத்தும் குளிரக் கண்டு மகிழ்ந்தவர்கள் சேது மன்னர்கள். இத்தகைய நவராத்திரி கலை விழா ஒன்றில் கி.பி.1897ல் கலந்து கொண்டு பொன்னாலான காப்புகளும், மாதாவி பட்டாடையும் பெற்று மகிழ்ந்த நிகழ்ச்சியை தமிழ்த்தாத்தா டாக்டர். உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் “என் சரித்திரம்” என்ற தமது வாழ்க்கை வரலாற்று நூலில் இடம் பெறச் செய்து இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இசைக் கலைஞர்கள் மகா வைத்யநாத ஐயர், பட்டணம் சுப்ரமணிய ஐயர் திருக்கோடிக்கா கிருஷ்ண ஐயர், மைசூர் வீணை வித்வான் சேசன்னா, கும்பகோணம் நாட்டிய நங்கை பானுமதி, புதுக்கோட்டை மாமுண்டியாப்பிள்ளை, குன்னக்குடி கிருஷ்ண ஐயர், திருவாவடுதுறை ராஜ ரெத்தினம் பிள்ளை, பரிதிமால் கலைஞர் சூர்ய நாராயண சாஸ்திரி, பூச்சி, சீனிவாச ஐயங்கார், போன்ற சிறந்த மேதைகள் இராமநாதபுரத்தில் சேதுபதி அரசர்களால்

பாராட்டப்பட்டனர் என்பது வரலாறு. மற்றும் சேதுபதி மன்னர்கள் தமிழ்ப் புலவர்களையும், தமிழகக் கலைஞர்களையும், அவர்களது தகுதியையும், திறமையையும், உணர்ந்து பரிசுகள் வழங்கியதைப் போல தமிழ் மொழியிலும், தமிழ் இசையிலும், சேதுபதி மன்னர்களே சிறந்து விளங்கினர் என்பது வியப்பிற்குரிய செய்தியாகும். திருமலை ரெகுநாத சேதுபதி மன்னர் சங்கீதத்திலும், நாட்டியத்திலும் சிறந்து விளங்கியமைக்காக சங்கீத, நாடக நாட்டிய பிரவீணன் என்ற பட்டத்தையும் கிழவன் ரெகுநாத சேதுபதி இசைப் பிரியராக இருந்தமைக்காக சங்கீத சாகித்ய வித்யா வினோதன் என்ற விருதுடன் போற்றப்பட்டார். சுமார் 48 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்து முடிந்த முதலாவது முத்து இராமலிங்க சேதுபதி மன்னர் மேலைநாட்டு இசையில் பெரு விருப்புக் கொண்டு அவரது அரசவையில் வயலின் வித்துவான் ஒருவரை அமர்த்தி இருந்தார் என்பதை ஆங்கிலேயரது ஆவணம் ஒன்று குறிப்பிடுகிறது. இரண்டாவது முத்துராமலிங்க சேதுபதி என்று போற்றப்பட்ட முத்தமிழ்ப் புலவராக, வடமொழி, தென்மொழி, இலக்கண, இலக்கியங்களை முழுவதும் உணர்ந்த வித்தகராக வாழ்ந்ததுடன் தமிழ் இசையிலும், இந்துஸ்தானி இசையிலும், மிகச் சிறந்து விளங்கிய புலவராவார். இவரது தமிழ் இசைப் பாடல்களின் தொகுப்பு காயகப்பிரியா என்றும், இந்துஸ்தானி இசைப்பாடல் சாகித்யங்கள் ரசிக ரஞ்சனம் என்ற தொகுப்பாகவும், வள்ளி மணமாலை, சரச சல்லாப மாலை, பால போதம், நீதி போதம், சடாக்கர பதிகம் என்ற தலைப்புக்களில் வெளியிடப்பட்டுள்ளன. நிமிச கவியாக விளங்கிய இந்த மன்னர் 32 ஆண்டுகளே வாழ்ந்த போதும் ஏராளமான தனிப் பாடல்களையும் இயற்றியுள்ளார்.

இவரது குமாரரான மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்கள் ஆங்கிலத்திலும், வடமொழியிலும், தமிழிலும் மிகத் தேர்ந்த புலவராக விளங்கினார். திருக்கோயில்களுக்குச் செல்லும் பொழுது அங்குள்ள இறைவர் மீது பதிகம் பாடுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இந்த மன்னரது இளவலான ராஜா தினகர், சமஸ்கிருதத்திலும்,

ஆங்கிலத்திலும், பெரும் புலமை பெற்றிருந்தார். சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்த நாட்டிலே ஆங்கிலக் கவிதைகளைப் புனைந்து பெரும் புகழ்பெற்ற கவியரசர் ரவீந்தரநாத் தாகூர் வட நாட்டில் விளங்கியது போன்று தென் நாட்டில் ஆங்கிலக் கவிஞராக விளங்கியவர் இந்தத் திருமகனார்.

இவ்விருவரது பெரிய தந்தையும், வள்ளலுமான பொன்னுச் சாமி தேவர் அவர்கள் தமிழில் பெரும் புலவராக விளங்கியது போன்று தமிழ் இசையிலும் தனி இடத்தைப் பெற்று விளங்கினார். கி.பி.1862லேயே தாம் இயற்றிய பல கீர்த்தனைகளின் தொகுப்பினை அச்சேற்றி வெளியிட்டுள்ளார்.

இவரது அருமைப் புதல்வரான பாண்டித் துரைத் தேவர் அவர்கள் சைவ சித்தாந்தத்திலும், தமிழ் இலக்கியங்களிலும், மிகச் சிறந்த தேர்ச்சியும் புலமையும் பெற்றிருந்ததுடன், பல சிற்றிலக்கியங்களையும் யாத்துள்ளார். சிவஞானபுரம் முருகன் மீது அவர் பாடியுள்ள "காவடிச் சிந்து" மிகவும் பிரபலம் பெற்றுள்ளது. தமது பள்ளித் தோழரான சீனிவாசனை மிகச் சிறந்த இசைப் புலவராக மாற்றி, இராமநாதபுரம் சமஸ்தான சங்கீத வித்வானாகவும் நியமனம் பெறும்படி செய்தார். பாண்டித்துரைத் தேவர் அவர்களே தமிழ் இசையில் தனியாத ஆர்வம் கொண்டவர். இளமைப் பருவத்திலேயே பல சங்கீத அரங்குகளில் பாடிய பெருமை இவருக்கு உண்டு.

இவ்விதம் சேதுபதி மன்னர்களும், மரபினரும், தமிழ் வள்ளல்களாக விளங்கியது மட்டுமல்லாமல் அவர்களே பெரும் புலவராக அமைந்து பல தமிழ் இலக்கியங்களைச் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் வரை படைத்திருப்பது மிகப் பெரிய சாதனையாகும். தமிழகத்தில் வாழ்ந்த எந்த அரசரும, அரச மரபினரும் செய்யாத சிறப்பான சாதனைகளை செய்தவர்கள் இந்த தொன்மைக் குடியினர். சேதுபதிகள் என்ற பெயர் ஆன்மீகத்தில் உரிய பெயராக தமிழ் வளர்ச்சியின், மதிப்பீடாக, கொடை உள்ளத்திற்கு குறியீடாக விளங்கிவருவதால் அவர்களது கடந்த கால சாதனைகளைச்

செயல்திறனை உள்ளடக்கிய நமக்குக் கிடைத்த அவர்களது கல்வெட்டுக்கள் முப்பத்து ஏழினை இங்கே படித்து மகிழ்தல் அவசியம் எனக் கருதி இந்த தொகுப்புரையை தொடங்கி உள்ளோம்.



# இயல் 3

# கல்வெட்டுக்கள் வரலாறு

தமிழகத்தில் சுமார் 150 வருட காலமாக காகிதமும் அச்சு இயந்திரமும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அச்சு இயந்திரத்தை கி.பி.16ஆம் நூற்றாண்டில் போர்ச்சுக் கீசியரும் கி.பி.18ஆம் நூற்றாண்டில் ஜெர்மன் நாட்டுப் பாதிரியார் சீசன் பால்கும், ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாரும் தமிழ்நாட்டிற்கு அறிமுகப்படுத்தினர். ஆனாலும் அச்சு இயந்திரங்கள் கிறிஸ்தவ வேத ஆகமங்களை வெளியிடுவதற்கும், பின்னர் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியாரின் அரசு இதழ்களை அச்சிடுவதற்கும் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கடைச்சங்க காலத்தில் இருந்து 18ஆம் நூற்றாண்டு வரையிலான கால இடைவெளியில் தமிழகத்தின் அரசியலை நடத்தி வந்த சேர, சோழ பாண்டியர்களும், பல்லவர்களும், நாயக்க மன்னர்களும் சேதுபதி மன்னர்களும் தங்களது அரசு ஆணைகளையும், கொடைகளையும்,

அறிவிப்பதற்குக் கல்லையும், செம்பையும் பயன்படுத்தினர். காலத்தால் அழியாது நின்று மக்களுக்கு அவை வரலாற்று ஆவணங்களாக விளங்க வேண்டும் என்பதே அவர்களது குறிக்கோள். அதனால் தங்களது அரசு ஆணைகளையும், தீர்ப்புரைகளையும் தானசாசனங்களையும், கல்லிலும், செம்பிலும் வெட்டி வைத்தனர். இவை முறையே கல்வெட்டுக்கள் என்றும் செப்புப் பட்டையங்கள் அல்லது செப்பேடுகள் என்றும் வழங்கப்பட்டன. கல்வெட்டுக்கள் பெரும்பாலும் நாட்டின் பொது இடங்களான திருக்கோயில்கள் திருமடங்கள், சத்திரங்கள் மற்றும் பொது மக்கள் கூடுகின்ற அங்காடிகள், தண்ணீர்ப்புறவுகள் போன்ற இடங்களில் கல்லில் பொறிக்கப்பட்டன. செப்பேடுகள் இரண்டு பிரிவுகளாகச் செப்புத் தகடுகளில் பொறிக்கப்பட்டும் ஒன்று அதனை வழங்கிய மன்னரிடமும், மற்றொன்று அதன் தானத்தை பெற்றுக் கொண்ட அந்தணர் புலவரிடமும், மடாதிபதிகளிடமும் இருந்து வந்தன.

கல்வெட்டுக்களில் மூன்று வகையான செயல்களை பொறிக்கும் படி செய்தனர். முதலாவது மன்னரது வீரம், படையெடுப்பு, வெற்றி, போன்றவைகளைக் குறிப்பனவாகும். இவை மெய்க்கீர்த்தி எனப்படும். பிறிதொரு வகையில் நாட்டு மக்களின் நலனைக் கருதி வெளியிடப்படும் பல வகை ஆணைகளைக் கொண்ட கல்வெட்டுக்களாகும். இன்னொரு வகை கோயில்களில் நிர்வாகியாகவும், மன்றங்களில் வழக்குகளின் பேரில் நியாயம் வழங்கும் நடுவராக இருந்த பிறப்பிக்க தீர்ப்புரைகளாகும். இந்த மூன்று வகையான கல்வெட்டுக்களும் இன்றைக்கு நமது கடந்த கால அரசியல், சமுதாய சமூக நிலைகளின் வளர்ச்சிகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஏதுவாக அமைந்துள்ள வரலாற்றுச் சான்றுகளாக விளங்கி வருகின்றன.

கோ நகரில் அரசுக் கட்டிலில் அமர்ந்து மன்னர் ஆட்சி செய்தாலும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இயங்கி வந்த ஊர்ச் சபைகளும், கோயில் தர்மகர்த்தா குழுக்களுமே உண்மையான

நிர்வாகத்தை இயக்கி வந்தனர் என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த ஊர்ச் சபைகளும் கோயில் குழுக்களும், குறிப்பிட்ட நாட்களில் ஒருசேர அமர்ந்து ஊர்ப் பிரச்சினைகளைக் கலந்து பேசி நல்ல முடிவுகளைச் செய்தனர். அவை ஊரின் நலனையும், கோயில் நலனையும், உட்பொருளாகக் கொண்டு இருந்ததால் அந்த அவைகளின் தீர்ப்பு உரைகள் ஆங்காங்கு திருக்கோயில்களின் சுவர்களில் பொறிக்கப்பட்டன. இத்தகைய கல்வெட்டுக்கள் அன்றைய வழக்கிலிருந்த தமிழ் பிராமி எழுத்து வடிவிலும், வட்டெழுத்திலும் பின்னர் கரந்த எழுத்திலும் இன்றைய தமிழ் வரிவடிவிலும் பொறிக்கப்பட்டு வந்தன. இந்தக் கல்வெட்டுக்களில் வாசக வரி வடிவங்களிலிருந்து நமது தமிழ் மொழியின் மூல மொழியான தாமிழி என்றதொரு வடிவில் அமைந்து பின்னர் பிராமி, தமிழ் பிராமி, வட்டெழுத்து என கால வேறுபாடுகளினால் மொழியின் வரி வடிவ வளர்ச்சியினை அறிந்து கொள்வதற்கு உதவுகின்றன. பிராமி எழுத்துக்களாக கல்வெட்டுக்கள் கி.மு.இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு ஆகிய காலத்தைச் சார்ந்தவை. வட்டெழுத்துக்கள் கி.பி.10ஆம் நூற்றாண்டு வரை பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. குறிப்பாகப் பாண்டிய நாட்டில் தான் இந்த வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் மிகுதியாக கிடைத்துள்ளன. தொண்டை நாட்டு, கொங்கு நாட்டு நடுகற்களிலும் இவை காணப்படுகின்றன. சமஸ்கிருத மொழியில் பொறிக்கப்பட்ட சில கல்வெட்டுக்களும் கிடைத்துள்ளன. இவைகளில் சிறப்பானவை எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த மாறன் சடையன் என்ற பாண்டிய மன்னரது காலத்தவை. திருப்பத்தூர் திருக்கோயிலில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் இன்றைய தமிழ் மொழியுடன் சமஸ்கிருதச் சொற்கள் கலந்த கிரந்த எழுத்துக்கள் என்ற வகையான கல்வெட்டுக்களாக அவை காணப்படுகின்றன. இன்று கிடைத்துள்ள தமிழ்க் கல்வெட்டுக்களில் மிகவும் பழமையானது, இராமநாதபுரம் மாவட்டம் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள பூலாங்குறிச்சிக் குன்றில் பொறிக்கப்பட்டுள்ள கி.பி.6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டுக்களாகும். இதனை ஒத்த தொன்மையான

செப்பேடு எனக் கருதப்படுவது பராந்தக சோழன் கி.பி.10ஆம் நூற்றாண்டில திருத்தணிகை சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வழங்கிய தான சாசனமான திருவேளஞ்சேரி செப்பேடு ஆகும். இந்தச் செப்பேட்டின் ஒரு பகுதி சமஸ்கிருத மொழியிலும், மறுபகுதி தமிழிலும் பொறிக்கப்பட்டுள்ளது. இதனைப் போன்றே விஜய நகர பேரரசரான கிருஷ்ண தேவராயரது திருமலை திருப்பதிக் கோயில் கல்வெட்டுக்கள் அனைத்தும், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மூன்று மொழிகளிலும் பொறிக்கப்பட்டவையாகும்.[1] மற்றும் கி.பி.1710ல் தில்லி பேரரசரான முதலாவது பகதூர்ஷா காஞ்சி சாரதா மடத்துக்கு வழங்கிய செப்பேடு தமிழ், சமஸ்கிருதம், பாரசீகம் ஆகிய மொழிகளில் வரையப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.[2]

பொதுவாக மேலே குறிப்பிட்ட செய்திகளிலிருந்து கல்வெட்டுக்களும் செப்பேடுகளும், அந்தந்தக் காலத்தில் தமிழகத்தில் நிலவிய ஆட்சியாளர்கள் விருப்பத்தினையும், அன்று வழக்கில் இருந்த ஆட்சி மொழியையும், சார்ந்தவையாக இருப்பதை அறிந்து கொள்கிறோம்.

கி.பி.1751 முதல் தென்னகத்தின் ஆட்சியாளராக அமைந்த கர்நாடக நவாப் வாலாஜா முகம்மது அலி அவர்கள் வழங்கியுள்ள சன்னதுகளும், பர்வானாக்களும், அறபு, பார்சி மொழிகளில் வரையப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கி.பி.18ஆம் நூற்றாண்டில் சேதுநாட்டு பெரியபட்டணத்தில் இஸ்லாமிய பெரியவர் ஒருவரது புகழ்ந்துரை அரபு மொழியில் வரையப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதனைப் போலவே பெரியபட்டண கிராமத்தில் யூதர்களது மொழியானது ஹிப்ரூவில் வரையப்பட்டுள்ள கல்வெட்டு ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது[3] இதுவரை தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட ஹிப்ரு மொழி கல்வெட்டு இது ஒன்றே ஆகும். இந்தக் கல்வெட்டுக்களில் ஒரு சிலவற்றை கி.பி.1890-ல் இந்திய

1. Thiruppathy Devasthanam - Thiruppathy Thirumalai inscriptions.Vol-III
2. Gopi Nath Rao - Copper Plates of Kanchi Sankara Madam.
3. A.R.E. 1944/45

தொல்லியல் அளவீட்டுத் துறை தொகுதி[1] இராபர்ட் ஷீவல் என்பவர் முதன்முறையாக வெளியிட்டுள்ளார். இதனை அடுத்து சேது மன்னர்களது ஏனைய கல்வெட்டுக்களில் ஐந்தினை இந்த நூலின் ஆசிரியரும், வேறு இரண்டினை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் வளாகத்தில் இயங்கிவரும் தமிழ்நாடு தொல்லியல் கழக ஆண்டு இதழான ஆவணத்திலும் வெளியிடப்பட்டுள்ளன. இந்தக் கல்வெட்டுக்களையும் இந்த நூலாசிரியர் மற்றும் கல்வெட்டு அறிஞர் புலவர் செ. இராசு அவர்களும் புதிதாக கண்டுபிடித்துள்ளவைகளை இணைத்து மொத்தம் 37 கல்வெட்டுக்கள் இந்நூல் வழியாக முதன்முறையாக வெளியிடப்படுகிறது.

சேதுபதி மன்னர்களது ஆட்சிக் காலத்தில் தமிழ் மொழி ஒன்றே ஆட்சி மொழியாக இருந்ததால் அவர்களது அனைத்துக் கல்வெட்டுக்களும், செப்பேடுகளும், தாய்மொழியில் மட்டுமே வரையப் பெற்றுள்ளன. இவர்களது இந்த ஆவணங்கள் பெரும்பாலும் திருக்கோயில்களுக்கும், திருமடங்களுக்கும் அன்னசத்திரங்களுக்கும் அந்தணர்களுக்கும் வழங்கிய அறக்கொடைகளை மட்டுமே குறிப்பனவாக உள்ளன.

இந்தக் கல்வெட்டுக்களில் ஒன்று கள்ளர் சீமை காட்டுபாவா பள்ளிவாசலுக்கு வழங்கிய அறக் கொடையையும், பிறிதொன்று முத்துப்பேட்டை கிறித்தவ தேவாலயத்திற்கு வழங்கிய நிலக்கொடை பற்றியவை ஆகும். சமண சமயப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட பள்ளிச்சந்தம் பற்றிய செய்திகள் கிடைத்துள்ள போதிலும் அதற்கான கல்வெட்டுக்கள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. இங்கு குறிப்பிடப்படும் கல்வெட்டுக்கள் அனைத்தும் கி.பி.17, 18, 19வது நூற்றாண்டுகளைச் சார்ந்தவை ஆகும்.

1. பக்கம் 150

# இயல் 4

# இராமேஸ்வரம் திருக்கோயில் கல்வெட்டு

காலத்தால் முற்பட்ட சேது மன்னர்களது கல்வெட்டுக்களில் வரலாற்றிற்குத் தெரிய வருவது இராமேஸ்வரம் திருக்கோயிலில் உள்ள சேது மன்னர்களது கல்வெட்டுக்களாகும். இவைதான் சேதுபதி மன்னர்களது ஆட்சியின் தொன்மையை அறிந்து கொள்வதற்கு துணைபுரிபவன ஆகும்.

முதலாவதாக உடையான் சேதுபதி என்பவரால் கி.பி.1414-லும், கி.பி.1434-லிலும், வெட்டி வைத்த இரு கல்வெட்டுக்களாகும். இவை இராமேஸ்வரம் திருக்கோயிலின் மேலவாசல் கோபுரம் கருங்கற்களால் அமைக்கப்பட்டதையும் அதனை அடுத்து அந்தக் கோயிலின் திருச்சுற்று மதிலை நிர்மாணித்ததையும்

இவைகளைப் படித்து அவைகளின் உள்ளடக்கத்தைத் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். அந்த அரிய முயற்சி இந்த மன்னர்களது ஆட்சிக் கால வரம்பினைச் சுட்டுவதற்கு மிகவும் பயனுள்ளதாக இருந்து வருகிறது.



# இயல் 6


# இராமேஸ்வரம் திருக்கோயில் கல்வெட்டு

கி.பி.1603லிருந்து போகலூரை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த சேதுபதி மன்னர்களில் கூத்தன் சேதுபதி இரண்டாவது மன்னர் ஆவார். இந்த மன்னரது ஆட்சிக் காலம் மிகவும் குறுகியதாகும். கி.பி.1622 முதல் 30 வரை ஒன்பது ஆண்டுகளே நீடித்த பொழுதிலும், இந்த மன்னரது இராமேஸ்வரம் திருக்கோயில் திருப்பணிகள் மிகவும் போற்றத்தக்கவை ஆகும். இராமேஸ்வரம் கோயிலின் கருவறையை ஒட்டி நிர்மாணிக்கப்பட்டுள்ள மகாமண்டபமும், அதனை அடுத்து அமையப்பெற்றுள்ள முதலாவது பிரகாரமும் இந்த மன்னரால் அமைக்கப்பட்டவை எனக் கருதப்படுகிறது. இந்தப் பிரகாரத்தின் மேற்குச் சுவரில் வெளிப்புறமாக வெட்டுவித்துள்ள கல்வெட்டே இதற்குச் சான்றாகும். இந்தக் கல்வெட்டில் ராமநாத சுவாமிக்கு நட

மாளிகையையும், ஆரூட மண்டபத்தையும், இந்த மன்னர் கட்டுவித்த செய்தி குறிப்பிடப்படுகிறது. இந்தக் கட்டுமானம் நிறைவடைந்த ஆண்டு உத்ரோகாரி ஆண்டு மாசி மாதம் 20ஆம் தேதி என்றும் இதற்கு சரியாக ஆங்கில ஆண்டு கி.பி.1623 ஆகும்.

**இந்தக் கல்வெட்டின் முழுமையான வாசகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :***

1. ஸ்வஸ்தி சகாத்தம் 1545ன் மே
2. ற் செல்லாநின்ற ஷதிரோற்
3. காரிஸ்ரீ மாசி மீ 29 ஷ திரமும் பெ
5. ற்ற நாளில் உடைய நாயனான
6. சேதுபதி காத்த தேவர் புத்திரன்
7. (கூ)த்தனான சேதுபதி காத்த தே
8. (வர்) உபயமாக ராமநநாத சு
9. (வா) மி முதற் பிரகாரம் திருநடமா
10. (ளி) கைப் பத்தி ஆரூட மண்டபமும்
11. க) ட்டி முகிழ்பித்தான் ஷ



*. AR No 101 - 1903

# இயல் 7

# இராமேஸ்வரம் திருக்கோயில் கல்வெட்டு

இராமேஸ்வரம் திருக்கோயில் கிழக்குக் கோபுர ஆஞ்சநேயர் கோயில் அருகே இந்தக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.இதன் காலம் சகாப்தம் 1549 வருடம் ஆவணி மாதம் 16ம் தேதி.இதற்கு சரியான ஆங்கில நாள் 16.08.1627[1] இதனை வெட்டுவித்தவர் கூத்தன் சேதுபதி ஆவார்.

திருவிழாக் காலத்தில் இராமநாத சுவாமியை எழுந்தருளிவிக்கச் செய்ய இந்த மண்டபத்தை அமைத்ததாகச் சேதுபதி மன்னர் இந்தக் கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கல்வெட்டில் இந்த மன்னருக்கு ரவிகுல சேகரன் என்ற சிறப்புப் பெயர் குறிக்கப்படுள்ளது. இராமபிரானது சூரியகுலத்தையே சேதுபதி மன்னரும் சார்ந்ததாக குறிப்பதுதான் இந்தச் சிறப்புப் பெயரின் நோக்கமாகும். இந்தக் கல்வெட்டின்

முழுமையான வாசகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.'

1. "உ இராமேஸ்வரம்
2. ஸ்வஸ்திஸ்ரீ சகாத்தம்
3. 1549ன் இதன் மே
4. செல்லாநின்ற பிற
5. பிறபவ ஷு ஆவணி
6. மீ16 உ பூறு வ பக்ஷ
7. த்தில் பூறணையும் கு
8. ரு வாரமும் நக்ஷ
9. த்திரமும் கூடிய சித்த யோ
10. க நாள் ராமநாத
11. சுவாமி சன்னதியில்
12. உடைய் னாயனான சேது
13. பதி காத்த தேவர் புத்திர
14. ன் தளவாய் தேவந்திர ரவி குல

15. சேகரனான சேதுபதி


16. காத்த தேவர் புண்ணிய

17. மாக சுவாமி திருவிழா

18. வுக்கு எழுந்தருளி இரு

19. க்கச் செய்வித்த ம

20. மண்டபம் உ."



* A.R. No 105 - 1903

# இயல் 8

# போகலூர்க் கல்வெட்டு

இராமநாதபுரம் நகருக்குத் தென்மேற்கே எட்டுக் கல் தொலைவில் உள்ளது போகலூர் என்ற கிராமமாகும். புகலூர் என்ற சொல்லின் திரிபு இந்தப் பெயர். போகலூர் கிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்டு சேது நாட்டின் ஆட்சியை கி.பி.1603-ல் தொடக்கியவர் உடையான் சடைக்கன் சேதுபதி இவரது நான்கு மக்களில் முதலாமவர் கூத்தன் சேதுபதி ஆவார். இவரது ஆட்சிக் காலத்தில் சேதுநாட்டில் பல சமுதாயப் பணிகளுடன் தெய்வீகத் திருப்பணிகளும் நடைபெற்று வந்திருப்பதை அவரது கல்வெட்டுக்களின் வாயிலாக நாம் அறியமுடிகிறது. இங்குள்ள விநாயகர் கோயிலின் அருகில் உள்ள ஐயனார் கோயிலில் இந்தக் கல்வெட்டு உள்ளது. வாசகத்தின் படி அந்த அய்யனாரின் பெயர் பகழிக் கூத்த ஐயனார் என்பதாகும். இந்த காவல் தெய்வத்தின் பெயர் அந்தக் காலத்தில் அந்த வட்டாரத்தில் மிகவும் பிரபல்யமானதாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் இந்த ஊருக்கு வடக்கே பத்து மைல் தொலைவிலுள்ள சன்னாசி சதுர்வேதி மங்கலம்

என்ற கிராமத்தில் பிறந்த புலவர் ஒருவரது இயற்பெயராக இந்த பகழிக் கூத்தர் என்ற சொல் அமைந்து இருந்தது. இந்தக் கல்வெட்டின் வாசகப்படி இந்த ஊர் பிற்காலப் பாண்டியரது நிலக்கூறான துகவூர்க் கூற்றத்தில் அமைந்திருந்ததாகக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. துகவூர் இன்றைய இளையான்குடி வட்டத்தில் இளையான்குடி ஊருக்கு வடக்கே ஏழு கல் தொலைவில் உள்ளது. இந்தப் புலவர் திருச்செந்தூர் முருகன் மீது பிள்ளைத் தமிழ் ஒன்றைப் பாடியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

1. பொதுவாக ஐயனார் கோவில் ஊரின் புறத்தே அமைக்கப்பெற்று அந்த தெய்வத்தின் வாகனங்களாக குதிரையும், யானையும் சுதை வேலையினால் செய்யப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கும்

2. இந்த ஐயனாருக்கு பகழிக் கூத்தர் (வில் அம்பை உடையவர்) என்று குறிப்பிட்டிருப்பது புதுமையாக உள்ளது. கேரள மாநிலத்தில் திருவாங்கூர் அருகே ஒரு ஐயனார் கோவிலில் வில் அம்புடன் ஐயனார் சிலை ஒன்று காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கல்வெட்டின் வாசகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.*

*1. சுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீ சகாத்தம் 1546ன் மேல் செ*

*2. லலா நின்ற ராக்சச ஹு தை மீ 16தீ வியாழக்கிழமை*

*3. யும் பவற்ணையும் பூச நட்சத்திரமும் பெற்ற நாள் ஸ்ரீ புகலூர்*

*4. அய்யனார் பெரும்பகழிக் கூத்தர் கோயில் துகவூர்க் கூற்ற*

*5. கூத்தனான சேதுபதி காத்த தேவர் புத்திரன்*

## 6. ஸ்ரீ உடைய நாயனார் சேதுபதி காத்த தேவர்

## 7. கட்டி முகிழ்ப்பித்தார் உ சதா சேருவை

சேதுபதி சீமையில் பெரும்பாலான கிராமங்களில் காவல் தெய்வமான ஐய்யனாருக்கு கோயில் அமைத்து வழிபடும் முறை நீண்ட நெடுங்காலமாக வழக்கத்தில் இருந்து வருகிறது. காரணம் கிராமத்தில் அம்மை, வாந்தி பேதி போன்ற நோய் நொடிகளும், திருட்டு, கொள்ளை போன்ற பொது குற்றச் செயலும் அந்தந்த கிராமங்களில் நடைபெறாமல் இந்த ஐய்யனார் கண்காணித்து தடுத்து வருகிறார் என்பது கிராம மக்களது உறுதியான நம்பிக்கை. அதனால் ஆண்டு தோறும் துறவி எடுப்பு என்ற விழாவினை கிராம மக்கள் ஐய்யனாருக்கு ஏற்பாடு செய்து கொண்டாடி வருகின்றனர்.

ஹரிஹர புத்திரனான ஐய்யனார் சில ஊர்களில் சாஸ்தா என்றும் சாத்தனார் என்றும் வழங்கப்படுகிறார். சேது மன்னர்களது ஆட்சியில் இந்த ஐய்யனார் வழிபாடு அரசு ஊக்குவிப்புப் பெற்று இருந்ததற்கு இந்தக் கல்வெட்டு சிறந்த சான்றாகும்.



* புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு.

# இயல் 9

# முழக்கோல் கல்வெட்டு

தமிழக மக்களின் இறைநம்பிக்கையையும் வழிபாட்டு முறைகளையும் தொடர்ந்து மக்களுக்கு நினைவூட்டும் வண்ணம் ஆங்காங்கு திருக்கோயில்களும், திருமடங்களும், மண்டபங்களும், நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இவைகளில் மிகப்பெரும்பாலானவற்றில் இந்த நிர்மாணங்களை அமைத்தவர்கள், நிர்மாணிக்க உதவிய கல்தச்சர்கள் பற்றிய விவரங்கள் காணப்படுவதில்லை என்றாலும் சில அமைப்புகளில் மட்டும் நிர்மாணித்தவர்களது திருவுருவங்கள் இந்த அமைப்புக்களின் கல் தூண்களில் வடிக்கப்பட்டுள்ளன. மேலும் இந்தத் திருக்கோவில்களுக்கு வழங்கப்பட்ட தானங்கள் அறக்கொடை, நிலக்கொடை, பொன்னாலான அணிகலன்கள் பற்றிய செய்திகளும் சில கோவில் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

ஆனால் பெரும்பாலான இந்த அமைப்புகளில் சில பகுதிகளில் இணைக்கயல்கள், குரங்கு, தாமரை, மீன் போன்ற சில சின்னங்களும் சில அமைப்புகளில் காணப்படுகின்றன, இவைகளைப் போன்றே சில கோவில்களில் முழக்கோல் சின்னமும் பொறிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சின்னம் ஒன்று இராமேஸ்வரம் திருக்கோவிலின் முதற்பிரகாரத்தில் மேற்குச் சுவரின் விநாயகர் கோவிலுக்குத் தென்பகுதிக்கு எதிராக இரண்டாவது பிரகாரத்தை நோக்கியவாறு சுவரில் இந்த சிற்பம் காணப்படுகிறது. இதனை பொறிக்கச் செய்தவர் யார் என்பது போன்ற விவரங்கள் அங்கு காணப்படவில்லை.

பெரும்பாலும் முற்காலங்களில் நடைமுறையில் இருந்த நீட்டல் அளவு, நிறுத்தல் அளவு, முகத்தல் அளவு பற்றிய விவரங்கள் அறியத்தக்கனவாக இல்லை. ஆனால் நமது நாடு விடுதலை அடைவதற்கு முன்னர் வரை சேதுபதிகளது சீமையில் நீட்டல் அளவாக அங்குலம், அடி, முழம் ($1^1/_2$ அடி) கஜம் (3 அடி) குறுக்கம் (90 செண்ட்) என்ற நீட்டல் அளவைகள் இருந்து வந்துள்ளன. இந்த அளவைகளின் அடிப்படையில் நிலங்களை அளப்பதற்கு குலப்பிரமாணம் என்ற ஒருமுறை ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டதாக தெரியவருகிறது.[1] இந்த நிலஅளவையை மாகாணிக்கோல் என்ற மரக்கோலால் நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. இந்தக் கோலினால் அளக்கப்பட்ட ஒரு கோலுக்கு சதுர அளவு நிலம், ஒரு மரக்கால் விரையடி என்றும், இதனை ஒத்த பதினான்கு கோல் பரப்பு ஒரு கல விரையடி எனவும் வழங்கப்பட்டு வந்தது. இப்பொழுது நடைமுறையில் உள்ள ஹெஸ், மீட்டர், ஹெக்டார் என்ற நில அளவுகளுக்கு முன்னர் அமுலில் இருந்த செண்ட், ஏக்கர் என்ற அளவையில் இந்த மாகாணிக்கோலின் 8 3/16 பரப்பு அளவு ஒரு செண்ட் நிலமாக கணக்கிடப்பட்டு வந்தது.

இந்த மாகாணிக்கோலின் நீட்டல் அளவு இராமேஸ்வர கோவிலில் பொறிக்கப்பட்டிருக்கும் இந்த முழக்கோலின் அளவு பெரும்பாலும் நான்கு அடி அளவுள்ளதாக இருந்திருக்க வேண்டும்

1. James Burges - Archealogical Survey of India Vol IV (1881).

என்று அறுதியிடுவது பொருத்தமானதாக இருக்கலாம். மேலும் இராமேஸ்வரம் திருக்கோவிலின் முதற்பிரகாரத்தை அமைத்த கூத்தன் சேதுபதிமன்னர் (கி.பி.1622-1636) என்பவர் இந்த முழக்கோல் கோவிலின் சிற்பத்தை பொறித்திருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. காரணம் இந்த முழக்கோல் சிற்பம் இந்தக் கோவிலின் முதற்பிரகார சுவரில் பொறிக்கப்பட்டிருப்பது இதற்கு தக்க சான்றாக அமைந்து விளங்குகிறது.

போக்குவரத்து வசதிகளும், செய்திப் போக்குவரத்தும் வளர்ச்சி பெறாத சேதுபதி மன்னர்களது ஆட்சியில் இத்தகைய முழக்கோல் ஒன்றினை மக்களின் நடமாட்டம் மிகுந்த கோவிலில் அமைந்து இருந்ததால் இது பெரும்பாலோருக்கும் பயன்படும் என்ற நோக்கில் இந்த முழக்கோல் சிற்பம் பொறிக்கப்பட்டுள்ளது.

சேதுபதி மன்னர்களிடையே இறுதி மன்னராக விளங்கிய முத்து இராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் ஆட்சியில் (கி.பி.1762-1795) அவருக்கு தக்க துணைவராக விளங்கிய பிரதாணி முத்து இருளப்ப பிள்ளை என்பவர் சேதுபதி சீமையின் நிலச்சீர்திருத்தத்திற்குக் காரணமாக இருந்ததுடன் அன்றைய நில அளவைக்கு உதவுவதற்காக அவரது நீண்ட காலின் கட்டை பெருவிரல் முதல் குதிகால் வரையான 12 அங்குல நீளத்தை அடிப்படையாக கொண்ட முழக்கோல் ஒன்றினை அமுல்படுத்தினார் என்று சேதுபதி மன்னர்களது ஆவணங்களிலிருந்து தெரியவருகிறது. இந்தக் கோவிலின் சரியான நீட்டல் அளவினைக் கொண்ட முழக்கோல் உருவம் ஒன்றினை பிரதாணி முத்து இருளப்பபிள்ளை (கி.பி. 1783-1791) முதுகுளத்தூர் வட்டம், கடுகு சந்தை சத்திரத்தில்ஒரு கல்லில் பொறித்து வைத்தார் என்றும் அறிய முடிகிறது. ஆனால் அந்த முழக்கோல் கல் இப்பொழுது அந்தச் சத்திரத்தில் காணப்படவில்லை.

மேலும் இந்த முழக்கோல் என்ற சொல்லிலிருந்து இந்த கோல்

நீட்டல் அளவைக்கு பயன்படுத்தப்பட்டது என்பது தெரிய வருகிறது. முழம் என்பதற்கு 1 1/2 அடி நீளம் என்ற பொருள் இந்த சொல்லுக்குப் பொருந்தாது காரணம் இராமேஸ்வரம் திருக்கோவிலின் புடைப்புச் சித்திரமான முழக்கோல் சுமார் 4 அடிக்கும் மிகுதியான நீளமுடையதாக காணப்படுகிறது. உண்பது நாழி உடுப்பது நான்கு முழம் என்று இந்தப் பகுதியில் வழங்கப்படும் வழக்கும் இந்த முழக்கோலின் நீளத்திற்கு பொருந்தாதது ஆகும். அத்துடன் தற்பொழுது தமிழ்நாட்டில் வீட்டுமனைகளின் மதிப்பு மிகவும் அதிகமான தொகையில் நிர்ணயிக்கப்படும் முக்கியமான ஊர்களில் ஒன்றான கீழக்கரையில் இன்றும் வீட்டுமனை நிலங்களை அளந்து மதிப்பிடுவதற்கு 60 அங்குல நீளமுள்ள மரக்கோலால் ஆன முழக்கோல் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சிலர் இவ்வாறு கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள அளவுகோல்களை அக்கோயில் அல்லது கட்டுமானப் பகுதியை அமைக்கப்பயன்பட்ட "தச்சுமுழம்" என்றும் கூறுவர். தச்சுமுழம் என்ற கோலைப் பயன்படுத்தி அக்கோயில் அமைக்கப்பட்டது என்பர். தச்சுமுழம் - கோயில் கல் தச்சர்கள் பயன்படுத்திய அளவுகோல் எனப் பொருள்படும். ஒவ்வொரு கோயிலுக்கும் தச்சுமுழம் தனித்தனியாக உண்டு என்பர்.*



* புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு

# இயல் 10

# முதலூர் கல்வெட்டு

கூத்தன் சேதுபதி கி.பி.1630ல் ஆண் வாரிசு இல்லாமல் இயற்கை எய்தினார். சேது மன்னர் பதவிக்கு அவரது தம்பியும், அவரது தந்தையின் பெயரை உடையவருமான சடைக்கன் என்ற தளவாய் சேதுபதி சேது நாட்டின் மன்னரானார். இவரது ஆட்சிக்காலம் கி.பி.1630-1645 வரை ஆகும்.

தளவாய் என்பது தெலுங்கு மொழியில் சேனைத்தலைவர் என்ற பொருளைத் தருவது. முதலாவது சடைக்கன் சேதுபதி மதுரை நாயக்க மன்னர் முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கருடன் நெருக்கமான நட்பு கொண்டு இருந்ததுடன், மதுரை மண்டலத்தில் முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கருக்கு எதிரான கிளர்ச்சிகளையும், குறிப்பாகத் திருப்பத்தூர் வட்டம் பட்டமங்கலம் பகுதியில் எழுந்த கிளர்ச்சியை அடக்கி ஒடுக்கினார். மேலும் அந்தப் பகுதியில் இருந்து நாயக்க மன்னருக்குச் செலுத்தப்பட வேண்டிய அரசு இறையையும் ஒழுங்காகச் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்தார். இந்த

நடவடிக்கையினால் மகிழ்ச்சியுற்ற முத்துக் கிருஷ்ணப்ப நாயக்க மன்னர் உடையான் சடைக்கன் சேதுபதிக்கு "தளவாய்" என்ற சிறப்பு விருதினை வழங்கினார். இந்த விருது தொடர்ந்து இரண்டாவது சடைக்கண் சேதுபதியின் பெயருடன் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனப் பணிகளில் தளவாய் சேதுபதி மிகவும் அக்கறையுடன் ஈடுபட்டிருந்ததற்குச் சான்றாக அமைந்துள்ளது அவரது இந்த முதலூர்க் கண்மாய்க் கல்வெட்டாகும். இன்றைய பரமக்குடி வட்டம் முந்தைய சேது நாட்டில் செவ்விருக்கை நாட்டு மேற்குப் பகுதியில் அமைந்திருந்தது. வைகை ஆற்றின் பிரதான காலான, நாட்டார் கால் செல்லும் பகுதியில் இந்த மன்னர் ஒரு கண்மாயை அமைத்ததையும், அதில் கலுங்கு ஒன்றும், மடைகள் இரண்டும் அமைக்கப்பட்டதை இந்தக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இதன் காலம் கி.பி.1637 ஆகும்.

கலுங்கு என்பது கண்மாயின் தாழ்வான பகுதியில் கண்மாயிலிருந்து நீரை வெளியேற்றுவதற்காக அமைக்கப்படும் கட்டுமானம் ஆகும். இந்தக் கலுங்கில் பல கண்கள் அமைக்கப்பட்டும் அவைகள் அனைத்தும் ஒரே நேரத்திலோ அல்லது தனித்தனியாகவோ அல்லது தேவைப்படும் பொழுதிலோ வேண்டிய நீரை வெளியேற்றுவதற்கும் அடைப்பதற்கும் (பெரும்பாலும் மரக்கட்டைகளால்) தடுப்பு அமைக்கப்படுவதாகும்.

இதனைப் போன்றே கண்மாயின் கரையை அடுத்துள்ள வயல்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கு ஏற்றவாறு அமைக்கப்படுவது மடை எனப்படும். பெரும்பாலும் இந்த அமைப்பு சுட்ட செங்கலினால் கட்டப்பட்டு வருகிறது. இதனைக் கலுங்கில் ஒரு சிறு பகுதியாகக் கொள்ளலாம். புதுக்கோட்டை சீமையில் இந்த மடை குமிழி என வழங்கப்படுகிறது. இந்த மடையை ஒட்டிச் சில இடங்களில் மக்கள் குடியிருப்புகளும் அமைதல் உண்டு. சேதுபதிச் சீமையில் சக்கரக்கோட்டை கண்மாய் அடுத்துள்ள ராஜசூரிய மடை என்று ஒரு

கிராமமும், ராஜ சிங்க மங்கலம் பெரிய கண்மாய் அருகில் அமைந்துள்ள இராமநாத மடை, இரகுநாத மடை என்ற மடைகளின் பெயரால் அங்கே இரு கிராமங்கள் ஏற்பட்டு இருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

"வரப்பு உயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும், குடி உயர, கோல் உயரும்" என்ற பழம் பாடலுக்கு ஏற்ப நாட்டின் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருந்த குடிமக்களுக்கு நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொடுப்பது சேது மன்னரது கடமையாக இருந்தது. குறிப்பாக சேது நாட்டில் வைகை, கிருதுமால், மணிமுத்தாறு, தேனாறு போன்ற சிறு நதிகள் அமைந்து இருந்தாலும், அவைகளும் கார் காலத்து மழைப் பொழிவினையை ஆதாரமாகக் கொண்டு இருந்தன. மேலும் சேதுநாட்டின் மிகப் பெரும்பாலான பரப்பு மானாவாரி (வான்மாரி என்ற சொல்லின் திரிபு) நிலமாக அமைந்திருந்தன.

இவைகளைக் கருத்தில் கொண்ட தளவாய் சேதுபதி மன்னர் தமது நாட்டின் குடிமக்களுக்கு நீர் ஆதாரங்களைப் பெருக்கும் பணியில் ஈடுபட்டார். ஆங்காங்கு ஆற்றுப் போக்கிலும் தாழ்வான பகுதிகளிலும் அணைகளை எழுப்பி மழை நீரைத் தேக்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்தார். இவைகள் கண்மாய்கள் என்றும், ஏந்தல்கள் என்று அழைக்கப்பட்டு வந்தன. இவைகளுக்கு நீரினைக் கொண்டு செல்லும் கால்வாய்கள் கால்கள் என்றும், அவைகளினால் கொண்டு சேர்க்கப்பட் வெள்ள நீர் மிகுதியாகத் தேங்கும் பொழுது அவைகளைக் கண்மாய்க் கரைக்கு குந்தகம் இல்லாமல் வெளியேற்றுவதற்கான ஏற்பாடாக "தான் போதிக கால்களையும்" அமைத்து உதவினார். இந்த மன்னரது தந்தையார் கூத்தன் சேதுபதி வைகை நீரினை வறண்ட முதுகுளத்தூர் பகுதிக்கு எடுத்துச் செல்ல அமைத்த நீண்ட கால்வாய் (கமுதக்குடிக்கு, அருகில் வைகை ஆற்றிலிருந்து தெற்கே பிரிந்து செல்கிறது) இந்தக் கால் "கூத்தன் கால்" என்று இன்றும் வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் கல்வெட்டு அமைந்துள்ள ஊர்

செவ்விருக்கை நாட்டில் இருப்பதாக குறிப்பிடப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது.

## இந்தக் கல்வெட்டு வாசகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது

1. "சகாத்தம்
2. 1559 மேல்*
3. நின்ற செல்லாநி
4. ன்ற ஈசுர வருஷம்
5. ஆனி மீ 30 உ
6. செவ்விருக்கை
7. நாட்டில் முத
8. லூருக் குள
9. மும் கலிங்கு
10. ம் மடைரன்
11. டும் உடைய
12. நாயன் தழவாய்
13. யான சேதுப
14. தி காத்த தே
15. வர் உபையம்"

* புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு.

# இயல் 11

# திருவாடானைக் கல்வெட்டு

இரண்டாம் சடைக்கண் சேதுபதி என்ற தளவாய் சேதுபதியின் ஆட்சிக் காலத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் கிடைத்த இரண்டாவது கல்வெட்டு இது. இந்த மன்னரது பிரதிநிதியான திருமலையன் என்பவர், சேதுபதி மன்னருக்காக இந்தக் கல்வெட்டினை வரைந்துள்ளார். இது திருவாடானை திருக்கோயிலின் ராஜ கோபுரத்தின் வலப்புற மதிலில் பொறிக்கப்பட்டுள்ளது.

சக ஆண்டு 1557 - தை மாதம் 14ல் திருவாடானையில் எழுந்தருளியுள்ள ஆதி ரத்தினேசுவரர் சுவாமிக்கு அபிஷேகம், திருநீறு, மாலைகள், தணிகை, பிரசாதம் ஆகியவைகளுக்காக கிராமம்தோறும் ஒரு பணமும், ஒரு காசும், ஒரு கல நெல்லும் குடிமக்கள் கொடுக்க வேண்டும் எனக் கட்டளையிட்ட அறிவிப்பினை இந்தக்

கல்வெட்டு தெரிவிக்கின்றது.

இந்த அறிவிப்பினுக்கு மாற்றமாக சுவாமிக்கு உரிய மேலே கண்ட பணத்தையும், நெல்லையும் கொடுக்காமலும், அவைகளைத் தானே அனுபவித்துக் கொண்டவன் கெங்கைக் கரையிலே காராம் பசுவையும் மாதா, பிதாவையும், குருவையும் கொன்ற பாவத்திலே போகக் கடவான் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்விதம் சுவாமிக்குச் செலுத்த வேண்டிய நெல் முதலியவைகளைக் கொடுக்காமல் இருப்பதை அனுமதித்து அதற்காகக் கைக்கூலி பெற்றவனை இந்தக் கல்வெட்டில் மிகவும் கடுமையாகவும், கீழான சொற்களினாலும் குறிக்கப் பெற்றுள்ளது இந்த சொல் இன்றளவும் இந்தப் பகுதியில் வாக்கில் இருந்து வருகிறது. மேலும் இத்தகைய இழிய செயலைச் செய்தவன் தனது வீட்டுப் பெண்களைத் தவறான பாவ காரியங்களில் ஈடுபடுத்தியவனாகக் கடவன் எனக் கடுமையான முறையில் இந்த ஓம்படைக்கிளவியாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டின் இறுதிப்பகுதி அழிந்து படிக்க முடியாத அளவு சிதைவு அடைந்துள்ளது. அந்தக் காலத்தில் பசுவை வதைப்பதும், பெற்ற தாய் தந்தையையும், கற்றுக் கொடுத்த குருவையும் கொல்வதும் மிகப் பெரிய பாவமாகக் கருதப்பட்டது என்பதும் தெரியவருகிறது.

இந்தக் கல்வெட்டின் இறுதிப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள கைக்கூலி என்ற சொல் இந்தப் பகுதியின் வட்டார வழக்கு, கைக்கூலி என்பது கையூட்டு, அல்லது லஞ்சம் என்பதை குறிப்பதாகும். மேலும் இந்தக் கல்வெட்டில் திருவாடானை திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனின் பெயர் ஆடானை நாயகர் என நல்ல தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது. இந்தத் தலத்தில் ஆடும், யானையும், இறைவனை வழிபட்டு முக்தி அடைந்த காரணத்தினால் இந்தக் கோயில் இறைவருக்கு ஆடானை நாயகர் என்ற பெயர் ஏற்பட்டு இருப்பது என தலபுராணம் விளக்குகிறது. திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும், இந்த இறைவரைத் தேவாரம் பாடிச் சிறப்பித்துள்ளனர். அவர்களது பதிகங்களில் இந்தக் கோவிலின்

இறைவர் ஆடானை நாயகர் என்றே பாடியுள்ளனர். ஆனால் தற்பொழுது இந்த இறைவன், இறைவியின் பெயர் ஆதி ரத்தினேசுவரர் என்றும், அம்பிகை சிநேகவள்ளி என்றும் வழங்கப்பட்டு வருகிறது. இது 17, 18ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தின் தென்பகுதி முழுவதிலும் ஆதிக்கம் செலுத்திய நாயக்க மன்னர்களது தெலுங்கு மொழியின் தாக்கம் ஆகும். இந்தக் கல்வெட்டின் ஆங்கில ஆண்டு கி.பி.1635 ஆகும்.

<u>**இந்தக் கல்வெட்டின் வாசகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.***</u>

1. **"ஸ்வஸ்திஸ்ரீ சகாத்த**
2. **ம் 1557**
3. **இதன் மேல் செல்லாநின்**
4. **ற யுவ ஹு தை மீ 14ல்**
5. **பூறுவ பட்சத்தில்**
6. **பௌறுணையும் பூ**
7. **ச நட்சத்திரமும்**
8. **பெற்ற புண்ணிய கா**
9. **லத்தில் சுவாமி ஆ**
10. **டானை நாயகற்கு**
11. **சேதுபதித் தேவர்**

12. புண்ணியமாகத்
13. திருமலையன் கட்
14. டளை யிட்டபடி
15. யின்நாயநார் கோ
16. வில் தீதந் திருநீரு
17. சாத்துப் படி திரு
18. மாலை அருளிப்பா
19. டு தழுகைப் பிறசா
20. தமும் பெறுவதற்காக
21. கோவில் கிராம
22. ங்களில் பிறவகை
23. ஒரு காசு ஒரு பணமும்
24. கல நெல்லும் உள்ப
25. ட சுவாமிக்கு முத
26. லிடாமல் எடுத்தவன்
27. கெங்கைக் கரையி
28. லே காராம் பசுவை

29. யும் மாதா பிதாவை

30. யும் குருவையும்

31. கொன்ற தோஷ

32. த்திலே போகக்

33. கடவாராகவும்

34. இந்தக் கிராமங்களி

35. லே கைகூலி வாங்

36. கியவன் பெண்டாட்டி

37. யையும் உடன் பிறந்தாள்

38. மகளையும் மருமக

39. ளையும் கயவர்களையும்

40. ஒரு வீட்டிலே சத்து

41. ரு வுடனே கூட்டிக் குடு

42. த்து சம்போகம் பண்ணி

43. ன . . . . . . . ."

---

* புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு

# இயல் 12

# கீழக்கரை சொக்கநாதர் கோயில் கல்வெட்டு

இரண்டாம் சடைக்கண் சேதுபதி என்ற தளவாய் சேதுபதி ஆண்வாரிசு இல்லாமல் கி.பி.1645-ல் இறந்துவிட்டார். இதனால இறந்த மன்னரது தங்கையின் மகனான திருமலை ரகுநாதத் தேவர் சேதுபதி மன்னாரானார். இவரது ஆட்சியின் தொடக்கத்தில் சேதுபதி மன்னரது சரியான வாரிசு யார் என்பது பற்றிய குழப்பம் எழுந்தது. கூத்தன் சேதுபதியின் இரண்டாவது மனைவியின் மகனும் மறவர் சாதி பெண்ணுக்குப் பிறக்காதவருமான, தம்பித் தேவர் என்பவர் மதுரை திருமலை நாயக்கர் மூலமாக சேதுநாட்டிற்கு உரிமை கோரினார். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக திருமலை நாயக்க மன்னர் சேதுநாட்டை மூன்று பகுதிகளாகப் பிரிவினை செய்தார். அதன்படி, காளையார்கோவில் பகுதிக்குத் தம்பித் தேவரும், இராமநாதபுரத்தில் திருமலை ரெகுநாத தேவரும் இவரது தமயனார்

நாராயணத் தேவரது மகன், தனுக்காத்த தேவரு, அஞ்சுக்கோட்டையில் அஞ்சு கோட்டைப் பகுதிக்கும் அரசர்களாயினர். இந்தப் பிரிவினை ஏற்பட்ட சில வருடங்களுக்குப் பின்னர் காளையார் கோவிலில் தம்பித் தேவரும் அஞ்சு கோட்டையில் தனுக்காத்த தேவரும் காலமாகிவிட்டதால் பிரிவினை பெற்ற சேதுநாடு மீண்டும் ஒன்று சேர்ந்து திருமலை ரெகுநாத சேதுபதியின் தலைமையில் வலிவும், பொலிவும் உடைய பெரும் நாடாகத் திகழ்ந்தது. மிகச் சிறந்த போர்வீரரும், போர்களில் தக்க பயிற்சியும், அதற்கான யுக்திகளைக் கையாளுவதில் சமத்தருமான திருமலை ரகுநாத சேதுபதியின் ஆட்சிக்காலம் சேதுபதிச் சீமையில் பொற்காலமாகப் போற்றப்படுகிறது. சேதுபதி மன்னர்களது கல்வெட்டுக்களில் நமக்கு கிடைத்துள்ள மிகுதியான கல்வெட்டுக்கள் இந்த மன்னருடையதாகும்.

இராமநாதபுரம் வட்டம் கடலோர ஊரான கீழக்கரையின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது சொக்கநாதர் கோயில். இதில் பொறிக்கப்பட்டிருந்த 3 கல்வெட்டுக்களை இந்திய அரசின் தொல்லியல் அளவீட்டுத் துறையினர் கி.பி.1907-ல் படியெடுத்து வெளியிட்டு உள்ளனர். இந்தக் கல்வெட்டு திருமலை ரெகுநாத சேதுபதி மன்னர் இந்தக் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவர் மீனாட்சி சுந்தரேசுவரருக்கு வழங்கிய நிலக்கொடை பற்றியது. இதன் காலம் கி.பி.1645 என மதிப்பிடப்படுகிறது.

கடலோர நகரமாகிய இந்த ஊர் பல நூற்றாண்டுகளாகச் சேது நாட்டின் சிறந்த துறைமுகப் பட்டிணமாக விளங்கி வந்த பொழுதிலும், இந்த நகரின் தொன்மையைத் தெரிவிக்கக்கூடிய ஆதாரங்களாக மேலே கண்ட கல்வெட்டு மட்டுமே அமைந்துள்ளது. இந்தக் கோயில் சிதிலமடைந்துவிட்டதினால் இப்பொழுது இந்தக் கல்வெட்டு அங்கு காணப்படவில்லை.

சேதுபதி மன்னர் இந்தக் கோயிலின் நாள் பூஜைக்காகத்

தானமாக வழங்கியுள்ள ஊரின் பெயர் தெரியவில்லை என்றாலும் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் பெருநான்கு எல்கையிலிருந்து இந்த ஊர் தற்போதைய மாயாகுளம், சின்ன மாயாகுளம் என்ற கிராமங்களாக இருக்க வேண்டும் என அறிய முடிகிறது.

இந்தக் கல்வெட்டில் கிழக்கு எல்லையாக இயேசு கோவில் என்ற சொல் காணப்படுகிறது. இது இன்றும் கீழக்கரை நகரின் மேலத் தெருவில் பன்னாட்டார் கோவில் என வழங்கப்படும் தேவாலயம் ஆகும்.

இந்த தேவாலயம் கி.பி.16ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கிறித்துவ சமயப் பணியை மேற்கொண்டு இருந்த பிரான்ஸிஸ் சேவியர் என்ற போர்ச்சுக்கல் நாட்டுப் பாதிரியாரால் கட்டுவிக்கப்பட்டது. பன்னாட்டார் என்பது மன்னார் வளைக்குடாவின் கிழக்குக் கரையில் வாழ்ந்து வந்த மீனவரின் ஒரு பிரிவினரைக் குறிப்பதாகும். ஆனால் தற்பொழுது இந்தப் பிரிவினர்களது குடி இங்கே இல்லை. மேற்கு எல்லையாக குறிப்பிடப்பட்டு இருக்கும் காளலிங்கம் கோயிலும் இன்று இல்லை. ஆனால் அதே எல்கையாகக் குறிப்பிடப்படும் பள்ளியார் முனை முந்தல் இன்றும் உள்ளது. முந்தல் என்பது பொதுவாகக் கடற்கரையின் வில் ஆரம் போன்ற வளைவான பகுதியைக் குறிப்பதாகும். கடல்நீர் நிலத்தை நோக்கிப் புகுந்து செல்லும் பொழுது அந்த நீர் வழியினை எதிர்த்து இருபுறமும் எழுகின்ற மணலான கடற்கரை தான் முந்தல் என வட்டார வழக்காக வழங்கப்படுகிறது. வடக்கு எல்லையில் குறிப்பிடப்படும் புகுந்ததை என்ற பகுதி புள்ளந்தை என்ற பெயரில் சிறிய கிராமமாக இன்றும் இருந்து வருகிறது. இந்தக் கல்வெட்டின் முழு வாசகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இந்த கல்வெட்டில் இருந்து கீழக்கரை நகரின் பழைய பெயர் அனுத்தொகை மங்கலம் எனத் தெரியவருகிறது. இந்த நகருக்கு வழக்கில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள அனுத்தொகை மங்கலம், நினைத்ததை முடித்த விநாயகர் பட்டணம் என்ற இரு ஊர்களும் இராமநாதபுரம் சமஸ்தானத்திற்கு உட்பட்டதாக

வரையப்பட்டுள்ள 2084 ஊர்களின் பெயர் பட்டியலில் காணப்படவில்லை. விநாயப் பெருமாளுக்கு கற்பூர விநாயகர் அடைக்கலம் காத்த விநாயகர் என்பன போன்ற பல சிறப்புப் பெயர்கள் இருந்து வந்த பொழுதினும் நினைத்ததை முடித்த விநாயகர் என்ற சொல் பிரயோகம் இந்தக் கல்வெட்டில மட்டும் காணப்படுகிறது. திருமலை சேதுபதி ரகுநாத மன்னருக்கு நினைத்ததை முடித்தான் என்ற வழக்கு இராமநாதபுரம் சமஸ்தான ஆவணங்களில் காணப்படுவதால் இந்த ஊரும அந்த மன்னர் பெயராலேயே நினைத்ததை முடித்த ரகுநாயகன் பட்டிணம் என்ற வழக்கு இருந்திருத்தல் வேண்டும். இந்தக் கல்வெட்டினை 1907-ல் படியெடுக்கப்பட்ட பொழுது நினைத்ததை முடித்த ரகு நாயகர் என்பதற்குப் பதிலாக நினைத்ததை முடித்த விநாயகர் பட்டினம் என்ற தவறு ஏற்பட்டு இருத்தல் பொருத்தமாக உள்ளது. தஞ்சாவூர், சரசுவதி மகால் நூலகம் வெளியிடப்பட்டுள்ள வண்ணத் திரட்டு என்ற நூலில் திருமலை சேதுபதி மன்னரைப் பற்றிய அடைமொழியாக ஒரு வண்ணத்தில் இராமநாயகர், ரகுநாயகர் என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது இங்கு ஆராயத்தக்கது. இந்த கல்வெட்டில் 1-4ம் 17, 18, 20, 21, 39, 40 ஆகியவரிகள் பழுதடைந்து இருப்பதால் கல்வெட்டு முழுமையாக படிப்பதற்கு இயலவில்லை.

**இந்தக் கல்வெட்டின் வாசகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.***

**வரி "1 - 4.........................................**

5 திருமலை சேதுப

6. தி மகாராசர் அவ

7. ர்கள் அனுத்தோ

8. கை மங்கலமா

9. **கிய நினைத்தது மு**
10. டித்த வினாயகற்
11. பட்டணமாகி
12. ய கீழக்கரை மீ
13. னாட்சி சுந்தரே
14. ச்சுவரருக்கு தா
15. னம் பண்ணி குடு
16. த்த கிராமம் கொ
17. ..... . . . . . . . .
18. . . . . .. . . . .. .
19. க்கு எல்கை
20. கொ
21. . . . . . . . .ரு காவு
22. க்கும் சொக்க
23. னாதர் கோயி
24. லுக்கும் யேசு
25. கோவிலுக்கும் ப
26. ளு விரியற்
27. துறைக்கும் மே

28. மற்கு சமுத்தி

29. ரக் கரைக்கு வட

30. க்கு பள்ளியார்

31. முனை முந்தலு

32. க்கும் காளலி

33. ங்கம் கோ

34. விலுக்கும் கோ

35. தை சமுத்திரப் பு

36. ளுந்தை காவை

37. க்கும் கிழக்கு புகுந்

38. தைக் குடியிருப்

39. புக்கும் . . . . .

40. டம் . . . . . . .

41. ணிக்கும் செக்

42. பாதைக்கும் தெ

43. ற்கு யிதி றகு

44. ள்ளிட்ட நஞ்சை

45. . . . . . . . . . . . .

47. . . . . கடவ

48. நித்தக . . .

49. ம் மீனாட்சி சுந்

50. தரேசுவர சுவா

51. மி பூசைக்கு அட்

52. டிக் குடுத்தோம்



* ARE 397 / 1907

# இயல் 13

# விரையாச் சிலைக் கல்வெட்டு

சேதுபதிச் சீமையின் பகுதியாக விளங்கிய கானாட்டில் அமைந்திருப்பது விரையாச்சிலை என்ற ஊராகும். வீரர்களின் சிலை என்பது மருவி விரையாச்சிலை என்றாகியுள்ளது. போரில் இறந்துபட்ட வீரர்களின் நினைவாக சிலைகள் எழுப்பிப் போற்றுவது தமிழகத்தின் சங்க காலம் முதல் இருந்துவந்த வழக்காகும். இத்தகைய வீரர்களுக்கான நினைவுக் கல், நடுக்கல், எனவும் வீரக்கல் எனவும் பின்னர் வழங்கப்பட்டது. இதனைப் போன்ற நடு கல் ஒன்று முன்னர் இங்கு அமைந்திருக்க வேண்டும். இந்த ஊர் இப்பொழுது புதுக்கோட்டை மாவட்டம் திருமெய்யம் வட்டத்தில் அமைந்துள்ளது. இந்தப் பகுதி திருமலை சேதுபதியின் ஆட்சியில் கள்ளர் சீமை என்ற பெரும் பகுதியில் இந்த ஊர் அமைந்திருந்ததாகத் தெரியவருகிறது.

இங்குள்ள உலகவிடங்கேஸ்வரர்

சுவாமி கோயிலுக்குத் திருமலை சேதுபதி மன்னர் சார்பாக வழங்கப்பட்ட நிலக்கொடைச் செய்தியினை கல்வெட்டின் வாசகம் தெரிவிக்கின்றது.

இந்த ஆணையைத் திருமலை ரெகுநாத சேதுபதி மன்னருக்காக அவரது பிரதான அலுவலரான சொக்கப்பன் சேர்வைக்காரர் என்பவர் வழங்கியுள்ளார். இந்த அலுவலர் சேதுபதி மன்னரது மிக முக்கியமான அலுவலர் என்பது அவர் வழங்கியுள்ள பிற ஆவணங்களில் இருந்தும் தெரியவருகிறது. இந்த அலுவலர் கி.பி.1668ல் இராமேஸ்வரம் திருக்கோயில்க்காக சேதுபதி மன்னரது சிறப்பான அலுவலர் என்ற முறையில் இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு திருவாடானை வட்டம் ஆனந்தூர், பாப்பாகுடி ஆகிய ஊர்களைச் சர்வ மான்யமாக இவர் வழங்கிய செப்பேட்டினை ஏற்கனவே வெளியிடப்பட்டு இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சிறப்பான நாட்களில் சுவாமியையும், அம்பாளையும் பல்லக்கில் வைத்து அலங்கரித்துக் கோயில் திருச்சுற்றிலும், ஊரின் பிரதான வீதிகளிலும் உலா வருவதைப் பல்லக்குச் சோவை என இந்தக் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. சேவை என்ற வடமொழிச் சொல் இங்கு தமிழில் சேர்வை என குறிப்பிடப்படுகிறது.

பிராமண போசனம் என்பது திருவிழாக் காலங்களில் பிராமணர்களுக்கு அளிக்கப்படும் சிறப்பான விருந்து. முந்தைய சமுதாயத்தில் மக்கள் இறைவனுக்கு அடுத்தபடியாக கல்வி கேள்வியிலும் வேத வியாகரணங்களிலும் சிறப்புற்று விளங்கியவர்கள் பிராமணர். ஆகையினால் பிற சாதியினரை விட பிராமணர்கள் சிறப்பாகப் போற்றப்பட்டு கோயில் விழாக்களின் பொழுது அவர்களுக்கு முன்னுரிமையும், விருந்து உணவும் வழங்கப்பட்டு வந்தது.

தேவதாயம் (அ) தேவதானம் என்ற சொல் திருக்கோயில்களுக்குத் தானமாக வழங்கப்படும் காணிகளைக்

குறிப்பதாகும். இதனைப் போன்றே பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் பிரம்மதேயம் எனவும் சோழ பாண்டியர்களது கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. இந்தக் கல்வெட்டில் குடிநீங்காத் தேவதானம் என்ற சொல் புதிதாகப் புகுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே குடிகள் வாழ்ந்து வருகின்ற ஊரினை மன்னர் கோயிலுக்குத் தானமாக வழங்கும்பொழுது அந்த ஊர்களில் தொன்றுதொட்டு குடியிருந்து வரும் குடிகளது குடியிருப்பு உரிமைக்குக் குந்தகம் ஏற்படாது இருக்கும் வண்ணம் குடிகள் அந்த ஊர்களில் குடியிருந்து வரும் உரிமையை மதித்துக் கட்டளையிடப்படுவதுதான் இந்த குடிநீங்காத் தேவதானம் என்ற சொல்லுக்கு உரிய பொருளாகும். மேலும் இந்தக் கல்வெட்டின் ஐந்தாவது வரியில் கல்போட்டுக் கொடுத்து என்ற சொல் பயன்படுத்தப்பட்டு இருப்பது நோக்கத்தக்கது. ஒரு காணி அல்லது ஊரினை முழுமையாகக் கோயிலுக்குத் தானமாக வழங்கும்பொழுது அந்த நிலப் பகுதியின் பெரு நான்கு எல்லைகளையும் முழுமையாக அளவை செய்து அறுதியிட்டு அதற்கான எல்லைக் கல்லை நாட்டிக் கொடுப்பதுதான் இந்தச் சொல்லின் பொருளாகும். தானம் கொடுக்கப்படும் ஊர்களின் நான்கு பெரும் எல்லையைக் குறிப்பதற்காகத் தானம் பெறுகின்ற திருக்கோயில் சிவன் கோயிலாக இருந்தால் அந்த எல்லையில் சூலக் கல்லையும் (சிவபெருமானது சூலம் உருவம் பொறிக்கப்பட்ட கல்) வைணவத் திருக்கோயிலாக இருந்தால் திரு ஆழிக்கல் (மகாவிஷ்ணுவினது சக்கரத்தின் உருவம் பொறிக்கப்பட்ட கல்) நாட்டி வைப்பது வழக்கம். இத்தகைய எல்லைகளைத் தெளிவாக அறுதியிட்டுக் காண்பிப்பதற்காக ஆங்காங்கு கிராமங்களில் எல்லை விருத்தி என்ற அலுவலர் சேதுபதிகளின் ஆட்சியில் இருந்ததை இராமநாதபுரம் சமஸ்தானம் மேன்யுவல் தெரிவிக்கின்றது.[1]

இங்கே வீரகண்டன்பட்டி எல்லையில் சூலக்கல் நாட்டி இருக்க வேண்டும் என்பது தெரியவருகிறது.

இந்த கல்வெட்டிற்கான வாசகத்தைச் சேதுபதி மன்னர் பிரதிநிதி

1. Raja Ram Rao Manual Of Ramnad Samasthanam (1891) Page

சொக்கப்பன் சேர்வையின் ஆணைப்படி மானாமதுரையிலிருந்த சோலையாப்பிள்ளை மகன் கெங்கையாடி என்பவர் வரைந்ததை விரையாச்சிலை ஊரைச் சேர்ந்தவரான கணக்கர் சிதம்பரநாத பிச்சன் என்பவர் இதனைக் கல்வெட்டில் பொறித்தார் என்ற விவரமும் தெரியவருகிறது. மானவீரன் மதுரை என்பது சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஊராகும். மானவீரன் மதுரை என குறிக்கப்பட்டுள்ள இந்த சொல் பின்னர் வானரவீர மதுரை என மருவியது. வானரவீர மதுரை புராணம் சிற்றிலக்கியம் இயற்றப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கி.பி.15, 16ஆம் நூற்றாண்டுகளில் இந்த ஊரின் வைகை ஆற்றுக்கு வடகரையில் வானாதிராயன் என்ற குறுநில மன்னன் ஒருவன் கோட்டையினைக் கட்டி ஆட்சி செய்து வந்தான் மதுரை நாயக்க மன்னர்களுக்குக் கட்டுப்பட்டும், கட்டுப்படாமலும் இயங்கி வந்த இந்த மன்னன் மீது தனிப்பாடல் ஒன்று இயற்றப்பட்டுள்ளது. அதில் மான வீர கஞ்சுகன் என்ற சிறப்புப் பெயர் குறிக்கப்பட்டிருப்பதால் இந்த மன்னன் சுந்தரத்தோன் வானாதிராயன் என்பவனைக் குறிப்பதாக உள்ளது. இந்த மானவீர கஞ்சுகன் என்ற தொடரிலிருந்து மானவீர மதுரை என்ற ஊர்ப்பெயர் உருவாகி இருக்க வேண்டும்[1]. கங்கையாடி - புனிதமான கங்கை ஆற்றில் நீராடி வந்த செயலை இந்தச் சொல் குறிக்கிறது.

**இந்தக் கல்வெட்டின் வாசகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது***

**1. "ஸ்வஸ்திஸ்ரீ ஹ அற்பசி மாதம் 1 உ விரையாச்சிலை உலகவிட**

**2. ங்கீசுவர சுவாமிக்கு பல்லக்குச் சேர்வைக்கும் பிராமன போசனத்துக்கும் திருப்பணிக்கும்**

**3. நடக்கத்தக்கதாக கட்டளையிட்டது திருமலைய்ரகுநாத சேதுபதி காத்த தேவர் புண்ணியமாக**

1. பெருந்தொகை 1932 மதுரை தமிழ்ச் சங்க பதிப்பு பாடல்

4. சொக்கப்பன் சேருவைகாறன் கட்டளையிட்டது. வீரகண்டன்பட்டி நஞ்சை புஞ்சை குடிநீங்கா தேவ

5. தானமாக கட்டளையிட்டபடியினாலே இந்தபடி கல்லிலும் செம்பிலும்

வெட்டி கல்போட்டு குடுத்தபடி

6. யினாலே சந்திராதித்தவரைக்கும் யனுபவித்துக் கொண்டு பல்லக்கு

சேர்வையும் பிராமணர் போசனம்

7. மும் திருப்பணியும் நடத்திவரக் கடவர்ாகவும் இந்த புண்ணியத்துக்கு

யாதாம்மொருத்தர் இசைகேடு

8. பண்ணினவன் கெங்கை கரையில் காராம்பசுவைக் கொன்ற பாவத்திலே

போககடவாராகவும் இந்த கல்வெட்

9. டு எழுதினேன் மானாராய்யன் குப்பையன் எழுத்து

இப்படிக்கு வானவீரன் மதுரையிலிருக்கும் சோ

10. லைய்யாப்பிள்ளை கெங்கையாடியர் எழுத்து விரையாச்சிலை ஊராயமைந்தவர்

சொற்படிக்கு

11. கணக்கு சிதம்பரநாத பிச்சன் எழுத்து சுபமஸ்து உ"

* Pudukkottai State incriptions (1928)

# இயல் 14

# திருமெய்யம் – மேலையூர் கல்வெட்டு

இந்தக் கல்வெட்டும் திருமெய்யம் வட்டம் மேலையூரில் உள்ள லட்சுமி நாராயணப் பெருமாள் திருக்கோயில் தென்புறச் சுவற்றில் காணப்படும் திருமலை ரெகுநாத சேதுபதியின் கல்வெட்டாகும். இவற்றின் காலம் 9.11.1662 இந்தக் கல்வெட்டில் இந்த தானத்தை வழங்கிய திருமலை ரெகுநாத சேதுபதி மன்னருக்குப் பூபாலன் என்ற அடைமொழி கொடுக்கப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பூ மண்டலத்தைப் புறப்பவன் பூபாலன் என்று குறிக்கப்பட்டுள்ளது. (பரிபாலனம் செய்வதற்குப் பிறந்தவன்) என்பது இதன் பொருள். விண்ணகரம் என்பது பெருமாள் கோயில் கொண்டுள்ள வைணவ (விஷ்ணு கிரகம்) கோயில்களைச் சுட்டும் பொதுப் பெயராகும். தமிழ்மொழி ஆக்கம் கிரகம் என்றச் சொல்லின் விண்ணகரம் என்பது சொல்லாகும்.

இந்தக் கல்வெட்டின் முழுமையான வாசகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.*

1. "ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகந சகாத்தம் 1585 இதன்மேல் செல்லாநின்ற சோபகிறிது ஹ த்து தெட்சிணாயநத்து விருட்சிக

2. நாயத்து 9 உ இல் அமரபட்சத்து பஞ்சமியும் சோமவாரமும் புணர்பூச நட்சத்திரமும் சுபயோகமும் சுபகரணமும் சுபலக்கிணமும் பெற்றனா

3. ளில் திருமலை சேதுபதி காத்த ரகுனாத பூபாலன் காரியத்துக்கு கர்த்தரான சொக்கப்பன் சேருவைகாரனார் மேலையூரில் அரசுனா ராய

4. ண விண்ணகரப் பெருமாளுக்கு ரகுநாத பூபாலனுக்குப் புண்ணியமாக கட்டளையிட்டது இந்த சுவாமி திருவிடையாட்டமா

5. ன பெரியவராயவயல் சிறுவராயவயல் காட்டுக்குறிச்சி வயல் ஆலவயல் உளகுடை விண்ணகன் செய் நிலம் அரைமா பெரியவயல்

6. உளகுடையும் இந்த வகையில் முன்னுண்டான நிலமையெல்லாம் சறுவமான்யமாக கட்டளையிட்டபடியினாலே சந்திராதித்தவரைக்கும் திருப்பணி பூசை நடப்பிக்க கடவாரா

7. கவும் இந்த திருவிடையாட்டத்தில் இந்தக் கோயில் எம்பெருமானடியாரில் பூலாவுடையான் அழகப்பன் மகள் அம்மை உயீளடட்ாா இரண்டு தாசி இரண்டு திருவேளைக்காரர் ஆக ச

8. னம் 4க்கும் இவர்கள் நிலமையான காட்டுகுறிச்சி வயலும் ஆலவயல் வண்கைள் செய் நிலம் அரைமா சறுவமானியக் கட்டளையிட்டபடியினாலே கோவில் ஊழியமும் செய்துகொண்

9. டு நிலமையும் அனுபவித்துக்கொள்ளக்கடவாராகவும் திருவாசல் நந்தவனம் மெழுகப் பெருக்க விட்டது. சூத்திரவயக்கல் தளைநிலம் இந்தப்படி நடத்திவரக்கடவராகவும் இந்த தன்மத்துக்கு அழு

10. தம் பண்ணினவனும் அதுக்கு ரம்மிச்சுக் கேட்டிருந்தவனும் கெங்கைக் கரையிலே காராம்பசுவைக் கொன்ற தோஷத்திலும் மாதா பிதாவைக் கொன்ற தோஷ

11. த்திலும் குருத்துரோகம் பண்ணின தோஷத்திலும் மகத்துரோகம் விசுவாச பாதகஞ்செய்த தோஷத்திலேயும் போக கடவாராகவும் இற்படிக்கு சோலை

12. யப்பபிள்ளை மகன் கெங்கையாடியாபிள்ளை மணியத்தில் இவ்வூர் அதிய ........................ சிதம்பரம் இந்தப்படிக்கு முனையமேக்கு வேனா

13. ன் முன்பாக கல்வெட்டிக் குடுத்தபடியினாலே இவ

***.......... படிக்கு இன்னாட்டு கணக்கு திருவகத்தியார் மகன் அரங்குளவன் எழுத்து உ எழுநாட்டாசாரி ராசப்பிள்ளை சாட்சி."***

இந்தக் கல்வெட்டு புதுக்கோட்டை சமஸ்தானத்தினால் வெளியிடப்பட்ட புதுக்கோட்டைக் கல்வெட்டுக்களின் தொகுதியில் இடம் பெற்றுள்ளது.

இந்தக் கோயிலுக்கு உபயமாகத் திருமலை ரெகுநாத சேதுபதி மன்னர் வழங்கிய நிலக்கொடையை அவரது விசேஷ அலுவலரான சொக்கப்பன் சேர்வைக்காரரது ஆணையை இந்தக் கல்வெட்டில் தெரிவிப்பதாக உள்ளது. இந்தக் கோயிலில் எழுந்தருளியுள்ள லட்சுமி நாராயணப் பெருமாளுக்குப் பெரியவராய வயல், சிறுவராயவயல், காட்டுக்குறிச்சி, ஆலவயல், உட்கடை விண்ணகன் செய்நிலம் அரைமா, பெரியவயல், இந்த நிலங்களை இந்தக் கோயிலின் பூஜை முதலிய சேவைகளுக்குத் தானமாக அளித்திருப்பதை இந்தக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

இந்தப் பகுதியில் நிலங்களை அளவிட்டுச் சொல்வதில் "மா" என்ற நில அளவு வழக்கில் இருந்தது. சேதுபதி மன்னருக்கு உட்பட்ட சேதுநாட்டின் பிற பகுதிகளில் இதே காலத்தில் நில அளவை குறிப்பிட குறுக்கம் என்ற சொல் வழக்கில் இருந்தது. குறுக்கம் என்பது இன்றைய நில அளவையில் தொண்ணூறு செண்டு அளவாகும். கள்ளர்சீமை சோழ மண்டலத்தின் தெற்குப்பகுதியில் அமைந்து இருந்ததினால் சோழ மண்டலத்தில் நில அளவையான "வேலி" "மா" ஆகிய அளவைகள் இந்தப் பகுதியிலும் தொடர்ந்து பயன்பாட்டில் இருந்து வந்திருகக வேண்டும் என கருதப்படுகிறது.

இந்தக்கோயிலில் நாட்டிய நங்கையர் ஊழியம் செய்து வந்ததையும் அவர்களுக்காக காணிகள் கொடுக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. இந்தக் கல்வெட்டின் 7வது வரியில் இரண்டு தாசி சொல் பயன்படுத்தப்பட்டதிலிருந்து தெரியவருகிறது.

---

*Pudukkottai Inscription (1928)

# இயல் 15

# சிவபுரிப்பட்டி கல்வெட்டு

திருப்பத்தூர் வட்டம் சிவபுரிப்பட்டி அருள்மிகு தான் தோன்றிஈசுவரர் திருக்கோவிலின் தென்சுவரில் கீழே இந்தக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இந்த கல்வெட்டு வாசகம் கீழே கொடுக்கப்பட்டு இருக்கிறது.

கல்வெட்டு*

1. "சுவஸ்தி ஸ்ரீ 1590 இதன் மேல் செல்லாநின்ற கீலக வருஷம் ஆவணி மாசத்து ஸ்ரீ மது கோ விசைய இரகுநாத திருமலை காத்த தேவர் அவர்கள் கேரளசிங்க வளநாட்டு வேள்குலராம நிலையான வீரபாண்டி.

2. ய நல்லூர் அம்பலத்தாடி சதுர்வேதி மங்கலத்து உடையார்

சிவபுரி
தான்தோன்றி ஈசுவரமுடைய நாயனார் ஆதிசண்டேசுவர தேவருக்கு . . . குடுத்த சாத்தனூருக்கு எல்லையாவது கீழ்பாரக் கெல்லை இன்னாயனார் தேவதானமான

3. சாத்தங்குடி மேலெல்லைக்கும் இந்த நாயனார் தேவதானம்.
சிறுத்த கண்மாய் நீர்க்கோருவைக்கும் கொண்ட செவ்வை
தெக்கு நோக்கி சிவகண்மான்யத்
தென்கடை வாய்க்காலுக்கும் வண்ணான்குண்டு செவ்வெக்கு
மேற்கும் தென்

4. னெல்லை வண்ணான் குண்டு நீர்ப்பிடிக்கும் கண்மாய் நீர்ப்பிடிக்கும்
வேலத்தூர் கண்மாய்க்கும் வடக்குமெல்லை இன்னாயனார்
தேவதானமாக மடையனேம்பல் கரைக்கும்
தச்சன் குளக்கரைக்கும் இதற்குள் கண்மாய் மேல்கண்ட

5. க் கொம்பு பாறைக்கும் கோட்டை வேங்கைப்பட்டிப் புரவுக்
கல்லுக் கிழக்கு வடபாறக் கெல்லை இன்னாயனார்
மடப்புரம் காப்புரை வயலுக்கு . . . . கல்லுக்கும்

குமரன்வயல்
புரவுக்கும் உறப்பணிப் பாறைக்கும் இன்னாயனார் தேவதானம்

6. கண்ணமங்கல வயல்ப்பரப்பு மடத்துப் பொட்டலுக்கும் சூலக் கல்லுக்கு தெக்கும்
ஆக இசைஞ்ச பெருநாள் எல்லைக்குள்பட்ட நத்தமும்
பரப்பும் குளமும் கீழ் நோக்கிய கிணறும் மேல் நோக்கிய மரமும்
யெப்பேர்ப்பட்ட . . . . .

7. யுமிறுப்பதாக கல்லிலும் செம்பிலும் வெட்டிக்
கொடுத்தோம் கல்லும் காவேரி புல்லும் பூமி
உள்ளவரைக்கும் ஆண்டு அனுபவித்துக்
கொள்வாராகவும் இந்த தற்மத்துக்கு யாதாமொருத்தர்

8. குதம் பண்ணினவர்கள் . . . . . . . .
பசுவைக் கொன்ற தோஷத்திலே போவாராகவும்"

இந்தக் கல்வெட்டினைத் திருமலை ரெகுநாத சேதுபதி மன்னர் கீலக ஆண்டு ஆவணி மாதம் 28ம் தேதி சிவபுரி கிராமத்தில் உள்ள தான்றோன்றி ஈசுவரர் திருக்கோயிலில் வெட்டிவித்துள்ளார்.

இந்தக் கல்வெட்டு 28.8.1668ல் வெட்டுவித்தாகத் தெரிகிறது.

இந்தக் கல்வெட்டு அருள்மிகு தான் தோன்றி ஈசுவரர்

A.R.No. 46 of 1926

கோயிலின் இறைவரான தான் தோன்றி ஈசுவரருக்குச் சாத்தனூர் என்ற கிராமத்தைச் சேது மன்னர் நேரில் தானம் வழங்கியதைக் குறிக்கப்பட்டுள்ளது. இந்தத்திருக்கோயில் கேரளசிங்க வளநாட்டில் வேள்குல நிலையான வீரபாண்டிய நல்லூரின் அம்பலத்தாடிச் சதுர்வேதி மங்கலத்தில் சிவபுரி என்னும் ஊரில் அமைந்திருப்பதாக விவரம் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. பாண்டியர் காலத்தில் நிலப்புரப்பு, கூற்றம், வளநாடு, நாடு, ஊர் என்ற பிரிவுகளாக அமைக்கப்பட்டு இருந்தது. அதனைச் சுட்டும் வண்ணம் இந்தச் சிவபுரி கிராமம் கேரளசிங்க வளநாட்டில் அமைந்து இருப்பதாகக் குறிப்பிடப்பட்டு இருப்பதில் இருந்து கேரளாந்தகன் எனப் புகழப்பட்ட பிற்காலப் பாண்டியனான மாறவர்மன் குலசேகர பாண்டியன் என்பவரது பெயரால் இந்த வளநாடு பெயர் சூட்டப்பட்டிருந்தது. இன்றைய சிவகங்கை மாவட்டத்தின் காரைக்குடி வட்டத்தின் வடபகுதியையும் திருப்பத்தூர் வட்டத்தின் முழுப்பகுதியையும் கொண்டதாக இந்த வளநாடு இருந்து வந்தது. மேலும் இந்த ஊர் சிவப்பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட அம்பலத்தாடி சதுர்வேதி மங்கலம் ஒன்றின் ஒரு பகுதியாகவும் வேள்குல ராமநிலை என வழங்கப்பட்ட வீரபாண்டிய நல்லூரின் பிறிதொரு பகுதியாகவும் அமைந்திருந்தது. ஆனால் நாளடைவில் இந்த சிவபுரம் என்ற கிராமம் பெருக்கமடைந்து இன்று சிவபுரி, கீழச்சேவல்பட்டி, விராமதி என்ற மூன்று ஊர்களாக மாறியுள்ளன. இது முந்தைய சேதுநாட்டின் வடபகுதியாகவும் திருமலை ரெகுநாத சேதுபதிக்கு முன்னர் வரை இருந்தது.

மற்றும் இந்தக் கல்வெட்டில் தானமாக வழங்கப்பட்ட சாத்தனூரின் பெருநான்கு எல்லைகள் மிகத் தெளிவாக விவரிக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. சாத்தன் என்பது இந்துச் சமயப்படி சாஸ்தா என்றும், ஐய்யனார் என்றும் அழைக்கப்படும் காவல் தெய்வத்தின் பெயராகும். மேலும் பாண்டிய நாட்டில் கி.பி.7 ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் சமண சமயம் வலுவடைந்த நிலையில் சமணர்களது தலைவரும், தீர்த்தங்கரர்களும் சாத்தன் என்றே வழங்கப்பட்டு வந்தனர். அவர்களது பள்ளிகள் சாத்தன் பள்ளிகள்

என்றும் குடியிருப்புகளும் சாத்தனூர், சாத்தனேந்தல், சாத்தமங்கலம் என்றும் வழங்கப்பட்டன. இதனால் தென்னாட்டில் குறிப்பாகப் பாண்டிய நாட்டில் பல பகுதிகளில் சாத்தனூர் என்ற பெயரில் பல ஊர்கள் உள்ளன. இந்தக் காரணத்தினால் என்னவோ இந்தக் கல்வெட்டில் குறிப்பிடப்பெறும் சாத்தனூருக்கு தெளிவான நான்கு எல்லைகள் கொடுக்கப்பட்டு உள்ளன.

இந்த நான்கு எல்லைகள் ஆவண

1. <u>கீழ்பாற்க்கெல்லையாவது : -</u>

இந்தக் கோயிலுக்குத் தேவதானமாக வழங்கப்பட்ட சாத்தன்குடி மேலெல்லைக்கும், சித்த நாயனார் தேவதானம் சிறுத்த கண்மாய் நீர்க்கோருவைத் தெற்கு நோக்கி சிறுக் கண்மாய் தென்கடை வாய்க்காலுக்கும், வண்ணான் குண்டுக்கும் மேற்கு.

2. <u>தென்னெல்லை :-</u>

வண்ணான்குண்டு பரப்புக்கும், காஞ்சிரங் குண்டு கண்மாய் நீர்ப்பிடிக்கும் வேலத்தூர் கண்மாய்க்கும் வடக்கு.

3. <u>மேற்கெல்கை :-</u>

இந்த கோவிலுக்குச் சொந்தமான படையனேம்பல் கரைக்கும், தச்சன் குளக் கரைக்கும், தொக்குளிக் கண்மாய் மேல்நடைக் கொம்பு பாறைக்குக் கோட்டை வேங்கைப்பட்டிப் புரவுக் கல்லுக்கும் கிழக்கு.

4. <u>வடபாற் கெல்லை :-</u>

இந்தக் கோயிலுக்குச் சொந்தமான மடப்புரம் காப்புரை வயலுக்கு ..... .கல்லுக்கும் குமரன் வயல் புரவுக்கும் உறப்பணிப் பாறைக்கும் அண்ணமங்கல வயல்ப்புரவும் மடத்துப் பொட்டல்கல்லுக்கும்,

தெற்கு ஆக இசைந்த பெருங் நாங்கெல்லைக்குட்பட்ட நத்தமும் உட்பட்ட நிலம்.

இந்த எல்லைக் குறிப்புகளிலிருந்து சேதுபதிச் சீமையின் நிலம், நீர் சம்பந்தப்பட்ட பல வட்டாரச் சொற்கள் வழக்கில் இருந்ததைக் காணமுடிகிறது. குறிப்பாகக் கண்மாயின் தொடர்ச்சி எனப் பொருள்படும் நீர்க்கோவை, வாய்க்கால் நீரினைக் கண்மாயிலிருந்து வயலுக்கு நீரை எடுத்துச் செல்லும் கால்வாய்க்கால் எனவும், சிறிய நீர்த்தேக்கம் குண்டு எனவும், சிறிய நீர்த்தேக்கம் குளப் பரப்பு எனவும், தேங்கியுள்ள நீரின் அதிக பட்சமான பரப்பினைக் குறிப்பது நீர்ப்பிடி எனவும் கண்மாய்க் கரையின் கடைசிப் பகுதி கடைக்கொம்பு எனவும், ஊரின் எல்லையைக் குறிக்கும் பகுதி புரவு எனவும் இதனை அறுதியிட்டுக் குறிப்பிடுவதற்காக நாட்டப்பட்ட எல்லைக்கல் புரவுக்கல் எனவும் மடங்களுக்கு மன்னர்கள் வழங்கிய நிலக்கொடை மடப்புரம் எனவும், ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குச் செல்வதற்காக இருவேறு நிலங்களுக்கு இடைப்பட்ட வழி வழிப்பாதை எனவும் பெரும்பாலும், நடந்து செல்வதற்கென்றே பயன்பட்ட பகுதி ஒற்றையடிப் பாதை எனவும் வழங்கப்பட்டு வந்தன. விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படாமல் பொதுக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட நிலப்பகுதி பொட்டல் எனவும், மக்கள் கூடி வாழும் குடியிருப்பு பகுதி நத்தம் எனவும், வழங்கப்பட்டு வந்தன. தேவதானம் என்பது கோயில்களுக்குத் தானமாக வழங்கப்பட்ட நிலக்கொடை ஆகும்.

இந்தக் கல்வெட்டில் ஓம்படைக்கிளவியாக இந்த தர்மத்திற்கு விகாதம் பண்ணியவர்கள்.

"கங்கைக் கரையிலே பசவைக் கொன்ற
பாவத்திலே போவாராக" என்று

குறிப்பிடப்படுவதிலிருந்து பசுவும், கங்கையும் இந்து

சமயத்தினரால் புனிதமாகக் கருதப்பட்டு வந்தது தெரிகிறது.

மேலும்இந்தக் கல்வெட்டில் கீழ்க்கண்ட ஊர்கள் குறிக்கப்பெற்றுள்ளன.

1. சாத்தங்குடி
2. விளத்தூர்
3. மடையனேம்பல்
4. தச்சன்குளம்
5. வேங்கைப்பட்டி
6. அண்ண மங்கலம்
7. வேள்குலராமன் நிலை
8. வீரபாண்டியநல்லூர்
9. அம்பலத்தாடி சதுர்வதி மங்கலம்
10. சிவபுரி
11. பாறைக்கோட்டை

<u>நீர்நிலைகளின் பெயர்</u>

1. சிறுத்த கண்மாய்
2. வண்ணான் குண்டு
3. தச்சன்குளம்
4. மடையனேந்தல்

<u>வயல்களின் பெயர்கள்</u>

1. காப்புரை
2. குமரன் வயல்
3. கண்ணமங்கல வயல்

# இயல் 16

# ஆலம்பட்டிக் கல்வெட்டு

இந்தக் கல்வெட்டும் திருமலை ரெகுநாத சேதுபதி மன்னரால் மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் சொக்கலிங்கபுரம் அருகேயுள்ள ஆலம்பட்டி கிராமத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் 15.11.1668 ஆகும்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் சிங்கம்புணரியில் அமைந்திருப்பது சேவுகப் பெருமாள் ஐயனார் ஆலயம். இந்த ஐயனார் இந்த வட்டாரத்திலே மிகவும் சக்தி வாய்ந்த தெய்வமாக இன்றும் கருதப்பட்டு வருகிறார். இந்த ஆலயத்தின் பயன்பாட்டிற்காக சேதுபதி மன்னர் ஆலம்பட்டி கிராமத்தை முழுமையாக தானம் வழங்கி இருப்பதை இந்தக் கல்வெட்டு தெரிவிக்கின்றது. இன்றைய நிர்வாக அமைப்பில் இந்த ஊர் மதுரை மாவட்டத்தில் அமைந்திருந்தாலும், திருமலை ரெகுநாத சேதுபதி காலத்தில் சேதுபதி சீமையின்

வடபகுதியாக இருந்தது என்பதையும் இந்தக் கல்வெட்டு உறதிப்படுத்துகின்றது.

மேலும் இந்த மன்னர் கமுதியில் உள்ள வழிவிட்ட ஐயனார் சுவாமிக்கும் இத்தகைய நிலமான்யம் அளித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தக் கல்வெட்டு வாசகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது*

1. "சுவஸ்திஸ்ரீ
2. மன் சகாத்த
3. ம் 1590
4. இதன மேல்
5. ச் செல்லாநி
6. ன்ற சவுமிய
7. நாமவச்சிரத்து
8. 15உ சோம
9. வாரமுந் திரிதியை
10. பூராடம் சுப
11. யோக சுபதி
12. னம் பெற்ற னா
13. ளில் ஸ்ரீ மது தி
14. ருமலைச் சேதுப

15. தி காத்த தேவ
16. ர் அவர்கள் கூ
17. றி சாத்தா சிங்கண் புணரிச்
18. சேவுகப் பெருமா
20. ள் சுவாமிக்கு தாம்
21.
22. ஆலம்பட்டு
23. சூள்ந்த புரவு
24. சந்திராதித்த
25. வரைக்கும்
26. சறுவமானி
27. யமாக கட்ட
28. ளை விட்டோ
29. ன் இந்த தன்ம
30. த்துக்கு யாதாம்
31. ஒருவர்
32. விகாதம் பண்
33. ணிணவர்க
34. ள் கெங்கை

35. கரையில்

36. காராம் பசுவை

37. வக் கொன்


38. ற தோசத்தி லே

39. ல போவானாகவு

40. ம் இது அன்

41. யிலே . . . . . .

42. ா வுடப் பிறந்” . . . . . .



* புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டு

# இயல் 17

# கண்ணங்காரக்குடி சாஸ்தா கோயில் கல்வெட்டு

இந்தக் கல்வெட்டும் புதுக்கோட்டை தர்பார் கல்வெட்டு தொகுதியில் காணப்படுகிறது. இந்தக் கல்வெட்டினை வெட்டுவித்தவர் மன்னர் திருமலை ரெகுநாத சேதுபதி ஆவார். இந்தக் கல்வெட்டின் காலம் கி.பி.1669. இந்தக் கல்வெட்டு கண்ணங்காரக்குடியில் உள்ள சாஸ்தா என்று அழைக்கப்படும் காவல் தெய்வத்திற்கு அந்த ஊரில் அமைந்துள்ள நஞ்சை புஞ்சை நிலங்களைத் தானமாக வழங்கியதைத் தெரிவிக்கின்றது. சாஸ்தா என்பது சாத்தன் என்ற தமிழ்சொல்லின் வடமொழியாகும். கல்வெட்டு சிதைந்து விட்டதால் தானம் வழங்கப்பட்ட நஞ்சை புஞ்சை நிலங்களும், அவைகளுக்கான பெரும் நான்கு எல்லைகளும் அறியத்தக்கதாக இல்லை.

இந்த சேதுபதி மன்னரது

அறக்கொடைகளைப் பற்றிய செய்திகளை அறியும்பொழுது இந்த மன்னர் தமது அறக்கொடைக்கு உரிய கோவில் அல்லது தெய்வம் சிறப்பானது அல்லது சிறியது என்ற மனப்பான்மை இல்லாமல் எல்லாத் தெய்வங்களுக்கும் ஒரே மாதிரியாக அறக்கொடை வழங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.


செம்பி நாட்டு மறவர் பிரிவைச் சேர்ந்த சேதுபதி மன்னர்கள் மிகவும் வைதீகமான முறையில் பெரிய தெய்வங்களைத் தான் வணங்கி வழிபட்டு வந்தனர் என்ற சில நூலாசிரியர்களது கருத்து பொருத்தமானது இல்லை என்பதை இந்த மன்னரது இத்தகைய கொடைகள் புலப்படுத்துகின்றன.

மேற்படி கண்ணங்காரக்குடி, சாஸ்தா கோவில் எதிரில் நடப்பட்டிருக்கும் ஓர் கல்லிலுள்ள சாஸநம்.

## கல்வெட்டு வாசகம்*

1. "சகாத்தம்
2. 1591
3. இதன்மேல்செ
4. ல்லாநின்
5. ற ராஷ்சத ஷ வை
6. காசிமீ 5உ ஸ்ரீ
7. மது திருமலை
8. சேதுபதி கா -
9. த்த தேவரவ -

10. ர்கள் தர்மமா
11. க சாத்
12. தாவுக்கு கண் -
13. ணங்காரக்கு -
14. டி நஞ்சை புஞ்
15. சையுள்பட சே
16. ந்த ணாங்கே
17. ல்லையும்
18. குடிபடையு
19. ம் ஊர்
20. ....” (இந்தக் கல்வெட்டு முற்றுப் பெறவில்லை)



* Pudukkottai inscriptions.

# இயல் 18

# திருமெய்யம் கல்வெட்டு

இன்றைய புதுக்கோட்டை மாவட்டத்தின் மூன்று வட்டங்களில் ஒன்றாக திருமெய்யம் என்ற ஊர் அமைந்துள்ளது. காரைக்குடி திருச்சி நெடுஞ்சாலையின் வடக்கே 20வது கீ.மீ. அமைந்துள்ள இந்த ஊரின் மத்தியில் அமைந்துள்ள சுமார் 120 அடி உயர குன்றினைக் கொண்டதாக உள்ளது. இந்தக் குன்றின் தென் பகுதியில் அமைந்துள்ளதுதான் லெட்சுமி நாராயணர் ஆலயம் ஆகும். இந்தக் கோயில் கி.பி.8 ஆம் நூற்றாண்டில் பல்லவர்களால் அமைக்கப்பட்ட குடவரைக் கோயில் ஆகும். ஏறத்தாழ தொண்டை மண்டலத்திலுள்ள மாமல்லபுரத்தில் உள்ள குடவரைக் கோயிலை ஒத்ததாக காணப்படுகிறது. இங்கு கோயில் கொண்டுள்ள பெருமாள் அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். திருமங்கை ஆழ்வார் போன்ற வைணவப் பெரியார்கள் இந்தக் கோயிலுக்கு வந்து மங்கலாசானம் என்ற பதிகங்களைப் பாடியிருப்பதால் இந்தத் தலம் வைணவர்களது 108 திருப்பதிகளில் ஒன்றாக

கருதப்படுகிறது.

இந்தக் குன்றின் மேல்ப் பகுதியிலும் பக்கவாட்டிலும் கி.பி.12ஆம் நூற்றாண்டில் சேது மன்னர்கள் அரண்களை அமைத்ததாக புதுக்கோட்டை தர்பார் ஆவணம் ஒன்றில் காணப்படுகிறது[1] இந்த ஊரின் மேற்கு, வடக்கு, கிழக்கு சுவர்களை இராமநாதபுரம் கிழவன் ரெகுநாத சேதுபதி அமைத்தார் என்ற செய்தி இராமநாதபுரம் சமஸ்தான மேனுவலில் காணப்படுகிறது.

இந்தக் கோயிலின் அன்றாட பூஜை முதலிய தெய்வீக பணிகளுக்கு இராம்நாதபுரம் திருமலை ரெகுநாத சேதுபதி நிலக்கொடை வழங்கியுள்ளதை இந்தக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இந்தக் கோயிலின் இறைவருக்கு "அழகிய மெய்யர்" என்ற அழகுப் பெயர் இருந்ததாக இந்தக் கல்வெட்டின் மூலம் அறியப்படுகின்றது. மேலும் இந்தக் கல்வெட்டில் சேதுபதி மன்னரது பெயர் நரேந்திரன் (மனிதருள் சிறந்தவர்) என்றும் தளவாய் (தளபதி) என்றும் அடைமொழிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கல்வெட்டினை சேது மன்னரது ஆணைப்படி மானாமதுரை நகரைச் சேர்ந்த சோலையப்பபிள்ளை மகன் கங்கையாடி என்பார் வெட்டுவித்துள்ளார்.

இந்தக் கல்வெட்டின் படி அழகிய மெய்யர் என்ற பெருமாளுக்கு உதய கால பூஜை என்ற அவசரத்திற்கு கோட்டையூர்ப் புரவில் நிலங்கள் தானமாக வழங்கப்பட்டுள்ளன. ஏற்கனவே பிராமணர்களுக்கு அகரப் பற்றாக வழங்கப்பட்ட இந்த நிலங்களை அவர்கள் பயன்படுத்தாமல் காடாகவும், தரிசாகவும், அநாதியாகவும் இருந்தன. அவைகளை கிரைய சர்தனம் பெற்ற வேளாளர்கள் பலர் அங்கு சுவந்திரங்களை (சலுகைகளை) உண்டாக்கி அந்தப் பகுதிக்கு ரெகுநாதபுரம் என்ற புதிய பெயரிட்டு வழங்கி வந்தனர். ரெகுநாதன் என்ற சொல்லுக்கு ராமனது தலைவன் இராமநாதன் என்று பொருள். சேது மன்னர்கள் இராமேஸ்வரம் இராமநாத சுவாமியின் தொண்டருக்குத் தொண்டராக ஊழியம் செய்து வந்த காரணத்தினால்

1. Pudukottai Dharbar document R.Dis No : 9/1882
- quoted by Prof. Viswanathan his M.Phil thesis (1974)
(The Fort town of Thiru Mayam)

ரெகுநாத என்ற சிறப்புச் சொல் திருமலை ரகுநாத சேதுபதி காலம் முதல் சேது மன்னர்கள் அனைவருக்கும் அடைமொழியாக வழங்கப்பட்டு வந்துள்ளது. சேது மன்னரை நினைவூட்டும் வகையில் ரகுநாதபுரம் என்ற பெயர் வழங்கப்பட்டு வருகிறது. அவைகளில் ஒன்று இராமநாதபுரம் வட்டம் திருப்புல்லாணியை அடுத்த ரகுநாதபுரம் என்ற ஊரும், தேவகோட்டை வட்டம் கல்லுப்பட்டியை அடுத்த சேது ரகுநாத பட்டணம் என்ற ஊரும், கமுதி வட்டம் அபிராமத்தை அடுத்து ரெகுநாதபுரம் என்ற ஊரும் இருந்து வருகின்றன. அதன் தொடர்ச்சியாக இந்தக் கல்வெட்டில் கண்ட புதுவயல் ஆகிய பகுதிகளுக்கு ரகுநாதபுரம் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது பொருத்தமானதாகும். இந்தப் பகுதியில் திருமெய்யம் பெருமாளுக்கு ஒரு மா நிலம் ஒதுக்கீடு செய்தும், எஞ்சியவற்றை ஜோதிடம் வைத்தியம் ஆகிய சமுதாயப் பணிகளுக்காக பிராமணர்களுக்கும், மருத்துவர்களுக்கும் விட்டுக் கொடுத்து, சம்பந்தப்பட்ட பகுதிக்கு திருஆழிக்கல் நாட்டப்பட்டதை என்றும் தெரிவிக்கின்றது.

இந்தக் கல்வெட்டில் காணப்படும் காடு, அநாதி, தரிசு என்பன பயன்படுத்தப்படாததும், பிறருடைய ஆக்கிரமிப்பில் இல்லாதுதமான நிலங்களாகும். சுரூபம் என்பது வகைப்படுத்தப்படாத நிலத்தை குறிப்பதாகும். தேவதாயம் - திருக்கோயிலுக்கு விடப்படும் நிலம். பிரம்ம தாயம் - பிராமணர்களுக்கு வழங்கப்படும் நிலம்.

தமிழ் நாட்டில் சமஸ்கிருதம் தொடர்புடைய தெலுங்கு மொழியினைத் தாய்மொழியாகக் கொண்ட வடுகர்களது ஆதிக்கம் கி.பி.14ம் நூற்றாண்டு தொடக்கம் முதல் கி.பி.1736 வரை நீடித்ததால் திருக்கோயிலில் உள்ள இறைவன் இறைவியின் தமிழ்ப் பெயர்கள் அனைத்தும் தெலுங்கு அல்லது சமஸ்கிருதம் மொழிக்கு மாற்றப்பட்டன. அதன் விளைவுதான் அழகிய மெய்யர், சத்திய மூர்த்தி எனப் புதிய பெயர் பெற்றது. ஆடானை நாயக்கர் அன்பிற்கினியாள் என்ற திருவாடானை இறைவனது பெயர் ஆதிரத்தினேஸ்வரர்

ஸ்நேகவல்லி என மாறி இருப்பது காண்க.

வைணவ சம்பிராதாயத்தில் பெருமாள் மூன்று கோலங்களில் காட்சி அளிப்பதாக வைணவ நூல்கள் குறிப்பிடுகின்றன. நிற்றல், இருத்தல், கிடத்தல் என்பன அந்த மூன்று நிலைகளாகும். இந்த நிலைகளில் ஏதாவது ஒன்றினை அலங்கரித்து அழகுபடுத்திச் செய்யப்படும் பூஜை அவசரம் என்று குறிப்பிடப்படுகிறது. ரகுநாத சேதுபதியின் பெயரால் ஏற்படுத்தப்பட்ட இந்த பூஜை ரகுநாத அவசரம் என்று குறிப்பிடப்படுகிறது.

**மரவடை - பலன் தரும் மரங்களுக்கு விதிக்கப்படும் தீர்வு**

**குடிவாரம் - நிலத்தை உழுதுபயிரிட்ட குடிமகனுக்கு விளைச்சலில் ஒதுக்கீடு செய்யப்படும் தானிய அளவு**

**மேல்வாரம் - விளைச்சலிலிருந்து நிலத்தின் சொந்தக்காரருக்குச் சேர வேண்டிய தானிய பங்கு**

**பரதேசி முத்திரை - கோயில் காரியங்களைக் கவனித்து வருகின்ற பரதேசிக்குரிய அடையாளம்**

பரதேசி என்ற வடமொழிச் சொல்லுக்கு "துறவி" என்பது தமிழில் பொருளாகும்.

இந்தக் கல்வெட்டிலிருந்து அப்பொழுது திருமெய்யம் பகுதியில் பிராமணர், வேளாளர் என்ற சாதிப் பிரிவினரும், பல சுவந்திரங்களை அனுபவித்து வந்த கணக்கர் மற்றும் பலரும் கணிசமான அளவில் இருந்தனர் என்பது தெரியவருகிறது. மேலும் இந்தக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள மண்டபம் சுந்தரபாண்டியன் குறடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சுந்தர பாண்டிய மன்னன் கி.பி.13ஆம் நூற்றாண்டில் மிகச் சிறப்பாக விளங்கிய பேரரசன்

மாறவர்மன் சுந்தரபாண்டிய மன்னன் ஆவான். அவனது ஆட்சிக் காலத்தில் பல திருக்கோயில்களில் முழுமையும்; கல்லினால் அமைக்கப்பட்ட பக்கவாட்டு சட்டங்களும், கொடுங்கைகளும், நுழைவுப் பகுதியின் இரு புறங்களிலும் படிக்கட்டுகளில் சிங்கம், யாளி போன்ற உருவங்களை அமைத்த இந்த மன்னரது கட்டுமானப் பணியைக் கொண்டு இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.*

**கல்வெட்டின் வாசகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.***

1. **"ஸ்வஸ்தி ஸ்ரீ சகாத்தம் 1591 இதின் மேல்ச் செல்லாநின்ற சவுமியா தை மீ 1 உ ஸ்ரீ மது திருமலைச் சேதுபதி காத்த ரகுநாத நரேந்திரனுக்குப் புண்ணியமாகாவா நரவீரன் மதுரை இலிருக்கும் சோலையப்ப பிள்ளை மகன் கங்கையாடியா பிள்ளை காநாட்டுத் திருமெய்யம் அழகிய மெய்யருக்கு உதய காலத்தில் ரகுநாத அவசரத்துக்கு கிராமங் கொண்டு சேர்த்தபடி உ இன்னாட்டுக் கோட்டையூர்ப் புரவில் அநாதி தரிசாய் காடுமா**

2. **க சுருபமாகாமல் அகரப்பத்தாக யி....... புதுவயல் வலையன் வயல்................ புரவுள் பட ............. மகாசனங்கள் கையில் இருந்துச் சறு...... க்கிறய சாதகம் பண்ணிக் கொண்டு அது வெள்ளாழர் கணக்கர்கா ........ர் கோட்டையூர் வெள்ளாழர் பல சுவந்திர காரர் காராண்மைக்கும் கிறய சாதகம் பண்ணிக் கொண்டு வளம் பண்ணி அந்தக் கிராமத்துக்கு**


ரகுநாத புரமென்று பேருமிட்டு திருவாழிக் கல்லும் போட்டு.

3. தீது அதில் கோட்டையூர் பெருமா . . . . . ளுக்கு தெய்வதாயம் ஒரு மா நிலமும் பிரம்மதாயமாக ஜோதிடம் வயித்தியம் இவைகளுக்கு முதலான பிரம்மதாயமுண்டாதுமாகம. . . . . கோட்டையூர்ப் புறவில் ரெகுநாதபுரம் புதுவயலுக்கு . . . . . . . . திருவாழிக் கல்லுக்குள் பட நஞ்சை புஞ்சை மாவடை மிரவடை நிதி நிட்சேப சலபாஉஷாணமுள்பட சகல . . . . . . . . .

4. ம்பரமாக குடிவாரம் போக மேல்வாரத்துக்கும் கடமைக்கும் பரதேசி முத்திரையாக ஒருவரைக் கட்டளையிட்டு திருமெய்யம் திருப்பதி இல் அழகிய மெய்யருக்கு ரகுநாத அவசரம் நடத்திக் கொண்டு . . . . . மாகவும் உ இந்த தன்மத்துக்கு யாதாமொருவர் . . . . . . நாட்டார் காநாட்டு வெள்ளாழர் மணிய காரர் யாதாமொருவர் விகாதம் பண்ணினபேர் கெங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ன . . . . . .

5. தோஷத்திலும் மாதா பிதா குரு சநங்களைக் கொன்ன தோஷத்திலும் போகக் கடவாராகவும் உ யாதாமொருவராகிலும் அகிதம் பண்ணித் தடை வந்தபோது இத்திருப்பதி மெய்யர் கோவில் . . .

தலான சமயத்துக்குள் பட்ட பேரும் கோட்டையூர் ஊரவரும் கூடி தடைதீத்துக் குடுக்கக் கடவாராகவும் அல்லது அவர்களும் முன்சொன்ன தோஷத்திலேதாநே போகக் கடவாராகவும் உ ஸ்ரீ ராம . . . . . ."



* Pudukkottai State inscriptions

# இயல் 19

# பெருங்கரை சுயம்பு சொக்கநாதர் கல்வெட்டு

மதுரை தனுக்கோடி நெடுஞ்சாலையில் பரமக்குடிக்கும், பார்த்திபனூருக்கும், இடையில் அமைந்து இருப்பது பெருங்கரை என்ற கிராமமாகும். இந்த ஊரின் தென்பகுதியில் நெடுஞ்சாலையை ஒட்டி எழுப்பப்பட்டுள்ள கண்மாய்க் கரையில் உள்ளதுதான் சொக்கநாதர் ஆலயம். அந்தக் கண்மாய்க் கரையினை ஒட்டி அந்த ஊருக்கு இட ஆகு பெயராகப் பெருங்கரை என்ற பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும்.

இந்த ஆலயத்தின் கருவறையில் மன்னர் திருமலை ரெகுநாத சேதுபதியினால் 4.11.1674ல் இந்தக் கல்வெட்டு வெட்டுவிக்கப்பட்டுள்ளது. இன்றைய இராமநாதபுரம் மாவட்டத்தின் பரமக்குடி வட்டத்தில் இந்த ஊர் அமைந்திருக்கிறது. ஆனால் ஆலயம் நிர்மானிக்கப்பட்ட பொழுது இந்தப் பகுதி இராஜ ராஜ வளநாட்டில்

இருந்ததாகக் கல்வெட்டு வாசகம் தெரிவிக்கிறது.

இந்த ஊரினைச் சேர்ந்த ஆன்மீகச் செல்வரான தெய்வ கன்னியாப்பிள்ளை மகன் தெய்வராயப் பிள்ளையும், அவரது மனைவி வீராயி அம்மாளும் ஏற்கனவே சுயம்பாக இருந்த சொக்கநாதருக்கு ஒரு ஆலயமும், அம்பாளுக்கு மண்டபமும், மடமும் நந்தவனமும் அமைப்பதற்காக அந்தக் கோயிலின் பரதேசி முத்திரையான வெள்ளையத் தேவரிடம பொன்னும், பொருளும் கொடுத்தனர். அதனைக் கொண்டு அவர் சொக்கநாதருக்கு கல்லினால் ஆலயமும், அம்பாளுக்கு செங்கலினால் ஆலயமும் கட்டி மடமும் நந்தவனமும் ஏற்படுத்தினார். நயினார் கோவிலைச் சேர்ந்த நம்பிமார்களைக் கொண்டு குடமுழுக்கு நடத்திக் கோயிலுக்கு மூன்று கால பூஜையும், அன்னதானமும் நடத்திவர ஏற்பாடு செய்யப்பட்டது. திருமலை ரெகுநாத சேதுபதி, இந்தக் கோயிலில் ஒரு சன்னதியை ஏற்படுத்திக் கொடுத்தார் என்பது இந்தக் கல்வெட்டிலிருந்து தெரியவருகிறது.

சேதுபதி மன்னர்கள் திருக்கோயில், அன்ன சத்திரம், திருமடம் ஆகியவைகளை அவர்களே பல ஊர்களில் ஏற்படுத்தியதுடன் அவர்களது குடிமக்கள் செய்த இத்தகைய பொது நலப் பணிகளுக்கு உறுதுணையாக இருந்து பல வழிகளிலும் உதவி வந்துள்ளனர் என்பதை அவர்களது வரலாற்றில் இருந்து அறிய முடிகிறது. இந்த மன்னர் அவரது ஆட்சிக் காலத்தில் திருப்புல்லாணி ஜெகநாதப் பெருமாள் ஆலயத்தை முழுமையாக அமைத்துக் கொடுத்ததுடன், பார்த்திபனூரை அடுத்த பிடாரிசேரி அன்ன சத்திரத்தைத் தமது பொறுப்பில் எடுத்துக்கொண்டு, அந்த சத்திரத்திற்கு பராமரிப்பதற்கு சிறிய ஊர்களையும் தானமாக வழங்கியுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதனைப்போன்றே இராமேஸ்வரத்தில் உள்ள நாவிதர்களுக்குக் கொண்டேஸ்வரர், திருமடத்தையும், அமைத்துக் கொடுத்தார் என்பதையும் இராமநாதபுரம் சமஸ்தான ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் சில வட்டார வழக்குகளுக்கான விளக்கம் :-

| | | |
|---|---|---|
| பண்டாரம் | - | வைப்பு நிதி |
| பரதேசி முத்திரை | - | கோயில் கையிங்கரியங்களை கவனிக்கும் அடையாளம் பெற்ற துறவி. |
| நம்பி மார்கள் | - | வைணவ கோயில்களில் பணியாற்றும் அந்தணர்களுக்கு உரிய இந்தச் சொல் பிறகு சிவாலயங்களிலும் ஊழியம் செய்கின்ற அந்தணர்களை குறிப்பதாயிற்று. |
| நம்பி | - | ஆண்களில் சிறந்தவர் |
| சம்பிரோச்சனம் | - | குடமுழுக்கு |

இந்தக் கல்வெட்டு வாசகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது*

01. "ஸ்வஸ்திஸ்ரீ
02. சகாத்தம்
03. 1597 மே
04. ல்ச் செல்லா
05. நின்ற ஆனந்
06. த ஹ கார்த்தி

74. பழமானேரி அமில்தாரரது அறிக்கை 06.07.1801 / 12.07.1801

07. கை மீ 4 தீ

08. தென்கரை ரா

09. ச வளநாட

10. ான பெருங்க

11. ரைச் சுயம்பு

12. சொக்கனாத

13. ர் மீனாட்சியம்

14. மைக்கு இவ்வூ

15. ரில் தெய்வக

16. ன்னியா பிள்ளை

17. தெய்வராய பிள்

18. ளை அவர் பெண்

19. சாதி வீராயி யம்

20. மையும் தங்களுக்கு

21. ப் புண்ணியமா

22. க்குற திரவியம்

23. பரதேசி முத்திை

24. ர வெள்ளைஆ தேவ

25. ர் குடுத்த பண்ட

26. ாரமதை சிறுவா
27. ..................
28. ற்றுக்கும் கட்டளை
29. யிட்டுச் செல்ல பெ
30. ான்னும் கோ
31. யில் கட்டிக் குடுத்து
32. அந்தப்படிக்கு அவ
33. ர் சுவாமி கோயி
34. ல் கல்லினாலு
35. ம் அம்மன் கோ
36. யில் மடம்
37. செங்கலினாலு
38. ம் அன்னதான
39. மடம் நந்தவனம்
40. முதலியவைகளை
41. அமைத்து
42. நயினா
43. ர் கோயில் முன் த
44. லம் நம்பி மார்

45. ரக் கொண்டு சம்

46. பிரோச்சனை

47. பண்ணி சோடச

48. உபசாரம் நித்திய

49. திறிகால பூசை

50. அன்னதானம்

51. உண்டாக்கி இரண்

52. யச் சேதுபதி

53. ரகுநாத தேவர் முன்

54. உள்ளூரில் சன்னதி . . . . . ."

வரி 55 முதல் இந்தக் கல்வெட்டை முழுமையாக படிப்பதற்கு இயலாத இதன் இறுதிப்பகுதி உள்ளது.



* புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு

# இயல் 20

# ராங்கியம் மறவணி ஏந்தல் கல்வெட்டு

இந்தக் கல்வெட்டு புதுக்கோட்டை மாவட்டம் திருமெய்யம் வட்டம் ராங்கியம் ஊரின் குளக்கரையில் நாட்டப்பட்டுள்ள கல் ஒன்றில் கீழ்க்கண்ட பாடலாகக் காணப்படுகிறது. இதிலிருந்து ராங்கியம் கிராமத்தை அடுத்துள்ள மறவணி ஏந்தல் என்ற சிறு கண்மாயையும் அதன் விவசாய நிலங்களையும், திருமலை ரகுநாத சேதுபதி மன்னர் தில்லை நடராஜப் பெருமாளுக்கு தானமாக வழங்கிக் கல்போட்டுக் கொடுத்துள்ளார் (1645-1675) என்ற விவரம் தெரியவருகிறது.

திருமலை ரகுநாத சேதுபதியின் பெயரும் இந்தக் கல்வெட்டில் காணப்படவில்லை என்றாலும் "தென்னன் விஜயன் ரகுநாதன்" என்ற சொல் தொடரிலிருந்தும் திருமலை ரகுநாத சேதுபதி ஏற்கனவே வழங்கியுள்ள பல செப்பேட்டு வாசகங்களிலிருந்தும் இந்தச் சொற்றொடர்

திருமலை ரகுநாத சேதுபதியைத் தான் குறிப்பிடுகிறது என்பது உறுதியாகிறது.

முன்னாள் தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறை இயக்குநர் திரு. ஆர்.நாகசாமி அவர்கள் வரைந்துள்ள [1] கட்டுரை ஒன்றில் இந்த மறவணி ஏந்தல் கிராமம் வேறு ஏழு கிராமங்களுடன் சேர்த்து சேதுபதி மன்னர் மல்லை அழகிய சிற்றம்பல கவிராயர் என்ற புலவருக்குத் தானம் வழங்கினார் என்றும், அதனை அந்தப் புலவர் பின்னர் தில்லை நடராசப் பெருமாளுக்குத் தானமாக வழங்கிவிட்டார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

1. தென்னன் விசைய ரெகுநாதச் சேதுபதி
மன்னன் கனகசபை வாணருக்கு - நன்னிலமேல்
இந்துமதி யுள்ளளவு மேநடக்கக் கற்போட்டுத்
தந்தான் மறவணி ஏந்தல்.

2. பூதான மாக மறவணி யேந்தலைப் போதுமடை
மீதான அம்பல வாணர்தம் பூசை விளங்கச் செய்தோர்
ஏதாகி லுந்தடை வந்தாலும் . . . . திறல் வாழுங்குரு
மாதாபி தாப்பசுவை . . . . . .

புலவர் அழகிய சிற்றம்பலக் கவிராயர் திருமலை சேதுபதி மன்னரைப் பற்றிப் புகழ்ந்து தனசிங்கமாலை என்ற நூலைப் பாடியதற்குப் பரிசாக அவர் வாழ்ந்து வந்த மிதிலைப்பட்டி ஊரினைச் சேதுபதி மன்னரிடமிருந்து தானமாக பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.[2] இவரது வீட்டில் இருந்துதான் பின்னர் சீவகசிந்தாமணி போன்ற சங்க இலக்கிய ஏடுகளை டாக்டர் உ.வே. சுவாமி நாத ஐயர் அவர்கள் தேடி எடுத்தார் என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது.

---

1. Nagasamy R.Dr. - South Indian Studies - "Part II" - (1985) - Page
2. Inam Fair Register - Volume
* புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு

# இயல் 21

# திருக்கோட்டியூர் திருக்கோயில் கல்வெட்டு

சேது நாட்டை மிகச் சிறப்பான முறையில் ஆட்சி செய்து நாட்டின் பரப்பையும், புகழையும் அதிகரிக்கச் செய்த திருமலை ரெகுநாத சேதுபதி கி.பி.1678-ல் காலமானார். இவரது ஒரே மகனான ராஜசூர்யத்தேவர் சேது மன்னராக முடிதரித்துக் கொண்ட பொழுதிலும், அவரது ஆட்சி ஓராண்டு காலம் கூட நிறைவு பெறாமல் அவரது அகாலமரணத்தில் முடிவு பெற்றது. இதனால் இவரது சிறிய தந்தையான ரெகுநாத அதானத் தேவர் அடுத்து சேதுபதி மன்னராக தேர்வு செய்யப்பட்ட பொழுதும் அவரும் அகால மரணமுற்றார்.

இதனைத் தொடர்ந்து சேதுநாட்டின் மன்னர் யார் என்ற வினாவிற்கு உரிய விளக்கம் அளிக்க இயலாத குழப்பமான சூழ்நிலை தொடர்ந்தது. ஒரு வகையாக இராமநாதபுரம் அரண்மனையின் அரசியல்

முதியவர்கள் திருமலை ரெகுநாத சேதுபதியின் உறவுக்காரரான ரெகுநாத தேவர் என்ற கிழவனைச் சேதுநாட்டின் மன்னராக கி.பி.1678-ல் நியமனம் செய்தனர் என்றாலும், இவரது நியமனத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட பாளையக்காரர்களது குழப்பங்களை உறுதியுடன் சமாளித்த ரெகுநாத கிழவன் சேதுபதியின் ஆட்சி இயல்பான சமயப் பொறைக்கும் ஆன்மீக வளர்ச்சிக்கும் எடுத்துக்காட்டாக விளங்கியது. இந்த மன்னரது ஆட்சியில் சேதுநாட்டின் சிறுபான்மை இனத்தவரான இஸ்லாமியரும், வைணவர்களும், சமணர்களும், சேது மன்னரது ஊக்குவிப்புக்களுக்கு உரியவராக விளங்கினார்.

திருவாடானை வட்டம் சுந்தரபாண்டியன் பட்டினம் அருகே உள்ள சமணப் பள்ளிக்கு இந்த மன்னர் வழங்கிய பள்ளிச்சந்தம் என்ற அறக்கொடை பற்றிய செப்பேட்டுச் செய்தி உள்ளது. இதனைப் போன்றே இராமநாதபுரம் வட்டத்தில் நாரணமங்கலத்திலும், திருச்சுழி வட்டம் காரேந்தலிலும், கமுதி வட்டம் பொந்தாம்புளியிலும், முஸ்லீம் தொழுகைப் பள்ளிகள் இந்த மன்னரது நன்கொடை பெற்ற விவரங்களை நிலமான்யப் பதிவு கணக்கு தெரிவிக்கின்றது. வைணவர்களுக்கும், இந்த மன்னர் ஆதரவாக விளங்கினார் என்பதை அதே நிலமான்யப் பதிவு கணக்கு மூலம் தெரியவருகிறது.

சேதுநாட்டின் வடபகுதியில் சிவகெங்கைக்கும், திருப்பத்தூருக்கும் இடையில் அமைந்திருப்பது திருக்கோட்டியூர் என்ற தலமாகும். இங்கு மும்மூர்த்திகளான மகாவிஷ்ணு, சிவபெருமாள், பிரம்மா ஆகிய மூவரும் கூடி உலக நலன் பற்றி ஆலோசித்தனர் என்பது தலவரலாறு. இங்கு எழுந்தருளியுள்ள சௌமிய நாராயணப் பெருமாள் மீது பல ஆழ்வார்கள் மங்களாசாசனம் என்ற துதிப்பாடல்களை இயற்றி வழிபட்டுள்ளனர்.

இங்கிருந்த திருக்கோட்டியூர் நம்பி என்ற ஆச்சாரியரிடம் வைணவப் பெருந்தகையான ஸ்ரீ ராமானுஜர் உபதேசம் பெற்றார்

என்பது வரலாறு. இந்த திருக்கோயிலின் இறைவருக்கு ஆண்டுதோறும், மாசி மாதம் நடைபெறும் பாரிவேட்டைத் திருநாள், மண்டகப்படி, தண்ணீர்ப்பந்தல் ஆகிய சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு உதவும் பொருட்டு ரெகுநாத கிழவன் சேதுபதி மன்னர் சில காணிகளை அவரது முன்னவரான திருமலை ரெகுநாத சேதுபதி அவரது புதல்வரான ராஜசூர்ய தேவர் ஆகியோர் புண்ணியமாக நிலக்கொடைகள் வழங்கி இருப்பதை இந்தக் கல்வெட்டு தெரிவிக்கின்றது. இந்தக் கல்வெட்டின் காலம் கி.பி.1679 ஆகும்.

**இந்தக் கல்வெட்டு வாசகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.***

1. "ஸ்சுஸ்த்தி ஸ்ரீ
2. சகாத்தம் 1
3. 601 இதன்
4. மேற் செல்ல
5. ாநின்ற சித்தா
6. த்தி ஹ கார்த்தி
7. கை மீ 5 தி ஸ்ரீ
8. மது ரகுனா
9. தத் திருமலை
10. ச் சேதுபதி காத்
11. த தேவர் இராச
12. சூரிய தேவர
13. வர்கருக்குப்

14. புண்ணியமா
15. க சுவாமி சௌ
16. மியனாராயண
17. ப் பெருமாளுக்கு
18. பாரி வேட்டை
19. த் திருனாள் மண்
20. டபச் சிறப்புக்
21. கட்டளைக்கும்
22. தண்ணிர் பந்
23. தல் கட்டளை
24. . . . . . . . . . . .
25. . . . . . . . . . . . .
26. சாசக் கருங்காலி வ
27. யல் வளையின் வயல்
28. ந் சந்திராதித் வரை
29. யும் அனுபவித்து செ
30. காள்ளவும் இதற்கு அ
31. குதம் பண்ணினவ
32. ர் கெங்கைக் கரையி

33. லே காராம் பசுவை

34. யும் குருவையும் கொன்ற

35. பாவத்திலே

36. போகக் கடவராகவும்”

* புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு

# இயல் 22

# காட்டு பாவா சாகிப் பள்ளிவாசல் கல்வெட்டு

காட்டு பாவா சாகிபு பள்ளிவாசல் திருப்பத்தூர், திருமெய்யம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. அங்கு அடக்கம் பெற்றுள்ள புனித இறைநேசர் பாவா பக்குதின் என்பவரது அடக்கத்தைவிடத்தைக் குறிப்பதாகும். தமிழகத்தில் முஸ்லீம்கள் ஐந்துவேளை தொழுகை நடத்தும் இடம் மட்டும்தான் பள்ளிவாசல் என அழைக்கப்படுவதுண்டு. அதுபோலவே மனித புனிதர்களது அடக்கவிடங்கள் தர்ஹா என்ற பெயரில் மட்டும்தான் அழைக்கப்படும். இதற்கு மாற்றமாக தர்ஹாவிற்கு பதில் பள்ளிவாசல் எனக் குறிப்பிடப்பட்டு இருப்பது உலக வழக்காகும். கி.பி.1516ஆம் நூற்றாண்டுகளில் வடக்கே இருந்து தெற்கே வந்து சோழ மண்டலத்தில் இறை உணர்வையும், ஒருமைப்பாட்டு உணர்வையும், போதித்து வந்த இறை நேசர் நாகூர் ஆண்டகை எனப்படும் சாகுல் ஹமீது (வலி) (கி.பி.1404-1576)

அவர்களது வழியினரான பக்ருதீன் ஒரு சிறந்த மெய்ஞானியாக வாழ்ந்து வந்தார். இந்த தர்ஹா அமைந்துள்ள அந்தப் பகுதி கி.பி.15ஆம் நூற்றாண்டில் இந்தப் பகுதி மிகப் பெரிய காடாக இருந்ததால் அந்த ஞானியின் ஆன்மீக வாழ்க்கைக்கு அந்த இடம் ஏற்றதாக இருந்து வந்தது. ஒரு சமயம் புதுக்கோட்டையிலிருந்து இராமேஸ்வரம் தல யாத்திரையாகச் சென்ற சில பிராமணப் பெண்மணிகளை அங்குள்ள கள்ளர்கள் வழி மறித்து அவர்களது அணிமணிகளைக் கொள்ளையிட்ட பொழுது அங்கு தவம் செய்து கொண்டிருந்த ஞானி பகுருத்தின் அந்தக் கள்ளர்களுக்கு நல்லுரை கூறி அந்த அபலைப் பெண்களைத் துன்புறுத்தாமல் விட்டுவிடும் படி அறிவுறுத்தினார். அவரது குறுக்கீட்டை விரும்பாத கள்ளர்கள் அவரைக் கத்தியால் குத்திக் கொன்று விட்டனர்.

இதே நேரத்தில் அந்த ஞானியரது ஆன்ம பலத்தினால் அந்த கள்ளர்களது கண்பார்வை பறிபோய்விட்டது. தங்களது தவற்றினுக்காக அந்த ஞானி வழங்கிய தண்டனையாக பார்வை இழப்பினை நீக்க அவரிடம் கள்ளர்கள் மன்னிப்பு கோரினர். அவரும் அவர்களில் ஒருவருக்கு மட்டும் கண்பார்வை கிடைக்குமாறு செய்து அவன் அந்த ஏழு பெண்களையும் பத்திரமாகக் கொண்டுபோய் சேதுப்பாதையில் விட்டு விட்டு வருமாறும் அவர் திரும்பி வந்த பிறகே எஞ்சிய கள்ளர்களுக்கு பார்வை கிடைக்கும் எனச் சொல்லி அந்த ஞானி முக்தி அடைந்தார். அவ்விதம் பார்வையினைத் திரும்பப் பெற்ற கள்ளர்கள் அந்த ஞானியை நல்லடக்கம் செய்தனர் என்பது வரலாறு. அந்த ஞானியின் அடக்கவிடத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் கந்தூரி விழாவில் இன்றும் அந்த கள்ளர் வழியினர் பயபக்தியுடன் விழாவில் கலந்து கொள்வது காணத்தக்கதாக உள்ளது.

இத்தகைய மனித நேயமிக்க மகான் ஒருவரது அடக்கவிடம் என்பதற்காக கிழவன் ரெகுநாத சேதுபதி மன்னரது மகன் ரணசிங்கத் தேவர் அந்த தர்ஹாவின் பராமரிப்பு செலவிற்காக வழங்கிய நிலக்கொடையை இந்தக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

உத்தாரநாட்டு கல் வாசல் நாட்டு நல்லூர் புரவில் அமைந்த அடுக்குளமும், வயல்களும் மற்றும் காஞ்சவன்குளமும், அதனைச் சூழ்ந்த வயல்களும் இந்த அறக்கொடையில் சேர்க்கப்பட்டு இருப்பதாகத் தெரியவருகிறது. இந்த நிலப்பரப்பு ஏற்கனவே சேர்வைக்காரர் ஒருவருக்கு சீவிதமாக வழங்கப்பட்டிருந்தது என்ற செய்தியும் இந்தக் கல்வெட்டின் வழி அறியப்படுகிறது. தர்ஹா அமைந்த காட்டுப் பகுதியும், கானூர் என்று குறிக்கப்படுகிறது. உலக வழக்ககில் காட்டுப் பாவா பள்ளிவாசல் என்பது தான் பிரசித்தமாக உள்ளது. இந்த கல்வெட்டின் காலம் கி.பி.1696 எனக் கணிக்கப்படுகிறது.

இந்தக் கல்வெட்டை வெட்டுவிக்கச் செய்தவர் கிழவன் ரெகுநாத சேதுபதியின் ஒரே மகனான ரணசிங்கத் தேவர் ஆவார். இவர் திருப்புத்தூர் நாடு, சூரக்குடிநாடு, புறமலை நாடு, எழனிவாசல்நாடு, அதளையூர் நாடு, கல்வாசல் நாடு, பூங்குன்ற நாடு ஆகிய பகுதிகளின் ஆளுநராக இருந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது. அதனை உறுதிப்படுத்தும் வகையில் இன்றைய திருப்புத்தூரில் இருந்து மேற்கே 1 கல்தொலைவில் அமைந்த மதுரை நெடுஞ்சாலையில் உள்ள ரணசிங்கபுரம் என்ற சிற்றூர் இருப்பது இந்த ரணசிங்கத் தேவரை நினைவுபடுத்துவதாக உள்ளது. இவர் கி.பி.1702ல் மதுரை இராணிமங்கமாளினது படைகளை எதிர்த்து இராமநாதபுரம் கோட்டைக்கு மேற்கே நடந்த போரில் வீர மரணம் எய்தினார் என்றும் தெரியவருகிறது.


இந்தப் பள்ளிவாசலுக்கு புதுக்கோட்டை மன்னர் ரெகுநாத ராய தொண்டமான் இரண்டு ஊர்களை தானமாக வழங்கினார் என காட்டு பாபா சாகிபு அம்மானை தெரிவிக்கின்றது.

இந்தக் கல்வெட்டின் வாசகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.*

<u>கல்வெட்டு வாசகம்*</u>

1. "தாது ஹு
2. அற்பசி மீ 13 உ
3. சேதுபதி காத்த
4. ரெகுனாதத்தேவ
5. ர் குமாறன் ரணசி
6. ங்கத் தெவர் உ
7. த் தாரம் நாடு
8. சேருவை.......
9. லக்கி சேருவை கா-
10. றன் சீவிதம் நல் -
11. லூர் புரவில் அ -
12. டுக் குளமும் வ -
13. யலும் காஞ்ச -
14. வன் குளமும்
15. வயலும் இது
16. சூழ்ந்த புரவுங்
17. காட்டு பாவா பள்ளி
18. வாசல் தன்மத் -

19. துக்கு விட்டது
20. சந்தார (ய்) தி த் தவ-
21. ரைக்கும் நடக்க
22. கடவராகவும்
23. கல்வாசல் நாட்ட
24. ாருங் காணாட்டா
25. ரும் காணூர் பள்ளி
26. வாசல் காணி
27. தா்மத்தை
28. புத்திர பௌத்திரான்
29. வரைக்கும் அ-
30. னுபவிக்கவும் (11*)*



* Pudukkottai inscriptions

# இயல் 23

# இராமேஸ்வரம் திருக்கோயில் கல்வெட்டு

இந்தக் கல்வெட்டினை வெட்டுவித்தவர் முத்து விஜய ரெகுநாத சேதுபதி ஆவார். இந்த மன்னரின் இயற்பெயர் திருஉடையாத்தேவர் என்பதாகும். இவர் திருஉத்தரகோசமங்கை கதம்பத் தேவரது மகனாவார். ரெகுநாத கிழவன் சேதுபதி கி.பி.1710இல் காலமான போது இராமநாதபுரம் அரண்மனையைச் சார்ந்த மன்னரது உறவினர்கள் சேதுபதி பட்டத்துக்கு உரியவராக இவரைத் தேர்வு செய்தனர். இவர் கி.பி.1710-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற மகர் நோன்பு விழாவின்போது (விஜயதசமி விழா) பட்டம் சூடிக் கொண்டதால் இவரது பெயர் முத்து விஜய ரகுநாத சேதுபதி என வழங்கப்பட்டது.[1]

இந்தச் செய்தி தவறானது என்பதை காட்டுகின்ற கி.பி.1710லும்,

1. Raja Ram Rao. T. - Manual of Ramnad Samasthanam (1891)

கி.பி.1713லும் இவரது மூத்த சகோதரர் முத்து வயிரவநாத சேதுபதி வழங்கியுள்ளள செப்பேடுகள் அண்மையில் கிடைத்துள்ளன. ஆதலால் முத்து விஜயரகுநாத சேதுபதி கி.பி.1713ல் தான் பட்டமேற்றார் என்பது உறுதிப்படுகிறது

இந்த மன்னரது மூத்த சகோதரரான முத்து வயிரவநாத சேதுபதி சேதுநாட்டின் ஆட்சிப் பொறுப்பை கி.பி.1710 முதல் கி.பி.1713 வரை ஏற்றிருந்தார் என்பதும் புதிய செய்தியாகும்.

மன்னர் முத்து விஜய ரகுநாத சேதுபதியின் ஆட்சிக்காலம் 13 ஆண்டுகள் மட்டும் நீடித்த பொழுதினும், இவரது ஆட்சி பல சிறப்பான சாதனைகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. தமது முன்னோர்களைப் போல இந்த மன்னரும் சமுதாயப் பணிகளில் மிகவும் அக்கறை கொண்டிருந்தார். இவரது முயற்சியினால் மழை கால வெள்ளப் பெருக்கினைக் கொண்டு ஓடிவரும் வைகையின் நீர் கிழக்குக் கடலில் கலந்து வீணாவதைத் தடுக்க இராமநாதபுரம் கோட்டைக்கு மேற்கே ஒரு தடுப்பு அணையை அமைக்கச் செய்தார்[1]. அந்த அணை ரகுநாத சமுத்திரம் என்று வழங்கப்பட்டது. இப்பொழுது இதை பெரிய கண்மாய் என்ற பெயருடன் விளங்கி வருவதுடன் நான்காயிரம் ஏக்கர் நஞ்சையை சாகுபடி செய்வதற்கு உதவி வருகிறது. மற்றும் கமுதி அருகே ஓடுகின்ற குண்டாற்றிலிருந்து ஒரு கால்வாய் அமைத்து வறட்சி மிகுந்த முதுகளத்தூர் பகுதிக்கு அந்த நீர் பயன்படுமாறு செய்தார். இந்தக் கால்வாய் "ரகுநாத காவேரி" என்ற பெயருடன் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த மன்னர் இராமேஸ்வரம் திருக்கோயிலின் உலகப்புகழ்ப் பெற்ற மூன்றாவது பிரகாரத்தை அமைப்பதற்கு கால்கோள் இட்டார். இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனையின் அனைத்துச் சுவர்களிலும் அற்புதமான வண்ண ஓவியங்களை ஆந்திர நாட்டுக் கலைஞர்களைக் கொண்டு வரையச் செய்து கலைக் கருவூலமாக விளங்குமாறு செய்தவர் இந்த மன்னரே.

1. கமால் எஸ்.எம்.டாக்டர் - சேதுபதி மன்னர் செப்பேடுகள் ( 1993)

இந்த மன்னர் திருப்பணி செய்து அமைத்த இராமேஸ்வரம் திருக்கோயில் அனுக்க மண்டபத்தில் இந்த மன்னரது திரு உருவமும் இவரது தந்தை கதம்பத் தேவரது திரு உருவமும் காணப்படுகின்றன. இராமேஸ்வர கோயிலின் திருப்பணிகளில் மட்டுமல்லாமல் அன்றாட வழிபாட்டு முறைகளிலும் ஆண்டு விழாக்கள் நடத்துவதிலும் மிகுந்த அக்கறை கொண்டு ஆவணி மாதத் திருவிழா, மாசித் திருவிழா போன்ற ஆண்டு விழாக்களுக்கு உதவும் வகையில் பல கிராமங்களின் வருவாய்களை சர்வ மானியாக இந்தத் திருக்கோயிலுக்கு வழங்கி உள்ளார். மேலும் மன்னார் வளைகுடாவில் தமக்குள்ள முத்துக் குளிக்கும் உரிமையை இந்த மன்னர் திருக்கோயிலுக்கு விட்டுக் கொடுத்ததுடன் ஆண்டு தோறும் முத்துச் சிலாபத்தில் இரு தோணிகள் வைத்து முத்துக் குளிக்கும் உரிமையனையும், தான சாசனம் செய்து இராமேஸ்வரம் கோயிலுக்கு வழங்கியுள்ளார்.

மேலும் இராமேஸ்வரம் திருக்கோயிலுக்குத் திருத்தேர் ஒன்றினைச் செய்வித்து வழங்கியதுடன் அந்தத் தேரோட்டத்திற்கு முதன் முதலாக வடம் பிடித்துத் தொடக்கி வைத்தவரும் இந்த மன்னரே ஆவார். இந்தச் செய்தியினை தேவை உலா என்ற சிற்றிலக்கியம் சிறப்பாகக் குறிப்பிடுகிறது. மேலும் இந்த மன்னர் நாள்தோறும் அர்த்தஜாம பூஜை முடிந்தவுடன் சுவாமி அம்பாளின் பள்ளியறைக்குச் சென்ற பிறகு அந்தப் பள்ளி அறையில் சுவாமி அம்பாளின் பயன்பாட்டிற்காக வெள்ளி ஊஞ்சல் ஒன்றினையும் பதினெட்டாயிரம் வராகன் எடையில் செய்து வழங்கியுள்ளார். இந்த அறச்செயலை தெரிவிக்கும் கல்வெட்டு இராமேஸ்வரம் திருக்கோயிலின் இரண்டாம் பிரகாரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கல்வெட்டில் இந்த மன்னரது பெயராக முத்து விஜய என்ற தொடர் காணப்படுகிறது. ஆனால் இதே சிறப்புப் பெயர் இந்த மன்னரது முன்னவர்களான ரெகுநாத கிழவன் சேதுபதிக்கும், ரெகுநாத திருமலை சேதுபதிக்கும் வழங்கப்பட்டிருந்ததை அவர்களது கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் தெரிவிக்கின்றன.

இந்தக் கல்வெட்டு வாசகம் பின்வருமாறு:*

1. "ஸ்ரீ ஹிரண்ய ஹர்ப்பயாஜி ரகுனாதச் சேதுபதி காத்த மன்னர் அவர்களுடைய

2. புத்திரன் ஸ்ரீ முத்துவிசையரகுனாதச் சேதுபதி காத்த தேவர் அவர்கள் உபை

3. யம் இறாமீசுரத்தில் ராமனாதசுவாமி பறுவதவர்த்தினி அம்மனுக்கு வெள்ளிச்

4. சப்பரம் சுக்கிறவார கட்டளையிலே கொடுத்தோம் வெள்ளி வெள்ளிச் சப்பரம் சேதார

5. மதவள்ளி வெள்ளி 186,8 3/4 வராக எடை 80 தங்க சஞ்ச தகடு (195). . . . .

6. வெள்ளிச் தஞ்சம். . . . ."

*. A.R. NO

# இயல் 23

# தாஞ்சூர் அகத்தீஸ் சுவரார் திருக்கோயில் கல்வெட்டு

முத்து விஜய ரகுநாத சேதுபதி மன்னரது கல்வெட்டுக்களில் நமக்கு கிடைத்தவற்றுள் இது இரண்டாவது ஆகும். இந்தக் கல்வெட்டின் காலம் கி.பி.1718 ஆகும்.

கள்ளர் சீமையில், இன்றைய அறந்தாங்கி வட்டத்தில் புதுக்கோட்டைக்கு வடக்கே 18 கல் தொலைவில் உள்ள தாஞ்சூர் கிராமத்தில் உள்ள அகத்தீசுவரர் ஆலயத்தில் இந்தக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. அகத்தீஸ்வரர் கோயில் என்று இங்குள்ள இறைவனது பெயர் இந்தக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. தமிழ் மா முனிவர் அகத்தியர் (அகத்தீஸ்வரர்) என்று குறிப்பிடுவது அகத்தில் அமைந்த ஈஸ்வரர் என்ற பொருள் விதிப்பதாகும். ஆதலால் இந்தப் பெயர் பொதிகை முனிவர் அகத்தியரை குறிப்பதல்ல)பெயரால் மூன்று ஊர்கள் குமரி

மாவட்டம் அகத்தீஸ்வரம், தஞ்சை மாவட்டம் அகத்தியன் பள்ளி, இராமநாதபுரம் மாவட்டம் அகத்தியர் குட்டம், ஆகிய மூன்று ஊர்கள் வழங்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. கொங்குநாட்டில் ஈரோடு மாவட்டம் காங்கயம் நகரில் அகிலாண்டபுரம் பகுதியில் உள்ள சிவாலயத்திற்கு அகத்தீசுவரம் என்று ஈரோடு வட்டம் சாவடிப்பாளையம் புதூர் அருகில் காவிரியாற்றின் நடுவில் உள்ள சிவாலயத்திற்கு நட்டாந்து அகத்தீசுவரர் என்றும் பெயர் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. கள்ளர் சீமையின் வடபகுதி முழுவதும் கிழவன் ரகுநாத சேதுபதி காலத்தில் அவரது மைத்துனர் (மனைவியின் சகோதரன்) ரகுநாத ராய தொண்டைமானால் ஆக்கிரமிக்கப்பட்டு சிறிய தன்னரசாக இயங்கி வந்த பொழுதும், கள்ளர் சீமையின் தென்பகுதி வெள்ளாற்றிற்கு தெற்கே தொடர்ந்து இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களது ஆளுகையில் இருந்து வந்தது என்பதற்கு இது ஒரு சிறந்த வரலாற்றுச் சான்று ஆகும். தாஞ்சூர் அகத்தீசுவரருக்கு சேதுபதி மன்னர் வழங்கிய நிலக்கொடைகள் பற்றிய கல்வெட்டு இது.

***இந்தக் கல்வெட்டு வாசகம் பின்வருமாறு:****

1. *"சுபமஸ்து சகாப்த்தம் 1640க்கு மேல் செல்லாநின்ற பிரசோறபதி*

2. *அற்பசி மீ 7 உ சேது ஆதீனமான முத்து விசைய ரகுநாத சேதுபதி காத்த*

3. *தேவரவர்கள் தாஞ்சூர் அகத்தீசுவரமுடையாருக்கு பூசைப் பத்தாக கட்*

4. *டளையிட்டது மேலுவயலும் குளமும் பெருனாங்கெல்லையும் புஞ்சையில் பெரியப் பிஞ்சை*

5. *ச கொட்டைப்பாக்கன் பிஞ்சை காஞ்சிராவடி பிஞ்சை*

***வெழுங்கடி பிஞ்சை ஆக***


***6. நாலு தாக்கும் இந்தப்படிக்கு சந்திராதித்தவரைக்கும் பூசைப்பத்தாக நடந்துரக்கடவராகவும்***

***7. இந்தப்படிக்கு கல்வெட்டிக் குடுத்தோம் இதுக்கு யாதாமொருத்தர் பிசகுப***

***8. ண்ணினால் கெங்கை கரையில் காராம்பசுவை கொண்ண***

***9. தோஷத்தில்ப் போக கடவராகவும்"***

இந்தக் கல்வெட்டினை வெட்டுவித்த சேதுபதி மன்னர் மிகச் சிறந்த சிவபக்தராக விளங்கிய காரணத்தால் சேது நாட்டை இந்தக் கல்வெட்டில் சேது ஆதீனம் என்றே குறிப்பிட்டுள்ளார். ஆதீனம் என்பது புனித இடம். தானம் வழங்கப்பட்ட நான்கு புஞ்சை நிலங்களும், நான்கு தாக்கு என குறிப்பிட்டு இருப்பது வயல் இடத்தை சுட்டும் சேதுநாட்டு வழக்காகும்.



* Pudukkottai Inscriptions

# இயல் 25

# நயினார் கோயில் திருக்கோயில் கல்வெட்டு

இந்தக் கல்வெட்டினை வெட்டுவித்தவர் ரகுநாத கிழவன் சேதுபதியின் மகன் பவானி சங்கரத் தேவர் ஆவார்.

இந்த மன்னரது ஆட்சியைப் பற்றிய செய்திகளை இதுவரை வரையப்பட்ட சேது மன்னர்களது நூல்களில் காணப்படவில்லை. இந்த மன்னர் ரகுநாத கிழவன் சேதுபதியின் மைந்தன் ஆவார். கிழவன் சேதுபதியின் முதல் மனைவிக்குப் பிறந்த ஒரே மகன் ரணசிங்கத் தேவர் அகால மரணமடைந்துவிட்டதால் சேதுபதி பட்டத்துக்கு உரியவராக பவானி சங்கரத் தேவர் உரிமை பெற்று இருந்தாலும், அவரை இராமநாதபுரம் அரண்மனையைச் சார்ந்த முதியவர்கள் மன்னராக தேர்வு செய்யவில்லை. காரணம் பவானி சங்கரத் தேவர் இராமநாதபுரம அரண்மனை மரபுப்படி மன்னரது மனைவியும்,

செம்பி நாட்டு மறவர் பிரிவைச் சேர்ந்தவரும் அல்லாத பெண்மணியின் மூலம் பிறந்தவர் என்ற காரணத்தினால். ஆதலால் இவருக்குப் பதிலாக இறந்து போன கிழவன் ரகுநாத சேதுபதியின் தங்கையின் மகன் திருவுடையாத் தேவரை இராமநாதபுரம் அரண்மனை முதியவர்கள் தேர்வு செய்து சேதுபதி மன்னர் பட்டம் சூட்டினர்.

இதனால் மனம் தளர்ந்த பவானி சங்கரத் தேவர் தமது மாமன் முறையினரான கள்ளர் சீமைத் தலைவர் ரகுநாத ராயத் தொண்டமானையும், தஞ்சை மராத்திய மன்னர் முதலாவது ஷாஜியையும் அணுகி அவர் இராமநாதபுரம் சீமை மன்னராவதற்கு உதவுமாறு கேட்டுக் கொண்டார். பவானி சங்கரத் தேவருக்கு ஒரு நிபந்தனையின் பேரில் ராணுவ உதவி புரிய தஞ்சை மன்னர் முன்வந்தார். அதாவது திருமலை ரகுநாத சேதுபதி மன்னரது காலத்தில் கைப்பற்றப்பட்டு இராமநாதபுரம் சீமையில் சேர்க்கப்பட்ட அறந்தாங்கி பட்டுக்கோட்டை திருவாரூர் சீமைகளைத் தஞ்சைக்குத் திருப்பி அளிக்க வேண்டும் என்பது அந்த நிபந்தனை.

இந்த நிபந்தனையை ஒப்புக்கொண்டு தஞ்சை மராட்டியப் படைகளின் உதவியுடன் கி.பி.1726ல் இராமநாதபுரம் கோட்டையைப் பிடித்த பவானி சங்கரத் தேவர் சேதுபதி மன்னரானார். ஆனால் இவரது ஆட்சி இரண்டாண்டுகளுக்கு மேல் நடைபெறாமல் முடிந்துவிட்டது. இவரது ஆட்சிக் காலத்தில் இந்த மன்னர் பல ஊர்களைப் பல கோயில்களுக்குச் சர்வ மான்யமாக வழங்கி உதவியுள்ளார். அவைகளில் நயினார்கோவில் நாகநாத சுவாமி ஆலயத்திற்கு அவர் வழங்கிய தானம் பற்றிய கல்வெட்டு ஒன்று மட்டும் கிடைத்துள்ளது.

இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களது நிர்வாகத்திற்கு உட்பட்ட அறுபத்து இரண்டு கோயில்களில் நயினார் கோவிலும் ஒன்று. இங்கு இறைவர் நாகநாதர் என்ற பெயருடன் வழங்கப்பட்டு வருகிறார். இந்தப் பகுதியில் உள்ள மக்களால் பெரிதும் பக்தியுடன்

போற்றப்படும் திருக்கோயில் இது. ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதத்தில் இங்கு நடைபெறும் வசந்த விழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் சுவாமியைத் தரிசனம் செய்வதுடன் அந்த ஆண்டின் அறுவடையில் கிடைத்த தானியங்களைத் தங்களது காணிக்கையாகச் சுவாமிக்குச் செலுத்தி வருகின்றனர்.

இந்தத் திருக்கோயிலின் அர்ச்சனைக்கு நயினார் கோவில் வட்டாரத்தில் உள்ள அண்டக்குடி கிராமத்தின் நஞ்சை புஞ்சை நிலங்களை மன்னர் பவானி சங்கரத் தேவர் தானம் வழங்கியதை இந்தக் கல்வெட்டு தெரிவிக்கின்றது. இந்தக் கல்வெட்டின் இறுதியில் சிதைவுகள் ஏற்பட்டு இருப்பதால், கல்வெட்டின் காலத்தையும், பிற செய்திகளையும் தெரிந்து கொள்ள முடியவில்லை.

***இந்தக் கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு:****

1. ***"சுபமஸ்து ஸ்ரீ நயினார்க்கு அர்ச்சனை***
2. ***க்கு அண்டகுடியில் நஞ்சை புஞ்சை காணிகளை சர்***
3. ***வ மாநியமாக தானம் பண்ணினேன்.***
4. ***(குருக்களிடம்) இடத்தில் பவானி சங்கரன்"***

இந்த தானத்தைச் சேதுபதி மன்னர் அந்தக் கோயிலின் பிரதான குருக்களிடம் வழங்கினார் என்ற செய்தி மட்டும் இந்தக் கல்வெட்டிலிருந்து தெரிய வருகிறது.



* புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு

# இயல் 26

# பெருவயல் திருக்கோயில் கல்வெட்டு

பவானி சங்கர சேதுபதியினால் போரில் கொல்லப்பட்ட சுந்தரேச சேதுபதியின் சகோதரர் கட்டையத் தேவரும், முத்து விஜய ரகுநாத சேதுபதியின் மருகர் சசிவர்ணத் தேவரும், தஞ்சை மன்னரது உதவியுடன் பவானி சங்கரத் தேவரை கி.பி.1728-ல் ஓரியூர் கோட்டைச் சண்டையில் தோற்கடித்தனர். இதனால் அப்பொழுதிலிருந்த இராமநாதபுரம் தன்னரசை சசிவர்ணத் தேவரும், கட்டையத் தேவரும் இரண்டு சீமைகளாகப் பிரித்து இருவரும் தனித்தனியாக மன்னராகினர். இந்த கட்டையத் தேவர் தான் குமார முத்து விஜய ரகுநாத சேதுபதி என்ற பெயருடன் கி.பி.1728-ல் இராமநாதபுரம் சேதுபதி ஆனார். இவரது ஆட்சிக் காலம் மிகக் குறுகியதாக இருந்த பொழுதினும் பல அறப்பணிகளுக்கு உரியதாக அமைந்த ஊர்களைப் பற்றி அவர் வழங்கிய செப்பேடுகளும், கல்வெட்டுக்களும்

தெரிவிக்கின்றன. இந்த மன்னரது இரு கல்வெட்டுக்கள் இப்பொழுது கிடைத்துள்ளன. முதலாவது பெருவயல் ரணபலி சிவசுப்ரமணிய சுவாமி கோயிலுக்கு வழங்கிய நில மான்யங்களை குறிப்பது ஆகும்.

இராமநாதபுரம் கோட்டைக்கு வடக்கே எட்டுக் கல் தொலைவில் உள்ள பெருவயல் கிராமத்தில் இந்த மன்னரது தளவாய் வைபிரவன் சேர்வைக்காரர் என்பவர் எடுப்பித்த திருக்கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலக்கொடைகளைக் குறிக்கும் கல்வெட்டு அது. அந்தக் கோயிலின் வடக்குப் பகுதியில் சக்கரவாள நல்லூர் புரவில் இந்தக் கல்வெட்டு அமைக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது இந்தக் கல்வெட்டு அங்கே காணப்படவில்லை. ஏற்கனவே படி எடுக்கப்பட்டு இந்தக் கோயிலின் பரம்பரை விசாரணை தாரரான எஸ்.சண்முக சுந்தரம்பிள்ளை அவர்களது 1954ஆம் ஆண்டு பிரசுரத்தில் காணப்படுகிறது. அந்தக் கல்வெட்டுப் படியினைக் கீழே காணலாம்.

இந்தக் கோயிலை மிகுந்த பக்தியுடன் தனிப்பட்ட மனிதரான தளவாய் வைபிரவன் சேர்வைக்காரர் கட்டி முடித்திருப்பதால் இந்தக் கோயிலின் அன்றாட பூஜை, திருவிளக்கு, திருமாலை ஆகிய கைங்கரியங்கள் செவ்வனே, நடப்பதற்கு கி.பி.1736-ல் இந்த மன்னர் பெருவயல் கலையனூர் கிராமத்தை நிலக்கொடைகளாக வழங்கியதை இந்தக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. சேதுபதி மன்னர் இந்தத் திருக்கோயிலுக்கு வழங்கிய நிலக்கொடையை முன் மாதிரியாகக் கொண்டு அறந்தாங்கித் தொண்டமானும், சிவகங்கை மன்னரும், மதுரை நாயக்க மன்னரும் அவர்களது பகுதியில் உள்ள சில கிராமங்களை சர்வமான்யமாக வழங்கியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் இந்தத் திருக்கோயில் மீது பக்தியும், பற்றும் கொண்ட இராமநாதபுரம் பேட்டை வணிகர்கள் கி.பி.1741-ல் பூஜை முதலியவைகளுக்கே மகமை ஒன்றினை ஏற்படுத்தி அதன் வழி இராமநாதபுரத்தில் விற்பனையாகும் பஞ்சு, பாக்கு, மிளகு, செம்பு ஆகிய பொருள்கள் விற்பனையிலிருந்து இந்த மகமைத் தொகையை அளிக்க ஒப்புதல் பட்டையம் ஒன்றும்

வரைந்து கொடுத்துள்ளனர்.[1]

இந்தக் கல்வெட்டு வாசகத்திலிருந்து கீழ்காணும் செய்திகள் தெரியவருகின்றன.

அ) சேதுபதிமன்னர் தானமாக வழங்கிய கலையனூர் பெருவயல் என்ற இந்தக் கிராமத்தின் மொத்தப்பரப்பு 206 கலவிரையடி என்றும் இதில் கோயில் அர்ச்சகர், முத்திரைக் கணக்கு, கோயில் கணக்கு ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களது பாகமும் (அர்ச்சனா பாகம்) இந்த மான்யத்தில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஆ) இந்தக் கோயிலின் வழிபாட்டுச் செலவிற்காக இராமநாதபுரம் பேட்டை வணிகர்கள் ஏற்படுத்திய மகமையிலிருந்து அப்பொழுது சேதுநாட்டில் இலங்கை போன்ற கீழ்த்திசை நாடுகளிலிருந்து பாக்கும் செம்பும் இறக்குமதி செய்யப்பட்டது என்றும் இராமநாதபுரம் பகுதியில் பருத்தியும், வெற்றிலையும் மிகுதியாக விளைச்சல் செய்யப்பட்டது என்றும் தெரிந்து கொள்ள முடிகிறது.

இ) இந்தக் கல்வெட்டினைப் பொறித்த சேதுபதி மன்னரது ஆட்சிக் காலத்தில் முருகனது வழிபாடு சேதுநாட்டில் மிகுந்த பிரபலம் பெற்று வந்தது என்பதை இந்தத் தான சாசனம் தெரிவிப்பதுடன் இதே சேதுபதி மன்னர் பழனி மலை தண்டாயுதபாணி கோயிலுக்கும், சேதுநாட்டின் தெற்கே உள்ள பகுதியில் உள்ள குளவயல் கிராமத்து சுப்ரமணிய சுவாமி கோயிலுக்கும் நிலக்கொடைகள் தானம் வழங்கியிருப்பது தெரியவருகிறது.

***இந்தக் கல்வெட்டு வாசகம் பின்வருமாறு:****

*1. "சுபஸ்ரீ மகா மண்டலேசுபரன் அரிய ராயதளவி*
*2. பாடன் பாஷைக்குத் தப்புவறாய கண்டன், கண்டநாடு கொண்டு*
*3. கொண்டநாடு கொடாதான், பாண்டி மண்டலச்*

1. கமால் எஸ்.எம்.டாக்டர் - ஆவணம் இதழ் எண் - 11

சாபனாசாரியான்,

4. தொண்டமண்டல பிரதிஷ்டபனாசாரியான் தொண்டமண்டல.

5. சண்டப் பிரசண்டன், பூர்வபட்சிம, உத்தறா சமுத்திராதிபன்

6. ஈனமும் கொங்கும் இயாள்ப்பாண மண்டலமும் அளித்துக்

7. கெஜவேட்டைக் கண்டருளிய ராஜாதி ராஜன் ராஜபரமேஸ்பரன்,

8. ராஜமார்த்தாண்டன், ராஜகெம்பீரன், ராஜமனோகரன் ராஜ

9. உத்சவதண்டன், ராஜாக்கள் தம்பிரான், ராஜமான்யகிரீடி மருமஉங்கையர்

10. கேஷரி, இளஞ்சிங்கம், பகை மன்னர்சிங்கம், மலை கலங்கினாலும்மனங்

11. கலங்காத கண்டன், தாலிக்குவேலி, அடைக்கலம்காத்தான்,

12. சேகரன், தண்டவார் முண்டன், முந்துவார் கண்டன், வபியச்சருவி.

13. வலியில்க்கால் நீட்டி, துஷ்டநிக்கிரகன், சிஸ்ட்டபரிபாலன், வில்லுக்கு

14. விஜயன், மல்லுக்கு வீமன், சொல்லுக்கு அரிச்சந்திரன், கொடைக்கு,

15. கர்ணன், பரிக்கு நகுலன், இராமநாதசுவாமி காரியதுரந்தரன்-சுவஸ்தி

16. ஸ்ரீ சாலியவாகன சகாப்தம் 1658க்கு இதில் மேல்


*செல்லாநின்ற*
*17. ராட்ஷச நாம சம்வச்சரத்தில் உத்திராயணத்தில் சோமவாரமும் கூடின*
*18. சூரியோதய புண்ணிய காலத்தில் ஸ்ரீமது குமார முத்து விஜயரெகுனாத*
*19. சேதுபதிகாத்தத் தேவரவர்கள் பெருவயலிலிருக்கும் சாத்தப்பன்*
*20. சேர்வைபுத்திரன் சேதுதளவாய் வயிரவன் சேர்வைகாரன் உண்டு*
*21. பண்ணி வைத்த சிவசுப்பிரமணிய சுவாமி ரணபலி முருகய்யாவுக்கு*
*22. அபிஷேகம், நெய்வேத்தியம், திருமாலை, திருவிளக்கு, திருவிழா உற்சபங்*
*23. களுக்கும் தானப்பூர்வமாக விட்டுக கொடுத்த பெருவயல் கலையனூர்*
*24. கிராமத்துக்கு எல்கையாவது புல்லங்குடி ஆத்துக்கும் வடக்கு,*
*25. சிறுவயல் கல்லரைக்கும் கிழக்கு, பூத்தோண்டி எல்கைக்கும் தெற்கு,*
*26. சர்க்கரவாள நல்லூர் எல்கைக்கும் மேற்கு, இந்த நான்கெல்கைக்கும் உட்*
*27. பட்ட பெருவயல் கலையனூர் கிராமம் 1க்கு ஊர் புரவது நஞ்சை,*
*28. புஞ்சை மாவடை, மரவடை சகலமும் மேல்படி கிராமம் கோவில்*
*29. ஸ்தானிகளிடம் விட்டுக் கொடுத்தோம். மேற்படி*

கிராமம் உள்கடையில்
30. அர்ச்சனாபாகம் நாகநம்பியார் மங்ளேஸ்பர குருக்கள் மானியம்.
31. கட்டளை விரையடி 40.0.0.0
32. மேற்படியார் தானக் கணக்கு விரையடி 15.0.0.0
33. நிருபாகம் வயிரவன் சேர்வைக்காரர் மானியம் கட்டளை விரையடி 15.0.0.0
34. கோவில் கணக்கு சிவராமகாசியாபிள்ளை மானிய கட்டளை விரையடி 15.0.0.0
35. முத்திரை கணக்கு ராஜகோபால் பிள்ளை மானியம் கட்டளை விரையடி 15.0.0.0
36. ஆக மானியம் கட்டளை விரையடி - 100.0.0.0
37. சேது தளவாய் வயிரவன் சேர்வைக்காரர் வீ - 6.0.0.0
38. ஆக அர்ச்சனாபாகம் சர்வமானியமுள்பட விரையடி 206.000.0யும்
39. விட்டுக் கொடுத்த படியினாலே ஆதசந்திராதித்த காலம் சந்திநாதி சந்ததிப்
40. பிரவேச முள்ளவரைக்கும் ஆண்டுகொள்வாறாகவும் இந்த தர்மத்தை
41. பரிபாலனம் பண்ணின பேருக்கு காசியிலே கோடி சிவலிங்கம் பிரதிட்
42. டையும் தனுஷ் கோடியிலே கோடி விஷ்ணு பிரதிட்டையும் பண்ணினச்
43. சுகிர்தத்தை அடைவாராகவும், இந்த தர்மதுக்கு விகாதம்
44. பண்ணின பேர் கராம்பசுவைக் கொண்ட

*தோஷத்திலே போவாறாகவும்,*
*45. இந்த சிலா சாஸன லிகிதம் த. திருவேங்கிடமாசாரி புத்திரன்*
*46. விசுவமூர்த்தி ஆசாரி"*

இதுவரை கிடைக்கப் பெற்ற சேதுபதி மன்னர்களது கல்வெட்டுக்களில் மிகவும் நீண்ட சொற்றொடர்களை (46 வரிகளை) கொண்டதாக இந்தக் கல்வெட்டு அமைந்துள்ளது. மேலும் இந்த மன்னரது காலத்தில் ஏற்கனவே வழங்கப்பட்ட பல செப்பேடுகளில் குறிப்பிட்டு இருப்பது போல சேது மன்னரைப் பற்றிய பலவித விருதாவனிகள் (மொத்தம் 35) இந்தக் கல்வெட்டிலும் காணப்படுவது புதுமையாக உள்ளது. இந்த மன்னரது காலத்தில் சேதுநாட்டில் கல்வெட்டுக்களைப் பொறிக்கும் பணியில் ஈடுபட்ட கல்தச்சர்கள் இல்லை என்பதையே இந்தக் கல்வெட்டு வாசக அமைப்பிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

மேலும் இந்தக் கோயில் அமைந்துள்ள கிராமத்தின் பெயர் பெருவயல் கலையனூர் என கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்று இந்த ஊர் பெருவயல் என்று மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலக்கொடைக்கு பெரு நான்கு எல்கைளாக குறிப்பிடப்பட்டுள்ள புல்லங்குடி ஆறு, சிறுவயல் கல்லறை, நாரணமங்கலம், சக்கரவாளநல்லூர் ஆகிய கிராமங்கள் இன்றும் அப்படியே வழக்கில் உள்ளன.



* புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு

# இயல் 27

# களுவன்குடி கல்வெட்டு

இராமநாத குமார முத்து விஜய ரகுநாத சேதுபதி மன்னரது ஆட்சிக் காலத்தில் பொறிக்கப்பட்ட இன்னொரு கல்வெட்டு இது. தேவகோட்டைக்கு நேர் கிழக்கே 18 கல் தொலைவில் உள்ள கண்ணங்குடி ஊரை அடுதத களுவன்குடி கண்மாய்க் கரையில் நாட்டப்பட்டுள்ளது. இந்த ஊர் இப்பொழுது உலக வழக்கில் களவன்குடி என்று வழங்கப்படுகிறது. ஆனால் இந்த ஊரின் சரியான பெயர் குளுவன்குடி என்பதே ஆகும். ஒரு காலத்தில் பலவிதமான பறவைகளை வலை வைத்துப் பிடித்து விற்பனை செய்யும் நாடோடிக் கூட்டத்தினர் குளுவன் என அழைக்கப்பட்டனர். இதே பெயரில் இன்றும் இராமநாதபுரம் திருச்சி நெடுஞ்சாலையில் சோழந்தூர் கிராமத்திற்கு சற்றுத் தென் மேற்கே குளுவன்குடி என்ற பெயரிலேயே மற்றொரு கிராமம் இருந்து வருகிறது. மேலும் "நகரத்தார் குளுவன் நாடகம்" என்ற பெயரில் ஒரு நாடோடி இலக்கியம் இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கல்லின்

இருபக்கங்களிலும் பொறிக்கப்பட்ட கல்வெட்டாகும் இது. முந்தைய பெருவயல் கல்வெட்டினைப் போன்று இந்தக் கல்வெட்டு மிக நீண்டதாகவும், நடுகல்லின் முதற்பக்கத்தில் 36 வரிகளும் இரண்டாவது பக்கத்தில் 23 வரிகளும் காணப்படுகின்றன. ஏற்கனவே குறிப்பிட்டபடி கல்வெட்டுககளை பொறிப்பதில் அனுபவமுள்ள கல்தச்சர்கள் இந்த மன்னரது காலத்தில் சேதுநாட்டில் இல்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இந்தக் கல்வெட்டின் தொடக்கத்தில் விஜய நகர மன்னர்களின் பெயர்களை சம்பந்தமில்லாமல் குறிப்பிட்டுவிட்டு இராமநாதபுரம் குமார முத்து விஜய ரகுநாத சேதுபதி மன்னரது தானம் பற்றிப் பொறிக்கப்பட்டுள்ளது.

சேது மூலத்தில் சோம வார அன்னதானத்திற்கு சேதுபதி மன்னர் குளுவன் குடி கண்மாய்ப் பாசனத்திலுள்ள நஞ்சை, புஞ்சை நிலங்களை சர்வமான்யமாக வழங்கியதைக் குறிப்பதற்காக இந்த கல்வெட்டு நாட்டப்பட்டுள்ளது. தானம் வழங்கப்பட்ட கிராமம் முத்துநாடு என்ற பகுதியில் அமைந்திருப்பதாக குறிப்பிடப்பட்டுளளது. இந்தத் தர்மத்தைச் சேதுபதி மன்னருக்காக இந்தப் பகுதியின் பொறுப்பிலிருந்த சேதுபதி அலுவலா ரகுநாத காங்கேய சேர்வைக்காரன் என்பவர் சேதுவில் தானம் செய்து கொடுத்ததாகத் தெரிய வருகிறது.

இந்தக் கல்வெட்டிலிருந்து சேது நாட்டின் நிர்வாகம் பற்றிய மிக முக்கியமான செய்தி ஒன்று அறிய முடிகிறது. ரெகுநாத திருமலை சேதுபதி மன்னரது ஆட்சிக் காலத்தில் சேது நாட்டின் வடக்கு எல்லை புதிதாக இணைக்கப்பட்ட பல பகுதிகளுடன் விரிவடைந்ததை ஏற்கனவே பார்த்தோம். இந்தப் பகுதிகளின் நிர்வாகம் சீராக நடைபெறுவதற்காக சேது மன்னரது அரசப் பிரிதிநிதிகளாக முழு அதிகாரங்களைக் கொண்ட சேர்வைக் காரர் என்ற பதவி ஏற்படுத்தப்பட்டது. அவர்களே தங்களது உசிதம் போல சேது மன்னருக்காக சர்வ மான்ய அறக்கொடைகள் வழங்கி உள்ளனர்.

குறிப்பாக திருமலை சேதுபதி மன்னரது ஆட்சிக் காலத்தில் சொக்கப்பன் சேர்வைக்காரர் என்பவர் வழங்கியுள்ள அறக்கொடையைப் போல இந்தக் குளுவன்குடி கல்வெட்டில் ரெகுநாத காங்கேயன் சேர்வைக்காரர் அறக்கொடை வழங்கி இருப்பது, திருமலை ரெகுநாத சேதுபதியின் கால அமைப்பு தொடர்ந்து ஒரு நூற்றாண்டு காலத்திற்குப் பிறகும் நடைபெற்று வந்துள்ளதை காண முடிகிறது.

இந்தக் கல்வெட்டின் இரண்டாம் பகுதியிலுள்ள வரிகள் 37 முதல் 59 வரை மிகவும் சிதிலமடைந்து விட்டதால் இந்த தர்மம் பற்றிய முழுமையான விவரங்களை அறிந்துகொள்ளும் வாய்ப்பு இல்லை. இதே பகுதியில் உள்ள களத்தூர் என்ற ஊரினை தனுக்கோடியில் இருந்த அந்தணர் குடியிருப்புக்காக ரகுநாத கிழவன் சேதுபதி மன்னரது மனைவி ராணி காதலி நாச்சியார் கி.பி.1709-ல் சர்வமான்யமாக வழங்கி இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்தக் கல்வெட்டின் இன்னொரு சிறப்புச் செய்தி முதற் பக்கத்தில சிவலிங்கம், சந்திரன் தாமரை, சூரியன் ஆகியவைகளுடனும் மறுபக்கத்தில் ராம பிராமனது வில் ஏந்திய திரு உருவமும் புடைப்பு சிற்பமாக அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

***இந்தக் கல்வெட்டின் வாசகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.****

1. *"ஸ்வ ஸ் (திஸ்ரீ) மன்*
2. *மகா மண்டலே*
3. *சுரன் அரியராயதள*
4. *வி பாடன் பாசை*
5. *க்கு தப்புவாராய*

6. கண்டன்கண்

7. டநாடு கொண்டு கொ

8. ண்டநாடு கொடாதா

9. ன் பாண்டி மண்டல பி

10. றதாபனாசாரியன் ஈள

11. மும் கொங்கும் யாள்ப்

12. பாணமும் திறை கொண்

13. டருளிய ராமராயர் கிரு

14. ட்டிணராயர்

15. வீரவசந்தராயர்

16. பிருதிவி ராச்சியம்

17. பண்ணி யருளா நின்ற

18. சகாப்தம் 1659

19. இதன்மேல் செல்லாநி

20. ன்ற பிங்கள ஞு அற்பிசி

21. மீ உ குருவாரமும்

22. பூறுவ பட்சமும் திரைே

23. யாதெசியும பூச நட்செ

24. த்திரமு(ம்) சுபநாமயோகமு(ம்)

25. கூடிய புண்ணிய தி

26. னத்தில் ஸ்ரீமது தே

27. வை நகராதிபன்

28. மருவளரு மணிமார்

29. பன் சேதுகாவலன்

30. ராமனாதசுவாமி கா

31. ரிய துரந்தரன்

32. சத்திய வாக்கிய வீரர்

33. ஸ்ரீமத் குமாரமுத்து

34. விசைய ரெகுநாதச் சே

35. துபதி காத்த தேவரவர்

36. கள் காரியத்துக்கு கர்த்தாவன ரெகுநாத காங்கேயன் சேர்வைக்காரர்

37. அவர்கள்

38. சேதுவில் ே

39. சாமாவார கட்

40. டளை அன்னத

41. ானம் நடப்

42. பிக்கிற படியி

43. னாலே தற்ம

44. பரிபாலன

45. மாக வேண்

46. டி விசைய

47. ரெகுநாத

48. காங் கெய

49. ன் சேருவை

50. வக்காறர்

51. உபை

52. யமாக முத்து

53. நாட்டைச் சேர்

54. ந்த களபங்கு

55. டி சிலாசா

56. சனம் பண்

57. ணி குடுத்த

58. படிபினாலே

59. அன்னது

60. ளம் நட

61. ப்பிக்க கட

62. வர்களாகவும்

63. . . . . . . . ."

* புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டு

# இயல் 28

# நயினார் கோவில் கல்வெட்டு

சேதுநாட்டில் கி.பி.17ம் நூற்றாண்டு முதல் தொடர்ந்து வந்த சேதுபதி மன்னர்களது தன்னரசு ஆட்சியில் இறுதி மன்னராக விளங்கியவர். முத்து இராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி ஆவார். கர்நாடக நவாப் முகமது அலியிடம் பலவிதமான சலுகைகளைப் பெற்று வந்த ஆங்கில கிழக்கியந்தியக் கம்பெனியார் இராமநாதபுரம் சேது மன்னர்களது பகுதியான மறவர் சீமையை உள்ளடக்கிய மதுரைச் சீமையின் நிலத் தீர்வையை வசூலித்துக் கொள்ளும் உரிமையினை கி.பி.1792ல் பெற்றனர்.[1] தங்களது வணிக நலன்களுக்குச் சிறிதும் ஒத்துழைபபு நல்க மறுத்து வந்த இந்த சேதுபதி மன்னரைத் தங்களது சூழ்ச்சியினால் கி.பி.1795-ல் முடியிழக்கச் செய்ததுடன் சேது நாட்டை அவர்களது உடைமையாக்கிக் கொண்டனர். இந்த மன்னர் தமது குறுகிய கால ஆட்சியில் ஆன்மீகச் செழுமைக்கும் மொழி வளர்ச்சிக்கும்

1. Rajayyan. Dr. - History of Madura - (1974) Page

சமுதாயப் பணிகளுக்குமாகப் பல சாதனைகளைப் புரிந்துள்ளார். இதுவரை முந்தைய சேதுபதி மன்னர் யாரும் மேற்கொள்ளாத வகையில் பல திருக்கோயில்களுக்கும், திரு மடங்களுக்கும், தேவாலயத்திற்கும் பல ஊர்களைச் சர்வ மானியமாக வழங்கியுள்ளார். இராமேஸ்வரம் போன்ற திருக்கோயில் திருப்பணிகளும் அவரது சாதனைப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. அவரது திருப்பணிகளில் நயினார் கோவில் கட்டுமானத்தை முழுவதுமாகத் திருத்தி அமைத்துள்ளார்.

இந்தக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள நயினார் கோவில் புணர்அமைப்பு பற்றிய செய்தி ஆங்கிலேயரது நிர்வாகம் ஏற்படுவதற்கு முன்னர் நிகழ்ந்ததைக் குறிப்பதாகும். நயினார் கோவில் என்ற ஊர் இராமநாதபுரம கோட்டைக்கு வடமேற்கே பதினைந்து கல் தொலைவில் அமைந்துள்ள சிவத்தலமாகும். இங்கு மருத மரத்தின் நிழலில் இறைவன் எழுந்தருளி இருப்பதால் இறைவன் பெயர் மருதிஸ்வரர் எனவும், இந்த தலத்தின் பெயர் மருதவனம் அல்லது மருதூர் எனவும் வழங்கலாயிற்று. இந்த தலத்தின் இறைவனைப் பற்றி பல சிற்றிலக்கியங்கள் இயற்றப்பட்டுள்ளன. கி.பி.17ம் நூற்றாண்டின் இறுதியில் தளமலைக் கண்ட தேவர் என்ற புலவர் மருதூர் அந்தாதி என்ற நூலையும் கி.பி.18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் **முத்து நாயகம் என்ற நல்ல முத்துப் புலவர்** பாடியுள்ள மருதூர் பதிகமும் கி.பி.19ஆம் நூற்றாண்டில் எட்டையபுரம் கருத்தமுத்துப் புலவர் பாடிய மருதூர்ப் புராணமும் கி.பி.20ஆம் நூற்றாண்டில் சக்திவேல் ஆசாரி என்பவர் பாடிய நயினார் கோவில் வழிநடை அலங்காரச் சிந்து என்ற நூலும் குறிப்பிடத்தக்கவையாகும்.

இங்குள்ள மருதிஸ்வர் கோயில் உலக வழக்கில் நயினார் கோயில் என வழங்கப்பட்டு வருகிறது. நயினார் என்பது இறைவனைக் குறிக்கும் பொதுவான பெயராகும். கி.பி.19ஆம் நூற்றாண்டில வரகுண பாண்டியனால் அமைக்கப்பட்ட இந்தத் திருக்கோயில் மிகவும் பழுதடைந்து இருந்ததை முத்து இராமலிங்க சேதுபதி

"ஜீரநோத்தாரணம்" (கி.பி.1784) செய்த விவரத்தை அங்குள்ள இந்த கல்வெட்டுச் செய்தி தெரிவிக்கின்றது. கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம் ஆகியவைகளை மன்னர் அவர்கள் கட்டளையிட்டபடி அவரது பிரதானி முத்து இருளப்ப பிள்ளை அவர்கள் நேரில் இருந்து செய்ததற்கு முகூர்த்தம் செய்து இந்த வேலைகளுடன் மேல் கருங்கல் விமானமும் கட்டுவித்து சுவாமியை 45 நாட்கள் பாலாலயத்தில் எழுந்தருளச் செய்து அபஷேகம், நெய்வேத்தியம், ஹோமம், பிராமண போஜனம் செய்வித்தார் என்றும் அதே ஆண்டு மாசி மாசத்தில் சுவாமியைப் பிரதிட்டை செய்து கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்தார் என்றும் இந்தக் கல்வெட்டின் மூலம் தெரியவருகிறது. கருவறையின் தென்சுவரில் இந்தக் கலவெட்டு இடம்பெற்றுள்ளது.

***இந்தக் கல்வெட்டு வாசகம் பின்வருமாறு:****

*1. "உ . . . . . . ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1706*
*2. வருசம் 4885 இதன் மேல் செல்லாநி*
*3. ன்ற குரோதி ஹ சம்வத்சரத்தில்*
*4. மகர மாசத்தில் கிருஷ்ணபட்சத்து*
*5. தசமியும் புரனர்வாஸமும் அங்காரக நட்ச*
*6. த்திரமும் நாம யோகமும் பவகரணமும்*
*7. கூடின சுபதினத்தில் ராஜவேளையில் கும்*
*8. பல்லக்கிநத்தில் மருதவனத்துககுப் பிரதி நாமம*
*9. ரன நயினார் கோவில் நாகநாத சுவாமிக்கு கர்ப்ப*
*10. கிரகம் அர்த்த மண்டபம் சிருணாத்தாரண*
*11. ம் செய்குறதற்கு ராசமானிய மகாராச ராசஸ்ரீ*

*12. முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி*

*13. காத்த தேவரவர்கள் ராசமானி*

*14. ய ராசஸ்ரீ பிரதானி முத்திருளப்ப பிள்ளையவர்கள்*

*15. திருப்பணிக்கு முகிர்த்தஞ்செய்து முன்னின்று தவிமா*

*16. னமும் கர்ப்பக்கிரஹம் அர்த்த மண்டபம் வான*

*17. முதல செய்து மேல் கருங்கல் விமானமுஞ் செய்*

*18. வித்து ஒரு மண்டலம் சுவாமி நாகநாதர் பாலால*

*19. யத்தில் எழுந்தருளி அபிசேகம் நெய்வேதியம் ஜபம்*

*20. ஹோமம் பிராமண போஜனம் முதலாகிய சைவி*

*21. த்தியோ பசாரங்களும் நடந்து சாம மாசி*

*22. மாசத்தில் சுக்லபட்சத்து தசமியும் பாறுவாசர*

*23. மும்புஸ்ய நட்சத்திரமும் சங்கரநாம யோகமும் கிரஹாவாக*

*24. ரணமும் கூடின சுபதினத்தில் சுவாமி பிரதிட்டையும் அஸ்ட்ட*

*25. பந்தணமும் முலாலயத்தில் கும்பாபிஷேகமும் நடப்பி . . . . .*

*26. . . . . . . தாலே"*

இந்தக் கல்வெட்டின் இறுதிப் பகுதி படிப்பதற்கு இயலாத முறையில் காரையால் பூசப்பட்டு விட்டது.

* புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டு

# இயல் 29

# நயினார் கோவில் கல்வெட்டு

கல்வெட்டு எண் 28ல் சொல்லப்பட்ட நயினார் கோயில் திருப்பணிகளை மேற்கொண்டவர்கள் பற்றிய கல்வெட்டு இது. இந்தக் கல்வெட்டும் முதலில் சொல்லப்பட்ட கல்வெட்டின் அருகிலேயே பொறிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கல்வெட்டிலிருந்து கோயிலின் சீரணோத்தாரணப் பணிகளை மேற்கொண்ட சிவபிராமணர், திருப்புத்தூர் வட்டம் திருப்புத்தூரை அடுத்த சிராவயலைச் சேர்ந்த குண்டல தீச்சதர் மகன் மீனய்யன் என்ற விவரமும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இந்தத் திருப்பணிக்கு சம்பந்தப்பட்ட கல் வேலைகளைச் செய்த கல்தச்சர் நமசிவாய ஆசாரி மகன் முத்துக் கருப்பன் ஆசாரி.

இந்தக் கல்வெட்டின் காலம் கி.பி.1784. இந்தக் கல்வெட்டு கருவறையின் (அதே சுவரில்) அதிட்டான முப்படைக்

குமுதத்தில் உள்ள துண்டுக் கல்வெட்டு ஆகும்.

<u>இந்தக் கல்வெட்டின் வாசகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது*</u>

1. ". . . . . . (கை) தை சுவா

2. மி நாகநாத சுவாமி அநுகிரகம் பண்ணி விச்சுது இந்த

3. திருப்பணி வேலை அட்டபந்தன கும்பாபிசேகம் ஜப

4. ம் ஹோமம் பிராமண போசனம் யிருந்து செய்த சின்னன்

5. திருப்பத்தூர் ராமசாமி அய்யன் சிராவயல் குண்டல தீச்சதர் குமாரன் மீ

6. னய்யன் யிந்த திருப்பணி கட்டினது நயினார் கோவில் நமச்சிவாய ஆசா

7. ரி மகன் முத்துக் கருப்பன் ஆசாரி."



* புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டு

# இயல் 30

# முத்துப்பேட்டை தேவாலய கல்வெட்டு

சேது நாட்டில் கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள பெரியபட்டினம் கி.பி.12-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.16-ஆம் நூற்றாண்டு வரை பாண்டிய நாட்டில் கடல் வாணிபத்திற்கு உதவிய மூன்று பெருந்துறைமுகங்களில் ஒன்றாகச் சிறந்து விளங்கியது. அப்பொழுது மன்னார் வளைகுடாவில் அகழ்ந்து எடுக்கப்பட்ட முத்துக்களின் சந்தையாக இந்த ஊரின் வடபகுதி அமைந்திருந்தது. இவ்விதம் முத்துக்கள் விற்பனை செய்யப்படும் இடம் இராமேஸ்வரத்திலும் மதுரையிலும் முத்துச்சாவடி என்றும் சோழ மண்டலக் கரையில் முத்துப்பேட்டை என்றும் வழங்கப்பட்டு வந்துள்ளன. இந்தப் பகுதி பெரியபட்டினம் பொலிவு இழந்த நிலையில் முத்துப்பேட்டை என்ற தனி கிராமமாக உருவெடுத்துள்ளது.

கி.பி. 1528-க்கும் கி.பி.1584-க்கும் இடைப்பட்ட காலத்தில் மன்னார் வளைகுடாப் பகுதியில் போர்ச்சுக்கீசியர்கள் ஆதிக்கம் செலுத்தினர். தமிழகத்தில் கத்தோலிக்க கிறித்தவ மதத்தை முதன் முறையாகப் புகுத்தியவர்கள் இந்த போர்ச்சுக்கல் நாட்டு பாதிரிமார்கள் ஆவர்[1]. இவர்கள் 16ஆம் நூற்றாண்டில் தூத்துக்குடிக்கும் இலங்கையின் வடகோடியில் உள்ள யாழ்ப்பாணத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் வாழ்ந்த மீனவர்களிடம் பிரச்சாரம் செய்து அவர்களை இந்தப் புதிய மதத்தை ஏற்றுக் கொள்ளுமாறு செய்தனர். இந்தப் பணியில் முதன் முறையாக இத்தாலி நாட்டில் இருந்து வந்த அந்தோணி கிரிமிநாலிஸ் என்ற கத்தோலிக்கப் பாதிரியார் இந்த நீண்ட கடற்கரையில் பல காலம் சமயப் பணியை மேற்கொண்டிருந்தார். கி.பி.1547-ல் வேதாளை கிராமத்தில் ஏற்பட்ட பூசலில் அவர் கொல்லப்பட்டார். அவரைத் தொடர்ந்து சமயப் பணியை மேற்கொண்ட போர்ச்சுக்கல் நாட்டுப் பாதிரியார் பிரான்சிஸ் சேவியர் என்பவர் கி.பி.1555 வரை தொண்டி வரையான இந்த கடற்பகுதியில் பல சிறிய தேவாலயங்களை நிர்மானித்தார். அப்பொழுது தான் முத்துப்பேட்டையில் உள்ள இந்த சர்வேஸ்வரன் தேவாலயமும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது பொருத்தமான உண்மையாகும். ஏனெனில் இந்தப் பாதிரியார் கீழக்கரையிலும் காரங்காடு, இராமேஸ்வரம், கரையூர் கடற்கரையிலும் தேவாலயங்களை அமைத்துள்ளார் சமயப் பொறைக்கு முன்னோடிகளாக திகழ்ந்த சேதுபதி மன்னர்களில் இறுதி மன்னரான முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி மன்னர் முத்துப்பேட்டை தேவாலயத்தின் பராமரிப்புச் செலவிற்காக சங்கரன்வலசை என்ற சிற்றூரையும், அதனை அடுத்துளள முத்துப்பேட்டை கிராமத்தையும் இந்த தேவாலயத்திற்கு கி.பி.1781-ல் சர்வ மான்யமாக வழங்கி உத்தரவிட்டார். இந்த தானத்தை குறிக்கும் வகையில் இந்த கல்வெட்டினைப் பொறித்து வைத்தார்.

மேலும், இந்தக் கல்வெட்டில் முத்துப்பேட்டை சுங்கச் சாவடியில் இருந்து நாள்தோறும் இரண்டு பணத்தினை

1. Jaya seela Stephen Dr. - Portugeesh in Tamil Nadu (1998)

தேவாலயத்தினர் பெற்றுக் கொள்வதற்காக சேதுபதி மன்னர் உத்தரவிட்டதையும் இந்தக் கல்வெட்டு வாசகம் தெரிவிக்கிறது. இந்த தானசாசனம் பற்றிய செய்தியைக் கொண்ட செப்புப்பட்டையம் ஒன்றும் தனியாக தேவாலயத்திற்கு வழங்கப்பட்டுள்ளது[1]. இந்தக் கல்வெட்டு பெரியபட்டினம் முகமமதியாபுரம் பகுதியிலிருந்து கிழக்கே கடற்கரைக்குச் செல்லும் வழியில் ஒரு தோட்டத்தின் அருகில் உள்ள கல்லில் காணப்படுகிறது. இந்தக் கல்வெட்டு அமைந்துளள தோட்டத்திலேயே இந்தக் கல்வெட்டின் நான்கு எல்கைகளில் ஒன்றினை கிழக்கு எல்கையை குறிபபிடும் வகையில் இங்கு ஒரு புரவுக்கல் எல்லைக் கல்லாக தனியாக நாட்டப்பட்டுள்ளது. இந்த எல்லைக் கல் கல்வெட்டு வரலாற்றிற்கு ஒரு புதிய செய்தியையும் அளிப்பதாக உள்ளது. அதுவரை பாண்டிய மன்னர்களும், சேதுபதி மன்னர்களும் சிவாலயங்களுக்கு வழங்கிய நிலக்கொடையின் எல்லையைக் குறிக்கும் சூலம் பொறிக்கப்பட்ட புரவுக்கற்களை நாட்டி வந்தனர். இதே போல பெருமாளது விண்ணகரங்களுக்கு வழங்கப்பட்ட நிலக்கொடையின் எல்லையைக் குறிக்க நாராயண மூர்த்தியின் சக்கரத்தை சின்னமாகக் கொண்ட திரு ஆழிக்கல் எல்லைக் கற்களாக நாட்டப்பட்டன.

இந்த நிலக்கொடை கிறித்தவ தேவாலயத்திற்கு தானமாக வழங்கப் பட்டிருப்பதால் இந்த நிலக்கொடைக்கு கிறித்தவர்களின் புனிதச் சின்னமான சிலுவை உருவம் பொறித்த எல்லைக்கல் நாட்டப்பட்டிருப்பது தெரியவருகிறது. தமிழக நிலக்கொடை வரலாற்றிற்கு இது ஒரு புதிய செய்தியாகும். இந்தக் கல்வெட்டின் முழுமையான வாசகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### *கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு:**

***1. "ரவிகுல முத்து விசைய ரெகுநாத ராமலிங்க சேதுபதி காத்த தேவ***

***2. ரவர்கள் பிரிதிவிராச்சியம் பரிபாலனம்பண்ணியருளா நின்ற சாலிவாகன***

---

1. டாக்டர் எஸ்.எம்.கமால் அவர்கள் எழுதிய சேதுபதி மன்னர் செப்பேடுகள் (1994) செப்பேடு எண் 70.

3. சகாப்தம் 1702 கலியுகம் 4872 மேல் செல்லா
4. நின்ற பிலவ ஷ கார்த்திகை மீ5 தேதி முத்துப்பேட்டை சருவேசுவ
5. ரன் கோயிலுக்கு சருவமானியமாக கு
6. டுத்த நிலமாவது முத்துப்பேட்டை சருவேசுவரன் கோயி
7. லும் சங்கரவலசை
8. யாவது சக்கிலியன் குண்டுக்கு தெற்கு எல்லையாவது
9. கிழக்கு மேற்கு எல்கையாவது வண்ணானூரணிக்கு வடக்கு எல்கை
10. தளம் புளி இன்னான்கு எல்கை நிலமும் இந்தக் கோவிலுக்கு விட்டுக் கொடுத்தது.
11. இன்னான்கு எல்கைக்குட்பட்ட மரவடை
12. மாவடை கீழ்நோக்கிக் கிணறு மேல்நோக்கிய மரங்கள்
13. நிதிநிட்சேபம் செலதரு பாஷாணமெனப்படும் அஷ்ட போக சுவா
14. மியங்களும் வித்யாதி விக்கிரயங்களுக்கு யோக்கிய
15. மாகவும், பாத்தியவராவர்களுக்கு பெரியபட்டணமுத்துப்
16. பேட்டை சுங்கத்தில் நித்தம் இரண்டு பணம்
17. ஆதி சந்திராதித்த வரைக்கும்-ஆண்டு அனுபவித்துக் கொள்வராகவும்"

* புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு
1. A.R.E. 1944/45

# இயல் 31

# இராமநாதபுரம் ஜமீன்தார்கள்

மறவர் சீமையின் தன்னரச மன்னர்களில் கி.பி.1762 முதல் இராமநாதபுரம் மன்னராக இருந்த முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி ஆற்காட்டு நவாப்பின் முகவர்களாகப் பணியாற்றிய ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கு அவர்கள் விரும்பிய வண்ணம் இராமநாதபுரம் சீமையில் வியாபாரச் சலுகைகளோ அல்லது முன்னுரிமைகளோ வழங்க மறுத்து வந்ததால் அவரை ஆட்சி பீடத்தில் இருந்துஅகற்றுவதற்கு சூழ்ச்சி செய்தனர். அவர்களது ரகசியத் திட்டத்தைக் கி.பி.1794-ல் கம்பெனியாரின் தலைமை ஒப்புதல் அளித்தது. ஆனால் அந்த வருடம் இராமநாதபுரம் சீமையில் கடுமையான வறட்சி நிலவி வந்ததால் அந்தத் திட்டத்தை கி.பி.1795-ல் செயல்படுத்தினர். அந்த ரகசிய திட்டத்தின்படி 8.2.1795ஆம் தேதி அதிகாலையில் கம்பெனியாரது பாளையங்கோட்டை கயத்தாறு, பாசறைகளில்

இருந்துவந்த படை அணிகள் இராமநாதபுரம் கோட்டைக்கு யாரும் எதிர்பாராத வண்ணம் நுழைந்து ஆக்கிரமித்து சேதுபதி மன்னரையும் கைது செய்து திருச்சிக் கோட்டைக்கு அனுப்பிவைத்தது.[1]

அன்று முதல் கம்பெனியாரால் பறிமுதல் செய்யப்பட்ட சேதுநாடு ஆங்கிலேயரது நேரடி நிர்வாகத்தில் இயங்கத் தொடங்கியது. கலெக்டர் பவுனி என்பவர்இராமநாதபுரம் சீமை நிர்வாகத்தை ஏற்று நடத்தி வந்தார். சேதுபதி மன்னரது அத்தாணி மண்டபமான இராமலிங்க விலாசம் அரண்மனையில் அவரது கச்சேரி அமைக்கப்பட்டது. சேதுநாட்டில் தொடர்ந்து ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சிகளினாலும் சிவகங்கைப் பிரதானிகளான மருதுபாண்டியர்கள், சித்திரங்குடி மயிலப்பன் சேர்வைக்காரர், மீனங்குடி முத்துக்கருப்பத்தேவர் ஆகிய மக்கள் தலைவர்களது தூண்டுதலினாலும், கம்பெனியாரது உடைமைகளுக்கும், கம்பெனி அலுவலர்களது உயிருக்கும் மிகுந்த சேதம் ஏற்பட்டது. ராணுவத்தைப் பயன்படுத்தி இந்த வன்முறைக் கிளர்ச்சிகளை அடக்கி ஒடுங்கிய கம்பெனி நிர்வாகம் சேதுபதிச் சீமையின் நிர்வாகத்தை மாற்றி அமைக்க முற்பட்டனர். கும்பெனி நிர்வாகத்திற்கும், குடிமக்களுக்கும் இடையில் இடைத்தரகர் ஒருவரை நியமனம் செய்விப்பது மூலம் கும்பெனி நிர்வாகத்தினர் இழப்பீடுகளிலிருந்து தங்களை காத்துக் கொள்ள புதிய முறை ஒன்றை இங்கு நடைமுறைப்படுத்தினர். இதன் பெயர் ஜமீன்தாரி முறை ஆகும்.

இந்த முறையினை கும்பெனியார் கி.பி.1797-ல் முதன்முறையாக பீகார் ஒரிசா மாகாணங்களின் பகுதிகளை உள்ளடக்கிய வங்க மாநிலத்தில் வெற்றிகரமாக செயல்படுத்தி வந்தனர். இந்த முறையின் படி ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியின் முகவராக ஒருவர் நியமிக்கப்படுவார். அவரது முதன்மையானதும், இறுதியானதுமான ஒரே பணி, குடிமக்களிடமிருந்து கும்பெனியாருக்கு செலுத்த வேண்டிய தீர்வைகளை ஒழுங்காக வசூலித்து செலுத்துவது ஆகும். அந்த முகவர் ஜமீன்தார் என்றும் அவர் வரிவசூலிக்கும் பகுதி

1. Militry Consultations Vol 188A, 8.2.1795, PP 322 - 23

ஜமீன்தாரி எனவும் அழைக்கப்பட்டது. இங்கு இராமநாதபுரம் ஜமீன்தாரி நிர்வாகத்தின் தலைவருக்கு வேறு எவ்வித அதிகாரமும் கிடையாது. சேதுபதி மன்னர் மேற்கொண்டிருந்த நீதி விசாரணை, தண்டனை வழங்குதல், நலப்பணிகள் போன்ற பொதுப்ணிகளை மேற்கொள்வதற்கு முதன்மை நீதி மன்றங்களும் (செசன்ஸ் கோர்ட்) நியாயம் வழங்க நடுவர்களும் (மேஜஸ்ட்டிரேட்டுகளும்) தனியாக நியமனம் செய்யப்பட்டனர். இந்தப் புதிய முறை சேதுபதிச் சீமையில் 21.2.1803 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் படி சிறையில் அடைக்கப்பட்ட முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் தமக்கை ராணி மங்களேஸ்வரி நாச்சியார் முதலாவது ஜமீன்தாராக நியமனம் செய்யப்பட்டார். ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம் முதல் தேதியில் தொடங்கி அடுத்த ஆண்டு ஜூன் மாதத்துடன் முடியும். பசலி என்ற புதிய நிதி ஆண்டில் இராமநாதபுரம் ஜமீன்தார் ஆங்கில கம்பெனியாருக்கு 3 1/4 இலட்சம் ரூபாயை குடிமக்களது தீர்வையாக வசூலித்து செலுத்த வேண்டும்.

இந்த முறையில் கி.பி.1803 முதல் கீழ்க்கண்டவர்கள் இராமநாதபுரம் ஜமீன்தார்களாக பணியாற்றி வந்துள்ளனர்.

1. ராணி மங்களேஸ்வரி நாச்சியார் கி.பி.1803-1812

2. அண்ணாசாமி என்ற விஜயராகுநாத சேதுபதி கி.பி.1813

3. ராணி சிவகாமி நாச்சியார் - 5.2.1814 முதல் 5.3.1815 வரை

4. சதர் அதாரத் என்ற நீதிமன்ற நிர்வாகம்- 6.2.1816 முதல் கி.பி.1829 வரை

5. முத்து விஜயன் சேதுபதி - கி.பி.1830

6. ராமசாமி சேதுபதி - (த/பெ. அண்ணாசாமி சேதுபதி சுவீகாரப் புத்திரன்) - கி.பி.1830-1840

7. ராமசாமி சேதுபதியின் மக்களான பர்வதவர்த்தினி, மங்களேஸ்வரி ஆகியோருக்காக மேற்படியாளர்களது கார்டியன் ராணி முத்து வீராயி நாச்சியார் - கி.பி.1830 முதல் 1840 வரை

8. ராணி பர்வதவர்த்தினி நாச்சியார், (க/பெ. ராமசாமி சேதுபதி) - 20.4.1846 முதல் 1861 வரை

9. ராஜா முத்துராமலிங்க சேதுபதி - கி.பி.1861 முதல் 1873 வரை (ராணி பர்வதவர்த்தினி நாச்சியாரின் சுவீகாரப்புத்திரன்)

10. ராஜா பாஸ்கர சேதுபதி - கி.பி.1873 முதல் 1903 வரை

11. நீதிமன்ற நிர்வாகம் - கி.பி.1903 - கி.பி.1914 வரை

12. ராஜராஜேஸ்வரா என்ற முத்துராமலிங்க சேதுபதி - கி.பி.1914 முதல் 1924 வரை

13. நீதிமன்ற நிர்வாகம் - கி.பி.1925 முதல் 1928 வரை

14. ராஜா சண்முக ராஜேஸ்வர சேதுபதி - கி.பி.1929 முதல் 1948 வரை

ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியார் மறவர் சீமையின் தன்னரசை கி.பி.1795-ல் பறிமுதல் செய்து தங்களது உடமையாக மாற்றியும், அப்பொழுது இருந்த முத்துராமலிங்க சேதுபதி மன்னரைப் பாதுகாப்புக் கைதியாக திருச்சிக் கோட்டையில் அடைத்தனர். மேலும் மறவர் சீமையை அவர்களது நேரடி நிர்வாகத்தில் இருத்திக் கொண்டனர். இந்தநிலை எட்டு ஆண்டுகளுக்கு நீடித்தது.

இதற்கிடையில் சிறைப்பட்ட சேதுபதி மன்னரது தமக்கையார் மங்களேஸ்வரி நாச்சியார் மறவர் சீமையின் பட்டத்துக்குத் தாமே வாரிசு எனத் தெரிவித்து ஆற்காட்டு நவாப்பினையும், ஆங்கிலக

கிழக்கிந்திய கம்பெனியின் சென்னை கவர்னரையும் அணுகினார். ஆனால் உடனடியாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் 29.4.1803-ஆம் தேதியன்று மங்களேஸ்வரி நாச்சியாரை இராமநாதபுரம் ஜமீன்தாரினியாக ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியார் நியமனம் செய்தார்கள். அப்பொழுது சுமார் 6 இலட்சம் ரூபாய் வருட வருமானமுள்ள இராமநாதபுரம சமஸ்தானத்தில் குடிமக்களிடம் தீர்வையை வசூலித்து மூன்றேகால் லட்சம் ரூபாயை ஆண்டு தோறும் ஆங்கில கம்பெனியாருக்குச் செலுத்த வேண்டியது ராணியாரது பொறுப்பாகும். நியாயம் வழங்குதல், குற்றவாளியைத் தண்டித்தல் போன்ற அதிகாரங்கள் ராணியாருக்குக் கிடையாது.

இந்த ராணியாரைப் பற்றிய உருவப்படமோ, கற்சிலையோ இல்லாத நிலையில் இவரது உருவத்தைச் சரியாகக் கற்பனை செய்து பார்த்துக் கொள்ளும் வகையில் ஆவணம் ஒன்று கிடைத்துள்ளது. இது கி.பி.1804ல் லண்டனிலிருந்து கொழும்பு நகருக்கு வந்த ஜார்ஜ் வாலண்டினா பிரபு என்பவர் இராமேஸ்வரத்திற்கும் அடுத்து இராமநாதபுரத்திற்கும் வருகை தந்தார். இராமநாதபுரம் அரண்மனையில் ராணியாரைச் சந்தித்து அவர் வரைந்துள்ள சில குறிப்புகளிலிருந்து இவர் உருவத்தை ஓரளவு தெரிந்து கொள்ளும் வகையில் அவை அமைந்துள்ளன.

"இராமநாதபுரம் ராணி மங்களேஸ்வரி நாச்சியாரைச் சந்தித்தேன். அண்மையில் அவரது கணவர் காலமாகியிருந்தார். ஆதலால் ராணியாரது தோற்றத்தில் சிறிது மெலிவு காணப்பட்டது. நல்ல மென்மையான வெள்ளை நிற சீனப்பட்டினால் சேலையும், மேலாடையும் அணிந்திருந்தார். சுமார் ஆறடி உயரம் உள்ள நல்ல தோற்றம், உடலின் நிறம் கருமையாக இருந்ததுடன் அவரது பற்களும் கருமையான பூச்சுடன் கருமையாகக் காணப்பட்டது. இரு தோள்களையும் தொட்டு தொங்கும் பொன்னாலான தொங்கட்டான்களை அவரது இரு காதுகளிலும் அணிந்திருந்தார். பார்ப்பதற்கு நல்ல தோற்றம் உடையவராக இருந்தார். ஆனால்

கவர்ச்சிகரமாக இல்லை." இவைதான் அந்த பிரமுகர் வரைந்துள்ள குறிப்புக்களாகும்.



# இயல் 32

# பூலாங்குடி கல்வெட்டு

இந்தப் புதிய நிர்வாக அமைப்பின் தலைவராக கி.பி.1812ஆம் ஆண்டு வரை நீடித்த ராணி மங்களேசுவரி நாச்சியார் பல ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டார். அவரது அறக்கொடைகள் தொன்னூறு தர்மாசனங்கள் என வழங்கப்பெற்றன. சேதுக்கரை ஸ்ரீனிவாசப்பெருமாள் ஆலயம், நயினார் கோயில் ஆலயம், திருச்செந்தூர் முருகன் ஆலயம், மதுரை திருஞான சம்பந்தர் மடம் ஆகியவை அந்த அறக்கொடைகளில் அடங்கும். மதுரையிலிருந்து இராமநர்தபுரம் கோட்டைக்கு வரும் வழியில் இராமநாதபுரத்திற்கு பத்து கல் தொலைவில் ஒரு சத்திரம் ஒன்றினையும் ஏற்படுத்தினார். இந்தப் பகுதி நாளடைவில் சத்திரக்குடி என்ற ஊராயிற்று.

இவரது நிர்வாகத்தின் பொழுது ராஜசிங்கமங்கலம் கண்மாய், உள்வாயிலில் உள்ள பூலாங்குடி என்ற கிராமத்தில் பூவில் இருந்த திருக்கண்ணுடைய ஐய்யனாருக்கு

வழங்கிய அறக்கொடையைப் பற்றிய கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. அதன் பகுதிகள் சிதைந்து விட்டதனால் அதனை படிக்க முடியவில்லை. ராஜசிங்கமங்கலத்திலிருந்து பூலாங்குடிக்கு செல்லும் வண்டிப் பாதையில் இந்தக் கல்வெட்டு அமைந்திருந்தது.

*இந்தக் கல்வெட்டு வாசகம் கீழே வருமாறு:**

*வரி 1. "1806ஆம் வருடம் சூலை மாதம் 24ம் தீ அட்சய வருஷம் ஆடி மாதம் 1ம் தேதி ஸ்ரீ மது ஹிரண்ய கர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜய ரெகுநாத ராணி சேதுபதி*

*வரி 2. மங்களேஸ்வரி நாச்சியாரவர்கள் சாலைக் கிராமம் தாலுகா வரவணி மாகாணம் சேகரம் பூலாங்குடி கிராமம் பூவில் இருந்த திருக்கண்ணுடைய அய்யனார்க்கு உபயமான்யம் எல்கையாவது . . . . . . .*

*வரி 3. வாணியக்குடி கிராமம் துரைச்சாமி சேருவை புஞ்சைக்கும் கிழக்கு புல்லாரேந்தல் காலரங்கரைக்குத் தெற்கு புஞ்சை மாலுக்கும் கீழ் மேலோடிய பாதைக்கும்*

*வரி4. தென்வட மேல் ஓடிய பாதைக்கும் மேற்கு நஞ்சை மாலுக்கும் வடக்கு இந்த நான்கெல்லைக்கும் உள்பட்ட மான்யம் அரண்மனை மான்யம்"*

இந்தக் கல்வெட்டிலிருந்து கி.பி.19ஆம் நூற்றாண்டில் இராமநாதபுரம் சமஸ்தானத்தில் 17 பிரிவுகளில் ஒன்றாக சாலைக்கிராமம் இருந்து வந்தது என்றும் (தற்பொழுது இளையான்குடி வட்டத்தில் உள்ளது) இந்தப் பிரிவுகளில் பகுதியாக தாலுக்கா, மாகாணம் என்ற அமைப்புக்கள் இருந்து வந்ததும் தெரியவருகிறது.

* புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு

பொதுவாக செம்பி நாட்டு மறவர்கள் சிறு தெய்வங்களை, கிராமக் காவல் தெய்வங்களை வணங்குவதே இல்லை எனச் சொல்லப்படுவது உண்டு. ஆனால் செம்பி நாட்டு, மறவர் பிரிவைச் சேர்ந்த சேதுபதிகள் குறிப்பாக கூத்தன் சேதுபதி, திருமலை ரகுநாத சேதுபதி, முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி ஆகியோர் கிராமக் காவல் தெய்வமான ஐயனார்க்கு ஏற்கனவே நிலக்கொடைகள் வழங்கியுள்ளனர். அந்த வரிசையில் இந்த நிலக்கொடையும் அமைந்துள்ளது.

அண்மையில் இந்தக் கல்வெட்டினை ஆய்வு செய்வதற்காக பூலாங்குடி கிராமத்திற்கு சென்ற பொழுது மேலே சொன்ன கல்வெட்டு 20 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த இடத்தில் இப்பொழுது காணப்படவில்லை. என்றாலும் பூலாங்குடிக்கு மேற்கே உள்ள சாத்தனூர் கிராமத்தைச் சார்ந்தவரும அறந்தாங்கியில் கூட்டுறவுத் துறையில் பணிபுரிந்த திரு. சாத்தையா என்பவரிடம் மேலே சொன்ன கல்வெட்டு செய்தியினை உறுதி செய்யும் ஓலைமுறி இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் இந்த ஓலைமுறியில் இக் கல்வெட்டில் விடுபட்டுப்போன பல பகுதிகளும் முழுமையாக காணப்படுகின்றது. மேலேகண்ட கல்வெட்டில ஒன்று முதல் நான்கு வரிகள் வரை கண்டுள்ள செய்திகளை தவிர கீழ்கண்ட செய்திகளும் அந்த ஓலைமுறியில் காணப்படுகிறது.

**ஓலைமுறியில் வாசகமாவது**

**1806 ஆம் வருடம் சூலை மாதம் 24ஆம் தேதி அட்சய வருஷம் ஆடி மாதம் 1ஆம் தேதி ஸ்ரீமது மகாராசா ஹிரணியப்ப கெர்ப்பயாஜி ரவிகுலமுத்து விசைய ரெகுநாத ராணி சேதுபதி மங்களேசுவரி நாச்சியாரவர்கள் சாலைக்கிராமம் தாலுக்கா வரவணி மாகாணம் சேகரம் பூலாங்குடி கிராமம் செக்கு பந்திக் கணக்கு எல்லையாவது.**

வாணியக்குடி கிராமம் எல்கைக்கும் துரைச்சாமி சேர்வராயன் புஞ்சைக்கும் பரையன் கல்லறைக்கும் கிழக்கு வடபாற்கு எல்கையாவது மேற்படி வாணியக்குடி எல்லைக்கும் துரைச்சாமி சேர்வை புஞ்சைக்கும் நேர் வடக்கு ஓடிய பறம்பக்குடி எல்லைக்கும் செங்குடிக் கண்மாய் தென்கரை முனங்குக்கும் பில்லரேந்தல் வட கடைசி வரை கிழக்கு வடபாற்கு எல்கையாவது செங்குடி எல்கைக்கும் வனகாத்தன் புஞ்சை உழவடைக்கும் பல்ல உடையான் புஞ்சைக்கும் அவன் உழவடைக்கும் நேர் கிழக்கு ஓடிய கள்ளிக் கண்மாய் வடகடமாறிக்கும் யிடசவிரிராயி உழவடை புஞ்சைக்கும் தெற்கு கீழ்பாற்கு எல்கையாவது கஸ்ப்பா இராஜ சிங்க மங்கலம் பெரிய கண்மாய் உத்தரவு புஞ்சை மாலுக்கும் அழக தேவன் புஞ்சைக்கும் கொழுஞ்சித் திடலுக்கும் நெடும் புலிக கோட்டை கருப்பன் ஆரோக்யம் புஞ்சைக்கும் தளவாய் குடும்பன் புஞ்சைக்கும் ரெட்டை மால் பிரிவுக்கும் மேற்கு தென் பாற்கு எல்கையாவது கோவில் ஏந்தல் எல்கைக்கும் அலமேலு அம்மாள் உழவடை புஞ்சைக்கும் மேற்படி சாத்தாயி உழவடை புஞ்சைக்கும் நேர் மேற்கு ஓடிய கோவிலேந்தல் கண்மாய் கரைக்கும் பூலாங்குடி கண்மாய் தென்கடைசி வரை பொய்யாரம்பலம் புஞ்சைக்கும் வாணியக்குடி எல்கைக்கும் மரிய அலங்காரம் அந்தோணி புஞ்சைக்கும் மேற்படி வெள்ளையத்தாள் புஞ்சைக்கரை உழவுக்கும் மரிய அலங்காரம் அந்தோணி நெடுவாலப்பனை புஞ்சைக்கும் வடக்கு.

நான்கு எல்கைக்கும் உள்பட்ட கோல்

அளவுப்படி 72 முழக்கோலால் நிகுதி செய்து 16 அடியும் விலக்கடி ஒன்றும் வான் பயிர்குழி 8 அடி கம்பால் நிகுதி செய்து கருப்பக் குடும்பன் அளவுப்படி முத்திருளப் பிள்ளை காலடியால் அளவு 72 முழ சங்கிலி கெச அளவுப்படிக்கு மேற்படி பூலாங்குடி கிராமம் சதுர நான்குமால் உள்பட நஞ்சை புஞ்சை அளவுப்படி நஞ்சை உரையடி 75 கலம் நத்தம் இடுப்பு விரையடி 15 கலம் கண்மாய் நீர்நிலை விரையடி 15 கலம். பூவில் உகந்த திருக்கண்ணுடைய அய்யனார்க்கு உபய மான்யம் எல்கையாவது வானியக்குடி கிராமம் துரைச்சாமி சேர்வை புஞ்சைக்கும் கிழக்கு வானியக்குடி கிராமம் துரைச்சாமி சேர்வை புஞ்சைக்கும் புல்லரேந்தல் காலாங்கரைக்கு தெற்கு புஞ்சை மாலுக்கும் கீழ்மேலோடிய பாதைக்கும் தென்வட மேல் ஓடிய பாதைக்கும் மேற்கு நஞ்சை மாலுக்கும் வடக்கு நான்கு எல்கைக்கும் உள்பட்ட மான்யம் அரண்மனை மான்யம். அய்யனாருக்கு உபமான்யத்துக்கு கணித்துக் கொடுத்த பட்டயம் மங்களேசவரி நாச்சியாரது பட்டயத்தில் தாக்கல் செய்த விரையடி பத்து கல விரையடியும் இந்த மான்ய நிகுதி மால் சுவாமி நிலை ஊறணி திட்டுத் திடல் இந்த நான்கு எல்கைக்குள் உபமான்யம் 10 கல விரையடியும் 1216 ஆம் பசலியில் தாக்கலான நிலமான்யத்தை வேனுமென்று பயிர் சாகுபடி செய்தாலும் வேல் வாரத்தார் கணக்கு அரண்மனையார்கள் கண்டுபிடிச்சு கணக்கு மூலம் அப்புறப்படுத்த காரணம் உண்டு. 2ஆவது ஊறணி வீட்டடி ஊரணி 1 1/4 கல விரையடி, முனியய்யா ஊறணி 1 கல விரையடி கொந்தகன் காளி ஊறணி 1 கல விரையடி

கொந்தகன் சந்தரன் திடல் 10 கல விரையடி கொளுஞ்சித் திடல் விரையடி 2 கல விரையடி மயானம் 4 குறுக்கம் விரையடி இரு துணியாக விரையடி 19 கல விரையடி. புஞ்சை கழிவு 3 கல விரையடி ஆக நஞ்சை விரையடி 22 கலம். அனாதி தரிசு குறுக்கம் 30. அடி செக்கு புஞ்சை குறுக்கம் 50. ஓடை உடைப்பு குறுக்கம் உவர்க்கழிவு புஞ்சை குறுக்கம் 60. ஆசிர் இல்லாத புஞ்சை குறுக்கம் 54. ஆக கழிவு புஞ்சை 214 ஆக கழிவு நீக்கி அச்சுக் கண்ட புஞ்சையில் நஞ்சை மாலில் 3 கல விரையடி புஞ்சை கழிவு கழிச்சு புல்லரேந்தல் கள்ளிக் கண்மாய் பூலாங்குடி கிராமம் ஒரே எல்லையாக தருசு நீக்கி புஞ்சை குறுக்கம் 784க்கு கொத்து கணக்கு குமாஸ்தா கொத்துக் கணக்கு திருப்பதி அய்யங்கார் மேற்படி குமாஸ்தா பொன்னையா பிள்ளை அம்பலம் சே. ராமசாமித் தேவர் மேற்படி அம்பலம், முத்துவிரன் தேவர் மேற்படி அம்பலம், முத்து முனித் தேசிற்கு மேற்படி அம்பலம், வட்டக்காள் கோவில், அய்யனார் கோவில் ஸ்தானிகள் வகுத்து வேளார், சாத்த வேளார், நோட்டம் யிபுறாவு ராவுத்தன் முக்கந்து வெள்ளையக் கோன் தச்சு கொல்லு முத்து ஆசாரி யேட்டோலை அழகன் குப்பய்ய நாடன், குடும்பு கருப்பன், பற சாத்தன் மாசி சங்கிலிய சாத்தான் தோட்டி ஊர்காவலன் யிவிகளுக்கும் பட்டயத்தில் தாக்கலாயிருக்கின்ற புஞ்சை நஞ்சை அடங்கல் நஞ்சைக்கு மேல் வாரம் 6-ம் கிழவாரம் 4-ம் களை வெட்டு கதிர் அறுப்பு உள்பட புஞ்சைக்கு 3 கல விரையடியில் ஒர வாரம் மேல்வாரம் ஒருவாரம் குடிகளுக்கு ரெண்டு பங்கு கொடுப்பதாகவும்,

மிராசுதார்க்கு அரண்மனையில் மானிய சுதந்திரம் கொடுப்பதாகவும் அரண்மனையில் பிரம்ம பட்டரையில் குடும்பன் மூலமாக கிராம பட்டரை மேல் வாரத்தில் கொடுக்கப்படும் இதை பட்டயமாகக் கட்டிக் கொள்ளவும். பூலாங்குடி கிராமம் மிராசுதார் 9 கூத்தன் குடிகளுக்கும் கட்டுப்பட்ட செக்குப் பந்தி கணக்கு இதைப் பட்டயமாகக் கட்டிக் கொள்ளவும்.

அய்யனார் ஊறணி 1 கல விரையடி

வீட்டடி ஊறணி 1 1/4 கல விரையடி

முனியய்யா ஊரணி 1 கல விரையடி

கொந்தகன் ஊரணி 1 கல விரையடி

வெஸ்சு நரசிம்ம ராவ் நாலணா பொக்கிஷம் எழுதப்பட்டது அரண்மனைப் பட்டயம்

<u>குறிப்பு</u>

1 கல விரையடி - 1 ஏக்கர் 17 செண்ட்



# இயல் 33

# இதம்பாடல் கிராமம் ஆண்ட அம்மன் கோயில் கல்வெட்டு

தன்னரசுச் சீமையாக இருந்த சேதுபதிகளின் மறவர் சீமையை கி.பி.1803-ல் ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியார் ஜமீன்தாரியாக அறிவித்ததுடன் முதலாவது ஜமீன்தாரராக ராணி மங்களேஸ்வரி நாச்சியாரை நியமனம் செய்திருந்ததை முன்னர் பார்த்தோம்.

இவர் கி.பி.1812ல் காலமானதால் அவரது சுவீகார புத்திரன் அண்ணாச்சாமி என்பவர் ஜமீன்தார் பொறுப்பை ஏற்றார். இவரை அடுத்து இராமநாதபுரம் ஜமீன்தாரராக நியமனம் பெற்ற முத்துவிஜயன் கி.பி.1830ல் காலமானதால் அவரது மனைவி முத்து வீராயி நாச்சியாரின் சகோதரரும் வளர்ப்பு மகனுமான ராமசாமி சேதுபதி கி.பி.1840 வரை ஜமீன்தாரராக இருந்து காலமானார். அவரது பெண் மக்களான மங்களேஸ்வரி நாச்சியார்

மற்றும் துரைராஜ் நாச்சியார் ஆகியோரது கார்டியனாக இருந்த முத்து வீராயி நாச்சியார் ராணிமுத்து வீராயி நாச்சியார் என்ற பெயருடன் ஜமின்தாரினி ஆனார்.

இவரது நிர்வாகத்தின் பொழுது இராமநாதபுரம் ஜமின்தார் ஆக சரியான வாரிசு யார் என்பதைப் பற்றிய பல வழக்குகள் மதுரை நீதிமன்றத்திலும், சென்னை மாநகர நீதிமன்றத்திலும் தொடரப்பட்டன. அதே சமயத்தில் ராணி முத்து வீராயி நாச்சியார் பல பொதுப் பணிகளையும் மேற்கொண்டு இருந்தார் என்பதற்குச் சான்றாக விறலிவிடுதூது என்ற சிற்றிலக்கியமும் வேறு சில கல்வெட்டுக்களும் ஆதாரமாக அமைந்து காணப்படுகின்றன.

இராமநாதபுரம் சீமை வரலாற்றில் சேதுபதி மன்னர் மரபினைச் சேர்ந்த மூன்று பெண்மணிகள் கி.பி.18ஆம் நூற்றாண்டிலும் கி.பி.19ஆம் நூற்றாண்டிலும் சமஸ்தானத்தின் பொறுப்பினை ஏற்று சிறப்பாகச் செயல்பட்டு வந்தனர் என்பதை வரலாற்று ஆவணங்கள் தெரிவிக்கின்றன. கி.பி.1762ல் முதலாவது முத்து இராமலிங்க சேதுபதி என்ற பெயருடன் ஆட்சிக்கு வந்த சேதுபதி மன்னர் மிகச் சிறிய பாலகனாக இருந்ததால் அவரது தாயார் முத்துத் திருவாயி நாச்சியார் என்பவர் சேதுபதி மன்னரது அரச பிரநிதியாக கி.பி.1772 வரை அதிகாரம் செலுத்தி வந்தார். கி.பி.1771ல் சேதநாட்டின் மீது படையெடுத்து வந்த தஞ்சை மராட்டிய மன்னர் துல்ஜாஜியும் அவனது படைகளும், சேது நாட்டின் வடக்குப் பகுதியைக் கைப்பற்றி இராமநாதபுரம் கோட்டையை முற்றுகை இட்டனர். சுமார் 40 நாட்களுக்கு மேல் நீடித்த இந்த முற்றுகையின் பொழுது இராணி முத்துத் திருவாயி நாச்சியார் மிகுந்த திறமையுடனும், ராஜ தந்திரத்துடனும் நடந்து கொண்டதுடன் மராட்டிய மன்னர் துல்ஜாஜி மிகுந்த இழப்புகளுக்குப் பிறகு ராணியுடன் சமரச உடன்பாடு ஒன்றில் கையெழுத்து இட்டுவிட்டு வெறும் கையுடன் திரும்பிச் சென்றார். அடுத்து 29.5.1772ல் ஆற்காடு நவாப் முகமது அலியின் படைகளும் ஆங்கிலேயரின் கூலிப் படைகளும்

இராமநாதபுரம் கோட்டையை முற்றுகையிட்டதுடன் இராணி முத்துத் திருவாயியை சரண் அடையுமாறும் ஆர்க்காட்டு நவாப்பிற்குக்கப்பம் செலுத்த ஒப்புதல் அளிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது. இந்த யோசனைகளை இராணியார் முழுவதுமாக மறுத்துப் போரினை மிகுந்த தைரியத்துடன் நடத்தினார். 3.6.1772ல் 3000க்கும் மேற்பட்ட மறவர்களைப் பலியாகக் கொண்ட இந்தப் போர் தோல்வியில் முடிவுற்றது இருந்தாலும் ராணியாரின் துணிச்சலும், வீரச் செயல்களும் பாராட்டப்பட வேண்டியவை.

இந்த வரிசையில் இரண்டாவது பெண்மணியான ராணி மங்களேஸ்வரி நாச்சியார் 29.4.1803ல் இராமநாதபுரம் ஜமின்தாரினியாக நியமனம் பெற்றார். இவரது 10 வருடகால ஆட்சியில் இராமநாதபுரம் ஜமின்தாரியின் பல அறப் பணிகளை மேற்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. இராமநாதபுரம் சொக்கநாதர் கோயில் ஸ்ரீ உத்தரகோசமங்கை மங்களநாதர் கோயில் மற்றும் நயினார் கோயில், அகத்தியர் குட்டம் ஸ்ரீனிவாசப் பெருமாள் கோவில் ஆகியவைகளில் பல திருப்பணிகளை இவர் மேற்கொண்டார். மேலும் சத்திரக்குடி, இராமநாதபுரம், உத்தரகோசமங்கை ஆகிய ஊர்களில் யாத்திரிகர்களுக்கு புதிய சத்திரங்களையும் அமைத்தார்.

இத்தகைய் சிறப்பான நிர்வாகிகளின் வரிசையில் வந்த இராணி வீராயி நாச்சியார் இராமநாதபுரம் சொக்கநாதர் கோயிலுக்கு எதிர்ப்புறம் அன்ன சத்திரம் ஒன்றையும், இராமேஸ்வரம், கன்னியாகுமரி சாலையில் இதம்பாடலில் பிறிதொரு சத்திரத்தையும் ஏற்படுத்தினார். இவரது திருப்பணிகள் பற்றிய மூன்று கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. அவைகளை இப்பொழுது பார்க்கலாம்.

இதம்பாடல் கிராமம் கண்மாய்க் கரையில் அமைந்துள்ள இந்த சிறிய கோயிலில் இந்தக் கல்வெட்டுக் காணப்படுகிறது.

இந்தக் கல்வெட்டின் காலம் கி.பி.1832. இந்தக் கோயிலை ராணி முத்து வீராயி நாச்சியார் நிர்மானித்தார் என்ற செய்தியைக் குறிப்பிடுவதே இந்தக் கல்வெட்டின் செய்தியாகும். இந்தக் கோயிலின் இறைவியான ஆண்ட அம்மன் என்ற பெயரில் அம்மன் சிலை ஒன்று பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. சேது நாட்டில் ஆண்ட அம்மன் என்ற பெயரில் சிறு தெய்வம் வேறு எந்தக் கோயிலிலும் இல்லை. ஆனால் அபிராமத்தை அடுத்து ஆண்ட நாயகிபுரம் என்ற சிற்றூர் மட்டும் உள்ளது. ஆண்டநாயகி என்ற பெயர் தடாதகை பிராட்டியாக பிறந்து மதுரையை ஆண்ட மீனாட்சி அம்மனின் மறுபெயர் ஆகும். இந்தக் கல்வெட்டில் இராணி முத்துவீராயி நாச்சியாரை அப்பொழுதைய ஜமின்தாரான ராமசாமி சேதுபதியின் தாயார் என குறிப்பிட்டு இருப்பது சில வரலாற்று ஆய்வாளர்களுக்கு குழப்பமாகத் தோன்றலாம். உண்மையில் இந்த ராமசாமி சேதுபதி என்பவர் முத்து வீராயி நாச்சியாரும், முத்து விஜயன் சேதுபதியும் சட்ட பூர்வமாக சுவீகாரம செய்து கொள்ளப்பட்டவர் ராமசாமி சேதுபதி ஆவார். ராமசாமி சேதுபதி முத்து வீராயி நாச்சியாரின் உடன்பிறந்த சகோதரர் ஆவார். ஆனால் இராமநாதபுரம் அரண்மனை மரபு என்பது சேதுபதி பட்டத்திற்கு யார் தேர்ந்தெடுக்கப்பட்டு மன்னராகிராரோ அவர் தமக்கு முன்பு ஆட்சி செய்த மன்னரை தனது தந்தையாகக் கொள்வது என்பது தான் அந்த மரபு. இந்த முறையில் தான் ரெகுநாத கிழவன் சேதுபதி,திருமலை சேதுபதி, மன்னரையும், முத்துவிஜய ரெகுநாத சேதுபதியும், அவருக்கு முன்பு இருந்த கிழவன் சேதுபதியையும் தங்களுக்குத் தந்தையாக அவர்களது செப்பேடுகளில் குறிப்பிட்டு இருப்பது இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

***இந்தக் கல்வெட்டு வாசகம் பின்வருமாறு:****

***1. "உஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1754 கலியுகாதி ஹ 4934***

2. மேல்ச் செல்லாநின்ற பேவிளம்பி ஹ பங்குனி மீ மஹ

3. ாராஜ மஹாராஜ ராஜஸ்ரீ யிரணிய கெற்பயாஜி ரவிகுல முத்

4. து வி ஜிய ரகுநாத சேதுபதி ராசா அவர்கள் பட்ட மகிசி

5. யும் மஹார்ராஜ, ராஜஸ்ரீ விஜய ரகுநாத ராமசுவாமி சேது

6. பதி ராசா அவர்கள் தாயாருமாகிய மஹாராஜ ராஜஸ்ரீ

7. ராணி முத்து வீராயி நாச்சியாரவர்களும், சேஷ்ட பிதாவாகி

8. ய மஹாராஜ ராஜஸ்ரீ முத்துச் செல்லத் தேவராசா அவாகளு

9. ம் இந்த ஆண்ட அம்மன் கோயில்த் திருப்பணித் தர்மம் கட்டி வைத்தா

10. ர்களென்றறிவது உ.



* புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு

# இயல் 34

# இராமநாதபுரம் திரௌபதி அம்மன் கோயில் கல்வெட்டு

இந்தக் கோயில் இராமநாதபுரம் கோட்டைக்குள் இராமநாதபுரம் அரண்மனைக்கு வடக்கே முகவை ஊரணியின் கிழக்குக் கரையில் அமைந்துள்ளது. இந்தக் கோவிலை ராணி முத்துவீராயி நாச்சியாரும் அவரது சகோதரர் முத்துச் செல்லத் தேவரும் திருப்பணி செய்த விவரத்தை இந்தக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

காலம் சென்ற ராமசாமி சேதுபதியின் பெண் மக்கள் இருவருக்கும் சில காலம்வரை அவர்களது தாய்மாமன் முத்துச் செல்லத் தேவர் என்பவர் கார்டியனாக இருந்ததால் அவரது பெயரும் இந்தக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டு இருப்பதுடன் சேதுபதி என்ற பட்டமும் அதில் சேர்க்கப்பட்டுள்ளது.

தொடக்கத்தில் இந்தக் கோயில் யாரால் நிர்மானிக்கப்பட்டது என்பது தெரியவில்லை. பாஞ்சால நாட்டு மன்னது மகள் என்ற வகையில் பாஞ்சாலி என்றும் அந்த நாட்டு மன்னன் துருபதனது மகள் என்ற முறையில் திரௌபதி என்று வழங்கப்பட்ட இந்த இதிகாசப் பெண்மணிக்கு தமிழ்நாட்டில் சில ஊர்களில் கோயில்கள் எழுப்பப்பட்டு இருப்பது அண்மைக்கால நிகழ்வு ஆகும். இராமநாதபுரம் கோட்டையின் தென்பகுதியில் வனசங்கரி அம்மனது கோயிலையும், கோட்டையின் கிழக்கே ராஜ துர்க்கைக்கு மற்றொரு கோயிலையும், எழுப்பித்துள்ள திருமலை ரெகுநாத சேதுபதி மன்னர் கோட்டையின் வட பகுதியில் இந்தக் கோயிலையும் கட்டி இருக்க வேண்டும் என்பது வரலாற்று ஊகமாகும்.

இந்தக் கல்வெட்டின் காலம் கி.பி.1836.

**இந்தக் கல்வெட்டு வாசகம் பின்வருமாறு***

**1. "ஸ்வதி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1758 ௵**

**2. 4937க்கு மேல்ச் செல்லா நின்ற துன்முகி ௵ தைமீ**

**3. 7உ சுக்கில பட்சத்து புதன் கிழமையும் மிருசீரிட நட்செத்திரமும்**

**4. துவாதெசியும் பாலவாகறணமும் கெந்திர நாமயோக**

**5. மும் கூடிய சுபயோக சுபதினத்தில் மகாராசா ஸ்ரீ முத்து**

**6. விசய ரகுனாத ராமசாமி சேதுபதிக்கு ராணி சேதுபதி**

**7. மங்களேஸ்வரி நாச்சியார் அவர்களுக்கு குமாரராகி**

**8. ய முத்து விஜய ரெகுநாத சேதுபதி மாகாராசா அவர்களுக்கு**

9. குமாரராகிய ராமசுவாமி சேதுபதி மகாராசா

10. அவர்களுக்கு மாதாவாகிய ராணி சேதுபதி மு

11. த்து வீராயி நாச்சியார் அவர்களுக்கு சேஷ்ட புத்ரநாகி

12. ய மகாராசா ஸ்ரீ ஹிரண்ய கர்ப்பயாசி ரவி குல முத்து விச

13. ய ரெகுநாத முத்துச் செல்ல சேதுபதி மகாராசா அவர்

14. கள் முகவையூரணி ஈசாணிய பாகத்தில் கிருஷ்ண சகாயம்

15. ........... திருப்பணி செய்த சதா சேருவை”



* புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு

# இயல் 35

# இதம்பாடல் – சத்திரக் கல்வெட்டு

இராமநாதபுரம் கன்னியாகுமரிச் சாலையில் இதம்பாடல் கிராமத்தின் சாலையின் தெற்குப் பகுதியில் இந்த அன்ன சத்திரம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி.1837 இந்தச் சத்திரத்தைக் கன்னியாகுமரி சேது யாத்ரிகர்களுக்குப் பயன்படுத்துவதற்காக ராணி முத்து வீராயி நாச்சியாரும், அவரது சகோதரர் முத்துச் செல்லத் தேவரும் நிர்மானித்தது. இந்த சத்திரம முறையாக இயங்கி வருவதற்கு எந்தெந்த ஊர்கள் தானமாக வழங்கப்பட்டன என்ற விவரம் தெரியவில்லை.

மேலும் இந்தக் கல்வெட்டிலிருந்து ராணி முத்து வீராயி நாச்சியாரின் சொந்த ஊர் இதம்பாடல் கிராமம் என்பதும், அவரது பெற்றோர்கள் முனியாண்டித் தேவர் - சிவனாயி ஆத்தா என்ற,செய்தியும் தெரியவருகிறது.

இந்த சத்திரத்தில் முத்து வீராயி

தமது கணவருடன் நிலையில் இருப்பது போன்ற சிற்பம் ஒன்றும் அங்கு இருந்ததை கண்டுபிடித்து தற்பொழுது இராமநாதபுரம், இராமலிங்க விலாசம் அரண்மனை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

***<u>இந்தக் கல்வெட்டு வாசகம் பின்வருமாறு*</u>***

*1. "ஸ்ரீ ராமஜயம்*

*2. கலியுகாதி வருஷம் 4937 மேல்ச் செல்லாநின்ற துற்முகி ஸூ*

*3. தை மாதம் 2உ உயில் எதம்பாடல் ராஜராஜ ஸ்ரீ முனியாண்டித் தே*

*4. வரவர்களுடைய பத்தினி சிவனாயி ஆத்தா அவர்கள் பேருக்கா*

*5. க அவர்கள் குமாரர் குமாரத்தி மஹாராஜ ராஜஸ்ரீ விஜய ரெகுநாத*

*6. முத்துச் செல்லத் தேவராஜா அவர்களும் ராணி முத்து வீராயி*

*7. நாச்சியாரவர்களும் யிந்த தலம் சத்திரத்தை கட்டி வைத்தார்க*

*8. ளென்றரிவது."*

* புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு

# இயல் 36

## காரடாந்தக் குடி கல்வெட்டு

இராமசாமி சேதுபதியின் காலத்தில் வழங்கப்பட்ட தான சாசனங்களில் ஒன்றைப் பற்றிய கல்வெட்டு மட்டும் தான் நமக்குக் கிடைத்துள்ளது. அந்தக் கல்வெட்டு கார் அடாந்த குடி என்றக் கிராமத்தில் நாட்டப்பட்டுள்ளது.

காரடாந்தக்குடி கிராமம் இன்றைய பரமக்குடி வட்டத்தின் மூலையில் அமைந்திருக்கிறது. இந்தக் கல்வெட்டு காடரந்தக்குடி கிராமத்தில் பள்ளிக்கூடத்தின் பின்புறத்தில் நாட்டப்பட்டுள்ள ஏழடி உயரக்கல் ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ளது. இரண்டு நாகப்பாம்புகள் உருவங்களுக்கு இடையில் காணப்படும் இந்தக் கல்வெட்டில் இராமசாமி சேதுபதி நயினார் கோவில் நாகநாத சுவாமி பூஜை நைவேத்தியத்திற்குாக கார்டரந்தக்குடி ஏந்தலையும் அதையொட்டிய காட்டையும், தானமாக வழங்கிய செய்தியைத் தெரிவிக்கிறது. மேலும் நயினார்கோவிலின்

திருப்பணி வேலைக்காக இதே கிராமத்தில் உள்ள உகந்தானேந்தல் என்ற கண்மாயும் வழங்கப்பட்டு இருப்பது இந்தக் கல்வெட்டில் இருந்து தெரியவருகிறது.

இந்த தானம் வழங்கிய காலம் பற்றிய விவரம் தவறாகக் கொடுக்கப்பட்டுள்ளது. சக ஆண்டு 1702-க்குச் சரியான ஆங்கில வருடம் கி.பி.1781 ஆகும். இந்தக் கால கட்டத்தில் இராமநாதபுரம் மன்னராக இருந்தவர் முத்து இராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி ஆவார். கல்வெட்டில் குறிப்பிடப்பெறும் ராமசாமி சேதுபதியின் காலம் கி.பி.1830-க்கும் 1840க்கும் இடைப்பட்ட காலம் ஆகும்.

இந்தக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் நயினார்கோவில் பரமக்குடி வட்டத்தில் உள்ள சேது சமஸ்தானத்தின் முக்கியமான கோயில் ஆகும். இந்த ஊரின் சரியான பெயர் திருமருதூர் என்பது. இங்கு எழுந்தருளி இருக்கும் இறைவர் நாகநாத சுவாமியை இந்தப் பகுதி மக்கள் பல்லாண்டுகளாக நயினார் என்று அழைத்து வருவதால் இந்தத் தலத்தின் பெயரும் நயினார் கோயில் என்றே வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தலத்தின் பெருமையை விளக்கும் வகையில் திருமருதூர் அந்தாதி, திருமருதூர் புராணம் நயினார் கோவில் பதிகம், நயினார் கோவில் வழிநடைச் சிந்து ஆகிய இலக்கியங்கள் இயற்றப்பட்டுள்ளது.

**இந்தக் கல்வெட்டின் வாசகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.***

1. **"சுவஸ்த ஸ்ரீ சாலிவாகன ச**
2. **காத்தம் 1702 இதன்மேல்**
3. **செல்லாநின்ற கலியு**
4. **கம் 4881 இதன் மேல்ச்**

5. செல்லா நின்ற ராசாதிராசன்
6. வணங்காமுடி செங்காவிக் குடையான்
7. . . . . . . . . . துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலன
8. கிரணிய கெற்பயாசிப தியான
9. குமார முத்து விசையரெகு தேவ
10. வர் மகன் திருமலைச் சேதுபதி
11. ராமசுவாமித் தேவரவர்க
12. ள் பிறிதிவிராச்சிய பரிபால
13. னம் பண்ணியருளாநின்ற
14. சரீறுவரி ஸ்ரீ கார்த்திகை மீ
15. 26 உ குருவாரமும் பூறுவப
16. ட்சமும் ஏகாதெசிய அசுவதி ந
17. ட்செத்திரமும் சித்தநாமயோ
18. கரணமும் பெற்ற
19. சுபதினத்தில் நயின
20. ார் சுவாமிக்கு பூசை க
21. ட்டளைக்கு கிரண உதக காரா
22. பூறுவமாக. . . . . . . .
23. னம் பண்ணிக்குடுத்த
24. தன்மம். காடரந்தக்குடி ஏந்

25. தல்க் காடுள்பட யின்னாங்

26. கெல்லைக்குள்ப் பட்ட அ

27. ட்ட போக தேச சுவாமிய

28. ங்களும் தானம் பண்

29. ணிகுடுத்தோம் இந்த தற்

30. மத்தை பரிபாலனம் ப

31. ண்ணின வர்கள் கோடி சிவ

32. லிங்க பிறதிஷ்டை ப

33. ன்னின பலன் அ

34. டைவார்கள் இந்த தற்

35. மத்துக்கு வரிசால் வாசகக்ரமம்

36. திருப்பணி வேலைக்கு இந்த கிரா

37. மத்தில் உகந்தானேந்தல்லில்

38. இந்த தற்மத்துக்கு

39. யாதாமொருவன் அகிதம்

40. பண்ணினவன் கெங்கை க

41. ரையிலே காராம் பசுவைக்

42. கொன்ற பாவத்திலே போ

43. வானாகவும் இந்த தற்ம சாதி

44. னம் எழுதினவன் நமசிவா".

---

* புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு

# இயல் 37

# நொச்சிவயல் பிரம்மபுரீஸ்வரா ஆலயம் கல்வெட்டு

கி.பி.1863ல் புதிய நிர்வாக முறையின் தொடர்ச்சியாக இரண்டாவது முத்துராமலிங்க சேதுபதி மன்னர் இராமநாதபுரம் சமஸ்தானத்தில் ஜமீன்தாரர் ஆனார். ஆனால், 32 ஆண்டுகள் மட்டும் இவ்வுலகத்தில் வாழ்ந்த அம்மன்னர் மிகச் சிறந்த கொடையாளராகவும், வீரராகவும் மல்லராகவும் முத்தமிழ்ப் பாவலராகவும், இவைகளுக்கெல்லாம் மேலாக முருகனையே கண்கண்ட தெய்வமாகக் கொண்டு வாழ்ந்த பக்தராகவும் இருந்தார். இத்தகைய சிறந்த மன்னரது மூத்த மகனாக பாஸ்கர சேதுபதி கி.பி.1868-ல் பிறந்தார். பாஸ்கர சேதுபதி சென்னை தாம்பரம் கிறிஸ்தவ கல்லூரியில் பயின்று ஆங்கிலப் பட்டதாரியானார்.

ஆங்கிலப் பட்டதாரியான இந்த இளைஞர் தமது தந்தையைப் போல சிறந்த

கல்விமானாக விளங்கியதுடன் மிகச் சிறந்த சைவ சித்தாந்தியராகவும் சிறந்த சொற்பொழிவாளராகவும் இருந்தார். இவைகளுக்கெல்லாம் மேலாக மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான கொல் என்னும் சொல் என்ற வள்ளுவத்திற்கு ஏற்ற வாரிசாக வாழ்ந்தவர் தான் மன்னர் பாஸ்கர சேதுபதி.

தமது முன்னோர்களைப் போன்று தமிழிலும், வடமொழியிலும், வித்தகராக விளங்கிய இவர் நலிவடைந்து நாடிவந்தவர்களுக்கும், பாடி வந்த புலவர்களுக்கும் அள்ளி அள்ளிப் பொன்னும் பொருளும் வழங்கும் பண்பாளராக வாழ்ந்தார்.

***ஆலயம்சீர் ஆகுமா அரும்புலவர் வாழ்வாரா***
***காலமெல்லாம் தருமம் தழைக்குமோ - ஞாலச்***
***சாந்தகுணச் சேதுபதி தம்மரபில் பாஸ்கரனாம்***
***வேந்தன் பிறவா விடில்.***

இவ்வாறு இத்தகைய இனிய பண்புகளை உடைய இளம் மன்னர் பாஸ்கரச் சேதுபதியைப் பற்றிப் புலவர் ஒருவர் பாடியுள்ளார். தேவாரம் பாடிய மூவர்களை நினைவு கூறும் வண்ணம் இந்த மன்னர் திருக்கோயில்களுக்கு செல்லும் பொழுதெல்லாம் தான் அந்தக் கோயிலின் இறைவர் மீது பதிகம் பாடுவதையும், அந்த இறைவருக்கு அணிமணிகளை அன்பளிப்பாக வழங்குவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். இவர் மேற்கொண்ட கோயில் திருப்பணிகள் பற்றிய கல்வெட்டுக்கள் சில கிடைத்துள்ளன.


இந்த மன்னரைப் போன்று மிகச் சிறந்த சிவபக்தையாக விளங்கிய இவரது தாயார் முத்தாத்தாள் நாச்சியார் வேண்டுதலின் படி இந்த மன்னர் ராமநாதபுரம் நகரின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள நொச்சிவயல் ஊரணியின் மேற்குக் கரையில் ஒரு சிவாலயத்தை எழுப்பினார். அந்த ஆலயத்திற்கு அவரது தாயாரின் ஆத்ம குருவான பிரம்மா அம்மாள் என்ற பெண் ஞானியின் பெயரால் பிரம்ம புரீசுவரர்

ஆலயம் எனப் பெயரிட்டார். அந்த ஆலயத்தில் காணப்படும் கல்வெட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இந்த கல்வெட்டின் காலம் கி.பி.1891

*இந்தக் கல்வெட்டு வாசகம் பின்வருமாறு:**

1. "உ
2. சுபமஸ்து
3. சிவமயம்
4. ஸ்ரீ மது ஹிரண்ய கெர்ப்பயாஜி ரவிகுல
5. முத்து விஜய ரெகுநாத இராமநாதபுரம்
6. சமஸ்தானம் ராஜா சேதுபதி மஹாராஜா
7. ராஜஸ்ரீ பாஸ்கர சேதுபதி மகாராஜா
8. அவர்களது ஸ்ரீ மஹாராஜ ராஜஸ்ரீ ராணி
9. முத்தாத்தாள் நாச்சியராகிய முத்துத் திருவாயி
10. நாச்சியாரவர்கள் ஆலயம் கட்டி 18
11. 91ஆ ஜுன் மீ 24 தேதி கரஆ ஆனி மீ
12. 10 உ புதவாரம் கிருஷ்ண பட்ஷம் திருதி
13. யும் உத்திராட நட்சத்திரத்தில் பகல் 12.1/2
14. நாழிகைக்கு மேல் 15 நாழிகைக்குள் கன்னி
15. யா லக்னம் கூடிய சுப முகூர்த்தத்தில்
16. இந்தப் பரமேசுரசாமி பிதிஷ்டை

*17. யும் கும்பாபிஷேகமும் நடப்பிலிக்கலாயிள்ளது நடத்தப்படும் செய்தி கொடுக்கப்பட்டுள்ளது."*



* புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டு

# இயல் 38

# இராமநாதபுரம் ராஜராஜேஸ்வரி கோயில் கல்வெட்டு

இராமநாதபுரம் அரண்மனையில் சேதுபதி மன்னர்களது குல தெய்வமாகப் போற்றப்படுவது ராஜராஜேஸ்வரி அம்மனது ஆலயமாகும். இந்த ஆலயத்தினைக் கி.பி.1658ல் நிர்மானித்தவர் மன்னர் திருமலை ரெகுநாத சேதுபதி ஆவர். மன்னர் திருமலை நாயக்கருக்காக கன்னடப் படைகளை கி.பி.1650-ல் வெற்றிகொண்டு மதுரை நாயக்க அரசினை நிலை நிறுத்திய திருமலை சேதுபதி மன்னரைப் பாராட்டி மதுரை திருமலை நாயக்க மன்னர் அளித்த பரிசுகளில் ஒன்றாக அமைந்தது இந்த ஆலயத்திலுள்ள ராஜராஜேஸ்வரி அம்மனது பொன்னாலான திருமேனியாகும். இந்த அம்பாளுக்கு ஆண்டுவிழா நடத்தும் வகையில் மன்னர் திருமலை ரெகுநாத சேதுபதி விஜய நகரம் மதுரை ஆகிய நகர்களில் நடைபெறுவதைப் போன்று புரட்டாசித் திங்களில் பத்து நாள் தசரா

விழா நடப்பதற்கும், ஏற்பாடு செய்தார். இந்த விழாவினை முறையாக நடத்தி வைப்பதற்காக இராமேஸ்வரம் ரகுநாத குருக்கள் மகன் சங்கரன் குருக்களை நியமனம் செய்ததைச் செப்பேட்டுச் செய்தி ஒன்று கூறுகிறது.[1]

இந்த விழாவினை மகாநோன்பு அல்லது மகர் நோன்பு என வழங்குதல் உண்டு. சாதாரண காலங்களில் இந்த அம்பாளுக்கு எருமைக் கடாவினையும் பலியிட்டு படைப்பதும் வழக்கமாக இருந்தது. சைவ சித்தாந்தியரான மன்னர் பாஸ்கர சேதுபதி கி.பி.1894ல் இந்த உயிர்ப்பலி பூஜையை தவிர்ப்பதற்காக வாமபூஜை எனப்படும் வகையில் பிற கோயில்களில் நடப்பதைப் போன்று அம்பாளுக்கு பூஜை, நைவேத்யம், அபிஷேகம் ஆகிய நடைமுறைகளை நடத்தி வர ஏற்பாடு செய்தார். அப்பொழுது சிருங்கேரி சாரதாமடத்தைச் சார்ந்த ஜகத்குரு சச்சிதாநந்த அபிநவ நரசிம்ம தீர்த்த பாரதி சுவாமிகளை வரவழைத்து அம்பாளின் ஸ்ரீ சக்கரத்தை மாற்றி அமைத்து உயிர்ப்பலிக்குப் பதிலாக வாமபூஜை நடத்தும் முறையை ஏற்படுத்தினார். மேலும் இந்தக் கோயிலின் பயன்பாட்டிற்கென இத்தாலி நாட்டில் மிலான் நகரத்திலிருந்து ஒரு பெரிய வெண்கல மணியையும் வரவழைத்து ஆலயத்தில் நிறுவினார்[2].


பராந்தக சோழன், தில்லை நடராஜர் கோயில் கோபுரங்களுக்கு பொன் வேய்ந்தது போன்று பாஸ்கர சேதுபதி மன்னரும் அம்பாளின் கருவறையின் மேற்கோபுரத்தை பொன் தகட்டினால் சூழச் செய்து மகிழ்ந்தார். இந்த நிகழ்ச்சியின் நினைவாக கீழ்க்கண்ட கல்வெட்டினையும், அந்தக் கோயிலில் கோபுரத்தில் பொறித்து வைத்துள்ளார்.

***இந்தக் கல்வெட்டின் வாசகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.****

***"கி.பி.1893 ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1815***

1. கமால் டாக்டர் எஸ்.எம். சேதுபதி மன்னர் செப்பேடுகள் (1993)
2. கமால் டாக்டர் எஸ்.எம். மன்னர் பாஸ்கர சேதுபதி (1992)

*விஜய துலா கிருஷ்ணபட்ஷம் பஞ்சமி பானுவாரம் மிருக சீரிட நட்சத்திரத்தில் ராஜா பாஸ்கர சேதுபதி மகாராஜ அவர்கள் ராஜராஜேசுவரிக்கு ஸ்வர்ண விமான பிரதிட்டை"*



* புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டு

# இயல் 39

# கோதண்ட ராமர் கோயில் கல்வெட்டு

இராமநாதபுரம் கோட்டைக்குள் இருக்கும் பழமையான கோயில் சொக்கநாத சுவாமி ஆலயமாகும். இந்த ஆலயத்தினை எழுப்பித்தவர் மன்னர் தளவாய் சேதுபதி எனப்படும் இரண்டாவது சடைக்கன் சேதுபதி ஆவார். இவரது காலம் கி.பி.1630 - 1645 வரை. இந்தக் கோயிலின் தென்பகுதியில் பெருமாள் கோயிலையும் அவரை அடுத்து வந்த திருமலை ரெகுநாத சேதுபதி மன்னர் ஏற்படுத்தினார். இந்தக் கோயில் கால நீட்சியில் சிதிலமடைந்தது. இதனை உணர்ந்த மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்கள் திருக்கோயிலில் மறு அமைப்புச் செய்து திருப்பணி செய்தார். வசந்த விழாவும், பெருமாள் தேவியுடன் ஆரோகணித்து வீதிஉலா வரும் தேரோட்டத் திருவிழாவினையும் ஏற்படுத்தினார். சமயப் பொறையில் மிக்க சேது வேந்தர்களின் சாதனையாக இந்தத் திருக்கோயில் விளங்கி வருகிறது.

பாஸ்கர சேதுபதி மன்னர் இந்தக் கோயிலை மறு அமைப்பு செய்த செய்தியைக் கோயிலின் கருவறை தென் சுவற்றில் பொறித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் காலம் கி.பி.1895 ஆகும். பொதுவாக சிவாலயங்களில் பெருமாளுக்கும் தனியாக சன்னதி அமைத்து வழிபாடு நடத்துவது தமிழகத்தின் மிகச் சில ஊர்களிலேயே உள்ளன. தில்லை நடராசா சன்னதிக்கு எதிரே கோவிந்தராசப் பெருமாள் சன்னதி அமைக்கப்பட்டிருப்பது போல இராமநாதபுரத்திலும் சொக்கநாதர் ஆலயத்தின் தென்பகுதியில் கோதண்டராமர் சுவாமிக்கு தனியாகச் சன்னதியும் கோயிலும் ஏற்படுத்தப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

***இந்தக் கல்வெட்டின் வாசகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.****

1. ***"ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1825 சோபகிருது ஷு***

2. ***இராமநாதபுரம் சமஸ்தானம் ஸ்ரீ ஆதி ஜெகநாதப் பெருமாள் கோவிலின் அபிமான***

3. ***ஸ்தலமாகிய மேல்ப்படி இராமநாதபுரம் கோதண்டராம ஸ்வாமி கோவில் இந்த***

4. ***கெற்பக்கிரகம் அர்த்தமண்டபம் செங்கல் கட்டிடமாகவும்***

5. ***ஜீர்ணமாகவும் இருந்ததைப் பிரித்து கலத்திருப்பணியாக இராமநாதபுரம்***

*6. சமஸ்தானம் ராஜா சேதுபதி ஸ்ரீ மது ஹிரண்ய கெர்ப்பயாஜி ரவிகுல முத்து விஜய*

*7. ரெகுநாத மஹாராஜா ராஜஸ்ரீ ராஜா பாஸ்கர சேதுபதி மஹாராஜா அவர்கள் சொந்த*

*8. பொருளுதவியால் செய்யப் பெற்றது."*



* புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டு

# இயல் 40

# பாம்பன் கடற்கரைக் கல்வெட்டு

மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்கள் பாம்பன் துறைமுகத்தில் 22.1.1897ம் தேதி பிற்பகல் கரை இறங்கிய சுவாமி விவேகானந்தர் வருகையை என்றென்றும் நினைவூட்டும் வகையில் ஒரு கல்வெட்டினை சேதுபதி மன்னர் பாம்பன் கடற்கரையில் அமைத்தார். கி.பி.1893ல் அமெரிக்க நாட்டு சிக்காகோ நகரில் நடைபெற்ற அனைத்து உலக சமய மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சுவாமி விவேகானந்தரைத் தனது சொந்தச் செலவில் மன்னர் அனுப்பி வைத்தார். சுவாமிகளுக்கு ஏற்பட்ட அந்தப் புதிய அனுபவம் இந்திய மக்களின் மிகச் சிறந்த வெற்றியாக அமைந்தது. இந்து சமயத்தில் தொன்மையையும், இந்தியத் திருநாட்டின் சமயப்பண்பாட்டு, நிலைகளை அறிந்த மேனாட்டார் சுவாமி விவேகானந்தருக்குப் பல ஊர்களில் பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து சுவாமிகள்

ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கெல்லாம் சென்று விட்டு இலங்கை நாட்டுக் கொழும்பு வழியாக தாயகம் திரும்பிய சுவாமி விவேகானந்தர் முதன் முறையாக சேதுபதி மன்னரது பாம்பன் துறைமுகத்தில் கரை இறங்கினார். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வினைக் குறிக்கும் வண்ணம் பாம்பன் கடற்கரையில் சுவாமிகள் படகு கரையைவிட்டு இறங்கிய தரையில் வெற்றித்தூண் ஒன்றை மன்னர் நிறுவினார். அதில் தான் இந்தக் கல்வெட்டும் பொறிக்கப்பட்டிருந்தது. ஆனால் 105 ஆண்டுகளுக்குப் பின்னர் அந்தக் கல்வெட்டு இப்பொழுது அங்கு இல்லை. சத்தியமேவேஜெயதே என்ற உபநிடத சொல்லை மங்கலச் சொல்லாக கொண்ட வாசகம் தலைப்பாக இந்தக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

**இந்தக் கல்வெட்டின் வாசகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.***

**சத்தியமேவஜெயதே**

**"இந்திய நாட்டின் சமயப் பண்பாட்டுச் சிறப்பினை மேலை நாடுகளில் பரப்பி வெற்றிப் பரணியுடன் தாயகம் திரும்பிய சுவாமி விவேகானந்தரது புனித பாத துளிகள் பட்ட முதல் புனித இடம் இது".**

* புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டு

# இயல் 41

# சித்தி விநாயகர் கோயில் கல்வெட்டு

இந்த சிறிய கோவில் இராமநாதபுரம் கோட்டையின் மேற்குப் பகுதியில் மறவர் பஜனை மடத்திற்கு அருகில் அமைந்துள்ளது. இந்தக் கோயிலில் காணப்படும் கீழ்க்கண்ட கல்வெட்டிலிருந்து மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்கள் மறவர் தெரு மற்றும், தெற்கு மேற்கு ரத வீதியில் உள்ள மக்களது பயன்பாட்டிற்காக இந்தக் கோவிலை அமைத்துள்ளார் என்பது தெரியவருகிறது. இன்றும் இந்தக் கோயில் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டுள்ளது.

***இந்தக் கல்வெட்டு வாசகம் பின்வருமாறு:****

1. *"சுபமஸ்து*
2. *1891 ஸு டிசம்பர் மு 7உ கர ஹு*

*3. கார்த்திகை மீ 23 உ சோம வாரம் பூர்வ*

*4. பட்ஷம் ஸப்தமியும் அவிட்ட நட்சத்திரமும்*

*5. பகல் 16 நாழிகைக் கும்ப லக்கினம்"*

* புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டு

# இயல் 42

# செய்தித் தொகுப்பு

ஒரு நாட்டின் அரசியல் சமுதாய வாழ்க்கையின் முன்னேற்றத்தை அறிவிக்கும் காலச் சுவடுகளாக அமைந்து விளங்குபவை, அந்த நாட்டின் கல்வெட்டுக்களாகும். வரலாற்றின் போக்கினை அறிந்து கொள்வதற்கு ஏதுவான தடையங்கள் இவை என்ற வகையில் இவைகளைத் தேடிப்பிடித்து படி எடுத்துத் தொகுக்கும் பணியினை இந்திய அரசின் தொல்லியல் அளவீட்டுத் துறை கி.பி.1879ல் கன்னிங்கேம் பிரபு என்பவரால் தொடங்கப்பட்டது.

இந்தத் துறையினர் இதுவரை தமிழ்நாட்டில் சுமார் நாற்பதினாயிரம் கல்வெட்டுக்களையும், செப்பேடுகளையும் தேடிப்பிடித்து படி எடுத்துள்ளனர். அவைகளின் தொகுப்பாக ஏறத்தாழ பதினைந்தாயிரம் கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் பல தொகுதிகளாக இதுவரை அச்சில் வெளிவந்துள்ளன. இந்தப் பணி காலப் போக்கில் தளர்ச்சியுற்று சிறப்பாக நடைபெறவில்லை. ஏற்கனவே படியெடுத்த கல்வெட்டுக்களைத் தவிர்த்து இன்னும்

ஏராளமான கல்வெட்டுக்கள் நாடு முழுவதும் கோயில்களிலும், கண்மாய்க் கால்களிலும் பல பொது இடங்களிலும் சிதறிக் கிடக்கின்றன. இவை அனைத்தையும் ஒன்று திரட்டித் தொகுத்து வெளியிட்ட பிறகுதான் தமது நாட்டின் அரசியல், சமுதாய வாழ்வில் முன்னேற்றம் ஆகிய உண்மையான வரலாற்றினைத் தெரிந்து கொள்ள இயலும்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் சேர, சோழ, பாண்டியர்களின் ஆட்சி மட்டுமல்லாமல் பல்லவர்கள், மதுரை சுல்தான்கள், சம்புவரையர்கள், வேளிர்கள், சேதுபதி மன்னர்கள், தஞ்சை, திருச்சி, மதுரை, வேலூர் நாயக்கர்கள், மாவளி, வாணாதரையர்கள், அறந்தாங்கி புதுக்கோட்டை தொண்டைமான்கள், கொங்கு நாட்டுச் சோழ, பாண்டியர்கள், காரமங்கலம் கெட்டிமுதலிகள், ஆற்க்காட்டு நவாப்புகள் என்பன போன்ற பல்வேறு பெருமன்னர்களும் குறுநில மன்னர்களும் பாளையக்காரர்களும் வெட்டிவித்துள்ள கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் ஓலை முரிகளும் எனப் பல்வேறு ஆவணங்கள் இன்னும் தொகுக்கப் படாமல் உள்ளன. தாமரைப்பாக்கம், திருவீழிமழலை, பெருமுக்கல், சென்னை மாநகர் இவைகளில் சிலவற்றை தமிழ்நாடு அரசின் தொல்பொருள் துறையினர், தஞ்சை பெருஉடையார்க் கோவில் கல்வெட்டு, தர்மபுரி கல்வெட்டுக்கள் குமரி மாவட்டக் கல்வெட்டுக்கள், நன்னிலம் கல்வெட்டுக்கள், குடந்தைக் கல்வெட்டுக்கள், மயிலாடுதுறைக் கல்வெட்டுக்கள் என்ற சில தொகுதிகளையும் டாக்டர். டி.என். சுப்ரமணியன் என்பவர் தென்னிந்திய கோயில் கல்வெட்டுக்கள் என மூன்று தொகுதிகளையும், புதுக்கோட்டை தர்பார், புதுக்கோட்டை கல்வெட்டுக்கள் தொகுதிகளையும் வெளியிட்டு தமிழ் வரலாற்றினுக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இவைகளில் ஒன்று மட்டும் யூத மொழியில் (ஹீப்ரு மொழியில்) உள்ளது. மேலும் திருமலை தேவஸ்தானம், திருமலை திருப்பதி கல்வெட்டுக்கள் எனப் பத்துத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே குறிப்பிட்டவாறு இந்தப் பதிப்புக்கள்

அனைத்தும் தமிழக வரலாற்றிற்கு உறுதுணையாக உதவுபவை என்றாலும், இன்னும் படியெடுக்கப்பட்ட, படியெடுக்கவிருக்கும் கல்வெட்டுக்களும், பட்டையங்களும், ஓலைமுறிகளும் தமிழக ஆய்வாளர்களுக்கு கிடைக்கும் காலம்தான் தமிழக வரலாற்று மறுமலர்ச்சி காலம் எனக் கூறலாம்.

இவைகள் அனைத்தும் தமிழின் கிரந்த எழுத்துக்கள், அரபி, பார்சி, வடமொழி தெலுங்கு, தாமிழி வட்டெழுத்து ஆகிய எழுத்து வரிகளில் காணப்படுகின்றன. இந்தக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பெறும் அறக்கொடைகளை கீழ்க்கண்ட பகுப்புகளில் பொருந்துவனவாக உள்ளன.

**அறக்கொடைகள் விபரம் :**

1. திருக்கோயில்கள் - 29
2. திருமடங்கள்
3. அன்னசத்திரங்கள் - 2
4. பள்ளிவாசல்கள் - 1
5. தேவாலயங்கள் - 1
6. இதரவகை - 2
7. கொடைகள் - 2

**இந்தக் கல்வெட்டு கீழ்கண்ட வகையினராக அமைகிறது**

**அ. <u>சைவ சமய கோயில்கள்</u>**

1. இராமேஸ்வரம் திருக்கோயில் கல்வெட்டு க.வெ.எண்.1

2. இராமேஸ்வரம் திருக்கோயில் கல்வெட்டு க.வெ.எண்.2

3. இராமேஸ்வரம் திருக்கோயில் கல்வெட்டு க.வெ.எண்.3.

4. இராமேஸ்வரம் திருக்கோயில் கல்வெட்டு க.வெ.எண்.4

5. போகலூர் கல்வெட்டு க.வெ.எண்.5

6. திருவாடானைக் கல்வெட்டு க.வெ.எண்.8

7. கீழக்கரை சொக்கநாதர் கோயில் கல்வெட்டு க.வெ.எண்.9

8. விரையாச் சிலை திருக்கோயில் கல்வெட்டு க.வெ.எண்.10

9. சிவபுரிப்பட்டி கல்வெட்டு - க.வெ.எண்.12

10. ஆலம்பட்டிக் கல்வெட்டு - க.வெ.எண்.13

11. கண்ணங்காரகுடி கல்வெட்டு - க.வெ.எண்.14

12. பெருங்கரை சொக்கநாதர் கோயில் கல்வெட்டு- க.வெ.எண்.16

13. ராங்கியம் கோயில் கல்வெட்டு - க.வெ.எண்.17

14. தாஞ்சூர் அகத்தீஸ்வரர் கோயில் கல்வெட்டு - க.வெ.எண்.21

15. நயினார் கோயில் கல்வெட்டு - க.வெ.எண்.22

16. பெருவயல் திருக்கோயில் கல்வெட்டு - க.வெ.எண்.23

17. நயினார் கோயில் கல்வெட்டு - க.வெ.எண்.25

18. நயினார் கோயில் கல்வெட்டு - க.வெ.எண்.26

19. பூலாங்குடி கல்வெட்டு - க.வெ.எண்.28

20. இதம்பாடல் கிராமம் ஆண்ட அம்மன் கோயில் கல்வெட்டு - க.வெ.எண்.29

21. இராமநாதபுரம் திரெளபதி அம்மன் கோயில் கல்வெட்டு - க.வெ.எண்.30

22. காரடர்ந்தக் குடி கல்வெட்டு - க.வெ.எண்.32

23. நொச்சிவயல் பிரம்மபுரீஸ்வரர் கல்வெட்டு - க.வெ.எண்.33

24. இராமநாதபுரம் இராஜராஜேஸ்வரி அம்மன் கோயில் க.வெ.எண்.34

25. சித்தி விநாயகர்கோயில் கல்வெட்டு - க.வெ.எண்.37

ஆ. வைணவக் கோயில்கள்

1. திருமெய்யம் மேலையூர் கோயில் கல்வெட்டு - க.வெ.எண்.11

2. திருமெய்யம் கோயில் கல்வெட்டு - க.வெ.ண்.15

3. திருக்கோட்டியூர் கோயில் கல்வெட்டு - க.வெ.எண்.18

4. இராமநாதபுரம் கோதண்ட ராமர் கோயில் கல்வெட்டு - க.வெ.எண். 35

## இ. இஸ்லாமிய நிறுவனங்கள்

1. காட்டு பாவா பள்ளி வாசல் கல்வெட்டு - க.வெ.எண்.19

## ஈ. கிறித்தவ தேவாலயங்கள்

1. முத்துப்பேட்டை தேவாலய கல்வெட்டு - க.வெ.எண்.27

## உ. கொடைகள்

1. முதலூர் கல்வெட்டு - க.வெ.எண்.7

2. இராமேஸ்வரம் அம்மன் கோயிலுக்கு வெள்ளி ஊஞ்சல் கல்வெட்டு - க.வெ.எண்.20

3. குளுவன்குடி அன்னதான கல்வெட்டு - க.வெ.எண்.24

4. இதம்பாடல் சத்திரக் கல்வெட்டு - க.வெ.எண்.31

## ஊ. பிற கல்வெட்டுக்கள்

1. முழக்கோல் கல்வெட்டு - க.வெ.எண்.6

2. பாம்பன் கடற்கரை கல்வெட்டு - க.வெ.எண்.36

இந்நிலையில் தமிழகத்தின் கிழக்கு கடற்கரைப் பகுதியை தமது ஆட்சிக் களமாக அமைத்து ஆட்சி செய்த சேது மன்னர்களது ஆவணங்களை திரட்டும் பணியில கடந்த பல ஆண்டுகளாக ஈடுபட்டுள்ளேன். ஏற்கனவே சேதுபதி மன்னர்களது செப்பேடுகளை சேகரித்து தொன்னூரினை கி.பி.1994-இல் தொகுத்து வெளியிட்டுள்ளேன். அந்தப் பணியின் தொடர்பாக முப்பத்து ஏழு கல்வெட்டுக்களை இந்த நூலில அறிமுகம் செய்துள்ளேன்.

அவைகள் பின்வருமாறு:

1. கூத்தன் சேதுபதி கல்வெட்டுக்கள் - 3

2. தளவாய் இரண்டாம் சடைக்கன் சேதுபதி கல்வெட்டுக்கள் - 2

3. திருமலை ரகுநாத சேதுபதி கல்வெட்டுக்கள் - 9

4. கிழவன் ரகுநாத சேதுபதி கல்வெட்டுக்கள் - 2

5. முத்து விஜய ரகுநாத சேதுபதி கல்வெட்டுக்கள் - 2

6. பவானி சங்கர சேதுபதி கல்வெட்டுக்கள் - 1

7. குமார முத்து விஜய ரகுநாத சேதுபதி கல்வெட்டுக்கள் - 2

8. முத்து இராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி கல்வெட்டுக்கள் - 3

9. ராணி மங்களேஸ்வரி நாச்சியார் கல்வெட்டு - 1

10. ராணி முத்து வீராயி நாச்சியார் கல்வெட்டுக்கள் - 3

11. இராமசாமி சேதுபதி கல்வெட்டுக்கள் - 1

12. மன்னர் பாஸ்கர சேதுபதி கல்வெட்டுக்கள் - 5

13. மன்னர் பெயர் தெரியாத கல்வெட்டு - 1

# மொத்தம் - 35

இந்தக் கல்வெட்டுக்களில் இராமேஸ்வரத்தில் உள்ள உடையான் சேதுபதி சின்ன உடையான் சேதுபதி ஆகிய இரு மன்னர்களது (இரண்டு கல்வெட்டுக்கள்) கல்வெட்டு வாசகங்கள் கிடைக்கப் பெறாததால் அவை இந்தப் பட்டியலில் சேர்க்கப்படவில்லை.

இந்தக் கல்வெட்டுக்கள் இன்றைய இராமநாதபுரம் மாவட்டத்தில கீழக்கரை, இராமேஸ்வரம், பெருங்கரை, போகலூர், முதலூர், நயினார் கோயில், காரடர்ந்த குடி, இராமநாதபுரம் இதம்பாடல் ஆகிய ஊர்களிலும் சிவகங்கை மாவட்டத்தில் குளுவன்குடி, சிவபுரி, மதுரை மாவட்டம் ஆலம்பட்டு ஆகிய ஊர்களிலும், புதுக்கோட்டை மாவட்டம் கண்ணங்கார்குடி, திருமெய்யம் மேலையூர், விரையாச்சிலை காட்டு பாவா பள்ளிவாசல், தாஞ்சூர், மிதிலைப்பட்டி ஆகிய ஊர்களிலும் காணப்படுகின்றன.

மேலேகண்டவைகளைத் தவிர வேறு சில கல்வெட்டுக்களும் கி.பி.1414, 1424, 1447, 1500ம் வருடம் இராமேஸ்வரம் திருக்கோயிலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்தக் கல்வெட்டுக்களின் முழுமையான வாசகம் காலநீட்சியின் காரணமாக கிடைக்கவில்லை. இவை போன்று இன்னும் ஏராளமான கல்வெட்டுக்கள் காலப்போக்கில் கடலின் உப்புக் காற்று போன்ற அமிலத்தன்மையினால் அழிந்தும சிதைந்தும் மழுங்கியும், மறைந்தும் விட்டன.

இவை தமிழக வரலாற்றிற்கு ஈடு செய்ய முடியாத மிகப்பெரிய இழப்பாகும். இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் கீழ்க்கண்டவையினரால் வெளியிடப்பட்டுள்ளனர்.

1. **புதுக்கோட்டை தர்பார் வெளியிட்டுள்ளவை - 6**

2. இந்திய தொல்லியல் அளவீட்டுத் துறை வெளியிட்டவை - 5

3. இப்பொழுது புதிதாக கண்டுபிடிக்கப்பட்டவை - 24

மேலும் சேதுபதி மன்னர்கள் வெட்டிவித்துள்ள இந்தக் கல்வெட்டுக்கள் அந்த மன்னர்களது 500 வருட கால ஆட்சியினை எடுத்து இயம்பும் வரலாற்றுக் குறிப்புக்களாகக் கொள்ளலாம். ஏனெனில் அந்த மன்னர்களது நீண்ட நெடிய ஆட்சியில் நூற்றுக்கணக்கான கல்வெட்டுக்களையும், செப்பேடுகளையும், ஓலைமுறிகளையும், தானசாசனமாக அவர்கள் வழங்கி இருந்தனர். அவை அனைத்தும், வரலாற்று உணர்வு, பராமரிப்பு உணர்வு ஆகிய துறைகளில் அந்த மன்னர்களுக்கும் அவர்களது அலுவலர்களுக்கும் அக்கறை இல்லாத காரணத்தினால் இவைகளில் பெரும்பாலான எண்ணிக்கையில் இந்த ஆவணங்கள் அழிந்து மறைந்து விட்டன. இதனைப் புலப்படுத்தும் வகையில் சென்னையிலுள்ள தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பக ஆவணங்களும், பதிவேடுகளும் அமைந்திருப்பதை ஆய்வாளர்கள் அறிந்து கொள்ள இயலும். அதுவரை அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தென்னக அரசியலைத் தமதாக்கிக் கொண்டிருந்த ஆற்காட்டு நவாப் வழியினரை அகற்றிவிட்டு தங்களது ஆட்சியின் கீழ் கி.பி.1801 முதல் தென்னகம் முழுவதையும் ஒரு சேர அமைத்த ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியார் கி.பி.1811இல் தயாரித்த பதிவேடு ஒன்றின் படி திருக்கோயில்கள், திருமடங்கள், அன்னசத்திரங்கள், தேவாலயங்கள் மற்றும், பள்ளிவாசல்கள், பண்டிதர்கள், புலவர்கள், அவதானிகள் ஆகியோர்களுக்கு தானம் அளித்த சேதுபதி மன்னர்கள் (594) ஐந்நூற்று தொன்னூற்று நான்கு செப்புப் பட்டையங்களைப் பட்டியலிட்டுக் கொடுத்துள்ளனர். ஆனால் இராமநாதபுரம் மாவட்டத்தின் பல பகுதிகளுக்குச் சென்று பத்து ஆண்டுகளாக சேது மன்னர்களது பட்டையங்களைத் தேடிப் பிடித்த எனக்கு வெறும் தொன்னூறு செப்பேடுகள் மட்டும் தான் கிடைத்தன. அவைகளை கி.பி.1994ல் சேதுபதி மன்னர் செப்பேடுகள் என்ற தலைப்பில்

வெளியிட்டு உள்ளேன். இதனைப் போன்றே சேதுபதி மன்னர்களது ஆட்சிக் காலத்தில் கி.பி. பதினாறு, பதினேழு, பதினெட்டு ஆம் நூற்றாண்டுகளில் மேலை நாடுகளிலிருந்து சேது நாட்டுக்கு வந்த போர்ச்சுக்கீசிய டச்சு, ஆங்கில, பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியார்களுடனும், தஞ்சை மராத்திய மன்னர்களுடனும் ஆற்காட்டு நவாப்களுடனும், யாழ்ப்பாணம், கண்டி மன்னர்களுடனும் சேது மன்னர்கள் செய்து கொண்ட வர்த்தக அரசியல் உடன்படிக்கைகள் ஒன்றுகூட இன்று நமக்குக் கிடைக்கவில்லை என்பது வேதனைக்குரியதாகும்.

மேலும் இந்தக் கல்வெட்டுக்களில் கண்டுள்ள சில செய்திகளை இங்கே சற்று விரிவாகக் காணலாம். இந்தக் கல்வெட்டுக்கள் வரையப்பட்ட காலம் எது என்பதைக் கொண்டு அப்பொழுது சேதுநாடு எந்த அளவு பரந்து விரிந்திருந்தது என்பதை அறிவதற்கு இந்தக் கல்வெட்டுக்கள் துணைபுரிகின்றன. பொதுவாக சேதுநாடு என்பது உடையான் சேதுபதி, சின்ன உடையான் சேதுபதி ஆகியவர் காலத்தில் கி.பி.15ம் நூற்றாண்டின் தொடக்கத்தில இராமேஸ்வரம் தீவையும், அதற்கு மேற்கேயுள்ள இன்றைய இராமநாதபுரம், பரமக்குடி, இளையான்குடி, சிவகங்கை வட்டங்களை உடையதாக மட்டும் அமைந்திருந்தது. கி.பி.1645-ல் சேதுபதி மன்னரான திருமலை ரகுநாத சேதுபதி இந்த நாட்டின் வடபகுதிகளை கள்ளர் சீமை, அறந்தாங்கிச் சீமை, பட்டுக் கோட்டை சீமை, திருவாரூர் சீமை ஆகியவைகளைக் கொண்ட பரந்த பகுதியாக விரிவுபடுத்தினார். அடுத்து வந்த ரகுநாத கிழவன் சேதுபதி ஆட்சிக் காலத்தில் கள்ளர் சீமை பிரிந்து தன்னரசு நிலை பெற்றது. கி.பி.1725-ல் மரணமுற்ற முத்து விஜய ரகுநாத சேதுபதியின் ஆட்சிக் காலத்திற்குப் பிறகு சேது நாட்டின் வடபகுதி சின்ன மறவர் சீமை அல்லது சிவகங்கைச் சீமை என்ற தனி அரசாக நாலுகோட்டைப் பாளையக்காரர் பெரிய உடையத் தேவரது மகன் சசிவர்ணத் தேவர் காலத்தில் அடுத்த பிரிவினையைப் பெற்றது. கி.பி.1726 - 28 வரை இராமநாதபுரம் சேதுபதியாக இருந்த பவானி சங்கரத் தேவரை ஆட்சி பீடத்தில் இருந்து அகற்ற ஏற்பட்ட

போரின் முடிவில் அறந்தாங்கி, பட்டுக்கோட்டை திருவாரூர் சீமைகள் மீண்டும் தஞ்சை மன்னருக்குத் தானம் வார்க்கப்பட்டன.

இந்த நிகழ்வுகளிலிருந்து சேதுபதி மன்னர்களது ஆட்சிப் பரப்பு இன்றைய இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாகக் கொண்டிருந்தன என்பது புலனாகிறது. இந்தப் பகுதிகளின் ஆட்சியாளர்களாக கி.பி.13-வது நூற்றாண்டு வரை நீடித்த பிற்காலப் பாண்டியப் பேரரசுகளின் நிலக் கூறுகளே தொடர்ந்து இந்தப் பகுதிகளில் சேதுபதி மன்னர்களாலும் பேணப்பட்டு வந்தன என்பது சிறப்பான செய்தியாகும். பிற்காலப் பாண்டியர்களது காலத்தில் நிலப்பரப்பு வளநாடு, கூற்றம், நாடு, ஊர் என்ற வகைகளில் பிரிக்கப்பட்டு அவைகளுக்கான பெயர்களும் சூட்டப்பட்டிருந்தன. அந்த முறையில் இந்த நூலில் கண்ட கல்வெட்டுக்களில் செவ்விருக்கை நாடு (இராமநாதபுரம், பரமக்குடி வட்டம்) ராஜ ராஜ வளநாடு, (பரமக்குடி வட்டம்) கேரளசிங்க வளநாடு,(காரைக்குடி திருப்புத்தூர் வட்டங்கள்) கல்வாசல் நாடு (திருப்புத்தூர் வட்டம் வட பகுதி) கானாடு உத்தாரம் நாடு (திருமெய்யம் வட்டம்) முத்தூர் நாடு (தேவகோட்டை வட்டம்) ஆகியன குறிக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த வளநாடுகளும் நாடுகளும் அமைந்திருந்துதான் கூற்றங்கள், மிழலைக் கூற்றம் முத்தூர் கூற்றம், துகவூர் கூற்றம், பாகனூர்க்கூற்றம், ஆகிய கூற்றங்களின் பெயர்கள் இந்தக் கல்வெட்டுககளில் இடம் பெறாதது வியப்பாக இருக்கின்றன. இந்த மன்னர்கள் வழங்கிய செப்பேடுகளில் இந்தக் கூற்றங்களையும், வேறு சில வளநாடுகளையும், தவறாமல் குறிப்பிட்டுள்ளனர் என்பது இங்கு நோக்கற்பாலனது இந்த நிலப்பரப்புக்களில் கண்ட நிலங்கள் பலவகையாகப் பாகுபடுத்தப்பட்டிருந்ததையும், இந்தக் கல்வெட்டுக்களிலிருந்து அறிய முடிகிறது.

அவையாவன, காடுகள், அனாதி, தருசுகள் பொட்டல் வயல் (ஒரு குறிப்பிட்ட நிலத்தை சுட்டிக் காட்டுவதற்கு தாக்கு

என்றும்) நஞ்சை, புஞ்சை மானவாரி, நத்தம் என்பனவும் வகைப்படுத்தப்படாத நிலம் சுரூபம் என்றும் அவைகளின் எல்லைப் பகுதி புரவு என்றும் வழங்கப்பட்டு வந்தது இந்தக் கல்வெட்டுக்களிலிருந்து தெரியவருகிறது.

இந்த நிலங்களை சேதுபதி மன்னரது அலுவலர்கள் அறுதியிட்டு (வேலிமா குறுக்கம்) என்ற நில அளவைகளில் அறுதியிட்டு வழங்குவதற்கு முன்னர் அந்த நிலங்களின் பெருநான்கு எல்லைகளைச் சரிபார்த்து எல்லைக் கற்களை நாட்டி வைத்தனர் குடிகளுக்கு வழங்கப்பட்ட இந்த அறக்கொடை நிலங்களின் எல்லைக்கல் புரவுக்கல் என்றும் சிவன் கோயில் எல்லைகளுக்கான எல்லைகக்ல் சூலக்கல் என்றும் வைணவக் கோயில் நிலங்களுக்கு நாட்டப்படும கல் திருவாழிக்கல் என்றும், கிறுத்தவ தேவாலயங்களுக்கு வழங்கப்பட்ட நிலக்கொடைகளுக்காக எல்லைக்கல் சிலுவைக்கல் என்றும் பெயரிடப்பட்டு இருந்தன.

மேலே கண்ட நிலங்களில் பெரும்பாலும் நஞ்சை நிலங்கள் வயல் என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறது. இந்த நிலங்களை மழைப் பெருக்கினால் திரண்டு வரும் ஆற்று வெள்ளைத்தைக் கொண்டு விளைபொருள்கள் வேளாண்மை செய்யப்பட்டன. இதற்கு உதவும் பொருட்டு வெள்ளநீர் ஆங்காங்கு தாழ்வான பகுதிகளில் தடுக்கப்பட்டும் தேக்கப்பட்டும் மண்ணால் கரைகள் எழுப்பப்பட்டன. (இத்தகைய கரை ஒன்றினையே பெயராகக் கொண்ட பெருங்கரை என்ற சிற்றூர் பற்றிய திருமலை ரகுநாத சேதுபதி மன்னரது கல்வெட்டு இங்கே குறிப்பிடத்தக்கது) இவ்விதம் தடுப்பு அணைகள் அமைக்கப்பட்டு வெள்ளம் தேக்கப்பட்ட பகுதிகள் கண்மாய்கள் எனவும் அவைகளின் வடிகால் வெள்ளத்தினால் அமைக்கப்பட்ட சிறிய தேக்கங்கள் ஏந்தல், ஏம்பல் என்றும் இன்னும் இவைகளிலும், அளவிலும் ஆழத்திலும் சிறியனவான நீர்ப்பகுதிகள் குளம், குளபரப்பு, குட்டை, குண்டு என்றும் சேதுபதி சீமையில் வழங்கப்படு வந்தன. (இன்றும் அந்த

வழக்குகள் நீடிக்கின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது).

கண்மாய்களிலிருந்து வெள்ளத்தை தேவையான நஞ்சை நிலங்களுக்கு எடுத்துச சென்று உதவுவதற்கு கால்கள் எனப்படும் நீண்ட வாய்க்கால்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்த வாய்க்கால்களுக்கு தேவையான நீரை அப்பொழுதைக்கு அப்பொழுது வெளியேற்றி உதவுவதற்காக கண்மாய்க் கரையில் நீரை வெளியேற்றும் அமைப்புக்களும் ஏற்படுத்தப்பட்டிருந்ததை இந்தக் கல்வெட்டுககள் தெரிவிக்கின்றன. இந்த அமைப்புகளில் பெரியதும், பல கண்களை உடையதுமான அமைப்பு கலுங்கு என்றும், இவற்றின் சிறிய பகுதி மடை எனவும் வழங்கப்பட்டதைத் தளவாய் உடைய நாயனான இரண்டாவது சடைக்கண் சேதுபதியின் கி.பி.1637 ஆம் ஆண்டுக் கல்வெட்டு தெரிவிக்கின்றது. இந்த நீாக்கால்களைப் போன்று சிறிய அளவில் நீரை எடுத்துச சென்றும், குளம், குட்டை என்ற பகுதிகளைத் தடுக்கக் கூடிய சிறுகால்கள் நீர்க்கோர்வை என்று வழங்கப்பட்டன.

இத்தகைய நிலப்பரப்புக்களையும், நீர் ஆதார வசதிகளையும் உடைய காணிகளையும் ஊர்களையும் சேதுபதி மன்னர்கள் அறக் கொடைகளாக வழங்கி உள்ளனர். இவை பெரும்பாலும சமுதாயப் பணிகளுக்கும் தெய்வீகப் பணிகளுக்குமாக சர்வ மான்யங்களாக வழங்கப்பட்டன என்பதை இந்தக் கல்வெட்டுக்களுடன் இவர்களது செப்புப் பட்டையங்களும் உறுதிப்படுத்துகின்றன. இயல்பாக மழை வளம் குன்றிய சேதுநாட்டில் மழை, வெள்ளம் மிகவும் அருமையாகப் போற்றப்பட்டு வீணாகாமல் வேளாண்மைக்கு முழுவதும் பயன்படுமாறு அந்த மன்னர்கள் கவனித்து வந்தனர். இதனால் நீர் ஆதாரங்களை பெருக்குதல் என்ற பணி சமுதாயப் பணிகளிலேயே மிகச் சிறப்பானதாக அமைந்திருந்தது. இதனை அடுத்து மக்கள் சமுதாயத்தின் கண்மாய்க் கரையில் ஏற்பட்ட குடியிருப்பு ஒன்று பரமக்குடி வட்டத்தில் பெருங்கரை என வழங்கப்படுவதை முன்னா்

குறிப்பிட்டோம். இதனைப்போன்றே இந்தக் கண்மாய்க் கரையின் ஆதாரங்களான மடைகள் அமைக்கப்பட்ட பகுதிகளில் நாளடைவில் குடியிருப்புக்களும் எழுந்து அந்த மடைகளின் பெயராலேயே அந்த ஊர்களும் வழங்கப்பட்டு வருகின்றன. எடுத்துக்காட்டாக பத்தாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த ராஜ சிம்ம பாண்டியனால் அமைக்கப்பட்ட பெரும் நீர்த்தேக்கம் இன்றைய திருவாடானை வட்டத்தில் ராஜ சிங்க மங்கலம் என்ற நகருக்கு அருகே அமைந்துள்ளது. முன்னர் சுமார் பத்துக்கல் நீள தொலைவுள்ள இந்தக் கண்மாயின் கிழக்குக் கரையில் 48 மடைகள் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் தற்பொழுது 20 மடைகள் மட்டுமே பயன்பாட்டில் உள்ளன. அந்த மடைகளில் மூன்று மடைகள் அருகே சிறு கிராமங்களும் எழுந்து அந்த மடைகளின் பெயராலேயே இன்றும், இராமநாதமடை, பெருமாள்த்தேவர் மடை, ரகுநாத மடை என்ற ஊர்கள் இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதனைப்போன்றே இராமநாதபுரம் கோட்டைக்கு தெற்கே சக்கரக்கோட்டை கண்மாயின் தென்பகுதியில் கி.பி.1680ல் இராஜசூர்ய சேதுபதியின் நினைவாக அமைக்கப்பட்ட கலுங்கும் அதையொட்டிய கிராமமும் இராஜசூர்ய மடை என்ற பெயரால் அழைக்கப்பட்டு வருகிறது.

இன்னும் இதனைப் போன்று மடைகள் வேறு சில பெயராலும் அழைக்கப்பட்டு வந்துள்ளன. குறிப்பாக மேலமடை, செவிட்டு மடை, ஊமைமடை என்பன போன்றனவாகும். இத்தகைய நீர் ஆதாரங்களைப் பழையனவற்றைப் பேணியும் புதியவைகளைத் தோற்றுவித்தும் சேது மன்னர்கள் ஆட்சி குடிகளுக்குப் பயனுள்ளதாக அமைந்ததை அவர்களது செப்பேடுகள் பல தெரிவிக்கின்றன. இந்தச் செப்பேடுகளிலிருந்து சேதுபதிச் சீமையில் ஊடறுத்துக் கிழக்கு நோக்கிச் செல்லும் வைகை ஆற்றின் வடபகுதியில் நாட்டார்கால், சேதுகால், தேத்தன்கால், ஆட்டான்கால், வளமாவூர்க்கால், ஆய்க்குடிகால், காவனூர்க் கால், கொடிக்குளம், வடகால், தேனாற்றுக் கால் ஆகியன பயன்பாட்டில் இருந்து வந்ததையும், வைகை ஆற்றின் தென்பகுதியில் கூத்தன் கால், பனையன்கால், களரிக் கால், நாராயண

காவேரிக்கால், ரகுநாத காவேரிக் கால், அழகுப் பிள்ளை கால், குளமாணிக்கம், ஓடைக்கால் ஆகியனவும் அமைந்து இருந்தது தெரியவருகிறது. முத்து விஜய ரகுநாத சேதுபதியின் ஆட்சிக் காலத்தில் இராமநாதபுரம் கோட்டைக்கு வடமேற்கே இப்பொழுது பெரிய கண்மாய் என வழங்கப்படும், ரகுநாத சமுத்திரத்தையும் கமுதிக் கோட்டைக்கு தெற்கே செல்லும் குண்டாற்றிலிருந்து ரகுநாதக் காவேரி என்ற சுமார் 30 கல் நீளமுள்ள வாய்க்காலினையும் வெட்டுவித்ததாக அவரது செப்பேடுகளிலிருந்து தெரியவருகிறது. இந்த மன்னரது ஆட்சிக் காலத்தில் பெரிய நீர்த்தேக்கங்களான கண்மாய்கள் சமுத்திரம் என்ற சிறப்புப் பெயர்களில் வழங்கப்பட்டதையும் அறிய முடிகிறது. எடுத்துக்காட்டாக ரெகுநாத சமுத்திரம நாகநாத சமுத்திரம், முதலியன. சமுத்திரம் என்ற இந்த சொல் தெலுங்கினர் ஆட்சியால் தமிழகத்தில் ஏற்பட்டதாகும். மக்கள் பிரிவினரது மங்கல காரியங்களையும், சமுதாய திருநாட்களையும் ஆலய விழாக்களையும் நடத்துவதற்கு சிறப்பான நாட்களை குறிப்பதற்கு உதவிய நுண்கலைகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மானியங்களையும், சர்வமான்ய காணிகளையும் வழங்கி ஆதரித்தனர் என்பதை விரையாச்சிலை கல்வெட்டு தெரிவிக்கின்றது. மேலும் பருவ காலங்களில் விளை நிலங்களில் பொன்னேர் இட்டு முதல் ஏரைத்துவக்கி வைப்பதற்கான நாள், வயல்களில் விதைகளை முதலில் விதைப்பதற்கான நாள், அறுவடையை தொடக்குவதற்கான நல்ல நாள், கிராமக் கோயில்களிலும், சிறு தெய்வ, காவல் தெய்வ வழிபாட்டிற்கான சிறப்பு நாள்கள் ஆகியவற்றைக் குறித்துக் கொடுப்பதுடன் கண்மாயிலிருந்து, நல்ல நாளில் முதன் முறையாக வாய்க்காலுக்கு நீரைத் திறந்து விடுவது ஆகிய நிகழ்ச்சிகளுக்குத் திருநாளை கணித்துக குறித்துக் கொடுப்பது பஞ்சாங்கம், ஜோதிடம் ஆகியவைகளுக்கான மான்யங்களைப் பெற்றுள்ள அலுவலரது கடமையாகும். மற்றும் நாட்டுப் பணிக்காக போரிட்டு உயிர்த் துறந்தவர்களின் குடும்பத்தினருக்கு சீவிதம் என்ற உதிரப்பட்டி நிலங்களும், திருக்கோயில்களில் ஆகமங்களின் வழி நின்று கோயில் பணிகளைச் செய்து சிவப்பிராமணர்களது குடியிருப்புக்காக அகரம் என்ற பெயரில்

நிலக்கொடைகளும், தொடர்ந்து அந்த கிராம மக்கள் நான்கு வேதங்களை கோயில்களில் ஓதுவதற்கு தொடர்ந்து அவைகளை பிறருக்கும், ஓதுவிக்க உதவுவதற்காகவும் சதுர்வேதி மங்கலம் என்ற நிலக்கொடைகளையும் சேதுமன்னர்கள் வழங்கி வந்துள்ளனர்.

மேலும் சிறு சிறு பணிகளில் கிராம மக்களுக்கு உதவி செய்யும் பொருட்டு சேதுபதி மன்னர்கள் கிராம மக்களின் ஒரு சிலருக்குப் பல சுவந்திரங்கள் (சலுகைகள்) வழங்கி இருந்தனர் என்பதைக் குறிப்பாக கி.பி.1669 இல் திருமெய்யம் அழகிய மெய்யருக்கு வழங்கிய தான சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சுவந்திரங்கள் பற்றிய விவரங்களை இராமநாதபுரம் சமஸ்தான மேனுவலில் வரையப்பட்டுள்ளன. அதாவது குடைவிருத்தி (திருவிழாக் காலங்களில் பவனி வரும் சுவாமி அம்பாளுக்கு முன்னால் கோயில் குடையின் கீழ் சென்று விழாவை நடத்தி வைப்பவர்). எல்லை விருத்தி (கிராம மக்களிடையே அவர்களது நிலங்களுக்கான எல்லைத் தகராறுகளைத் தீர்த்து வைப்பவர்) மடைக்கிடை முக்கந்தர் (வருஷத்தில் முதன்முறையாக கண்மாய் நீரை மடை வழியாக நிலங்களுக்கு விடுவதற்கு முன்னர் கடவுள் வழிபாடு நடத்தி ஆட்டுக் கிடாவை பலியிட உதவுபவர்) நாட்டுக் கணக்கு போன்றவைகள்.

இவை போன்று ஆன்மீகப் பணிகளின் வளர்ச்சிக்காக ஏராளமான அறக்கொடைகளைச் சேதுபதி மன்னர்கள் வழங்கி உள்ளனர். திருக்கோயில்களில் 5 அல்லது ஆறு கால பூஜை வழிபாடுகள் திருமஞ்சனம், திருமாலை, நிவேதனம் ஆகிய அன்றாடச் சேவைகளுக்கும் திருநாட்களில் நடைபெறும் சிறப்புக் கட்டளைகளுக்கும் மற்றும் சித்திரை, மாசி, ஆவணி, புரட்டாசி, தை, பங்குனி ஆகிய மாதங்களில் நடைபெறும். திருவிழாக்களுக்கும் பல்லக்கு சேவைகளுக்கும் ஏராளமான ஊர்களை சர்வ மான்யமாக திருக்கோயில்கள், திருமடங்கள், அன்ன சத்திரங்கள், பள்ளிவாசல்கள் தேவாலயங்கள் ஆகிய நிறுவனங்களுக்கு அளித்துள்ளனர்.

ஆனால் இந்தக் கல்வெட்டுக்களில் பல்லக்குச் சேர்வை செய்பவர்களுக்கும், பிராமண போஜனம் திருப்பணி அவசரம் ஆகியவைகளுக்கு நிலங்கள் வழங்கப்பட்டதை இந்தக் கல்வெட்டுக்கல் தெரிவிக்கின்றன.

இத்தகைய நிலக்கொடைகளை சேதுபதி மன்னர்கள் மட்டுமல்லாமல் அவர்களது அதிகாரம் பெற்று சுயேட்சையாக செயல்பட்ட ஆளுநர்களும், சேர்வைக்காரர்களும் இந்த தானங்கள் வழங்கியதை இந்தக் கல்வெட்டுக்களில் காண்கின்றோம். திருமலை சேதுபதியின் சேர்வைக்காரர்களான சொக்கப்பன் சேர்வையும், கங்கையாடிய பிள்ளையும் முறையே கி.பி.1662, 1669 ஆகிய வருடங்களில் விரையாச்சிலை உலக விடங்கேஸ்வரர் ஆலயத்திற்கும், மேலையூர் லட்சுமி நாராயண பெருமாள் கோயிலுக்கும், ரெகுனாத கிழவன் சேதுபதியின் மகனும் ஆளுநருமான ரணசிங்கத் தேவர் கி.பி.1696ல் காட்டு பாவா சாகிபு பள்ளிவாசலுக்கும் அறக்கொடைகள் வழங்கி இருப்பது இந்த நூலில் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கல்வெட்டுக்கள் சேதுபதி மன்னர்களது ஆட்சியில் அதாவது கி.பி.1623 முதல் கி.பி.1897 வரை அந்த மன்னர்களால் பொறிக்கப்பட்டவையாகும்.

"மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

என்ற மரபிற்கேற்ப இந்த சேதுபதி மன்னர்கள் சேதுநாட்டின் மக்களிடையே நிலவி வந்த இறை உணர்வை செழுமைப்படுத்தி அவர்களது சமுதாய வாழ்வில் முன்னேற்றம் காண மேற்கொண்ட சாதனைகளை அறிவிப்பனாக இவை அமைந்துள்ளன.

இந்தக் கல்வெட்டுக்களிலிருந்து நமக்கு இரண்டு புதிய செய்திகள் கிடைக்கின்றன. அதாவது சேது நாட்டில் சைவத்தையும் வைணவத்தையம் மன்னர்கள் மக்களும் பல நூற்றாண்டுகளாக

போற்றி வந்த பொழுதிலும் கி.பி.17ம் நூற்றாண்டின் தொடக்கம் இந்த இறை வழிபாட்டில் சிறு தெய்வ வழிபாடும் சிறப்பான இடத்தைப் பெற்றதை அறிகின்றோம்.

முதலாவதாக சைவ சமயத்தின் புராணக் கதைகளின் படி துவக்கம் பெற்றவர் சிவபெருமானுக்கம் மகாவிஷ்ணுவிற்கும் மைந்தனாக பிறந்தவர் அரிஹர புத்திரன் என வழங்கப்பட்டவர் ஆகும். இவரை பொதுமக்கள் சாஸ்தா என்றும் சாத்தன் என்றும் ஐய்யனார் என்றும் அழைத்து வரலாயினர். அதுவரை தங்களது ஊர்களுக்கு ஏற்படுகின்ற நோய் நொடிகளை தீர்க்கும் சிறு கடவுள்களாக வழிபட்டு வந்த கருப்பன், கருப்பணசாமி, கருப்பு, முனியன், முனியசாமி ஆகிய சிறு தெய்வங்களை கைவிட்டுவிட்டு ஐய்யனாரை ஊர்கள் தோறும் தங்களது காவல் தெய்வமாக கொண்டாடத் தொடங்கினர். சேது நாட்டின் பெரும்பாலான கிராமங்களில் ஐய்யனாருக்கு சிறு ஆலயங்களும் அமைக்கப்பட்டன.

அங்கு நிறுவப்பட்ட ஐய்யனார் திருவுருவங்கள் நிற்கும் நிலையிலும், அமர்ந்த நிலையிலும், அவரது இரு மனைவிகளான பூரணை, புஸ்கலை உடனும், யானை குதிரை ஆகிய பரிவார சிலைகளுடனும் காணப்படுகின்றன. ஆண்டுதோறும் இந்தக் காவல் தெய்வங்களுக்கு பொதுமக்கள் எடுக்கும் விழா "துரவி எடுப்பு" என அழைக்கப்படுகிறது. இந்த விழா காலத்தில் பொது மக்களது நேர்த்திகளாக சுடுமண்ணால் செய்யப்பட்ட குதிரைகளை தாரை, தப்பட்டை ஒலிகளுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அந்தந்த கோயில்களில் ஐய்யனார்க்கு சேர்க்கப்படுகின்றன. இந்த ஐய்யனார்க்கு வழிபாடு செய்பவர்கள் மண்பாண்டங்களை செய்யும் குழால வேளாளர் என்றும் குயவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இது தவிர பழந்தமிழர் வீர விளையாட்டில் ஒன்றான ஏறு தழுவுதல், எருது கட்டு விழாவும் நடைபெற்று வருகின்றன.

பொதுமக்களது பக்தி உணர்வையும், மகிழ்ச்சியையும்


மதித்து வந்த சேது மன்னர்கள் அய்யனார் வழிபாட்டிற்காக உதவி வந்ததில் வியப்பு ஒன்றும் இல்லை. நமக்கு கிடைத்துள்ள வரலாற்றுச் செய்திகளின் படி கூத்தன் சேதுபதி மன்னர் (கி.பி.1622-1635) இத்தகைய அறக் கொடையை முதன் முறையாக தொடக்கி வைத்துள்ளார் அவர் அமைத்து உதவிய கூரிச்சாத்த ஐய்யனார் கோவில் இன்றும் இராமநாதபுரம் கோட்டை மேற்கு மதிலை ஒட்டி அமைந்து மக்களது வழிபாட்டில் இருந்து வருகிறது. இந்த நூலில் ஐய்யனார் ஆலய வழிபாட்டிற்காக கூத்தன் சேதுபதி, திருமலை ரெகுநாத சேதுபதி, ராணி மங்களேசுவரி நாச்சியார் ஆகியோர் முறையே போகலூர், ஆலம்பட்டு, பூலாம்பட்டி ஆகிய ஊர்களில் கொடைகள் வழங்கி இருப்பதைக் காணலாம்.

மற்றும் இந்தக் கல்வெட்டுக்களில் இருந்து கிடைக்கும் இன்னொரு செய்தி சேதுநாட்டில் குமரக் கடவுளுக்கு என தனி கோயில் வழிபாடு கி.பி.18ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. சிவ பெருமானது இரண்டாவது மகனான கந்தனது பிறப்பு, வளர்ப்பு, வீரம், திருமணம் ஆகியன பற்றிய செய்திகள் பல புராணங்கள் வாயிலாக பொதுமக்களுக்கு அறியக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டு இருந்தது என்றாலும் கி.பி.14, 15ஆம் நூற்றாண்டில் தோன்றிய திருப்புகழும், கி.பி.15ம் நூற்றாண்டில் தோன்றிய கந்த புராணமும் மக்களிடையே பரவலாக இடம் பெற்ற பிறகுதான் முருக வழிபாடு தமிழகத்தில் துவங்கியுள்ளது. சேதுநாட்டில் முருகக் கடவுளுக்கு திருக்கோயில் அமைத்தவர் குமாரமுத்து விஜயரகுநாத சேதுபதி மன்னரது தளவாயாக பணியாற்றிய வைரவன் சேர்வைக்காரர் ஆகும். அவரது பிறந்த ஊரான இராமநாதபுரத்தை அடுத்த பெருவயல் கிராமத்தில் அவர் முருகக் கடவுளுக்கு அமைத்த திருக்கோயில் திருப்பணிக்கு சேதுபதி மன்னர் கலையனூர் பெருவயல் கிராமத்தை சர்வ மான்யமாக தானம் வழங்கியதை பெருவயல் கல்வெட்டு தெரிவிக்கின்றது. இதனைத் தொடர்ந்து இந்த மன்னர் இராமநாதபுரம் பாலசுப்பிரமணிய சாமி கோயிலுக்கும் பழனி வேலாயுத சுவாமிக்கும் குளவயல் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கும்

அறக்கொடைகள் வழங்கியதை அவரது செப்பேடுகள் தெரிவிக்கின்றன.

இந்தக் கல்வெட்டுக்கள் அனைத்தும் சேதுபதி மன்னர்களது ஆட்சித் திறனையும், ஆன்மீக உணர்வுகளுக்கு அவர்கள் அளித்த முன் உரிமையினையும், சமுதாய பணிகளின் பால் அவர்கள் கொண்டிருந்த அக்கறையையும், காலமெல்லாம் எடுத்துச் சொல்லும், வரலாற்றுத் தடையங்களாக அமைந்துள்ளன.


தமிழக வரலாற்றின் ஒரு பகுதியாக விளங்கும் இந்தக் கல்வெட்டுக்களும், ஏனைய மன்னர்களது கல்வெட்டுக்களைப் போன்று தமிழக வரலாற்றில் வகைப்படுத்தி, வரிசைப்படுத்தி ஆய்வு செய்வதற்கு பயனுள்ள ஆவணங்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. காலப்போக்கில் இந்த மன்னர்களது கல்வெட்டுக்கள் மேலும் பல ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டால் அவையும், தமிழக வரலாற்றிற்குப் பல புதிய செய்திகளை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.





# இயல் 43

## பண்டைக்கால கல்வெட்டுக்களின் மாதிரி

இந்த நூலில் காணப்படும் கல்வெட்டுக்கள் அனைத்தும் கி.பி.17ம் நூற்றாண்டு முதலானவை என்றாலும் அந்தக் கல்வெட்டுக்களின் எழுத்து வடிவங்கள் இன்றைய தமிழ் எழுத்து வடிவில் அமைந்துள்ளன. ஆனால் கி.பி.10ம் நூற்றாண்டுக்கு முன்னர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் தமிழ் வட்டெழுத்து, தமிழ் கிரந்தம், தமிழ் பிராமி ஆகிய இனத்தைச் சார்ந்தவை. அவைகளின் வரிவடிகங்கள் எப்படி அமைந்திருக்கின்றன என்பதையும் வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அந்த வகை கல்வெட்டுக்களின் மாதிரி ஒலிப்பதிவுகளை இந்த இயலின் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (இவைகளை அளித்து உதவிய ஈரோடு, கொங்கு மையத்தைச் சேர்ந்த டாக்டர் செ. இராசு அவர்களுக்கு நன்றி)







1. தொடக்க காலப் பிராமி (தமிழி) மதுரை மாவட்டம் ஆனைமலைக் கல்வெட்டு

**ஏட்டகாயிபன்**

**(மெய்யெழுத்துக்கள் புள்ளி பெற்றுள்ளன) கி.மு.2ஆம் நூற்றாண்டு**

2. ஈரோடு மாவட்டம், அறச்சலூர்க் கல்வெட்டு பிந்திய காலப் பிராமி கி.பி.3ஆம் நூற்றாண்டு

**எழுத்தும் புணருத்தான் மணிய**

**வண்ணக்கன் தேவன் சாத்தன்**

3. கரூர் மாவட்டம்


**ஸ்ரீ சோழிக அரையன்**

**அகணிதன் குளம்**

**(கி.பி.5ஆம் நூற்றாண்டு)**


# மாங்குளம் பிராமிக் கல்வெட்டு

## (Fig.4) MANGALAM GRANT OF NETUNCHELIYAN (c 100 B.C.)



# புகளூர் பிராமிக் கல்வெட்டு

## (Fig.5) PUGALUR GRANT OF CHEL-L-IRUMPORAI (c 200 A.D. (illustrating Later Tamil - Brahmi)



# மதுரை மாவட்டம்
## மாங்குளம்

1) கணிய நந்தா ஆசிரிய ஈ
குவஅன்கே தம்மம் ஈ
த்தஅ நெடுஞ்சழியன் ப
என அன் கடலஅன் வழுத்தி
ய் கொட்டுபித்தஅ பாளிஈய்


<u>பொருள்:</u>

பணவன், கடலன், வழுதி என்ற சிறப்புப் பெயர் பெற்ற நெடுஞ்செழியன் கணிய நந்தா சிரியன் என்ற சமண முனிவருக்கு வெட்டிக்கொடுத்த கல் படுக்கை

கணியன் = சோதிடன்;

2) (மூத்) த அமண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய்
கோ ஆதன் செல்லிரும்பொறை மகன்
பெருங்கடுங்கோன் மகன் (இ)ளங்
கடுங்கோ (இ)ளங்கோ ஆக அறுத்த கல்


இக்கல்வெட்டு கரூர் மாவட்டம் புகலூர் ஆறுநாட்டார் மலையில் உள்ளது. இதில் குறிக்கப்படும் மூன்று சேரமன்னர்கள் பதிற்றுப்பத்தின் 7,8,9ஆம் பத்திற்கு உரிய செல்வக்கடுங்கோ வாழியாதன் பெருங்கடுங்கோ, இளங்கடுங்கோ (பெருஞ்சேரல் இரும்பாறை, இளஞ்சேரல் இரும்பொறை) என்று அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



வட்டெழுத்துப் படத்தின் வாசகம்

தென்னவர்தந் திறலாணைச்
சிலைஒடுபுலி கயலிணைமன்
பொன்னிமையச் சிமையத்து
விறற்கருவி இற்றைக்குந்
தொழில் செய்து வந்தவர் பின்னோன்
செயல்பல பயின்றோர் முன்னோன்
திருமலிசாசன மிதற்குச்
செழுந்தமிழ் பாடினோனற்றை
நிருபசேகரப் பெருங்கொல்லன்
நீன்புகழ் நக்கனெழுத்து.

(இது வட்டெழுத்து, ஒருகாலத்தில் தமிழ்நாடு முழுவதும் வழங்கப்பட்ட எழுத்து இது.)



கண்டார் காணா வுலகத்திற் காதல் செய்து நில்லாதேய்
பண்டாய் பரமன் படைத்தநாள் பார்த்து நின்று நையாதேய்
தண்டார் மூப்பு வந்துன்னைத் தளரச் செய்து நில்லா முன்
னுண்டேல் லுண்டு மிக்கது உலகம் மறிய வைம்மினேய்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெள்ளறையில் உள்ள 'நாலு மூலைக் கேணி' என வழங்கப்படும் ஸ்வஸ்திக் வடிவக் கிணற்றின் சுவரின் இக்கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது. கி.பி. 9ஆம் நூற்றாண்டு இதில் மெய்யெழுத்துக்கள் புள்ளி பெற்றுள்ளது சிறப்பாகும்.



இராசராசன் (985-1014) மேல்புறம்
மெய்க் கீர்த்தியும் கல்வெட்டும்
தஞ்சாவூர்

(முதலாம் இராசராசன் மெய்க்கீர்த்திப் பகுதியும் கல்வெட்டும் கி.பி.1014) தஞ்சாவூர்

1) திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கேயுரிமை பூ....

2) கை பாடியும் நுளம்பபாடியுங் குடமலை நாடுங்கொல்ல ....

3) ண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன் னெழில் வளர் . . .

4) கோ ராஜகேஸரி வம்மரான ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு சி . . .

5) . . .யிலி நுள்ளால் இருமடி சோழ நின் கீழைத் திரும . . .

6) . . . க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி . . .

7) . . . . ண்டுகள் குடுத்தநவும் மற்றும் குடுத்தார் குடுத்தநவும் . . .

# இயல் 44

# இந்த நூலில் காணப்படும் கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சில வட்டார வழக்குகளுக்கு விளக்கம்

அர்ச்சனா பாகம் :

திருக்கோயிலின் வழிபாடுகளை மேற்கொண்டுள்ள அர்ச்சகர்களுக்கு மன்னரால் ஒரு கிராமத்தின் சில பகுதிகளை அனுபவித்துக கொள்ளும் உரிமை வழங்கப்பட்டு வந்தது. இத்தகைய காணிகளுக்குப் பெயர் அர்ச்சனா பாகம்

அகரப்பற்று:

திண்ணைப் பள்ளிக் கூடங்கள் வைத்து கல்வியினை புகட்டி வந்த அந்தணர்களுக்கு வழங்கப்பட்ட நிலம். அகர முதல

எழுத்தெல்லாம் என்ற வள்ளுவத்தின் தொடர் இங்கு நோக்கத்தக்கது.

**இசைகேடு :**

நல்ல தமிழ்ச்சொல். இசை என்பது இயற்றப்படும் காரியங்களுக்கு பயனாக ஏற்படுவது புகழ் அல்லது இசை எனப்படும். இதற்கு ஊறு ஏற்படும் வகையில் செய்யப்படும் அவச்செயல் அல்லது இழிவு இசைகேடு எனப்பட்டது.

**கங்கையாடி :**

கங்கை நதியில் நீராடி புனிதம் பெற்றவர்கள் இந்தப் பெயரால் வழங்கப்பட்டனர். வேறு எங்கும் காணப்படாத இந்தச் சொல் கி.பி.17ம் நூற்றாண்டு புதுக்கோட்டை கல்வெட்டுக்களில் மட்டும் காணப்படுகிறது. இன்று சிலர் தங்களது இயற்பெயருக்கு முன்னால் காசி ஸ்ரீ என்ற அடைமொழியை சேர்த்துக் கொள்வது இங்கு குறிப்பிடத்தக்கது.

**கர்ப்பயாஜீ :**

இந்த அடைமொழி இராமநாதபுரத்தை தலைமை இடமாகக் கொண்டு சிறப்பாக செங்கோலோச்சிய ரெகுநாத திருமலை சேதுபதியை (கி.பி.1645-1676) குறிப்பதாகும். இந்த மன்னர் இராமேஸ்வரம் திருக்கோயிலில் இரண்ய கர்ப்பம் என்ற தானத்தை நிறைவேற்றியதற்காக இந்த மன்னர் இரண்ய கர்ப்பயாஜீ எனறு வழங்கப்பட்டார். இவருக்கு அடுத்து வந்த சேதுமன்னர்களும் இந்தச் சொல்லை தங்களது விருதாவளியுடன் இணைத்து செப்பேடுகளிலும் கல்வெட்டுக்களிலும் பயன்படுத்தியுள்ளனர். பொன்னால் செய்த பசு மாட்டினை அந்தணர்களுக்கு தானம் செய்யும் இந்த வகையான அறச்செயலை திருமலை ரெகுநாத சேதுபதிக்கு முன்னர் தஞ்சை மன்னர் ரெகுநாத நாயக்கர் செய்ததாக வரலாற்றுச் செய்தி ஒன்று

தெரிவிக்கிறது.

## குடிநீங்கா தேவதானம் :

கல்வெட்டுக்களில் காணப்படும் இந்த சொல் ஏற்கனவே குடிகளுக்கு வழங்கப்பட்ட காணிகளைக் கொண்ட ஊரினை திருக்கோயில்களுக்கு தானமாக வழங்கப்படும் பொழுது அங்கு இருந்து வரும் குடிகளுக்கு குந்தகம் ஏற்படாத வகையில் அந்த அறக்கொடையில் குடிநீங்கா தேவதானம் என குறிக்கப் பெற்றுள்ளது.

## கோயில் கணக்கு:

திருக்கோயில்களில் வரவு செலவு கணக்குகளை பராமரிக்கும் கணக்கர் பெயர் கோயில் கணக்கு என்பதாகும். கோயில் கணக்கர் என்பது இதன் பொருள்.

## தேவதானம்:

திருக்கோயில்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட அறக்கொடைகள் என்பது இதன் பொருள். தேவனுக்கு வழங்கப்பட்ட தான நிலம் என்ற தொடரின் சுருக்கம் ஆகும்.

## தாக்கு:

நஞ்சை, புஞ்சை நிலத்தினை மொத்தமாக குறிப்பிடுவதற்கு சேதுநாட்டில் வழங்கப்படுவது இந்தச் சொல்.

## தாசிகள் :

சங்க காலத்தில் ஆடலிலும் பாடலிலும் சிறந்து விளங்கிய மகளிர் பிரிவினர் பாடினி, விரலி என அழைக்கப்பட்டனர்.

அதனையடுத்த நூற்றாண்டுகளில் இத்தகைய ஆடல்குட்டிகளுக்கு கணிகை என்ற பெயர் ஏற்பட்டது. இளங்கோவடிகளது சிலப்பதிகார மாதவி இந்தச் சொல்லுக்கு ஏற்ற எடுத்துக்காட்டாகும். இத்தகைய மகளிரை தஞ்சை இராஜராஜ சோழன் தான் அமைத்த பல சிவாலயங்களில் அர்ச்சகர்களுக்கு கோயில் வழிபாட்டில் உதவுவதற்காக ஏற்படுத்தினார். இவர்களுக்கு வீடுகளும் ஜீவித காணிகள் வழங்கப்பட்டதை தஞ்சை பெருஉடையார் கோயில் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. அப்பொழுது இவர்கள் தேவரடியார் எனப்பட்டனர். பின்னர் தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் இந்த மக்கள் பிரிவினரை கோயில்கள் சரியான முறையில் பராமரிக்கத் தவறியதால் இவர்கள் பொது மகளிராக நடத்தப்பட்டனர். வாழ்க்கை வசதிகள் அற்ற இந்தப் பெண் மக்கள் திருக்கோயில்களில் தெய்வங்களுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்து வந்தனர். நித்ய சுமங்கலி என்றும் ருத்ரகன்னிகை என்ற பெயர்களால் அழைக்கப்பட்டு வந்த இவர்களை புதுக்கோட்டை விரையாச்சிலைக் கல்வெட்டு தாசிகள் என குறித்துள்ளது. தாசி என்ற வடமொழிச் சொல்லுக்கு அடிமை அல்லது பணிப்பெண் என்பது பொருளாகும்.

## நத்தம் :

தமிழ்நாட்டு கிராமங்களில் நிலங்கள் - விளை நிலங்கள் நஞ்சை புஞ்சை கழனி எனவும் விவசாயத்திற்கு பயன்படாத நிலங்கள் தரிசு எனவும் மற்றும் பொது உபயோகத்திற்கு உள்ள நிலங்கள் மந்தை அல்லது புறம்போக்கு எனவும் பாகுபாடு செய்யப்பட்டு வழங்கப்பட்டது. இந்த வகையில் கிராமங்களில் மக்கள் குடியிருப்புக்கென பிரித்து பாகுபாடு செய்யப்பட்ட இடம் நத்தம் ஆகும். நத்துதல் என்றால் விரும்புதல் மக்கள் தங்களுக்கு ஏற்ற இடமாக விரும்பி வந்து (நத்தி வந்து) குடியிருப்புக்களை அமைத்த இடம் நத்தம் ஆகும்.

**பரதேசி முத்திரை :**

சிறு கோயில்களின் நிர்வாகத்தை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட துறவி என்பது இதன் பொருள். வடமொழியில் பரதேசி என்றால் வேற்று நாட்டான் என்ற பொருளும் இந்தச் சொல்லுக்கு உண்டு. ஆனால் தமிழகத்தில் துறவிகளை பரதேசி என அழைப்பது உண்டு அவர்களில் நிர்வாகத்தை நடத்தும் தலைவர் என ஊர்ச் சபையினர் அல்லது தர்ம கர்த்தாக்கள் நியமனம் செய்யப்பட்டவர் பரதேசி முத்திரை எனப்படுவர்.

**பிரம்ம தேயம் :**

தமிழகத்தின் ஆன்மீக செழுமைக்கு பாடுபட்டு வந்த, நான்மறைகளையும் கற்றுணர்ந்து மற்றவர்களுக்கும் பயிற்றுவிப்பவர்களும் திருக்கோயில்களில் வழிபாடுகளை முறையாக செயல்படுத்தி வருபவருமான அந்தணர்களுக்கு தமிழ் மன்னர்கள் வழங்கிய நிலக்கொடை பிரம்ம தேயம் ஆகும்.

(பிரம்மம் - பிராமணர் தேயம் - நாடு (அ) ஊர்)

**புரவு :**

ஊரின் எல்லையை வரையறுத்து குறித்து பகுதியை கல்வெட்டுக்களில் புரவு என்ற சொல் குறிக்கின்றது. இன்றும் சேதுநாட்டின் சில பகுதிகளில் ஊர் எல்லைப் பகுதியை குறிப்பதற்காக புரவு என்ற இச்சொல் உலக வழக்கில் இருந்து வருகிறது.

**பூசைப்பற்று:**

சின்னஞ் சிறு கோயில்களில் தெய்வங்களுக்கு முறையாக அர்ச்சனை முதலிய வழிபாடுகளை மேற்கொண்டு வந்த

அந்தணர்களுக்கு உதவும் வகையில் ஒரு கிராமத்தின் ஒரு பகுதி சர்வமானியமாக விட்டுக் கொடுக்கப்பட்டது. இதனை பூசனைகளுக்கான நிலம் என கல்வெட்டு பூசைப்பற்று என குறிப்பிட்டுள்ளது.

## மாவடை, மரவடை :

கல்வெட்டுக்களில் குறிக்கப்பெறும் இந்தச் சொல்லுக்கு மரத்திற்கான வரி என்ற பொருளாகும் - கனி தரும் மரங்களுக்கு இன்றைய வருவாய்த் துறையினராலும் மரவரி விதிக்கப்பட்டு வருகிறது என்பது நோக்கத்தக்கது.

## உழுபடை :

சேதுநாட்டில் மட்டும் இந்தச் சொல் இன்றும் வழக்கில் உள்ளது. உழவுத் தொழிலுக்கு உரிய கருவிகள், பொருள்கள் என்பதை இந்தச் சொல் குறிக்கின்றது. (உழு - உழவு ; படை - கருவி.)